பாலர் பள்ளிக் கையேடு

673
62

அ. அவையன்
அ. எபிநேசர்

T15
N78
108874

பாலர் பள்ளிக் கையேடு

அ. அவையன் M. A.
அ. எபிநேஸர் D. R. S., B. Ed.

Sole Distributors
SARVODAYA ILAKKIYA PANNAI,
32/1, West Veli Street,
MADURAI - 625001.

© ஆசிரியர்களுக்கு

விலை ரூ. 5-00

வைகை அச்சகம், மதுரை-625001.

பொருளடக்கம்

1	முன்னுரை	1
2	பாலர் பள்ளியின் அவசியம்	12
3	பாலர் பள்ளியின் நோக்கங்களும் குறிக்கோள்களும்	17
4	பாலர் பள்ளிக்குத் தேவையான கட்டிடமும் கருவிகளும்	22
5	பாலர் பள்ளியில் இருக்க வேண்டிய குறிப்பேடுகள்	27
6	பாலர் பள்ளிக்கான திட்டமிடுதல்	31
6-அ.	பாலர் பள்ளி அசிரியையும் சமுதாயமும்	33
7	பால்வாடியில் குழந்தைகளின் மனநலம் பேணுதல்	41
8	குழந்தைகளுக்கான ஆக்கச் செயல்கள்	45
9	சுதந்திர உரையாடலினுல் குழந்தைகள் அடையும் பயன்கள்	53
10	பால்வாடிக் குழந்தைகளும் பாட்டும்	55
11	குழந்தைகளுக்கு ஏற்ற கதைகளும் சொல்லும் முறைகளும்	67
12	பால்வாடிக் குழந்தைகளும் விளையாட்டுக்களும்	74
13	பாலர் பள்ளி ஆசிரியைகளும் மாதர் பணியும்	82
14	பாலர் பள்ளியின் வருடாந்திரப் பாடத் திட்டம்	88
	அனுபந்தம் 1	151
	அனுபந்தம் 2	186
	அனுபந்தம் 3	225
	அனுபந்தம் 4	258

முன்னுரை

நமது பாரத நாட்டின் வளர்ந்து வரும் மக்கள் தொகையையும், வறுமையையும் கருத்தில் கொண்டு இந்தியாவெங்கும் சிதறிக் கிடக்கும் பட்டி தொட்டிகளுக்குப் பாலர் கல்வியைக் குறைந்த செலவில் பரப்ப வேண்டும் என்ற நன்நோக்கத்தோடு இந்நூலை வெளியிடுகிறோம். ஒவ்வொரு கிராமத்திலும் இக் கல்வியைப் பரப்புவதற்குப் போதிய ஆசிரியைகளைப் பயிற்றுவிப்பதற்கோ, முழு ஊதியம் கொடுத்து அமர்த்தி இக்கல்வியைக் கிராமங்களில் பரப்புவதற்கோ தேவை யான பொருளாதார வசதி இப்போதைக்கு சர்க்காரிடம் இல்லையென்பதை நாம் உணர்கிறோம். ஆகையால் இப் பாலர் கல்விப்பணியைக் கிராமப் பொது மக்கள், "மக்கள் திட்டமாக" ஏற்று அந்தந்த ஊரிலுள்ள, படித்து வேலை யில்லாமலிருக்கும் பெண்களைக் கொண்டு கிராமப் பொது நிதி வசதிக்கு ஏற்ப நடத்த வேண்டும் என்று விழை கிறோம். எனவேதான் பணம் செலவழித்து பயிற்சி பெறாத பெண்களும் நல்ல பாலர் பள்ளி ஆசிரியைகளாகப் பணியாற்ற ஏதுவாக இருக்க வேண்டும் என்ற நோக்கத் துடன் இந்நூலை வெளியிடுகிறோம். கிராமத்தார்களும் மகிமை, தரகு, மீன் பாசி வரவு போன்ற ஊர்ப் பொது வருவாயை வைத்துக் கொண்டு ஆங்காங்கு பாலர் பள்ளி களைத் துவக்கி, படித்த உள்ளூர்ப் பெண்களைப் பயன் படுத்தி, பாலர் பள்ளிகளை நடத்த வேண்டும் என்ற ஆசையில் இதை வெளியிடுகிறோம். கிராம சபைகள் உள்ள கிராமதான கிராமங்கள் இதை எளிதில் நிறை வேற்றலாம் எனவும் எதிர்பார்க்கிறோம்.

பாலர் கல்வியின் வரலாறு

பாலர் கல்வியின் அவசியத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கல்வி நிபுணர்கள் உணர்ந் தனர் என்று கூறினுல் அது மிகையாகாது. இதை நம் நாட்டின் சாதாரணமக்கள்கூட புரிந்திருந்தார்கள் என்பது கீழ் வரும் தமிழ் நாட்டில் வழங்கும் சில பழமொழிகளால் தெரியவருகிறது. (1) இளமையில் கல். (2) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. (3) இளமையில் கல்வி சிலையில் எழுத்து. (4) விளையும் பயிர் முளையிலே தெரியும். (5) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும். வயது வந்த மனிதனுக்கு இருக்கும் நிறைவு கள் அத்தனையும் குழந்தைப்பருவத்திலேயே உண்டான வைகள்தான் என்னும் பேருண்மையை உணர்ந்த ஆங்கில நாட்டுப் புலவர் ''வேர்டஸ்வெர்த்'' என்பவர் கூறியிருக்கும் Child is the Father of man என்ற கூற்றி லிருந்து பாலர்கல்வியின் அவசியத்தையும் முக்கியத்து வத்தையும் யாரும் எளிதில் உணரலாம்.

மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள போடி என்னும் இடத்தில் நியூட்டன் பால சேக்ஸ்ஸாசங் என்பவர் 1926ஆம் ஆண்டிலேயே பாலர் கல்வியை ஆரம்பித்தார். 1944ஆம் ஆண்டு ஜார்ஜன் கல்வி அறிக்கையும் பாலர் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியது. பிறகு கஸ்தூரிபா நினைவு நிதியும் பால்வாடிகளை நடத்தவும் அதற்கான ஆசிரியைகளைப் பயிற்றுவிப்பதற்கான ஒரு பயிற்சிப்பள்ளியையும் ஆரம்பித்தது.

இத்தாலிய நாட்டைச் சேர்ந்த மாண்டிசோரி அம்மையார் அவர்களும் குழந்தைக் கல்வி முறையின்

முக்கியத்துவத்தை ஆராய்ந்து அறிந்து 1937-ல் இந்தியா விற்கு வந்து அவரது மாண்டிசோரி முறையைப் பரப் பினார். இவரது கோட்பாட்டின் படி குழந்தைகளுக்கு அளவிடற்கரிய ஆற்றல்கள் இருப்பதாகவும், ஆகவே அவர்களைத் தங்கள் வேலைகளைத் தாங்களே செய்யும் படியாக விட்டுவிட வேண்டும் என்றும் கூறினார்.

அடுத்தபடியாக (Froebel) பிரோபெல் என்பவரும் குழந்தைக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி னார். இவரது கோட்பாட்டின்படி ஆசிரியைகள் குழந்தைகளுக்கு நேரடியாக வழிகாட்டலாம் என்றும், குறிப்பிட்ட கால அட்டவணையைக் கடைப்பிடிக்க வேண் டும் என்றும், விளையாட்டின் மூலமும், கைவேலைகளின் மூலமும் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கலாம் என்றும் கூறினார். குழந்தைகளுக்கு ஒழுக்கப் பயிற்சி ஆசிரியை களின் நடத்துதலின் கீழ் வரவேண்டியது ஒன்று என்றும் கூறினார் ஆனால் மாண்டிசோரி அம்மையார் ஒவ்வொரு தனிக்குழந்தையின் சுய உரிமையும் காப்பாற்றப்பட வேண்டும் என்றும், குழந்தைகளுக்கு முழு உரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும், ஆசிரியைகள் குழந்தை களின் செயல்களைக் கவனித்து வந்தால் போதும் என்றும், அவசியம் ஏற்படும்போது மட்டும் ஆசிரியைகள் தலையிட்டு குழந்தைகளுக்கு உதவி செய்யலாம் என்றும், வகுப்பு நடத்துவதற்கு நான்கு சுவர்கள் கொண்ட வகுப்பறை தேவையில்லை என்றும், கல்வி "தானே திரித்தி விளையாடும், விளையாட்டுக் கருவிகளின் மூலம் (Self Corrective apparatus) கற்கப்படவேண்டும் என்றும், குழந்தைகளுக்கு அன்றாட வாழ்வின் செயல்களைக் கொடுக்க வேண்டும் என்றும், ஒழுக்கம் தானே வளர வேண்டும் என்றும் கூறினார்.

ரவீந்திரனாத்தாகூர் அவர்களும் குழந்தைக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி, குழந்தைகளுக்கு இயற்கைக் காட்சிகளின் மூலம் அறிவை வளர்க்க வேண்டும் என்றும் கல்வி வாழ்க்கையோடு ஒத்து, தொடர்பு உடையதாக அமைய வேண்டும் என்றும், ஆசிரியைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

குழந்தைக் கல்வியின் அவசியத்தையும் முக்கியத் துவத்தையும் வலியுறுத்தின பல அறிஞர்களில் ரூஸோ அவர்களும் ஒருவராவர்.

இந்தியாவில் காந்திஜி அவர்கள் இக்கல்வியை வலி யுறுத்தித்தான் ஆதாரக்கல்வி என்ற தனியான ஒரு கல்வி முறையை ஏற்படுத்தினர்.

1958-ல் தவத்திரு கெய்த்தான்ஜி அவர்கள் மதுரை மாவட்டத்தின் வத்தலக்குண்டு வட்டாரத்தில் உள்ள கிராமதான ஊர்களில் குழந்தைகள் பகல் நேரங்களில் யாராலும் பராமரிக்கப்படாமல் பசியோடு அலைவதைக் கண்ணுற்று சில பாலர் பள்ளிகளை ஏற்படுத்த முன் வந்தார்.

தற்பொழுது நமது அன்பிற்கும் ஆதரவிற்கும் உரிய இந்திய அரசு குழந்தைகள், பெண்கள் ஆகியவர்களின் நலன்களைக் கவப்பதில் தனி ஆர்வம் காட்டி வருவது மிகவும் போற்றுதற்கு உரியதாகும்.

பாலர் கல்வி ஏன் அவசியம்?

மூளை வளர்ச்சியைப்பற்றி ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள் கீழ்க்கண்ட உண்மையை வெளியிட்டிருக்

கிறார்கள். ஒரு சிம்பான்சி குரங்கு பிறக்கும் போது 70% மூளை வளர்ச்சி பெற்றுள்ளதாக இருக்கிறது. மீதியுள்ள 30% மூளையும் 6 மாதங்களில் முழுவளர்ச்சியை அடைந்து விடுகிறது. இதுவே எல்லா பறவைகள், மிருகங்கள் ஆகிய வற்றிற்கும் பொதுவாகப் பொருந்துவதாகும் என்பது அவர்களின் கண்டு பிடிப்பாகும். ஆனால் மனிதன் மட்டும் பிறக்கும் போது 23% மூளை வளர்ச்சியோடு மட்டும் தான் பிறக்கிறான் என்பதையும் மீதி 70% மூளை 6 வய திற்குள் வளர்ச்சியடைகிறது என்பதையும் மீதியுள்ள 7% மூளை 19 வயதிலிருந்து 23 வயதிற்குள் வளர்ச்சி யுருகிறது என்பதையும் கண்டு பிடித்திருக்கிறார்கள். குழந்தைகளின் பால்வாடிக் கல்வியின் வயது 2½லிருந்து 5 வயது வரையில்தான் என்பதை நாம் அறிவோம். இந்த வயதிற்குள்ளும், (1லிருந்து 6 வயது வரை) மூளை வளர்ச்சியின் வேக விகிதம் முற்பகுதியில் அதிகமாகவும், பிற்பகுதியில் குறைவாகவும் இருப்பதாகக் கண்டு பிடிக் கப்பட்டிருக்கிறது. எனவே இந்த 2½லிருந்து 5 வய திற்குள் இருக்கும் குழந்தைகளை எவ்வளவு பொறுப் புணர்ச்சியுடனும், விஞ்ஞான விதி முறைகளைப் பின் பற்றியும் நடத்த வேண்டும் என்பதை ஆசிரியைகள் உணர வேண்டும். குழந்தைகளின் அறிவு வளரக்கூடிய காலம் பால்வாடி ஆசிரியைகளோடு இருக்கும் காலம் தான் என்பது ஒரு தெளிவான உண்மையாகும்.

அறிவு எதன் மூலம் வளர்கிறது?

ஒரு பெரிய அறிவாளியின் அறிவில் 70% அறிவு அவன் 1 லிருந்து 6 வயதாக இருந்த குழந்தைப் பருவத் தில்தான் என்பதை நாம் மேலே கூறிய விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

எனவேதான் Child is the Father of man என்ற ஆங்கிலப் புலவரின் கூற்று எழுந்திருக்கிறது போலும். மனிதனுக்கு அறிவு ஐம்புலன்களின் மூலம் உண்டாகிறது என்பதை நாம் எல்லோரும் கேள்விப்பட்டிருக்கிறோம். இது உண்மைதான். ஐம்புலன்களிலும் கண் மூலம் 87% காது களின் மூலம் 7% மெய் உணர்வு (தொடுஉணர்ச்சி) மூலம் 3.5% மூக்கின் மூலம் 1.5% நாக்கின் மூலம் 1% என்ற அளவில் மனிதனுக்கு அறிவு வளர்கிறது என்பது ஒரு விஞ்ஞான ஆராய்ச்சி. எனவே பால்வாடி ஆசிரியைகள், குழந்தைகளின் அறிவை வளர்க்க என் னென்ன உபகரணங்களை. முறைகளை, இடங்களை. பொருள்களை, பயன்படுத்த வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் காது மூலமாகக் கிடைக்கும் அபார அறிவாற்றலுக்கு ஓர் உதாரணம்:

சென்னையில் என்னுடைய கொழுந்தியார் ஒருவரது குடும்பம் இருக்கிறது. அவர்கள் உருது மொழி பேசும் முஸ்லீம் வீட்டின் ஒரு பகுதியில் குடியிருக்கிறார்கள். இன்னொரு பகுதியில் வீட்டுக்குச் சொந்தக்காரர் வசிக் கிறார். மற்றோர் பகுதியில் ஒரு மலையாளியின் குடும்பம் இருக்கிறது. பிறிதொரு பகுதியில் மூன்று ஆந்திரர் களது குடும்பங்கள் வசிக்கின்றன. இந்தக் குடும்பங்களி லுள்ள ஐந்து வயதிற்கு உட்பட்ட அத்தனை குழந்தை களும் ஒன்று கூடி ஓயாமல் விளையாடிக் கொண்டிருக்கும். என்னுடைய கொழுந்தியாரின் குழந்தைகள் அந்தந்தக் குழந்தைகளோடு அந்தந்த மொழிகளில் தங்குதடை யின்றி மிக இலகுவாகப் பேசுகின்றன. ஆனால் முதிய வனான நான் ஹிந்தி மொழியைக் கற்க வேண்டுமென்று

பல தடவை முயன்றும் இதுவரை கற்றபாடில்லே. சில யூதர்களுடைய, பிராமணர்களுடைய, முஸ்லீம்களுடைய குடும்பங்களில் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் நூற்றுக்கணக்கான வேத சுலோகங்களே மனப்பாடமாக ஒப்பிப்பதை நாம் காண்கிறோம். எனவே இதிலிருந்து என்ன தெரிகிறது என்ருல் இளமையில் ஏற்படும் அறிவுத் திறனுக்கு அளவே இல்லே என்று தெரிகிறது. கற்ற வித்தை காலத்திற்கும் உதவும் என்பதை இளமையில் கற்ற வித்தை காலத்திற்கும் பயன்படும் என மாற்றிஞல் ஒரு பொருத்தமான பழமொழி என்று தெரிய வருகிறது.

இளமைப் பழக்கத்தில் ஏற்படும் திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டு:-

ஒரு குடும்பத்தில் ஓர் ஆண் குழந்தை பிறக்கிறது. அது ஒரு விவசாயக் குடும்பம். எனவே குழந்தைகளோடு ஆடு மாடுகளும் வளர்கின்றன. பையன் ஓடி ஆடி விளே யாடித் திரியும் வயதில் அவனேடு வளர்ந்த ஒரு மாடு கன்று போடுகிறது. கன்றும் பையனும் சேர்ந்து துள்ளித் துள்ளி விளேயாடுவார்கள். சில சமயம் கன்றைப் பையன் தூக்கிக்கொண்டு சிறிதுதூரம் நடப்பான். இந்த நிகழ்ச்சி தினமும் நடைபெறுகிறது. இருவரும் வளர்ந்து கொண்டு வருகிறுர்கள். அப்பொழுதும் அவன் அந்தக் கன்றைத் தூக்கி ஒரு குறிப்பிட்ட இடத்தை தாண்டு வது வழக்கம். அவனுக்கு அது தூக்க முடியாத காளே யாகி விட்டது என்ற நினேவே வரவில்லே. வழக்கமாக அனுதினமும் செய்து கொண்டுவரும் ஒரு சாதாரண செயலாகத் தோன்றிவிடும். எனவே மற்றவர்கள் முடி யாது என்று நினேக்கும் ஒரு செயலே அவன் சர்வ சாதாரணமாகச் செய்ய முடிகிறது. இதற்குக் காரணம் அவனது இளமைப் பருவத்தில் ஏற்பட்ட பயிற்சியே

ஆகும். குழந்தைகள் தங்கள் பெற்றோர்கள் செய்யும் தொழில் எவ்வளவு கடினமானதாய் இருந்தாலும்சரி நுட்பமானதாய் இருந்தாலும்சரி, அதை இழிவு என்றோ கஷ்டமென்றோ கருதாமல் தானுகப் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் செய்வதை நாம் பார்க்கிறோம்.

இப்படிக் குழந்தைகளுக்கு ஏற்பட்ட பிரமாதமான அறிவாற்றல்களைப் பல சரித்திரங்கள் புராணங்கள் வாயிலாகவும் பலபட அறிகிறோம். ஆகையால் எவ்வளவு அறிவாற்றல்களை இளமைப் பருவத்தில் வளர்த்து விடலாம் என்பது தெளிவாகிறது. குழந்தைகளின் மூளையிலுள்ள நரம்பு மண்டலங்கள் மிக உயர்ந்த ஆற்றல் வாய்ந்தனவாகும். அதனுல்தான் குழந்தைக் குப்புரியாது என்று நாம் நினைக்கும் வார்த்தைகள், செயல்கள், காட்சிகள் எல்லாம் அந்தஅந்த நரம்பு மண்டலங்களில் பதிவாகி விடுகின்றன. பதிவானவை கள் அவ்வப்பொழுது குழந்தைகளுக்குப் புலப்பட ஆரம் பிக்கின்றன. எனவே பால்வாடி ஆசிரியைகள் எவ்வளவு அதிகமான காட்சிகளையும் ஒலி, ஒளிகளையும் செயல் களையும், விளையாட்டு, பாட்டு, கதை, ஆடல், முதலி யவைகளின் மூலம் அன்பாகக் கற்றுக்கொடுக்க முடியுமோ அவ்வளவு கற்றுக்கொடுக்கலாம். ஆசிரியர்களுக்கு அதற் கான ஆர்வமும் அக்கறையும் முயற்சியும் உழைப்பும் தான் தேவை. குழந்தையின் உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி, ஆன்மிக வளர்ச்சி ஆகிய மூன்றுமே ஆசிரி யைகளின் கைகளில்தான் இருக்கின்றன. ஆவதும் பெண்ணுலே அழிவதும் பெண்ணுலே என்பதுபோல். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளை அறி வாற்றல் மிக்கவனுக ஆக்கி நாட்டுக்கும் உலகத்திற்கும் நல்லவனுகவும் வல்லவனுகவும் ஆக்குவதும், அல்லது

பயனில்லாப் பூச்சிகளாக ஆக்குவதும் ஆசிரியைகளின் கைகளில்தான் இருக்கின்றன. உதாரணமாக, ரஷ்யாவில் இப்பொழுது சந்திர மண்டலத்திற்குச் செல்வது போன்ற விஞ்ஞான வீரச்செயல்களைப் புரிபவர்கள் அந்தக்காலத்தில் முழுவளர்ச்சி பெற்ற பால்வாடிகளில் பயின்ற மாணவர்கள்தான் என்று சொல்லப்படுகிறது.

ஒரு முன்மாதிரியான பாலர் பள்ளி ஆசிரியை நான்கு சுவர்களுக்குள் ஒடுங்கி இருந்து கொண்டு பாலர் பள்ளிக் குழந்தைகளை மட்டும் கவனித்தால் போதும் என்று நினைக்கக்கூடாது. ஒரு பாலர் பள்ளியின் வெற்றிக்கு ஆசிரியையின் ஆற்றலும் ஆர்வமும் போதாது. குழந்தையின் பெற்றோர்களும் ஊர்ப்பொது மக்களும் பாலர் பள்ளியின் மீது ஆர்வமும் அக்கறையும் கொள்ளுமாறு ஆசிரியைகள் அவர்களுக்கு நவீன அறிவையும் மனப்போக்கையும் அவ்வப்பொழுது ஏற்படுத்த வேண்டும்.

பொதுமக்களையும், அதிலும் முக்கியமாக, தாய்மார்களையும் பாலர் பள்ளி கல்வியின் மீது அக்கறை கொள்ளச் செய்வதற்கு ஆசிரியைகள் என்னென்ன செய்ய வேண்டும் அவைகளை எந்தெந்த முறையில் நடத்த வேண்டும் என்ற யோசனையையும் இந்நூலில் "மாதர் பகுதி" என்ற தலைப்பில் கூறியிருக்கிறோம். மாதர் சங்கம், யுவதிகள் சங்கம், பாலர் சபை முதலான நிறுவனங்களை அமைத்து அவைகளின் மூலம் என்னென்ன காரியம் செய்யலாம் என்பதையும் இந்த அத்தியாயத்தில் கூறியிருக்கிறோம்.

எனவே ஆசிரியைகள், தாங்கள் என்ன செய்கிறோம், அதை ஏன் செய்கிறோம், அதை எப்படிச் செய்ய

வேண்டும் என்ற விஞ்ஞான அறிவோடு பாலர் பள்ளியை நடத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வழிகாட்டி நூலை வெளியிடுகிறோம். இந்நூலின் கடைசி அத்தியாயத்தில் எந்தெந்த நாளில் என்னென்ன பாடம் நடத்த வேண்டும் என்ற ஒரு ஓராண்டுப் பாடத் திட்டத்தையும் கொடுத்திருக்கிறோம்.

இப்பாடத்திட்டம் வத்தலக்குண்டு பகுதி பால்வாடிகளில் "பாலர் பள்ளி மேற்பார்வை"யாளராக இருக்கும் ஸ்ரீமதி பாப்பாக்கண்ணு அவர்களால் வழங்கப்பட்டதாகும். பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்ட பொருள்களைப் பற்றிய பாட்டுகள், கதைகள், விளையாட்டுகள், முதலியவைகளை மட்டும் ஆசிரியைகள் குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை. அதற்குப் பதிலாக ஆசிரியைகள் பொருத்தமான வேறு புதுப்புதுப் பாட்டுகள், கதைகள், விளையாட்டுகள் முதலியவைகளைத் தாமே கற்பனு சக்தி மூலம் படைத்து குழந்தைகளுக்குச் சுவையுடன் கற்பிக்கலாம். பாலர் பள்ளி ஆசிரியை தன்னுடைய பள்ளியைக் குழந்தைகளின் மனம் கவரும் வண்ணம் ஒரு பொருட்காட்சி சாலை மாதிரி வைத்திருப்பதோடு அக்குழந்தைகளுக்கு உண்மையான தாய்மாதிரி குழந்தைகளை அடிக்காமலும் முகத்தை சுளிக்காமலும் அன்பாக கொஞ்சிக் குலாவி அவர்களுடன் பழக வேண்டும். எப்பொழுதும் அதே சிந்தனையில் இருக்கும் ஆசிரியைகளுக்கு புதுப்புது பாட்டுகளும், கதைகளும், முறைகளும் தானே தோன்றும். அப்படிப்பட்ட ஆசிரியைகளுக்கு இந்த வழிகாட்டி நூல் பெரிதும் பயன்படும் என்ற நல்ல நோக்கத்தில் இதை நாங்கள் வெளியிடுகிறோம். தமிழ்நாட்டின் கிராமங்களில் பணிபுரியும் பாலர் பள்ளி ஆசிரியைகள் இந்நூலை விரும்பி ஏற்று பய

ணடைவார்கள் எனவும் பயன்படுத்துவார்கள் எனவும் நம்பி இத்திட்டத்திற்கு தந்தையாக இருந்து வழி நடத்தும் தவத்திரு கெய்த்தான்ஜி அவர்களின் 80 ஆவது வயது பூர்த்தி விழா ஞாபகார்த்தமாக இதை வெளியிடுகிறோம். இந்நூல் உருவாவதற்கு மூலகாரணமாயிருந்த தமிழ்நாடு சர்வோதய மண்டல காரியதரிசி திரு. க. மு. நடராஜன் அவர்களுக்கு எங்களது நன்றி உரித்தாகும். இந்த நூலை ஆர்வத்துடன் மிகக்குறுகிய காலத்திற்குள் விரைவாக வெளியிட்டு உதவிய ''வைகை'' அச்சகத்தாருக்கு எங்களது நன்றி என்றும் உரித்தாகும்.

இந்நூலை ஏற்று தமிழ் மக்களுக்கு வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற ''சர்வோதய இலக்கியப் பண்ணை''க்கு எங்களது நன்றியை உரித்தாக்குகிறோம்.

இங்ஙனம்

சர்வோதய ஆஸ்ரமம்
15 - 6 - 1977

அ. அவையன் M. A.
(முதல்வர்)

அ. எபிநேசர் D. R. S., B. E. d.
(ஆசிரியை)

2. பாலர் பள்ளியின் அவசியம்

சிறு குழந்தையானவன் வளர ஆரம்பிக்கிறான். அவன் தன்னுடைய் அவயவங்களை நன்றாக உபயோகப் படுத்த வேண்டும். அவனுக்கு உலகத்தை அறிய வேண்டியது அவசியம். தீமைகளிலிருந்து தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள வேண்டும். தனக்கும் தனது வளர்ச்சிக்கும் பயனுள்ளதையும், நன்மையானதையும் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு காரியத்தைச் செய்யும் பொழுது அதை ஏன் செய்கிறோம், அதனால் என்ன நன்மை என்பதை அவன் அறியும் ஆற்றல் பெற வேண்டும்

இரண்டு அல்லது இரண்டரை வயது ஆனதும் குழந்தையானவன் சிறு மனிதனாக உருவெடுக்கிறான். இது அவனுக்கு மிகவும் உணர்ச்சி வசப்படும் பருவமாகவும் அவனுடைய செய்கை அனைத்தும் பாராட்டக் கூடிய தாகவும் உள்ளது. ஆதலால் எல்லாவிதமான வளர்ச்சி களுக்கும் ஏழு வயதிற்குட்பட்ட காலம் மிகவும் முக்கிய மானதாக உள்ளது என அறிவாளிகள் கூறி உள்ளனர். இப்படிப்பட்ட உணர்ச்சிகளை வெளிப்படுத்த சிறு பிள்ளை களுக்கு பூர்வாதார ஆரம்பப்பள்ளி (Pre-school) மிகவும் அவசியமானதாக இருக்கிறது.

சிறு பிள்ளை தனது கைகளையும், கால்களையும், விரல் களையும் விருப்பமானபடி அசைக்க, நடக்க, ஓட, ஆட, குதிக்க ஆசைப்படுகிறான். இதனால் தனது தசைகளை அடக்கவும், தனது உடலைச் சரியான நிலையில் வைக்கவும்

அவனுல் முடிகிறது. இவைகள் அவனது பிற்கால வாழ்க்கைக்கு மிகவும் பயன்படுகின்றன. தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி அறியவும் தனது செயல்கள் மூலம் உலகிற்குத் தன்னை வெளிப்படுத்தவும் வேண்டும் என்ற இயற்கையான குணம் ஏற்படுகிறது. பிறரிடம் எல்லாவற்றையும் ஏன்? எங்கே? எப்படி? என்ற கேள்விகளைக் கேட்டும், தொட்டும், ருசித்தும், பார்த்தும், முகர்ந்தும் தன்னைச் சுற்றியுள்ள பெரியவர்களிடமிருந்து அறிந்தும் கொள்கிருன். இவைகளைப் பற்றிய சரியான அறிவு ஏற்பட ஒரு பள்ளி வேண்டும்.

பிறந்து சில மாதங்களிலிருந்து குழந்தை பலவிதமான ஒலிகளை உண்டாக்குகிருன். படிப்படியாக பேச்சு ஆற்றல் வருகிறது. இதனை ஒழுங்கான முறையில் வளர்க்க வேண்டும். மேலும் வார்த்தைக்கும், வாக்கியத்திற்கும் உள்ள வித்தியாசங்களைப் பற்றியும் அவர்கள் அறிய வேண்டும். இதோடு மனவெழுச்சிகளை வெளிப்படுத்தவும் வரையவும், விளையாடவும், வேறு செய்கைகளைச் செய்யவும் வைக்க வேண்டும். இவையெல்லாம் வளர்வதினுல் குழந்தை ஒரு சிறந்த மனிதனுகப் பின்னுல் வளர முடிகிறது. ஆகவே இதற்கு ஒரு பள்ளி அவசியமாகிறது.

பூர்வாதார ஆரம்பப் பள்ளியின் முக்கிய நோக்கம் சமுதாயத்தில் எப்படி இருக்க வேண்டும் என்பதை அவ்வயதுப் பிள்ளைகளை அறிய வைப்பதே. வீட்டில் தனக்கு வேண்டியவைகளைப் பெரியவர்களிடம் கேட்டுப் பெற்றுக் கொண்டு சுயநலத்துடன் காணப்படுகிறது. $2\frac{1}{2}$— 6 வயது பிள்ளைகள் தங்கள் வயதை ஒத்த பிள்ளைகளுடன் பழகவும், விளையாடவும் ஆசைப்படுகின்றனர்.

இந்தப் பள்ளியின் மூலம் அவர்கள் பிறருக்குக் கொடுத்து வாங்கும் பழக்கத்தை கற்றுக் கொள்கிறார்கள் தங்கள் வயதை ஒத்தவர்களுடனும் சிறுவரிடமும், பெரியவரிடமும் எப்படி நடக்க வேண்டும் என்றும் இங்கு அறிகிறார்கள். பிறரோடு சேர்ந்து பழகாமல் தனித்திருக்கும் தன்மையை ஒழிக்க இப்பள்ளி அவசியமாகிறது. சமுதாயத்தில் சேர்ந்து வாழ வேண்டிய அவசியத்தை அறியவும், தானும் அச்சமுதாயத்தில் ஒருவன் என்பதை அறியவும் இப்பள்ளி அவசியமாகிறது.

பூர்வாதாரப்பள்ளியானது ஒரு நல்ல முன்னேற்றமடைந்த சமுதாயத்திற்கு மிகவும் அவசியம். இந்த வயதில் உள்ள பிள்ளைகள் வீட்டை விட சிறிது பெரிதான சூழ்நிலையில் நுழைந்து பழக வேண்டியவர்களாக உள்ளனர். வீடுகளில் சில பிள்ளைகளுக்கு தனிப்பட்ட வகையில் பல நன்மைகள் ஏற்படலாம். ஆனால் இவையெல்லாம் கடந்து சம உரிமை படைத்த ஒரு நல்ல சமுதாயத்தில் வளரப் பழக வேண்டும். வீட்டின் சூழ்நிலை சிறுவர்களுக்கு மிகவும் நெருங்கின தொடர்புடையதாக உள்ளது. ஆதலால் பள்ளியிலும் அவர்கள் நெருங்கிப் பழகக் கூடிய வகையில் ஆசிரியர்கள் அம்மாவைப் போல் தங்களைப் பாவித்து பிள்ளைகளை வழிநடத்த வேண்டியது அவசியமாகிறது. வீட்டில் ஒரு பாலர் பள்ளியில் உள்ள எல்லாவித விளையாட்டுப் பொருட்களையும் அமைத்துத் தர முடியாது. ஆதலால் சிறுவர்கள் பள்ளிக்கு வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

மலைப்பிரதேசங்களில் வசிப்பவர்களுடைய பிள்ளைகளுக்கு வீட்டுச் சூழ்நிலை சிறிது கூட இராது. ஏனென்றால்

அவர்களது பெற்றோர்கள் வேலைகளுக்குக் காலையில் சென்று மாலையில்தான் திரும்புவார்கள். ஆனால் இப் பிள்ளைகள் கல்விக்குரிய வாய்ப்பில்லாத இயற்கைச் சூழ்நிலையில் இருக்க நேரிடுகிறது. இம்மாதிரிப் பிள்ளைகள் தான்தோன்றித்தனமாக தங்களுக்கு என்ன செய்ய விருப்பமோ அதையே செய்கிறார்கள். அவர்களுக்கு விளையாடத் தேவையான விளையாட்டுப் பொருட்களைக் கொடுத்து உதவ பெற்றோரால் முடிவதில்லை. ஆனால் இந்த தான்தோன்றிச் சுதந்திரம் அவர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டி யாகவோ அல்லது தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாகவோ அமைவதில்லை.

பாலர் பள்ளி வயதினருக்கு ஓரளவு சுதந்திரம் தேவைப்படுகிறது. இந்த சுதந்திரமானது அவர்களுக் குப் பள்ளிக்கு சென்றாலும் கிடைக்கிறது.

குழந்தைகள் விளையாடத் தேவையான பொருட் களை குறித்த நேரத்தில் கொடுத்து வாங்க ஒரு பள்ளி யில்தான் முடியும். அவர்களது உடல் மற்றும் சமூக வளர்ச்சிக்குத் தக்க விளையாட்டுக் கருவிகளை ஒரு பள்ளி யில்தான் கொடுக்க முடியும். ஆகவே ஓரளவு சுதந்திரத் திற்கும் பலவித விளையாட்டுப் பொருட்களைப் பெறுவ தற்கும் பாலர் பள்ளி அவசியமாகிறது.

பால்வாடியானது வீட்டை விட சற்று பெரியதாக உள்ளதே தவிர மற்றபடி அன்பு, பராமரிப்பு, பாது காப்பு ஆகியவற்றில் வீட்டைப்போலவே காணப்படு கிறது. பெண்கள் சிறு பள்ளிகளை நடத்துவதில் கை தேர்ந்தவர்கள். ஆதலால் ஆண்களைவிடப் பெண்களே அமர்த்தப்படுகின்றார்கள். எல்லாவிதமான வளர்ச்சி

களையும் பிள்ளைகளிடத்தே வளர்க்கவும் வேலைகளுக்குச் செல்லும் பெற்ருேருடைய பிள்ளைகளைக் கவனிக்கவும் ஒரு பால்வாடி மிகவும் அவசியமாகிறது நல்ல குணங் களைப் பிள்ளைகளிடத்தே வளர்க்கவும் அவர்களைப் பிற் காலத்தில் ஒரு நல்ல குடிமகளுக ஆக்கவும் பால்வாடி மிகவும் அவசியமாகிறது.

3. பாலர் பள்ளியின் நோக்கங்களும் குறிக்கோள்களும்

குழந்தைகள் இயற்கையன்னை வழங்கும் பெருஞ் செல்வம். அவர்கள் இயற்கையின் மடியில் வளருகிறார்கள். இயற்கையன்னையின் தூய்மையான சூழ்நிலை அவர்கள் உடலுக்கும் உள்ளத்திற்கும் உயர்ந்த வளர்ச்சியை கொடுக்கக் கூடியது,

குழந்தைகள் நல்லவர்களோடு பழகும் போதும் அவர்களோடு இணைந்து வாழும் போதும் நல்லவர்களாகி விடுகிறார்கள். இன்றைய உலகத்தில் குடும்ப, சமுதாய சூழ்நிலைகளில் வேகமான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் குழந்தை வளர்ப்பில் நற்பண்பை வளர்க்க அதிக கவனம் செலுத்த வேண்டியதுள்ளது. இது எளிதான கருத்தா யினும் செயல்படுத்துவது கடினம். இப்பெரிய பொறுப் பின் மாண்பினை அறிந்து பாலர் பள்ளிகள் மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன.

குழந்தைகளின் துடிப்புகளும், மனஎழுச்சிகளும், ஓயாத அலைகளும் இயற்கையாகவே துடி துடிப்பானவை யாக உள்ளன. ஆகவே அவற்றை ஊக்கி நன்குவளர வைப்பது கல்வியின் கடமை ஆகும். எனவே பாலர் பள்ளி அவர்களின் உடலையும் அறிவையும் ஒருங்கே தூண்டி ஒருங்கமைந்த பண்பட்ட வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும்.

குழந்தைப்பருவத்தின் வளர்ச்சி வேகமான கட்டத்தில் இருக்கிறது. புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் எதைச் சொல்லிக் கொடுத்தாலும் அதைக் கேட்டுச் சிந்தித்து ஏற்றுக் கொள்ளும் நிலையில் 2 வயது முதற் கொண்டே குழந்தைகள் தயாராகி விடுகிறார்கள். ஆனால் பெரும்பாலான இல்லங்களில் பெற்றோரும் தம் ஏழ்மையினாலோ, அறியாமையினாலோ அல்லது அலட்சியத்தினாலோ வழிமுறைகளைக் குழந்தைகளுக்கு விளக்கிச் சொல்வது இல்லை. குழந்தைகளுக்கு எவ்வளவு ஆக்க பூர்வமான அனுபவங்களைக் கொடுக்கிறோமோ அவ்வளவுக்கு அவர்கள் கல்வி அறிவைப் பெற முடியும். ஆகவே பாலர் பள்ளி பயனடையும் வகையில் வளமான சூழ்நிலையில் அமையவேண்டும். இந்தப் பருவத்தில் அடையும் வளர்ச்சியை வேறு எந்தப் பருவத்திலும் அவர்கள் அடைய முடியாது.

குழந்தைகள் அடையும் பயன்

பாலர் பள்ளி 2½ வயது முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சிறந்த குறிக்கோளுடன் கல்வி அனுபவங்களைப் பெறும் அனுபவம் வாயந்த களமாகும். முதன் முதலாக வீட்டிற்கு வெளியில் வீட்டைப் போன்ற அன்புச் சூழ்நிலையில் பலபுதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளும் இடம். இங்கு ஏற்படுத்திக் கொடுக்கும் சூழ்நிலை அவனது பண்பை வளர்க்க உதவுகிறது. விளையாடக் கற்றுக் கொடுப்பதின் மூலம் நல்ல உடல் அமைப்பைப் பெற முடிகிறது. பாலர் பள்ளியில் கற்றுத்தரும் வரைதல், வண்ணம் பூசுதல், கிழித்தல், வெட்டுதல், ஒட்டுதல், மணிகளைக் கோர்த்தல் போன்ற பல செய்கைகள் குழந்தையின் நுண்ணிய தசைகள்

இணைந்து வேலை செய்ய உதவுகின்றன. நல்ல ஆரோக்கியமான பழக்க வழக்கங்களைப் பயில்வதற்கும், உணவு உண்ணுதல் போன்ற தன்வேலைகளைத் தானே செய்யும் பழக்கத்தைப் பெறுவதற்கும் பாலர் பள்ளி உதவுகிறது. குறிப்பிட்ட நேரத்தில் சிறுநீர் கழிக்கவும், மலஜலம் கழிக்கவும் தெரிந்து கொள்கிறார்கள். பல் துலக்குவதின் அவசியம், தலை வாருதல் முதலியவற்றின் முக்கியத்துவத்தை எளிய உரையாடலின் மூலமும் கதைகள், பொம்மலாட்டம் மூலமும் குழந்தைகள் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

எதிர்காலத்திற்குத் தேவையான விரும்பத் தகுந்த சமூக மனப்பான்மையை வளர்க்கும் திறனைப் பெற பாலர் பள்ளி உதவுகிறது. குழுவில் ஓர் உறுப்பினராக இருந்து தனது உரிமைகளையும், கடமைகளையும் எளிதில் கிரகித்துக் கொள்ளக்கூடிய தன்மை வளர்கிறது, அவனுடைய, மற்றவர்களுடைய பொருட்களைப் பாதுகாத்தல், ஒத்துழைத்தல், பங்கிடுதல் ஆகிய நல்ல பழக்கங்கள் ஏற்படுகின்றன. (உ.ம்) ஆசிரியருக்குக் காலையிலும் மாலையிலும் வணக்கம் சொல்வதைக் குழந்தைகள் உடனே பின்பற்றுகின்றனர். தன் முறை வரும் வரை காத்திருக்கவும், மற்ற குழந்தைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கவும் குழந்தை கற்றுக் கொள்கிறது.

குழந்தைகள் தங்கள் உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் வெளிப்படுத்தவும், புரிந்து கொள்ளவும், அடக்கிக் கொள்ளவும் அவர்களுக்கு வழிகாட்டுதல் மூலம் விரும்பத்தக்க உணர்ச்சிகளை உருவாக்க முடியும். பாலர் பள்ளிக்கு வந்த ஆரம்பக் கட்டத்தில் குழந்தைக்கு உணர்ச்சிகளைச் சுலபமாகக் கட்டுப்படுத்த முடியாது

பிடிவாத குணங்கள் அடிக்கடி ஏற்படலாம். தன் முறை வரும் வரை அவனுல் காத்திருக்க முடியாது. மற்றவர்கள் வேண்டாம் என்றுசொல்வதை அவனுல் ஏற்றுக் கொள்ளவும் முடியாது. சில மாதங்கள் பாலர்பள்ளியில் பழகிவிட்டு வெளி வரும்போது ஆசிரியருடைய நல்ல கவனமான ஒழுங்கான கவனிப்பினுல் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள அவனுல் முடியும். இயற்கையை உணர்ந்து ரசிப்பது பற்றி பழக்குவது பள்ளியின் முக்கிய நோக்கமாகும்.

பரிசோதனை செய்தல், ஆராய்தல் போன்ற வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதின் மூலம் சுற்றுப் புறத்தைப் பற்றிய விழிப்புணர்ச்சியைப் பெறுகிருன். புதிய ஆர்வங்களையும் வளர்த்துக் கொள்கிருன். தானே தன் உணர்ச்சிகளையும் செயல்களையும் வெளிப்படுத்த பாலர் பள்ளி சில சமயங்களில் குழந்தைகளுக்கு உதவுகிறது. வண்ணம் பூசுதல், பாட்டு, நாடகம், பொம்மலாட்டம் இவைகளின் மூலம் உள்ளத்தின் ஆழத்தில் புதைந்திருக்கும் உணர்ச்சிகள், விருப்பு வெறுப்புக்கள் இன்ப துன்பங்கள் முதலியவை வெளிப்படுத்தப்படுகின்றன.

உள்ளத்து எண்ணங்களை குழந்தைகள் தங்கு தடையின்றித் தெளிவான பேச்சின் மூலம் வெளிப்படுத்த பாலர் பள்ளி வாய்ப்பளிக்கிறது. புதிய வார்த்தைகளைக் கற்றுக் கொள்ள உதவுகிறது. சாதி மத பேதம் இன்றி நன்முறையில் பழக வழி கோலுகிறது. சிறுவயதிலேயே உடல், உள்ள, ஆன்ம வளர்ச்சி பெறுகிருன். சுகாதார உணர்ச்சியையும் பெறுகிருன்,

நோக்கங்கள் :- (பாலர் கல்வியின் சிறந்த நோக்கம்)

1. குழந்தையின் எதிர்காலம் சிறந்த முறையில் அமையச் செய்தல்.

2 குழந்தைகள் சுறு சுறுப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கச் செய்தல்.

3. சுயதேவையைப் பூர்த்தி செய்யப் பழக்குவித்தல்.

4. நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்ளச் செய்தல்.

5 நல்ல புதிய பண்டங்களையும், விளையாட்டுச் சாமான் களையும் கொடுத்து நிறைவு செய்தல்.

6. உடல். உள்ள, ஆன்ம வளர்ச்சிக்கு வாய்ப்பு அளித்தல்

7. அனைவருக்கும் தாயன்பை அளித்து, வளர்ச்சி அடையச்சத்துணவு அளித்தல்.

8. பள்ளிக்குத் தயாராக ஊக்குவித்தல்.

9. எதிர் காலத்தில் நல்ல நிர்வாகியாக விளங்க ஊக்கு வித்தல்.

4. பாலர் பள்ளிக்குத் தேவையான கட்டிடமும் கருவிகளும்

குழந்தை மன வளர்ச்சி, உடல் வளர்ச்சியைப் பாலர் பள்ளியில் பெறுவதுடன், அவனை ஒரு சிறந்த குடிமகனாகவும் விளங்கச் செய்கிறது. இப்படிப்பட்ட வசதிகளைப் பெறுவதற்குக் கட்டிடமும் விளையாட்டுக் கருவிகளும் அவசியம்.

கட்டிடமும் விளையாட்டு மைதானமும்

பாலர் பள்ளியின் கட்டிட அளவையும், அங்கே தேவைப்படும் விளையாட்டுப் பொருட்களையும் நாம் தெரிந்திருக்க வேண்டும். கிராமத்தில் உள்ள குழந்தைகள் நகரத்தில் கிடைக்கும் பொருட்களைப் பெற்று விளையாடும் வாய்ப்பை அளிக்கவேண்டும்.

பாலர் பள்ளிக்கு ஏற்ற இடம்

கட்டிடம் கட்டுவதற்கு முன்பு அவ்விடத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலைகளைப் பார்க்கவேண்டும். நெருக்கமான இடத்திலோ, தனிமையான இடத்திலோ அமைந்திருக்கக் கூடாது. போக்கு வரத்து அதிகம் இல்லாத இடமாக இருக்கவேண்டும், காற்றோட்டமான இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான இடத்தை தேர்ந்தெடுக்கும் முறைகள்

பாலர் பள்ளி, ஊரிலுள்ள எல்லா குழந்தைகளும் வருமாறு ஊரின் நடுவில் இருக்குமாறு தேர்ந்தெடுக்க

வேண்டும். சுற்றுப்புறம் தூய்மையானதாக இருக்கக் வேண்டும். இல்லையெனில் உடல் நலம் பாதிக்கப்படும். தொழிற்சாலைக்கும், பேருந்து நிலையத்திற்கும் அருகில் இருக்கக் கூடாது. காரணம் அசுத்தக் காற்று உடல் நலத்தைப் பாதிக்கும். கிணறு, குளம் இவற்றிற்கு அப்பாற்பட்டு அமைந்திருக்க வேண்டும்.

பாலர் பள்ளிக் கட்டிடம்

பாலர்பள்ளிக் கட்டிடம் குழந்தைகளுக்குத் தேவையான வசதிகள் அனைத்தும் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும். விளையாடும் இடம், தூங்கும் இடம், சிறுநீர், மலம் கழிக்கும் அறைகள், கை கால் முகம் கழுவும் இடம் இவைகள் தனித்தனியாக இருக்க வேண்டும். இந்த அறைகள், குழந்தைகள் உபயோகிக்கத் தகுந்த இடத்திலும் உயரத்திலும் இருக்க வேண்டும். குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கையை வளர்க்கக் கூடிய முறையில் பாலர் பள்ளிக் கட்டிடம் அமைந்து இருக்க வேண்டும், அதிகப் பரப்பளவு கொண்டதாக இருந்தால் சுதந்திர உணர்வை வளர்க்கக் கூடியதாக இருக்கும்.

குழந்தைகளுக்கு வேண்டிய அலமாரிகள் அவர்கள் கைக்கெட்டும் உயரத்தில் இருக்க வேண்டும். அவர்களுக்குரிய அலமாரிகளுக்குத் தேவையான பூட்டை அவர்களிடமே கொடுத்துவிட வேண்டும். பாலர் பள்ளிக் கட்டிடம் ஆசிரியர்களின் எண்ணிக்கையையும். குழந்தைகளின் எண்ணிக்கையையும் பொறுத்து அமைந்திருக்க வேண்டும். குழந்தைகளைக் கவரக்கூடிய நிறமுள்ள கட்டிடமாக இருக்க வேண்டும். மன அமைதியைக் கொடுக்கக் கூடியதாகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்,

விளையாடும் இடம்

குழந்தைகள் சுதந்திரமாக விளையாட அதிகப் பரப்பளவு கொண்டதாக இருக்க வேண்டும். மனத் திருப்தியை அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். நோயுற்ற குழந்தைகளுக்குத் தனி அறை ஒதுக்கப்பட வேண்டும்.

கட்டிடம் கட்டப்படும் விதம்

சூரிய ஒளி நன்கு கட்டிடத்திற்குள் வரும்படி கட்டப் பட்டிருக்க வேண்டும். காற்று வரும்வண்ணம் போது மான ஜன்னல்களும், கதவுகளும் உடையதாக இருக்க வேண்டும். மின்விளக்கு வசதியுடையதாக அமைந்திருத் தலும் நல்லது. கட்டிடம் செங்கல்களை வைத்துகட்டப் பட வேண்டும். கட்டிடத்தின் தரை எளிதில் கழுவும் வண்ணம் சிமெண்ட் உபயோகித்துக் கட்டப்பட்டிருக்க வேண்டும். தண்ணீர் தேங்கி நிற்காமல் இருக்கும்படி யாகச் சமதளமாக அமைந்திருத்தல் வேண்டும்.

விளையாட்டுக் கருவிகளும் பொருட்களும்

குழந்தைகளின் உடல், உள்ள, சமூக வளர்ச்சி அவர்கள் விளையாடும் விளையாட்டின் மூலம் வளர்ச்சி பெறுகிறது. அவர்கள் ஆக்கத்திறனையும், கற்பனைச்சக்தி யையும் வளர்ப்பதற்கு பெரும் துணையாக இருப்பதும் விளையாட்டே. குழந்தைகளின் விளையாட்டிற்குப் பல் வேறு கருவிகளும், பொருட்களும், பெருந்துணை புரி கின்றன. அவைகளைத் தேர்ந்தெடுக்கும் முறையும் பாதுகாக்கும் முறையும் ஒவ்வொரு பாலர் பள்ளி ஆசிரியையும் அறிதல் வேண்டும்.

விளையாட்டுக் கருவிகளைத் தேர்ந்தெடுக்க விதிமுறைகள்

1. குழந்தைகளின் வயதும், முதிர்ச்சியும்.
2. வகுப்பில் குழந்தைகளின் எண்ணிக்கையும் அவர்களின் தேவையும்.
3. பள்ளியின் நிதி நிலைமை.
4. பள்ளியின் இடவசதியும், கருவிகளைப் பாதுகாக்கப் போதுமான இடமும்.
5. பாலர் பள்ளிப் பாடத் திட்டம்.
6. இடத்தின் காலநிலை, பொருளாதார நிலை இவைகளுக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கக்கூடிய தன்மையுடையவை.
7. நீண்ட நாட்கள் உழைக்கக் கூடிய உறுதியான கருவிகள்.

விளையாட்டுப் பொருட்கள்

கொட்டைகள், காகிதம், மரம், துணி இவற்றில் செய்யப்பட்ட பொம்மைகள், கலர்ப்பொடிகள், கலர்க் காகிதங்கள், அசையும் பொம்மைகள், பூட்டும் சாவியும் எழுது கோலும் மூடியும், பைகள், பயன்படுத்தப் படாத சைக்கிள் டயர், உருளைக்கிழங்கு, வெண்டைக் காய். வீணாக்கப்பட்ட மரக்கட்டைகள், தேங்காய் ஓடு, முதலியவைகள் ஆகும்,

காலி ஜாடிகள், டின்கள், பழைய கரண்டிகள், கற்கள், குச்சிகள், மலர்கள் மற்றும் இலை போன்றவை கிராமம், தோட்டம் இவை வைத்து விளையாட உதவுகிறது.

பாலர்பள்ளியில் காணப்படும் விளையாட்டுப் பொருட்கள்

கலைப்பொருட்கள்:

பல்வேறு அமைப்புள்ள புருசுகள், களிமண், மெழுகுப்பென்சில், விரல் வண்ணம், காகிதம், கத்தரிக்கோல் ஆகியனவாகும். மரச்சாமான்கள் :- உளிகள், மரப்பெஞ்சுகள், மணற்காகிதம், வண்ணம், வார்னிஷ், புருசு ஆகியன.

சங்கீதக் கருவிகள்

கொட்டு, பல்வேறு ராகங்களை உருவாக்கும் குச்சிகள், பாட்டு மணிகள், பியானோ, பெஞ்சு, வானொலி ஆகியவை.

நகரும் பொம்மைகள்:

மூன்றுகால் சைக்கிள் வண்டி, கார்கள், தள்ளுவண்டிகள், பலகைகள் ஆகியவை சக்கரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

நிலையான விளையாட்டுக் கருவிகள்:

ஜங்கில்ஜிம், பலவிதமான ஏறும் அமைப்புக்கள், ஊஞ்சல் பாலம், ஏணி, குளம், மணல் தொட்டி ஆகியன.

5. பாலர் பள்ளியில் இருக்க வேண்டிய குறிப்பேடுகள்

பாலர் பள்ளி, குழந்தைகளுக்கு வழிகாட்டியாக அமைவதால் அதற்கான குறிப்பேடுகளும், பதிவேடுகளும் வைப்பது பள்ளி நிர்வாகத்தின் இன்றியமையாத ஒன்ருகக் கருதப்படுகிறது. ஆகவே பாலர் பள்ளியில் கீழ்க்காணும் பதிவேடுகள் வைப்பது மிகவும் அவசியம்.

1. சென்சஸ் கணக்குப் பதிவு ஏடு:

அந்தக் கிராமத்தில் உள்ள குடும்ப நபர்களின் பெயர், தொழில், குழந்தைகள் (வயது குறிப்பிட்டு) முதலியவைகளை எழுதி வைக்கவேண்டும். 5 வயதிற்குக் கீழ் எத்தனை குழந்தைகள் உள்ளனர் என்பதைக் குறித்து வைக்க வேண்டும். 5 வயதிற்குக் கீழ் உள்ள குழந்தைகளைப் பாலர் பள்ளியில் சேர்க்க இக்குறிப்புகள் உதவும்.

2. வருகைப் பதிவேடு:

பாலர் பள்ளிக்கு வருகின்ற குழந்தைகள் அனைவரின் பெயரையும் வரிசைக் கிரமமாக வருகைப் பதிவேட்டில் குறிப்பிட வேண்டும். தினசரி குழந்தைகள் தவருமல் இரண்டு வேளையும் பள்ளிக்கு வருகின்றனரா என்பதை அவ்வேட்டில் குறிக்க வேண்டும். ஆண் குழந்தைகளின் பெயர்களையும், பெண் குழந்தைகளின் பெயர்களையும் வேறுபடுத்துவதற்காக வெவ்வேறு வண்ண மைகளால் எழுதவேண்டும்.

3. சேர்க்கைப் பதிவேடு:

குழந்தைகளின் பெயர், பெற்ருேர் அல்லது பாதுகாவலரின் பெயர், தொழில், ஜாதி, மதம், இருப்பிடம், பிறந்ததேதி, சொந்த ஊர், பள்ளியில் சேர்ந்த தேதி, பள்ளியிலிருந்து விலகிய பிள்ளைகளின் எண்ணிக்கையை நீக்கிவிடாமல் புதிதாக சேரும் பிள்ளைகளின் எண்ணிக்கையை அதனுடன் தொடர்ச்சியாக எழுதவேண்டும்.

4. வரவு செலவு கணக்கு நோட்டு:

பள்ளிக்கு எந்தெந்தத் துறையிலிருந்து நிதிகள் வருகின்றன என்பதையும், பள்ளிக்கான செலவுகள் யாவை என்பதையும் வரவு செலவு கணக்கு நோட்டில் எழுத வேண்டும், இக்குறிப்பு வரவுக்குத் தகுந்த செலவு செய்ய உதவியாக இருக்கும்.

5 மதிய உணவுக் கணக்கு நோட்டு:

ஒவ்வொரு நாளின் மதிய உணவுப் பட்டியலையும், அதற்கான செலவுகளையும் குறிப்பதற்கான ஒரு தனி நோட்டு வைத்தல் அவசியம். இந்தப்பட்டியலின், மூலம் குழந்தைகளுக்கு சீருணவு கிடைக்கின்றதா என்பதையும் எந்தவித உணவிற்கு எவ்வளவு செலவு ஆகிறது என்பதையும் தெரிந்து கொள்வதுடன் மாற்றங்கள் அவசியமானல் உணவுப் பட்டியலை மாற்றி அமைக்கவும் ஏதுவாக இருக்கும்.

6. நிரந்தரச் சாமான்கள் பதிவேடு:

தேதி, சாமான்களின் பெயர், அவை நன்கொடையாகப் பெற்றதா அல்லது விலைக்கு வாங்கப்பட்டதா என்பதையும் சாமான்களின் எண்ணிக்கை, அவற்றின் மதிப்பு, உபயோகமில்லாமல் போன சாமான்களின்

விபரம், மீதி இருப்பு, செயலாளர் கையொப்பம், குறிப்பு, இவை அனைத்தையும் குறித்து வைக்க வேண்டும்.

7. *பார்வையாளர் நோட்டு :*

பள்ளிக்கு வரும் அதிகாரிகளோ அல்லது விருந்தி னர்களோ பார்வையிட வந்தால் அவர்களிடம் ஒரு நோட்டில் பாலர் பள்ளியைப் பற்றிக் குறிப்பு எழுது மாறு செய்ய வேண்டும். இத்தகைய குறிப்புக்கள் பாலர் பள்ளியை இன்னும் செவ்வனே நடத்துவதற்கு உதவி செய்யும்.

8. *பெற்றோர் சங்கக் கூட்டறிக்கை ஏடு :*

பாலர் பள்ளிஆசிரியை தலைமையின் கீழ் பெற்றோர் கள் அனைவரும் வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது மாதத்திற்கு ஒரு முறையோ கூடி முக்கியமான பிரச் சனைகளைப் பற்றி விவாதிப்பார்கள். உதாரணமாக குழந்தைகளுக்கான சத்துணவு, குழந்தைகளைப் பராமரித் தல் போன்ற தலைப்புக்களை விவாதிக்கலாம்.

9. *தினசரிக் குறிப்பேடு.*

பாலர் பள்ளி ஆசிரியை தான் செய்யும் அன்றாட வேலைகளை, அதாவது வகுப்பு ஆரம்பத்தில் இருந்து வகுப்பு முடியும் வரை என்னென்ன வேலைகள் செய்கிறார்களோ அவை அனைத்தையும் குறித்தல் அவசியம். தேதி, வகுப்பு, ஆரம்பம், வருகை, வழிபாடு, சுதந்திர உரையாடல், திட்டமிட்ட செயல், வெளி விளையாட்டு, பாட்டு, கதை, உள்விளையாட்டு, குறிப்பு, விருந்தினர் இவை அனைத்தும் குறிக்க வேண்டும்.

10. *அறிக்கை ஏடு:*

மாதத்துவக்கத்திலும், கடைசியிலும் பதிவில் உள்ள ஆண், பெண் குழந்தைகளின் எண்ணிக்கையையும்,

வகுப்பு நடத்திய நாட்கள், வகுப்பு நடத்திய விபரம், ஆரோக்கியப் பரிசோதனை, மற்றும் அம்மாதம் முழுவதும் நடந்த செயல்கள் பற்றிய குறிப்பு முழுவதும் மிகவும் அவசியம்.

11. குழந்தைகளின் ஆரோக்கியக் குறிப்பேடு:

இதன் முக்கிய நோக்கம் என்னவென்றால் பெற்றோரும் ஆசிரியரும் ஒவ்வொரு குழந்தையின் வளர்ச்சியைப் படிப்படியாக தெரிந்து கொள்ளச் செய்வதே. வரிசை எண், குழந்தைகளின் பெயர், வயது. எடை, உயரம் இவை அனைத்தையும் ஒவ்வொருமாதமும் ஆரோக்கியக் குறிப்பேட்டில் குறிக்க வேண்டும். குழந்தைகள் நல்ல ஆரோக்கியம் உள்ளவர்களாக இருந்தால்தான் பாலர் பள்ளியின் எல்லாச் செயல்களையும் திறம்படச் செய்வார்கள்.

12. குழந்தைகளின் வாழ்க்கைக் குறிப்பேடு:

பிறக்கும் முன் தாயின் நிலை, குழந்தை பிறந்தது முதல் அதன்வளர்ச்சி, நோயின்விபரம், தடுப்பு ஊசிகள் போன்ற குறிப்புகள், பாலர் பள்ளி ஆசிரியைக்கு மிகவும் அவசியம் குழந்தைக்கு எந்தெந்தத் துறையில் ஆர்வம் உள்ளது என்பதையும் ஆசிரியர் இக்குறிப்பேட்டில் குறித்து வைக்கவேண்டும். இதனால் குழந்தைகளுக்குப் பிற்கால வாழ்விற்கு ஏற்ற கல்வியையும் வேலையையும் கூற உதவியாய் இருக்கும்.

13. வருடாந்திரக் குறிப்பேடு :

ஆண்டு முழுவதற்கும் செயல் திட்டங்களை வகுத்து அவற்றை எவ்வாறு செயல்படுத்துவது என்ற குறிப்பை ஆண்டின் ஆரம்பத்திலேயே எழுத வேண்டும்.

6. பாலர் பள்ளிக்கான திட்டமிடுதல்

வருடாந்திரம் :

கடந்த ஆண்டில் என்ன நிறைவேற்றினோம், இனி என்ன நிறைவேற்ற வேண்டும் என்பதை அறிந்து திட்டமிடவேண்டும். திட்டமிட்ட முயற்சிகள் அல்லது செயல்கள் நிறைவேற்றப்படாமல் இருந்தால் அவற்றை நிறைவேற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். உதாரணமாக சில பாட்டுக்கள், விளையாட்டுக்கள் நிறைவேற்றப்படாமல் இருந்தால் அவைகளுக்கும் கால அட்டவணையில் சில மணி நேரம் என்று ஒதுக்கியிருப்பதை மாற்றி அந்த மாதம் முழுவதும் அவைகளை நல்ல முறையில் நடத்த நாம் முயற்சி செய்யலாம்.

மாதாந்திரத் திட்டம்:

அந்தந்த மாதத்தில் குழந்தைகளை எங்கு அழைத்துச் செல்வது, எந்தெந்தக் கருத்துக்களை எடுத்துரைப்பது, பெற்றோர்களுக்கு எதைப் பற்றிச் சொல்வது என்பதற்கு நமது ஆய்வுத்திறனை உபயோகித்து எந்தெந்தத் துறையில் எப்படிச் சமாளிப்பது என்பதைத் தெரிந்து கொண்டு மாதாந்திரத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். கடந்த மாதத்தில் உள்ள திட்டமிட்ட செயல்கள் முடிவு பெறாமல் இருந்தால் அதை ஆலோசித்து இம் மாதத் திட்டத்தில் இணைத்து செவ்வனே முடிக்க வேண்டும்.

தினசரித் திட்டம் :

அந்த நாளுக்குரிய குறிப்பேடுகளைப் பூர்த்தி செய்தல், சாமான்களைத் தயாராக வைத்தல், பாட்டு, கதை

பொருட்களை உபயோகப்படுத்த ஆயத்தப்படுத்துதல் முதலியவைகளை ஆசிரியை திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

கால அட்டவணை

காலை	8 முதல் 9.30	குழந்தைகளின் வருகை, ஆரோக்கியப்பரிசோதனை, பிரார்த்தனை, தன்சுத்தம்—ஆஜர் எடுத்தல்.
,,	9.30 முதல் 9.40	சுதந்திர உரையாடல் (மொழிப் பயிற்சி)
,,	9.40 முதல் 10.20	வெளிவிளையாட்டு
,,	10.20 முதல் 10.30	இடைவேளை
,,	10 30 முதல் 10.50	கை வேலை
,,	10.50 முதல் 11.00	அபிநயப் பாட்டு
,,	11.00 முதல் 11.30	கதை
,,	11.30 மாலை 3.00	மதிய உணவு, தூக்கம்
மாலை	3.00 முதல் 3.10	தேகப் பயிற்சி
,,	3.10 முதல் 4.00	உள் விளையாட்டு
,,	4.00 முதல் 4.15	பால், சிற்றுண்டி
,,	4.15 முதல் 4.30	பிரார்த்தனை, வீட்டுக்குசெல்லல்

முன் ஆரம்பப் பள்ளியின் அன்றாட வேலைகளுக்கு ஒரு கால அட்டவணை மேலே குறிப்பிட்டபடி அவசியம். ஆனால் அதைப் பின்பற்றியே நடத்த வேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது. உணவு அருந்துவது, தூங்குவது, தண்ணீர் குடிப்பது முதலியன குறிப்பிட்ட நேரங்களில் செய்வது மிக அவசியம். மற்ற நிகழ்ச்சிகளைக் குழந்தைகளின் மனப்போக்கிற்கும் அன்றன்று ஏற்படும் தனிப்பட்ட சந்தர்ப்பங்களுக்கும், கால நிலைகளுக்கும் தகுந்தாற் போல் மாற்றிக் கொள்ளலாம்.

6அ. பாலர்பள்ளி ஆசிரியையும் சமுதாயமும்

பள்ளிப்படிப்புநிலைக்கு முன்பருவத்தினருக்கு ஒரு நிறுவனம் தேவை என்ற உணர்வு வெகுகாலம் வரை நமது நாட்டில் ஏற்படவில்லை. நமது குடும்ப அமைப்பு கூட்டுக் குடும்பமாக இருந்ததே அதற்குக் காரணமாகும். ஆனால் நாகரிகத்தின் காரணமாக குடும்ப அமைப்பில் ஏற்பட்ட மாறுதல், கல்வியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. மகளிரும் பணியாற்ற வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மேற்கத்திய நாடுகளில் நடைபெறும் நர்சரி, மாண்டிசோரி, கிண்டர் கார்ட்டன் பள்ளிகளின் மாதிரிகளை இந்திய நகரங் களில் அமைத்துப் பொருள் வசதி உள்ளவர்களின் பிள்ளைகளுக்கு மட்டுமே வாய்ப்பு கிட்டுவதாக பாலர் பள்ளிகளை அமைத்தனர். இது கண்ட இந்தியக் கல்வி அறிஞர்களும், காந்திஜியும் சிந்தித்துச் செயல்பட ஆரம்பித்தனர். அஸ்திவாரம் சரியாக அமைந்தால்தான் அதன் மீது கட்டப்பட்ட கட்டிடம் பலமுள்ளதாக இருக்கும் என உணர்ந்து அனைத்து வசதியும் கொண்ட பாலர் பள்ளிகள் வசதியற்ற குழந்தைகள் படிப்பதற்கு ஏற்படுத்தப் பட்டன.

இப்பள்ளி $2\frac{1}{2}$முதல் 5 வயது வரை உள்ள குழந்தை களுக்கு வெகு எளிய முறையில் சிறந்த நன்மைகளை பயக்கத்தக்க வகையில் ஏற்பட்டது. இதன் மூலம் குழந்தைகளுக்கு ஆரோக்கியமுள்ள திறந்த வெளி வாழ்க்கையும், சீரான முறையில் அமைந்த செயலும்,

ஓய்வும், தேவையான அன்பும் ஏற்பட வாய்ப்பளிக்கப் படுகிறது. ஆரோக்கியமான முறையில் பயிற்சி அளிப்பது முக்கிய நோக்கமாகும். பாலர் பள்ளி ஆசிரியை மேற்கூறியவற்றை எல்லாம் வீட்டுப் பழக்கங்களை ஒட்டியும், பெற்றோர்களின் பொருளாதார நிலையை ஒட்டியுமே பயன்தரக் கூடிய முறையில் குழந்தைகளிடையே ஏற்படுத்த வேண்டும்.

பாலர்பள்ளி ஆசிரியைக்கு வேண்டிய குணங்கள்.

பாலர் பள்ளி ஆசிரியை தாயின் மறுபதிப்பு எனவும், பாலர் பஃளியை வீட்டின் விஸ்தரிப்பு எனவும் கூறுவர். எனவே பாலர்பள்ளி ஆசிரியை அன்பு, பொறுமை ஆற்றல், அறிவு ஆகிய நற்பண்புகளை கொண்டவராக இருக்க வேண்டும்.

குழந்தைகளைத் தம்மிடம் வரும்படி வசீகரிக்கும் தன்மையை ஆசிரியை பெற்றிருக்க வேண்டும். தனது நன்னடத்தையால் அவர்களுக்கு நற்பண்புகளையும் கற்பிக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும். வீட்டுச் சூழ் நிலைக்கு முரண்பாடு இல்லாத முறையில் நடந்துகொள்ள வேண்டும். ஆதலால் ஆசிரியை பெற்றோர்களிடம் நெருங்கிய தொடர்பு உடையவர்களாக இருக்க வேண்டும்.

முழுமையான வளர்ச்சியை ஊக்குவிக்க அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு கூட அவர்களின் அறிவுத்தாகத்தையும் தணிக்க வல்லவராய் இருக்க வேண்டும். குழந்தைகளின் அடிப்படை நிறுவனமாக வீட்டையும் பால்வாடியையும் இணைக்கும் ஓர் அன்பு சங்கிலியாகப் பால சேவகி இருக்க வேண்டும்.

பாலவாடியையும், 2-ம் நிலை நிறுவனங்களான ஆரம்பப்பள்ளி, தொழிற் பயிற்சி பள்ளிகள் ஆரோக்கிய விடுதி முதலியவற்றையும் இணைக்கும் சங்கிலியாகவும் ஆசிரியை இருக்கவேண்டும். பாலர் பள்ளி ஆசிரியை தாய், தந்தை, நண்பன், வழிகாட்டி என்ற பல நிலைகளில் இருந்து பணிபுரிய வேண்டும். பணிபுரிவதில் இன்பம் காண்பவராகவும், சுகாதார மனப்பான்மை உள்ளவராகவும், சமூக நாட்டம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். நாட்டின் வருங்கால சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பும் பண்பும் நிறைந்து சுயநலமற்ற சமுதாயத்தை இயன்றவரை உருவாக்கப் பாடுபடுகிறவராகவும் இருக்க வேண்டும். தன்னம்பிக்கை உடையவராகவும் இருக்க வேண்டும்.

பெற்றோர்களை அணுகும் முறை

பெற்றோர்களை அணுகி உறவாட மூன்றுமுறைகள் இருக்கின்றன. அவைகள் :

1. ஆசிரியர், குழந்தைகளின் வீடுகளுக்குச் சென்று பெற்றோர்களைச் சந்திப்பது.
2. கைப்பிரதிகள், அச்சுப்பிரதிகள் வெளியிடுவது.
3 ஆசிரியர்கள் பெற்றோர்கள் கூட்டம் அமைப்பது.

இவ்வாறு செய்வதின் மூலம் பெற்றோர்கள் விரும்பும் கல்வி முறைகளை அவர்களின் குழந்தைகளுக்குப் போதிக்க ஏதுவாக இருக்கின்றது; முரண்பாடுகளும் தவிர்க்கப்படுகின்றன.

பெற்றோர்களின் பொருளாதார சமூகத் தகுதிகளும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு முக்கிய சாதனமாக இருக்கின்றது. இத்தகுதியை ஆசிரியைகள் பெற்றோர்களிடம்

நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தால் மட்டுமே அறியமுடியும்: அதற்கேற்றாற்போல் நடந்து கொள்ளவும் முடியும். பெற்றோர் தினக் கூட்டங்கள் வைப்பதால் பல குழந்தைகளின் பெற்றோர்கள் ஒன்று சேர்ந்து ஆலோசித்து தங்களுக்கு உள்ள குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள சிறந்ததொரு வாய்ப்பு பெற்றோர் களுக்கும் ஆசிரியைகளுக்கும் கிட்டுகிறது.

ஆசிரியர் பெற்றோர் தொடர்பால் உண்டாகும் நன்மைகள்:

ஆசிரியர் பெற்றோர் தொடர்பு ஏற்படுவதினால் பலவித நன்மைகள் ஏற்படுகின்றன. முதலாவதாக அவர்கள் வீடுகளுக்கு ஆசிரியை அடிக்கடி செல்வதால் குழந்தைகளுக்கு ஆசிரியையின் மீது நம்பிக்கை ஏற்படவும் வாய்ப்பு உண்டாகின்றது. மேலும் குழந்தைகளின் வீடுகளுக்கு ஆசிரியை செல்வதால் பெற்றோரின் துணை கொண்டு குழந்தைகளின் தனிப்பட்ட தன்மையையும் குழந்தைகளின் விருப்பத்தையும் மன நிலையையும் நன்கு அறிந்து அதற்கு ஏற்றாற்போல் பயிற்சி கொடுக்கவும் முடிகிறது. குழந்தைகள் பள்ளியில் எப்படிப்பட்டவர் களாக இருக்கிறார்கள் என்பதனையும் ஆசிரியைகள் மூலம் பெற்றோர்கள் அறிந்து கொள்ள முடிகிறது. அவர்களுடன் ஆசிரியை தொடர்பு வைத்துக் கொள்வ தால் முக்கியமாக குழந்தைகளின் உடல் நலம் காக்கப் படுகிறது. குழந்தைகளுக்கு ஏதாவது நோய் ஏற்படும் போது நாம் குழந்தையை அவர்கள் பெற்றோர்களிடம் கொண்டு விட்டு அவர்களிடம் குழந்தைக்குக் கொடுக்க வேண்டிய உணவுகள் பற்றியும் மருந்துகளைப்பற்றியும் குழந்தையைப் பராமரிப்பது பற்றியும் நன்கு சொல்வ தின் மூலம் குழந்தையின் உடல் நலம் காக்கப்படுகின்றது.

குழந்தைகளைக் கொண்டு நடத்தப்படும் விழாக் களுக்குப் பெற்றோர்களை அழைத்துக் காட்டுவதின் மூலம் பெற்றோர்கள் தம் குழந்தைகள் ஆடுவதையும் பாடு வதையும் கண்டு நன்கு சந்தோஷமடைவார்கள். மேலும் தினசரி பால்வாடி நடைமுறைகளையும் குழந்தைகள் பயிற்சி பெறும் விதத்தையும் காணுவார் கள். நாமும் அவர்கள் வீடுகளுக்கு அடிக்கடி சென்று அவர்களுடன் நல்ல முறையில் தொடர்பு கொள் வதால், அவர்களுடைய பிள்ளைகளை நம்பிக்கையுடனும் சந்தோஷத்துடனும் பால்வாடிக்கு அவர்கள் அனுப்பி வைப்பார்கள். மற்ற குழந்தைகள் வீடுகளுக்கு அவர்கள் செல்லும் போது அவர்களுடைய பிள்ளை பால்வாடியில் படிக்கும் விதத்தினையும், ஆடலையும், பாடலையும் பெரு மையாகக் கூறி மற்ற பிள்ளைகள் பாலர் பள்ளிக்கு வருவ தற்கு உதவுவார்கள்.

மேலும் நாம் எந்த ஒரு காரியத்தையும் அவர் களுடைய ஆலோசனையைக் கேட்டு அவர்களுடன் கலந்து செய்வதால் நம்மீது நம்பிக்கையும், மதிப்பும், பாசமும் ஏற்படும். இதனால் பால்வாடியின் தேவைக்கு உதவ மனமுவந்து முன் வருவார்கள் நம்மை நல்ல முறையில் பாதுகாப்பார்கள். உதாரணமாக பால்வாடிக்கு வைக்கோல் போட்டு கூரை போட வேண்டுமானால் நம்மீது உள்ள நம்பிக்கையால் அவர்கள் குழந்தையின் நலத்திற்காகக் கிராமத்து மக்களை சேர்ந்து வீட்டுக்கு ஒரு கீற்று வசூல் செய்து அவர்களே பால் வாடியை நல்ல முறையில் அமைக்க முன் வருவார்கள். மற்றும் பலவித தொழில்களைச் செய்யவும் பெற்றோர் களுடன் தொடர்பு கொள்வதால் பால்வாடிக்கு வேண்டிய பலவித தேவைகளை அவர்களே பூர்த்தி செய்வார்கள்.

மாதர் சங்கங்கள், பெற்றோர் கூட்டங்கள், முதலியவை வைத்து பலவித தொழில்களைப் பற்றி சொல்லித் தருவதால் அவர்களுடைய ஓய்வு நேரத்தை நல்ல முறையில் பயனுள்ள வகையில் செலவழிக்க வசதியாகிறது. உதாரணமாக பெண்களுக்குத் தையல், இராட்டை நூற்றல், ஒயர் வேலைகள் முதலியவை சொல்லிக் கொடுப்பதால் அவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் இதன் மூலம் தங்கள் தேவைகளை எளிதாகப் பூர்த்தி செய்ய முடிகிறது. மேலும் மாதர் சங்க கூட்டங்கள், குழந்தைகள் விழா முதலியவைகளுக்கு வருவதால் பெண்கள் வீட்டுக்குள்ளேயே இருக்கும் பழைய பழக்க வழக்கம் மாறி சமூகத்துடன் தொடர்பு கொள்கிறார்கள். நாம் தினசரிப் பத்திரிகையில் வரும் உலகச் செய்திகளை அவ்வப்போது அவர்களுக்கு அன்றாடம் சொல்வதின் மூலம் ஓரளவு உலகத்தில் நடக்கும் செய்திகளை அறிந்து கொள்கிறார்கள்.

பெற்றோர்களுடன் தொடர்பு கொள்வதால் அவர்களுடைய பரம்பரை வழக்கத்தையும் மரபு நிலையையும் குழந்தைகள் வளர்க்கப்படும் சுற்றுப்புறச் சூழ்நிலையையும் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது. இதனால் குழந்தைகளின் மரபு நிலை சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்கிறார்களா, மாறுபட்டு வாழ்கிறார்களா என்பதினை அறிந்து அதற்கு ஏற்ப நாம் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்க முடிகிறது.

வீட்டுத் தோட்டங்களைப் பற்றிக்கூற வாய்ப்பு ஏற்படுகின்றது. பள்ளிக்கு யாருடைய உதவி தேவை, எப்படி அவர்களை அணுகுவது என்பவற்றை அறிய முடிகிறது. மருத்துவர், தாதிகள், பாடகர்கள், நடிகர்கள், தச்சர்,

கொல்லர் முதலிய பெற்றோர்களை சந்தித்துப் பழகுவ தால் பள்ளிக்கு அவர்களால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டிக் கொள்ளலாம். செல்வாக்கு உள்ள வர்களின் நட்பு ஏற்படுகின்றது. பஞ்சாயத்து, அரசாங்க உதவிகள், மானியங்களுக்கு (grant) ஏற்பாடு செய்ய எளிதாக இருக்கும். பெற்றோர் தொடர்பு மூலம் இதர கிராம, நகர மக்களின் தொடர்பும் ஏற்படுகின்றது. மதிய உணவு, சீருடை, சிற்றுண்டி இவைகளுக்கு பொருள் அல்லது பணஉதவி கிடைக்கும்.

சிறுசேமிப்பு, குடும்பக்கட்டுப்பாடு, ஊசிபோடுதல் போன்றவற்றை எளிய முறையில் மக்களுக்கு எடுத்து ரைக்கலாம். தன்மதிப்பையும், சுய மரியாதையையும் விருத்திசெய்து பள்ளியினை ஒரு ஒளிவிளக்காக ஒரு பாலசேவகி திகழச் செய்யலாம். இவ்வாறு ஆசிரியர் பெற்றோர் தொடர்பு குழந்தைகள் நலத்திற்கும் மக்க ளுக்கும், ஊர்ச் சுகாதாரத்திற்கும், எல்லாவற்றிற்கும் நன்மையாக இருக்கின்றது,

ஆசிரியர் பெற்றோர் உறவுக்கு வேறு சில வழிகள்:-

1 பொருட்காட்சிகள் ஏற்பாடு செய்தல்.

2 படக்காட்சிகள், நாடகங்கள் நிகழ்த்தல்.

3 வளர்ச்சி அறிக்கை அனுப்புதல்,

4 உல்லாசப் பயணம் செல்லுதல்.

5 பொது இடங்களில் கண்டால் ஒரு சில நிமிடங் களாவது மனம் விட்டுப் பேச வேண்டும். இது பெற்றோர் மனதில் ஒரு நல்ல எண்ணத்தையும், நம் பிக்கையையும் உண்டாக்கும்.

6 மருத்துவப் பரிசோதனைச் சீட்டு, கடிதத் தொடர்பு கொள்ளுதல்.

7 பெற்றோரிடம் இனிமையாகப் பேசுதல்.

8 பெற்றோர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளுதல்.

9 பொறுமையுடன் பேசுதல்.

10 அவர்களுக்குக் குழந்தையின் மீது நம்பிக்கை உண்டாகும்படி குழந்தைகளைப் புகழ்ந்து பேசுதல்.

7. பால்வாடியில் குழந்தைகளின் மன நலம் பேணுதல்

குழந்தைகளின் உடல் நலத்தோடு மன நலத்தையும் பேணுவதற்குப் பால்வாடிகளில் வழி வகுக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையின் பிற்கால ஆளுமை வளர்ச்சி இளம் குழவிப் பருவத்தின் நிகழ்ச்சிகளில் தான் பிரதிபலிக்கும். ஒரு நாட்டின் முன்னேற்றமும், சந்தோஷமும் பெரும்பாலும் அந்நாட்டு மக்களின் மன நலத்தைப் பொறுத்தே இருக்கிறது. நம் பாலர் பள்ளிகள் குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். (1) பாதுகாப்பான இடம் (2) சுகாதார வசதிகள் (3) சுத்தமான குடிநீர் (4) விளையாட்டுப் பொருட்கள் (5) மற்ற சாதனங்கள் (6) ஆசிரியர் பிள்ளைகளின் விகிதத் தொடர்பு.

மேலே கூறப்பட்ட வசதிகள் குறையும் போது குழந்தைகளுக்கு மனத்தளர்ச்சியும், ஆசிரியர்களின் வேலைகளில் பல இடையூறுகள், குறைபாடுகள் தடங்கல்கள் ஆகியவையும் ஏற்படும். அதனுல் பாலர் பள்ளியின் ஆசிரியை இதைக் கவனித்துச் செயல்பட வேண்டும்.

பாதுகாப்பு :

குழந்தைகள் தாங்கள் பத்திரமாக இருக்கிறோம் என்ற உணர்வு தரக்கூடிய சூழ்நிலையில் இருப்பதே பாதுகாப்பு. பள்ளியில் குழந்தைகளைப் பயமுறுத்தல், முரட்டுத்தனமாக நடத்துதல் ஆகியவற்றை ஆசிரியைகள் நீக்குதல் வேண்டும். சூழ்நிலை, சுற்றுப்புறம்

இரண்டும், இனிமையற்ற பலாபலன்களுக்கு உட்படா வண்ணம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பயமும் கவலேயும் குழந்தைகளின் மன நிலேயைப் பாதிக்காமல் ஆசிரியர் கவனித்துக் கொள்ள வேண்டும். இப்படிப் பட்ட ஒரு பாசம் நிறைந்த மனநிலே நிலவுவதால் தாங்கள் மிகவும் முக்கியமானவர்கள், பிறரால் விரும்பப் படுகிருேம் என்ற உணர்ச்சியைப் பெற்று உற்சாகத் துடன் பள்ளியின் செயல்களில் குழந்தைகள் ஈடுபடு கிருர்கள்.

ஏற்றுக்கொள்ளுதல்:

1) முரட்டுத்தனம் 2) விரோத மனப்பான்மை உள்ள பிள்ளேகள் 3) பொருமை உணர்ச்சி உள்ள பிள்ளேகள் 4) பிடிவாதமுள்ள பிள்ளேகள் 5) எதிலும் ஈடுபடாமல் ஒதுங்கியிருக்கும் குழந்தைகள். இப்படிப் பட்ட குழந்தைகளே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏற்றுக் கொள்வது என்பது அவர்களது குணங்களே அங்கீ கரிப்பது என்பது அல்ல. அவர்களே அறிவுப் பூர்வமாக மன உணர்ச்சிகளின் போக்கில் வழிப்படுத்து வதற்காக ஏற்றுக்கொள்ள வேண்டும். நெருக்கடியான நிலேயில் குழந்தைகளேத் திட்டவோ அடிக்கவோ கூடாது. அவர்களது குணங்களேக் கொஞ்சம் கொஞ்சமாகச் சில நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்தி மாற்ற வேண்டும்.

சுயமரியாதை:

தகுதியான குறிப்பிடத்தக்க தன்னுடைய ஆற்றலேயும், தன்னேப் பற்றிய இயல்புகளேயும் உணர்வது சுயமரியாதையாகும். குழந்தையின் சுயமரியாதையை வளர்க்க ஒரு ஆசிரியை தனிப்பட்ட வித்தியாசங்களேக் கவனித்து அவைகளேச் சீர்படுத்தி நடக்க வேண்டும்.

சாதாரண அச்சங்கள்:

ஆசிரியர், வேற்று மனிதர், மிருகங்கள், அபாய நேர்வுகள், திடீரென்று ஏற்படும் சப்தங்கள்.

சுகாதார வசதிகள்:

நல்ல உணவு, போதுமான தூக்கம், தேவையான உடை இவை உடல் வசதிக்கான தேவைகளாகும். 1) குறிப்பிட்ட நேரத்தில் தரும் திட்டமிட்ட சத்துள்ள சிற்றுண்டி 2) ஓய்வு நேரங்கள் 3) மலஜலம் கழிக்க வசதிகள், கைகால், முகம் சுத்தம் செய்ய வசதிகள் 4) சூரிய வெளிச்சம் 5) காற்ளேட்டம் 6) சீதோஷ்ண நிலே ஆகியவற்றை நன்ளுகக் கட்டுப்படுத்த வசதிகள்

மலம் ஜலம் கழிக்கும் பழக்க வழக்கங்கள் :

இந்தத் தேவைகள் கவனிக்கப்படாவிட்டால் பள்ளியில் எந்த நிகழ்ச்சிகளிலும் குழந்தைகள் சரியாகப் பங்கெடுத்துக் கொள்ள இயலாது. ஏனெனில் இது உடலில் மாத்திரம் சிரமத்தை ஏற்படுத்துவது. அல்ல, மனத்திலும் அமைதியற்ற ஒரு புயலே ஏற்படுத்தும். ஆசிரியர்கள் வேலே முடிந்ததும் இதை மறந்து விடுகிருர்கள். இதைவிடக் குழந்தைகளேப் பாதிப்பது வேறு ஒன்றும் இல்லே.

சுதந்திரம் :

ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் ஓரளவு சுதந்திரம் தேவைப்படுகிறது. பால்வாடியில் ஆசிரியர் கட்டுப்பாட்டுக்குட்பட்ட சுதந்திரம் அளித்தல் வேண்டும்.

அன்பு :

ஆசிரியை அன்பும், பாசமும் காட்டாவிட்டால் குழந்தையின் பள்ளி வாழ்க்கை அமைதியும் ஆர்வமு

மின்றி பாழாகிவிடும். வகுப்பின் சூழ்நிலை, ஆசிரியை தங்களையும் நேசித்து தங்களுடன் வேலை செய்யவும் விரும்புகிறார் என்ற உணர்வைக் குழந்தைகளின் மனதில் ஏற்படுத்த வேண்டும். தங்களிடம் அக்கறை காட்டி தங்களைப்பற்றி கவலைப்படுகிறார்கள் என்பதை ஆசிரியையின் ஒவ்வொரு செயலிலும் வார்த்தையிலும் குழந்தைகளுக்கு உணர்த்த வேண்டும்.

8. குழந்தைகளுக்கான ஆக்கச் செயல்கள்

ஒவ்வொரு வீட்டிலும் வேண்டாத, வீணுகும் பொருட்களைக் கொண்டு ஆக்கமான ஊக்கமான சூழ் நிலையை உருவாக்க முடியும். குழந்தைகளுக்கு ஆக்க வேலைகளைக் கொடுத்து அவர்களது ஆர்வத்தை வளர்க் கலாம். அன்ருடம் நடக்கும் செயல்களில் தொடு உணர்ச்சியைப் பற்றி அறிய வைக்கும் செயல்கள், அமைதி யாக செய்யக் கூடிய செயல்கள், வேகமாக ஈடுபடக் கூடிய செயல்களைச் சேர்க்க வேண்டும். இங்ஙனம் ஆக் கச் செயல்களைக் குழந்தைகளுக்கு அளிப்பதன் நோக் கங்கள் சில உள்ளன.

அவை :

1 குழந்தையின் கற்பனைத் திறனை வளர்ப்பது

2 குழந்தையின் எண்ணங்களையும், விருப்பங்களையும் திருப்திகரமான முறையில் செயல்களின் மூலம் வெளிப்படுத்துதல், வெளிப்படுத்த உதவுதல்.

3 குழந்தைக்கு நன்ருக பரிசோதிப்பதற்கும், ஆராய் வதற்கும் வாய்ப்புகளை அளித்தல். உதாரணமாக களிமண்ணைப் பிசைவதின் மூலம் பொருட்களைச் சுதந்திரமாகப் பரிசோதித்துப் பார்க்க முடிகிறது.

4 மகிழ்ச்சியூட்டுதல் - குழந்தைகள், நிறங்களைக் கண்டு பிடிக்கும் போதும், களிமண்ணைப் பிசையும் போதும், சுத்தியலையும் ஆணியையும் நல்வழியில் உபயோகிக் கும் போதும் காகிதங்களிலிருந்து பல உருவங்கள் கிடைக்க கத்திரிக்கோலைப் பயன் படுத்தும் போதும் மகிழ்ச்சியடைகிருர்கள்.

5 தன்னம்பிக்கையை அதிகப்படுத்துதல்

6 குழந்தை தன்னைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், மற்றவர்களுடன் ஒத்து வாழ்வதற்கும் உதவுதல்.

7 குழந்தையினுடைய மன வளர்ச்சியையும், ஆளுமையையும் வளமாக்குவது.

8 பல விஷயங்களைக் கற்பதற்கு ஆதரவளித்தல்.

9 வளர்ச்சிக்கும் வெவ்வேறு வித தேவைகளுக்கும், தன்மைகளுக்கும் தகுந்தபடி குழந்தைகளின் நலனைக் காத்தல்.

10 உணர்ச்சிகளைச் சரியாக வெளிப்படுத்த வகை செய்தல்

குழந்தைகள் எதையாவது உருவாக்கும் வேலையில் ஈடுபட்டு ஒன்றை உருவாக்கும் பொழுது மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். அன்பும், ஆதரவும் அழகும், மகிழ்ச்சி தரும் உணர்ச்சிகளும் இந்த நல்ல உணர்ச்சிகளை வெளிப்படுத்தக் கூடிய வழிகளாகும். இந்த வழிகளைக் குழந்தைகள் காணும்போது அவர்களுடைய கலை உணர்ச்சி வளர்கிறது. ஆக்க வேலைகள் குழந்தைகளின் கலையுணர்ச்சியை அளவிட முடியாத நிலைக்கு ஊக்குவிக்கின்றன.

ஆக்கச்செயல்கள் பலவகைப்படும் :

1. வரைதல்
2. வண்ணம் பூசுதல்
3. அச்சடித்தல்
4. கொலாஜ் வேலை
5. காகித மடிப்பு வேலை

6. ஒட்டுதல்

7. களிமண்ணில் உருவம் செய்தல்

வரைதல் :

செய்தித்தாள், ஒரு பக்கம் மட்டும் எழுதிய காகிதம், மட்டரகக் காகிதம், விளம்பரக் காகிதம், திருமண அழைப்பிதழ்கள், வாழ்த்து அட்டைகள் வரைந்து கொடுக்கலாம். இப்படிக் கொடுப்பதின் மூலம் அவற்றின் தன்மையைக் குழந்தைகள் அறிந்து கொள்ள முடியும். வரைவதற்கு கரிக்கட்டி, பென்சில், குச்சி, கலர், சாக்கட்டி, கலர்பென்சில், மாக்கல் முதலியவற்றைக் கொடுக்கலாம்.

குழந்தைகள் வரைந்தபின் காகிதத்தில் குழந்தைகளுடைய பெயரையும் தேதியையும் எழுத வேண்டும் இதன் மூலம் அவர்களுடைய திறமை வளர்ச்சியைப் பற்றி பின்னர் அறிய முடியும். பெற்றோரிடம் அவர்கள் வரைந்ததைக் காட்டினால் அவர்களுக்கும் சந்தோஷத்தையும் பெருமையையும் ஏற்படுத்தும்.

2 வர்ணம் பூசுதல்

வண்ணம் பூசுவதற்குத் தூரிகைகள் அவசியம். அவற்றை வெளியில் வாங்குவதாக இருந்தால் விலை அதிகம். எனவே அவற்றை மிகவும் குறைந்த விலையில் தேவையற்று, வீணாகும் மரக்குச்சி, கோழி இறகு, வைக்கோல் தட்டும் குச்சி, தலைமுடி, வீடு பெருக்கும் துடைப்பத்தின் முடி, தேங்காய் நார் முதலிய பொருள்களிலிருந்து தயாரிக்க முடியும்.

வர்ணங்கள் :

கலர் பொடிகளையும், டப்பாக்களில் விற்கும் வண்ணங்களையும் தண்ணீரில் கலந்து உபயோகிக்கலாம்.

வர்ணப் பூச்சிற்கு காகிதத்தையும், காய்ந்த உலர்ந்த இலைகளையும் உபயோகிக்கலாம்.

வண்ணம் பூசுவதைப் பலவகைகளாக பிரித்துக் கொடுப்பதினால் குழந்தைகளுக்கு அவற்றின் தன்மைகள், நிறம் முதலிய கருத்துக்களைப் பற்றி தெரிந்து கொள்ள முடியும். நிறத்தைக் குழந்தைகளுடைய உடை, கைக் குட்டை, ரிப்பன் முதலியவற்றின் நிறங்களோடு தொடர்பு படுத்திக் கூறினால் அவர்கள் நிறங்களைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பிருக்கும். ஒவ்வொரு நாளைக்கும் வர்ணத்தைக் கொடுக்கலாம். மற்றொரு நாளில் பல வர்ணங்களை ஒன்றாகச் சேர்த்துக் கலந்தால் கிடைக்கும் புதிய வண்ணங்களைப் பற்றி சொல்லலாம்.

உதாரணமாக: சிவப்பு + மஞ்சள் — ஆரஞ்சு
சிவப்பு + நீலம் — ஊதா
மஞ்சள் + நீலம் — பச்சை

வண்ணப் பூச்சுக்குத் தேவையான பொருட்களை முதலிலேயே சேகரித்துத் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும். எந்தமுறையில் அந்தவேலையைக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதையும் சிந்தித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

காகிதப் பளிங்கு:

ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக் கொண்டு அதில் இரண்டு அல்லது மூன்று துளி ஆயில் வர்ணத்தையும், மண்ணெண்ணையையும் கலக்க வேண்டும். நன்றாகக் கலக்கிய பின்பு ஒரு காகிதத்தை எடுத்து அதில் நனைத்து பின் அதை வெயிலில் காய வைக்க வேண்டும்.

அந்தக் காகிதத்தில் பல வர்ணப் பளிங்கு உருவங்கள் பதிந்திருக்கும்.

விரகல்ளினுல் பூச்சுவேலை செய்தல் :

சாதாரணமாக குழந்தைகளை மண்ணில் விளையாட பெற்ருேர் விடுவதில்லை. ஆனாலும் குழந்தைகளுக்கு மண்ணில் விளையாட வேண்டும் என்ற விருப்பம் எப்போதும் உண்டு. அந்த விருப்பத்தையும் ஆவலையும் விரல்களினுல் பூச்சு வேலை கொடுப்பதின் மூலம் நிறைவு செய்யலாம். இவற்றின் மூலம் குழந்தைகளின் ஆர்வங்கள் நிறைவு செய்யப்பட்டால், பின்னர் பல வேலைகளை அவர்கள் சுத்தமாகச் செய்வார்கள்; வேலையையும் திறம்படச் செய்வார்கள். மனதில் அடைந்து கிடக்கும் உணர்ச்சிகள் வெளியே வருவதற்கு இப்படிப்பட்ட பூச்சுச் செயல்களைக் கொடுக்கலாம். தசைநார் ஒன்றுபட்டு இயங்குவதற்கும் அவற்றின் வளர்ச்சிக்கும் இது உதவும்.

தயாரித்தல் :

சிறிது மைதா மாவை எடுத்து தண்ணீரில் கலந்து அதை பசை போல் காய்ச்ச வேண்டும். காய்ச்சி இறக்கிய பிறகு சிறிது சோப்புத்தூளையோ அல்லது சோப்பையோ கலக்க வேண்டும். பின்பு அதை எடுத்துத் தனித்தனிப் பாத்திரங்களிலோ அல்லது குவளைகளிலோ போட்டுத் தேவையான நிறத்தூளையும் வைத்து விட்டால் குழந்தை தனக்குத் தேவையான நிறத்தூளை பசையுடன் கலந்து நன்ருகப் பிசைந்து விருப்பம்போல் விரல்களினுல் உருவங்களை அமைக்க முடியும். ஒரு காகிதத்தை எடுத்துப் போட்டு உருவத்தின் மேல் ஒத்தி எடுத்தால் உருவம் அந்தக் காகிதத்தில் படிந்து விடும். பின்பு அதை வெயிலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஸ்ப்ரே வண்ணப்பூச்சு

வர்ணத் தூளேயோ அல்லது பெயிண்டையோ தண்ணீரில் கலந்து தேவையில்லாத பல் தேய்க்கும் பிரஸ்ஸை அதில் தோய்த்துக் கையினல் சுண்டினல் இதன் சிறுசிறு துகள்கள் பேப்பரில் விழும். பழைய தேவையில் லாச் சல்லடையையும் எடுத்துக்கொண்டு அதைக் காகிதத் தின் மீது வைத்துச் சல்லடையின் மேல் அதைத் தேய்த் தால் காகிதத்தில் அதன் பின் நல்ல உருவங்கள் விழும். இவ்வண்ணப் பூச்சுக்கு பலவித வர்ணங்களேக் கலந்தும் உபயோகிக்கலாம்.

நூலினல் செய்யும் வண்ணப்பூச்சு :

ஒரு நூலே வர்ணக் கலவையில் தோய்ந்தெடுத்து அதை ஒரு காகிதத்தின் நடுவில் வைத்துச் சுற்றி ஒரு மூலேயிலிருந்து, ஒரு நுனியைப்பிடித்து வெளியே நன் ருக இழுத்து விட்டால் அதனுடைய வண்ணப்பூச்சு காகிதத்தில் அழகான பல உருவ வடிவங்களில் விழும். நீலநிற மை, கருப்பு மை, சிவப்பு மை பல வண்ணக் கலவை முதலியவற்றைக் கொடுக்கலாம்.

கொலாஜ் வேலேகள் :

தேவையற்ற வீணன பொருட்களே வைத்து, கொலாஜ் வேலே கொடுக்கலாம். துண்டுத் துணிகள், வயர்த்துண்டுகள், நூல், உல்லன் நூல், வைக்கோல், தட்டுக்குச்சி, பஞ்சு, கொட்டைகள், குண்டுமணி, கார்க் மூடிகள், பல் குத்தும் குச்சிகள், தீப்பெட்டிக் குச்சிகள், கலர் காகிதங்கள், அடைப்புப் பொருட்கள் முதலியவை களேக் கொடுக்கலாம். பஞ்சு, பலவித வேலேப்பாடுகளே

செய்வதற்கும், பொம்மைகள் செய்வதற்கும், ஒட்டுவதற்கும், திரி செய்யவும், மாலை செய்வதற்கும் கொடுக்கலாம். பஞ்சைப்பற்றி சொல்லும்போது, பஞ்சுக்காய்களையும், காய் முற்றி வெடித்த பஞ்சையும் காட்டி, காயாக இருக்கும் போது எப்படி இருக்கிறது என்றும், வெடித்த காய் எப்படியிருக்கிறது என்றும், அதிலிருந்து எடுத்துப் பஞ்சை எப்படி சுத்தம் செய்வது என்பதைப் பற்றியும், அந்த பஞ்சைக் கொண்டு செய்யும் ஆடைகளைப் பற்றியும் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லலாம். அப்போது அது விஞ்ஞான அனுபவமாகவும் கூட மாறும். பலவித இலைகள், பூக்கள், இறகு, துணி, காகிதம், முட்டை ஓடு, நெற்கதிர், புல், படங்கள், தபால் தலைகள் முதலிவற்றை உபயோகிக்கலாம்.

காகித மடிப்பு வேலைகள் :

குழந்தைகளிடம் வீணான காகிதங்கள், பழைய செய்தித் தாள்கள் முதலியவற்றைக் கொடுத்து பல மடிப்பு வேலைகளைச் செய்யச் சொல்லித் தரலாம். உதாரணமாக கப்பல், கத்திக் கப்பல், விசிறி, ஆகாய விமானம், முதலியவற்றைச் செய்து காட்டி குழந்தைகளையும் அவர்கள் விரும்பும் படி செய்யச் சொல்லலாம். இந்த மாதிரி வேலைகள் குழந்தைகளுக்குக் கால், கை ஒன்றுபட்டு இயங்கவும், நிலைப்படுத்தவும், பொருள்களின் உருவங்கள் பற்றித் தெரிந்து கொள்வதற்கும் உதவுகிறது.

களி மண்ணினால் உருவங்கள் செய்தல் :

குழந்தைகள் களிமண்ணைப் பிசையும் போது நிவர்த்தி செய்யப்படாத ஆசைகளும், கோப உணர்ச்சிகளும், மற்ற உணர்ச்சிகளும் நேர்வழியில் வெளிக்

கொண்டு வரப்படுகின்றன. இந்த உணர்ச்சிகளெல்லாம் மனதில் அடைந்திருந்தால் அவை குழந்தையின் வளர்ச்சியைப் பாதிக்கும். எனவே உணர்ச்சிகளை நேர் வழியில் கொண்டுவர இது பயன்படுகிறது. குழந்தை, பல உருவங்களைச் செய்யும்போது பெருமிதமும் மகிழ்ச்சியும் அடையும். கற்பனை சத்தியும் வளரும்.

9. சுதந்திர உரையாடலினால் குழந்தைகள் அடையும் பயன்கள்

குழந்தைகள் மனமும், எண்ண அலைகளும் ஒரு நிலையில் இல்லாது, பலப்பல சிந்தனைகளிலும், வினாக் களிலும் சென்று தம் நிலையையும், துடிப்புக்களையும், செயல்களையும் துறு துறுவென்று வைத்துக்கொண்டிருப் பார்கள். அக்குழந்தைகளின் சிந்தனையில் உள்ள எண் ணங்களை அறியவும், அதன் மூலம் அவர்களது அறிவுத் திறனை வளர்க்கவும் சுதந்திர உரையாடல் உதவுகிறது. குழந்தைகள் காலையில் பள்ளிக்கு வந்ததும் அவர்களு டன் ஆசிரியைகள் உரையாடுவதின் மூலம் குழந்தை களுக்கு ஆசிரியர்களிடம் உள்ள பயம் நீங்கி நன்றாக சுமுகமாக பழக வாய்ப்பு ஏற்படுகின்றது. பறவைகள், விலங்குகள், காய்கள், பழங்கள் இவைகளைப் பற்றி கூறும் போது, அவைகளைப்பற்றித் தெரிந்து கொள் கிறார்கள். எனவே ஒவ்வொரு சிறு விஷயத்தை பற்றியும் குழந்தைகளிடம் விபரமாக எடுத்துக் கூறி அவர்களது அறிவை குழந்தைப் பருவத்திலிருந்தே வளர்த்து அவர்களை நல்ல, சிறந்த அறிவாளிகளாகத் திகழச் செய்யப் பாலர் பள்ளி வழிவகுக்கிறது. வாரத் திற்கு ஒரு பொருளைப் பற்றியோ அல்லது இரு பொருளைப்பற்றியோ குழந்தைகளிடம் எடுத்துரைக்க வேண்டும். இதன் மூலம் பொது அறிவு வளர்வதோடு, கேள்விகளைக் கேட்டு, பதில் தெரிந்து கொள்வதில் வளர்ச்சியடைகிறார்கள். ஆசிரியர்கள் இம்முறையைக் கையாளுவதின் மூலம் குழந்தைகள் நல்ல அறிவாளி களாகத் திகழ வாய்ப்புக் கிட்டும்.

சுத்தம் சுகாதாரம்

குழந்தைகளிடம் அன்பாகப் பேசி, அவர்களின் நிலையை அறிய முயன்று, அதைச் சீர்படுத்துவது ஆசிரியையின் முக்கியமான குறிக்கோளாக அமைய வேண்டும்.

ஆஜர் எடுத்த பிறகு குழந்தைகளை வரிசையாக நிற்க வைத்து, எல்லோரும் நகம் வெட்டியுள்ளார்களா, அழுக்கு நகத்திற்குள் இருக்கிறதா என்று கவனித்து. சுத்தம் செய்ய வேண்டும். தலை வாரி விட வேண்டும். மூக்கு, உடலின் சுத்தம் இவைகளைக் கவனித்து, அதற்கு ஆவன செய்ய வேண்டும். "குழந்தைகளே இன்று யார் குளித்தது, கையை உயர்த்துங்கள்" என்று கேட்டு குளித்து வராத குழந்தைகளை, "நாளை நீங்கள் அனைவரும் குளித்து விட்டு வரவேண்டும்; அப்போதுதான் நோய்கள் வராது" என்று விளக்கம் கூற வேண்டும். குழந்தைகளை ஒவ்வொருவராக அழைத்துச் சுத்தம் செய்ய வேண்டும். தலையில் எண்ணை தேய்த்து விடவேண்டும். அவ்வப் போது குழந்தைகளின் சுத்தம் கவனிக்கப்பட வேண்டும். ஆசிரியை உற்சாகமாக இவைகளில் ஈடுபடவேண்டும். மேலும் சுத்தத்தைக் கவனித்த பிறகு அவர்களிடம் சுதந்திர உரையாடல் செய்யும்போது குழந்தைகளிடம் ...பேசி அவர்கள் கூறும் ஒவ்வொரு கூற்றுக்கும் சுதந்திர...டுத்து அதற்குப் பதில் கொடுக்க வேண்டும். ...ழந்தை சுத்தமில்லை. இதன் மேல் நாற்றம் வீசு... என்று விரட்டியடித்து அனுப்பக்கூடாது. எல்லா...ற்கும் சகிப்புத் தன்மையும், பொறுமையும் ...டும்.

10. பால்வாடிக் குழந்தைகளும் பாட்டும்

பழைய காலம் முதற்கொண்டே மக்கள் உள்ளளவும் பயிற்சியில் இருந்து வரும் ஒரு கலை பாட்டு. இது கடந்த காலங்களில் உண்டாக்கப்பட்டு வெவ்வேறு வித மான கலாச்சாரங்களாக உலகத்தில் திகழ்ந்து வருகிறது. ஒவ்வொரு நாட்டிலும் இது முன்னேற்றம் அடைந்து வருகிறது. இது மக்களால் வளர்ச்சி அடைந்து உள்ளது. உணர்ச்சிகளும் பாட்டும் ஒன்றையொன்று தழுவி நிற்கும். பாட்டு உணர்ச்சியின் மொழி என்று கூடக் கூறலாம். பாட்டு மக்களின் உள் உணர்ச்சிகளின் ராகத்தோடு வெளிவரும் ஒரு குரலாம். வாழ்க்கைக்கு முக்கியமான தாளத்தையும் நாம் பாட்டின் மூலம் அறியலாம். நாம் பாட்டைப் பால்வாடிக் குழந்தைகள் முன் பாடுவதற்குக் குழந்தைகளின் சப்தத்தையும், ராகத்தையும் அறிந்து யோசித்துப் பிறகு தான் பாட வேண்டும். நாம் ஒரு குழந்தையின் குரலைக் கேட்போமானல் அவர்களின் செய்கைகளையும், உணர்ச்சிகளையும் சீக்கிரமாக அறியலாம். (உ - ம்) சந்தோஷமான சப்தம், சிரிக்கும் போது ஏற்படும் சப்தம், அழும்போது ஏற்படும் சப்தம்.

குழந்தைகளின் ராகத்தையும், குரலையும் தாயார் ஒருவரே நன்ருக அறிவர். ஆசிரியர்களாக இருக்கும் நாம் $2\frac{1}{2}$ வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளின் செய்கைகளையும், அவர்கள் பாடும் பாட்டையும் கண்காணிக்க வேண்டும். நாம் அவர்கள் விளையாடும் போது ஆர்வத்தோடு பாடும் பாடலை மறைந்திருந்து கேட்கலாம். (உ - ம்) 1) ஒரு குழந்தை ஒரு பொம்மையை

வைத்துக்கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்து தாலாட்டுப்பாடிக் கொண்டு அந்தப் பொம்மையை தூங்க வைப்பதை நாம் பார்க்கலாம். (2) ஒருவன் கட்டிடங்கள் செய்யும் கட்டைகளை வைத்துக்கொண்டு ரயில் செய்து, ரயிலைப் போன்று சப்தம் செய்வதையும் கேட்கலாம். 3. கைத்தொழில் முன்னேற்றமடைந்த தேசங்களில் கிராமபோன் தட்டுக்கள் மக்களை வேகமாக வேலை செய்யத்தூண்டுகிறது. பாட்டு வேகமாகவும், உறுதியாகவும் வேலை செய்ய உதவுகிறது. பாட்டு எப்போதும் அதிகமான சுமையைக் குறைக்க உதவுகிறது.

குழந்தைகள் ரேடியோவை அதிகமாக நேசிக்கிறார்கள். அது அவர்களுக்கு நல்லதாகவும் இருக்கலாம். ரேடியோவில் பாடும் எல்லா பாட்டுகளும் நற்பலன் அளிக்காது. அதனால் குழந்தைகள் உண்மையான கற்பனையைப் பெற முடியாது. வார்த்தைகளும் குழந்தைகளுக்கு புரியாமல் இருக்கலாம்.

ஒரு இந்தியக் குழந்தை பாடும் திறமையை இயற்கையாகவே பெற்றிருக்கும். இந்தியர்கள் எல்லோருக்கும் பாட்டில் ஆர்வமும் ரசிக்கும் தன்மையும் உண்டு. நாம் தாளங்கள் உள்ள வெவ்வேறு ராகங்கள் நிறைந்த கிராமியப் பாடல்களைக் குழந்தைகளுக்கு அறிமுகப் படுத்தலாம். வாத்தியங்கள் குழந்தைகளுக்கு மிகுந்த சிரத்தையைக் கொடுக்கும். ஒரு இந்தியக் குழந்தை எப்போதும் சங்கீதத்தை வாத்தியங்களோடு கேட்கும். அதனால் கிராமியப் பாடல்கள் மூலம் தாள ஞானத்தை வளர்ச்சியடையச் செய்யலாம்.

பால்வாடி ஆசிரியை குழந்தையைக் கவரச்செய்ய வேண்டிய முறைகள்:

1. ஆசிரியை, பாட்டைத் தொடர்ந்து பாடவேண்டும். தான் ஒருமுறை பாடிவிட்டு பிறகு குழந்தைகளைப் பாடச் சொல்லக் கூடாது. அவர் வழிகாட்டியாக இருக்க வேண்டும். அவர் சாதாரணக் குரலிலும், சிறிது கீழ்க்குரலிலும் பாடவேண்டும்.
2. ஆசிரியை கஷ்டமான இராகமுள்ள பாட்டுக்களையும், கஷ்டமான பாட்டுகளையும் தேர்ந்தெடுக்கக் கூடாது.
3. எளிமையாகவும் சுலபமாகவும், குழந்தைகள் சீக்கிரம் புரிந்து பாடக் கூடிய பாட்டுகளாக ஆசிரியர் தேர்ந் தெடுக்க வேண்டும். சுலபமான ராகங்களைக் கொண்ட பாட்டுக்களாகவும் தேர்ந்தெடுக்கவேண்டும்.
4. 5 முதல் 8 வரை உள்ள வரிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்
5. ஆசிரியர், பாட்டில் விருப்பமுள்ளவராகவும் இருக்க வேண்டும்.
6 குழந்தைகள் பாட்டில் தலைமை ஸ்தானம் வகிக்க ஆசிரியர் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.
7. ஆசிரியருக்கு வாத்தியங்கள் வாசிக்கத் தெரிந்திருந்து அதோடு பாடினுல் குழந்தைகள் அதை மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள். ஆகையால் வாசிக்கத் தெரிந்திருப்பது நல்லது.

பாட்டு சம்பந்தப்பட்ட வேலைகள்:

(1) பாடுவது, (2) கேட்பது, (3) உற்பத்தி செய்வது, (4) தாளத்தோடு கூடின செயல்களைச் செய்வது,

(5) வாத்தியங்களை வாசிப்பது முதலிய வேலைகளால் குழந்தை சந்தோஷத்தைப் பெற முடியும். அவன் உற்பத்தி உணர்ச்சியை அனுபவத்தில் பெறுகிறான். அவன் பாட்டில் தனது ரசிக்கும் தன்மையையும், திறமையையும் வளர்த்துக் கொள்கிறான் அவனது குரல் வளர்ச்சி அடைகிறது. அவனால் சப்தங்களின் வித்தியாசத்தைக் கற்றுக் கொள்ள முடிகிறது. வாத்தியங்களோடு கூடிய பாட்டு, வாய்ப்பாட்டு முதலியவற்றில் நல்லவைகளைத் தேர்ந்தெடுக்கும் திறமைகளைப் பெறுகிறான். இப்படியாக ஒவ்வொரு வேலைகளும் குழந்தைகளுக்கு வெவ்வேறு விதத்தில் சந்தோஷத்தை அடைய உதவுகிறது.

பாட்டினால் வளரும் குணங்கள் :

1. குழந்தை எப்போதும் மற்றவர் பாடும் பாட்டுகளைக் கேட்டுச் சந்தோஷம் அடையும்.
2. அவன் விளையாடும் போது, தானே யாரையும் கவனிக்காமல் பாடுவான்.
3. மற்றொருவர் பாடி அபிநயம் செய்யும் போது அவனும் அவர்களைப் போலவே அபிநயம் செய்யும் முயற்சியில் ஈடுபடுவான்.
4. குழந்தை அடிக்கடி வரும் வார்த்தைகளோடும் வாக்கியங்களோடும் சேர்ந்து பாடுவான்.
5. குழந்தை பெரியவர்களோடும் அநேக குழந்தைகள் உள்ள கூட்டத்தோடும் பாடுவான். ஆனால் எப்போதும் சேர்ந்து பாடாமல் சிறிது முன்னாலோ, பின்னாலோ தான் பாடுவான்.
6. குழந்தை பெரியவனானதும் பெரியவர்களோடும் கூட்டத்தினரோடும் சேர்ந்து அவர்கள் மாதிரியே பாடுவான்.

7. குழந்தை தனியாகப் பாடுவதற்குத் தயாராகிறுன்.
8. குழந்தை தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களையே பாடுவான்.
9. குழந்தை பிறர் பாடும் பாட்டையும், விளையாட்டையும் ஞாபகப்படுத்திக் கொள்வான்.

சிறு குழந்தைகளுக்கு ஏற்ற பாட்டுகளை தேர்ந்தெடுத்தல்:

1. சிறிய, திரும்பத் திரும்ப வரும் வார்த்தைகளைக் கொண்ட பாடல்களை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்.
2. சுலபமாகப் பாடக்கூடிய வார்த்தைகளுள்ள பாடல்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
3. பாட்டின் பொருள் குழந்தைகளுக்கு விளங்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

பாட்டுடன் கூடிய செயல்கள்:

குழந்தைகள் பாட்டுப் பாடுவதை விரும்புவார்கள், 3 வயது குழந்தைகள் சிறிய பாட்டுகளை விரும்புவார்கள். சில சமயங்களில் 5 வயது குழந்தைகள் பாட்டைத் தேர்ந்தெடுப்பார்கள். பாட்டுக்கள் எளிய நடையிலும் சுருக்கமாகவும், சாதாரணக் குரலில் பாடுவதாகவும் இருக்க வேண்டும்.

1. பாட்டுப் பாடுவது
2. விளையாடுவது (கூட்டமாகச் செய்யும் செயல்)

குழந்தைகள் வட்டத்தில் நகர்ந்து கொண்டே பாட்டுப் பாடுவதை விரும்புவார்கள். நாம் குழந்தைகளுக்கு அநேக வட்ட விளையாட்டுக்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஏனென்றல் வட்ட விளையாட்டுக்

கள் அவர்களை ஒன்று சேர்த்து ஒழுங்காக நிற்கவும், ஒற்றுமையாக இருக்கவும் செய்கிறது. இது தமாஷோடு கூடியதாகவும் இருக்கவேண்டும். இது உள்ளேயோ அல்லது வெளியேயோ இடத்தைப் பொருத்தும், சீதோஷ்ணத்தைப் பொருத்தும் விளையாடப்படவேண்டும்.

1. உட்கார்ந்து விளையாடும் விளையாட்டுக்கள்
2. கேள்வி பதில் விளையாட்டுக்கள்
3. எண்ணிக்கை விளையாட்டுக்கள்
4. வட்டத்தில் ஓடி விளையாடும் விளையாட்டுக்கள்

மேலே குறிப்பிட்ட விளையாட்டுக்களை விளையாடும் போது பாட்டுகளை உபயோகப்படுத்தலாம்.

அபிநயம் :

அபிநயம் என்பது தாளத்தோடும், அழகோடும் உள்ள உடலின் அசைவுகளாகும். அவை வித விதமாகவும் மனிதனின் தன்மையைப் பொறுத்தும் இருக்கும். அபிநயம் என்பது உணர்ச்சிகளால் ஏற்படும் செயல்களாகும். பார்வைகளைச் செயலில் கொண்டு வருவதாகும். பொதுவாக வார்த்தையில் ஏற்படும் அனுபவங்களை செயல் மூலம் செய்வதாகும்.

கிராமிய நடனம் பாடுதல் :

பாடுவது என்பது மனதில் எழும் சந்தோஷமான ஒலிகள் தாளத்தோடும் கேட்பதற்கு இனிமையாகவும் சொல்வதாகும். பாடும்போது மனதில் எழும் உணர்ச்சிகள் வெளிப்படும். பாடுவதால் குழந்தைகள் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள உதவியாக இருக்கிறது.

ஆசிரியரின் கடமைகள்:

குழந்தை பாடும் போது ஆழ்ந்த உள்உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கும், பாட்டின் தன்மைகளைப் புரிந்து

கொள்வதற்கும் தகுந்த சூழ்நிலையை ஆசிரியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ஆசிரியை குழந்தைகளின் பொறுப்புக்களை ஏற்று அதற்குப் பக்கபலமாக இருக்க வேண்டும். குழந்தை பாடும் போது அதன் உணர்ச்சிகளை வெளிப்படுத்த ஆசிரியை தூண்டுகோலாக இருக்க வேண்டும். ஆசிரியை தானே பாட்டுக்களை உண்டாக்குபவராகவும்; நினைத்த பாட்டுக்களைப் பொழுது போக்காகப் பாடக் கூடியவராகவும் இருக்க வேண்டும். 2 வயது முதல் 3 வயது குழந்தை தானகவே கற்பனை செய்த பாட்டைப் பாடும். அதே சமயத்தில் 5 முதல் 6 வயதுக் குழந்தை தனக்கு முன்பே தெரிந்த பாட்டுக்களைப் பொழுது போக்காகப் பாடும். இது உண்மையான பாட்டுக்கள் ஆகா. ஆனல் அது குழந்தைகளால் உற்சாகத்தினலும், அனுபவத்தினலும் ஏற்படுத்தும் இராகத்தோடு கூடிய வார்த்தைகளாகும். குழந்தைக்குப் பாட்டு நல்ல அனுபவங்களையும், சந்தோஷமான சூழ்நிலையையும் ஏற்படுத்தும். அதனல் பாட்டு குழந்தைகளின் வாழ்க்கைக்கு இன்றியமையாதது ஆகும். அதனல் பாட்டு குழந்தைகளின் தினசரி வாழ்க்கையின் வேலைகளில் ஒன்ருக இருக்கவேண்டும்.

பாட்டும் இராகமும்:

1. குழந்தையாலும் ஆசிரியர்களாலும் விரும்பப்படுகிறது.
2. குழந்தைகள் இராகத்தை விரும்புவார்கள். ஏனெனில் அது தாளத்துடன் சொல்லப்படும்.
3. சின்ன வார்த்தைகள் இராகத்தில் வருவதால் அதைச் சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.

4. சின்ன வார்த்தைகளை இராகத்தில் சொல்ல விரும்புவார்கள். ஏனெனில் அது ஒன்றுக்கொன்று சம்பந்தத்துடன் இருக்கும்.

5. இராகத்தை ஆசிரியர் சரியான முறையில் சொல்லாவிட்டால் அதன் அர்த்தம் தவறும்.

6. ஒரு குழந்தைக்கு அதிகமான பாட்டும் இராகமும் தெரிந்திருக்க வேண்டும்.

7. பாட்டும், இராகமும் குழந்தைக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணும். இதன் மூலம் குழந்தை வீட்டிலுள்ள பெற்றோர்களையும் மகிழ்ச்சியடையச் செய்யும். இதனால் பெற்றோர்களும் இராகத்தை அறிந்து கொள்ள முடியும்,

ஆசிரியர் பாட்டை எவ்வாறு குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது?

பாட்டைச் சொல்லிக் கொடுப்பதற்கு முன் ஆசிரியருக்கு அது நன்றாகத் தெரிந்திருக்கவேண்டும். பாட்டைச் சொல்லிக் கொடுப்பதற்கு முன், அப்பாட்டைக் குழந்தைகளுக்கு எதிரில் பலமுறை பாடவேண்டும். இப்படிப் பாடுவதால் அப்பாட்டின் இராகத்தையும் குரலையும் அறிகிறார்கள்.

ஆசிரியர், பாட்டை திருத்தமாகப் பாடி பயிற்சி பெற வேண்டும். ஆசிரியர் பாட்டைக் குழந்தைகளுக்குத் தினமும் சொல்லிக் கொடுக்காமல் அது விருப்பும் சமயம் சொல்லிக் கொடுத்தல் நல்லது. குறித்த நேரத்தில் பாடம் சொல்லக் கூடாது ஒரே நாளில் ஒரு பாட்டை கற்பிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒரு பாட்டை வாரத்திற்கு ஒரு முறையோ, மாதத்திற்கு மூன்று முறையோ சொன்னால் நினைவு இருக்கும். பால்

வாடிக் குழந்தை ஒரு மணி நேரத்தில் ஒரு பாட்டைக் கற்றுக் கொள்ள முடியாது. நாம் வரி வரியாக ஒரு பாட்டைக் கற்பித்தல் கூடாது. ஆசிரியர் அப்பாட்டை குழந்தைகளுக்கு முன் இரண்டு அல்லது மூன்று முறை பாடினுல் பின் அவர்களும் சேர்ந்து கொள்வார்கள். இப்படிப் பாடுவதால் முழுப் பாட்டின் தன்மையையும் புரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது. குழந்தைகள் ஒரு பாட்டைச் சுத்தமாக கற்றுக் கொள்ள அதிகக் காலம் வேண்டும். ஆசிரியர் பாட்டை ஆர்வத்தோடு கற்றுத்தர வேண்டும்

3—4 **வயது குழந்தைகளுக்கான பாடல்களைத் தேர்ந்தெடுத்தல்:**

புதிதாக வந்த குழந்தைகளுக்கு ஆசிரியர்களின் பாடல்கள் மகிழ்ச்சியைக் கொடுக்கும். வீட்டு நினைவை மறக்க தமாஷாகப் பாடுவது நல்லது. $2\frac{1}{2}$ - 3 வயது குழந்தைகள் மடியில் வைத்துக் கொண்டு பாடுவதை விரும்புவார்கள். நெருங்கிப் பழகுவதால் வீட்டு ஞாபகத்திலிருந்து விடுவிக்கலாம். அரவணைப்பைக் குழந்தைகள் அதிகம் விருப்பும். அம்மா தன்னுடன் பள்ளியில் இல்லாததைத் தமாஷாக உள்ள பாட்டைக் கேட்டுத் தாயை மறந்து திருப்தி அடையும். ஆதலால் சிரிப்பு கலந்த பாடலைக் குழந்தை அதிகம் விரும்பும். குழந்தைகளுக்குச் சிரிப்பை உண்டாக்க கிச்சாங் கிச்சாங் தாம் பாளம் என்ற பாடலையும் பாடலாம். அர்த்தமில்லா பாடலும் பாடலாம். 3 வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்கு இப்பாடல்களைப் பாடலாம்.

3 **வயது குழந்தைகளுக்கான பாடல்கள்:**

தனது உடலில் உள்ள பாகங்களைப் பற்றிய பாடல்களைப் பற்றி அதிகம் விரும்பும். (உ.ம்.) கைவிரல்கள்,

கால் விரல்கள் பற்றிய பாடல்களை அதிகம் விரும்பும் (Where is Thumbking) கட்டை விரல் அண்ணன் போல்—பூனை, நாய் இவை பற்றிய பாட்டையும், விரும்புவார்கள். இது நான்கு வரிப்பாடல்களாக இருக்கவேண்டும். சுலபமான மெட்டுக்களில் அமையவேண்டும். 2 அல்லது 3 நபர்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். எனவே 3 வயது குழந்தைகளுக்கு விரல்களைப் பற்றிய பாடல்களையும், வீட்டு மிருகங்களைப் பற்றிய பாடல்களையும் கற்பிக்க வேண்டும்.

4—5வயது குழந்தைகளுக்கான பாடல்களைத் தேர்ந்தெடுத்தல்:

வெளி உலகத்தைப் பற்றியும், வீட்டின் வித விதமான மிருகங்கள், செடி, கொடி, பழம், பூக்கள், வாகனங்கள் இவைகளைப் பற்றியும் பாடல்கள் பாடலாம் (உம்.) மாமாவே மாமாவே பாடல்கள் அசைவுகளோடு இருக்க வேண்டும். அதிக செய்கைகளோடு செய்தால் குழந்தைகள் விரும்பும். நம்முடன் சேர்ந்து தாளம் போடும் இவ்வயது குழந்தைகள், எண்ணிக்கைப் பாடல்களை அதிகம் விரும்பும். உடல் உறுப்புக்கள் பற்றிய பாடலும் விரும்பத்தக்கது. பாடல்களை எப்போதும் அதிக செய்கையுடன் பாடவேண்டும்.

செய்கைப் பாடல் :

முன் ஆரம்பப் பள்ளித் திட்டத்தில் செய்கைப் பாடல்களுக்கு ஒரு முக்கிய ஸ்தானம் கொடுக்கப்பட்டுள்ளது. காரணம் சப்தத்தின் மூலம் பிறர் கவனத்தை நம் பக்கம் திருப்புகிறோம். தூரத்தில் இருக்கும் ஒருவரைக் கை தட்டிக் கூப்பிடுகிறோம். தாயிடம் இருக்கும் குழந்தையைக் கைதட்டி மறுவிரல்களினல் சுட்டிக்காட்டி நம் பக்கமாகப் பார்க்குமாறு செய்கிறோம். சப்தம்வரும்

திசையை ஒட்டித் தன் பார்வையைத் திருப்பும் சக்தி குழந்தைகளுக்கு மிக அதிகம். அவைகளுக்கும் விளையாட ஊதல், கிலுகிலுப்பை, சப்தம் விடும் வாகனங்களை வாங்கித் தருகிறோம். ஆனால் வெறும் சப்தத்தினால் உள்ளத்திற்கு இன்பம் தரும் இயல்பு இல்லை. ஆனால் இசை குழந்தைகளுக்கு மட்டும் இல்லாமல் பெரியவரையும் இன்பத்தில் ஆழ்த்துகிறது. தன்னை மறக்கும் நிலையையும் ஏற்படுத்துகிறது. சில சமயம் துன்பத்தை ஓரளவு மறக்க உதவுகிறது. இசையுடன் கூடிய இராகமும் தொனியும் உள்ளுணர்வைத் தட்டி எழுப்புகிறது. இயல் இசை, நாடகம் இவை மூன்றில் இசையைத்தான் முதல் நாயகமாக வைத்திருக்கிறார்கள்.

விலங்கினங்கள், பாம்பு, மரம், செடி, கொடி கூட இசைக்குக் கட்டுப்படுகின்றன. பாலர் முதல் முதியோர் வரை இசையில் மயங்காதவர் இல்லை. இசையினால் குழந்தைகளுக்கு உள்ளத்திலும், உடலிலும் தன்னை அறியாத பரவசம் உண்டாகிறது. எனவே பால் வாடிகளில் குழந்தைகள் உள்ளம் கவரவும், மொழி வளர்ச்சி, உச்சரிப்பு, புதிய வார்த்தைகள் ஆகியவற்றை விருத்தி செய்யவும் இசைக்குத் தகுந்தபடி ஆடவும் பாடவும் அறிவை வளர்க்கவும் ஒரு இன்பகரமான பொழுது போக்காகவும் அமையவேண்டும்.

இப்பாடல்கள் எவ்வாறு உருவாகின்றன? குழந்தை பேசுவது இன்பம். அவர்களைப் பேச வைப்பது பேரின்பம். இவ்வற்புதக் கலையில் கை தேர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். கவிதையிலே, சின்னஞ்சிறு பாட்டிலே, எளியநடையிலே, இன்ப இசையிலே பச்சிளங் குழந்தைகளுக்கும் புரியும் படி அழகும் சத்தமும் நிறைந்த இனிய

பாடலிலே பேசினார்கள். குழந்தைகள் உறங்க மறுத்தால் தாய் தாலாட்டுப் பாடுவாள். தமக்கை விளையாட்டுக்காட்டுவாள். அடம் செய்தால் ஆடிக் காட்டுவாள். ஓரிடத்தில் இருக்க மறுத்தால் பாட்டி ஆசையுடன் அதை அரவணைத்து, இனிய கதைப் பாடல்கள் சொல்லுவாள்.

எனவே எல்லாவற்றிற்கும் சிறந்த ஊக்குவிக்கும் கருவியாக விளங்குவது பாட்டு என்பதை அறிய முடிகிறது.

11. குழந்தைகளுக்கு ஏற்ற கதைகளும் சொல்லும்முறைகளும்

கதை கேட்பதில் எல்லா நாட்டாருக்கும் எப்பொழுதும் ஆர்வம் உண்டு. மிகச்சிறு குழந்தைக்கும் கதை கேட்கும் ஆர்வம் இயல்பாக உள்ளது. இந்த ஆர்வத்தைப் பெற்ருேரும் ஆசிரியரும் நன்கு பயன்படுத்தினல் குழந்தைகளின் மன வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும்.

குழந்தைகளை ஆர்வத்துடன் கதை கேட்கச் செய்ய ஓரளவு திறமை தேவை. இதைப் பழக்கத்தாலும் அனுபவத்தாலும் அடையலாம்.

நோக்கமும் பயனும் :

கதை சொல்வதின் முக்கிய நோக்கம் குழந்தையை மகிழ்விப்பதே. அறிவியல் நுட்பங்களையும் அறிவுரைகளையும் நேரே தெரிவிப்பதைவிட கதை வாயிலாகத் தெரிவித்தால் குழந்தைகள் மனதில் அவை ஆழப்பதிகின்றன. குழந்தைகள் ஆர்வத்துடன் கதை கேட்பதால் அவர்களின் கவன சக்தி வலுப்படுகிறது; அதிகப்படுத்தப்படுகிறது. கதைகளில் வரும் சம்பவங்களைப் புரிந்துகொள்வதால் அவர்களின் பொது அறிவு வளருகிறது. மிருகங்கள், பறவைகள் தாவரங்களின் பல இயல்புகளைப்பற்றிக் கதையோடு கதையாக அறிய முடிகிறது. புரியாத விஷயங்களைக் கேள்விகளைக் கேட்டு அறிந்து கொள்ள முடிகிறது.

நல்ல இயல்புகளுக்குப் பாராட்டும், தீய எண்ணங்களுக்குத் தண்டனையும் கிடைக்கும் என்பதை கதைகள் மூலமாக அறிந்து நல்லது, பொல்லாதது இவைகளைப் பகுத்தறியும் பண்பு உருவாகிறது.

வீரம், அழகுணர்ச்சி, தியாகம், பரோபகாரம் (பிறர்க்கு உதவி செய்யும் தன்மை), ரசிக சிந்தனை, பொறுமை, இரக்க சிந்தனை, விடாமுயற்சி, ஒற்றுமை, பக்தி ஆகிய நற்பண்புகளை உதாரணங்கள் வாயிலாகக் கதைகளின் சம்பவங்களைக் கொண்டு குழந்தைகள் அறிந்து கொள்கிறார்கள். இவற்றின் உயர்வையும், இதற்கு மாறான குணங்களின் தாழ்வையும் உணருகிறார்கள். பல கதைகளாலும், கதைச் சம்பவங்களாலும் நகைச்சுவை உணர்ச்சியைக் குழந்தைகள் அனுபவித்து வளர்த்துக் கொள்கிறார்கள். வாழ்க்கையில் முக்கியமான ஒரு பண்பு நகைச்சுவை உணர்வுதான்.

இவ்வாறு பல விரிவான நலன்களைத் தவிர வேறு சில பயன்களும் கதை சொல்வதால் விளைகின்றன. உதாரணமாக கதை வாயிலாகப் புதிய சொற்களையும், பாடல்களையும், மொழிகளையும் அறிய முடிகிறது. பின்னர் அக்கதைகளைத் தானே சொல்லிப் பார்க்க முயலுவதின் மூலம் குழந்தைகளின் நினைவாற்றல், கற்பனை ஆற்றல், பேசும் திறன், குரல் பழக்கம், கூச்சமின்மை, தன்னம்பிக்கை ஆகியவை வளருகின்றன.

மற்றும் இதில் படிப்பு ஆர்வம் உருவாகிறது. கதையைத் தெரிந்து கொள்ளும் ஆசை காரணமாகப் பழகும் திறமையையும், மொழிப்பயிற்சியையும் பல குழந்தைகள் வளர்த்துக் கொள்கின்றன.

கதை சொல்பவரின் தகுதிகள்:

குழந்தைகளுக்குக் கதை சொல்பவருக்குச் சில அடிப் படைத்தகுதிகள் இருப்பது நல்லது. குழந்தைகளை நேசிக்கும் மனமும், பொறுமையும், திரும்பத்திரும்பச் சொல்வதில் அலுத்துக் கொள்ளாத தன்மையும், எளிமையும் கூச்சமின்மையும் தேவை. நல்ல குரல் இருப்பது மிகவும் நல்லது, குரல் நலம் எப்படியிருந் தாலும் பழகிப் பழகி குரலிலே பல உணர்ச்சிகளையும் காட்டும் திறனை வளர்த்துக் கொள்பவராக இருக்க வேண்டும். மற்றும் ஒரு தகுதி கற்பனைத்திறன். புதுப் புதுக் கதைகளையே கற்பனை செய்து சொல்லாவிட் டாலும், தெரிந்த விஷயங்களை, பழங்கதைகளையே தனித்தன்மையுடன் கூறவும், ஓரளவு கற்பனை தேவை. பழக்கத்தாலும் பலரைக்கவனித்துக் கிடைக்கும் அனு பவத்தாலும் கற்பனைத் திறனை வளர்த்துக் கொள்ளலாம். ஓரளவு பாடத்தெரிந்தால் அந்த பயிற்சியையும் கதை களிடையே பயன்படுத்த வேண்டும். கதைப் பாடல் களைப் பாடிக்காட்டலாம். பயிற்சியும், அனுபவமும் கதைகள் பற்றிய ஞானமும் பெற சிலகதைத் தொகுதி களைப் படித்தறிய வேண்டும். புராணக் கதைகள் சொல்வதிலும் திறமை பெற்றிருக்க வேண்டும். பல ஊர்களைப் பற்றியும், சரித்திர வீரர்களைப் பற்றியும் தெரிந்திருந்தால் அந்த அறிவும் பயன்படும்.

சொல்வதற்கேற்ற கதைகள்:

பற்பல வயதுப் பிரிவிற்கும், அனுபவத்தில் மாறு பட்ட பிரிவிற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ற கதைகளையே குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டும், புதிதாகச் சொல்லிப் பழகவும், இளங் குழந்தைகளுக்கு ஏற்றதாக

வும், சிறுகதைகளைக் கூறலாம். குறைந்த கதா பாத்தி ரங்களுடன், குறைந்த அளவு கதை நிகழ்ச்சிகள் கொண்ட கதைகளை முதல் பிரிவாக அமைக்கலாம். இவ்வாறான ஒரு கதையே ''காகமும், குடமும்'' .

தாகமுள்ள காகம் ஒன்று நீருக்குத் தவிப்பதையும், கிடைத்த தண்ணீர் வாய்க்கு எட்டாது போவதும், முயற்சியினால் பிறகு அதை அடைவதையும் கூறும் எளியகதை. இதில் உள்ள கதா பாத்திரம் ஒன்றே ஒன்று. அதுவே காகம். கதை நிகழ்ச்சியும் ஒன்றே. தாகத்துக்கு நீர் தேடுவது. ஆனால் இத்தச் சிறு கதை யையும், சுவையாகக் கூறமுடியும். காகத்தை விவரித்து, அதன் தாகத்தையும் விவரித்து, நீர் கிடைக்காமல் ஏங்கித் தவிப்பதையும் விவரித்து, நீரைக் கண்ணால் பார்ப்பதால் ஏற்படும் மகிழ்ச்சியையும், பின்னர் நீர் எட்டாததால் ஏற்படும் ஏக்கத்தையும், காகத்தின் விடா முயற்சியையும், உழைப்பையும், இவ்வாறு ஒவ்வொரு கதையிலும் ஆழ்ந்து சிந்தித்து குழந்தையின் மனக் கண் முன்னே அந்தக் காட்சிகள் வருமாறு சுவைபடக் கூற வேண்டும்.

கதைகள் பலவிதம்:

வாழ்விலே அனைவருக்கும் நகைச் சுவை உணர்ச்சி அதிகம் தேவை. நகைச் சுவை உணர்வை வளர்க்கும் வகையிலும் பிறரைப் புண்படுத்தா இயல்பில் சிரிக்கக் கற்றுக்கொள்ளவும், எளிமையை வளர்த்துக்கொள்ளவும் குழந்தைகளுக்குப் பல கதைகளைக் கூறலாம். சில கதை கள் கெட்டிக்காரத்தனத்தைக் காட்டும் வகையிலும் இருக்கும். ஒவ்வொரு கதையும் குழந்தைகளுக்கு ஒரு புதிய விஷயத்தையாவது தெரிவிக்கும். கதைகள் இன்பம் ஊட்டும் போது அறிவியல் வளருகின்றது,

சரித்திரமும், பெரியோர் வாழ்வும் சுவையான சம்பவங்களைக் கொண்டவை. அவற்றிலிருந்து பல பாடல்களை அறிய முடியும். இவையெல்லாம் கதை போலவே கூற ஏற்றவை. குழந்தைகளிடம் ஆழ்ந்த தெய்வ நம்பிக்கையும், மனிதாபிமானமும், இறைவன் அன்பே வடிவானவன் என்ற கருத்தும் தோன்றி வளரச் சில கதைகள் பயன்படும். (உம்.) இராமாயணக் கதை. கதைகளைப் பாடல்கள் மூலம் சொல்லும்போது, பாடலை மனப்பாடம் செய்யும் சக்தி வளருகிறது.

கதை சொல்லும் முறை:

கதை சொல்லத் தொடங்குவதற்கு முன்னர் அக் கதைச் சுருக்கத்தை நினைவுப்படுத்திக் கொண்டு, சீராகத் தொடங்கி, தடையில்லாமல் சொல்லவேண்டும். அப்படிச் சொன்னால்தான் குழந்தைகளின் மனதில் நன்றாகப் பதியும். அவர்களது கவனம் வேறு பக்கம் கலையாமல் கேட்கச் செய்யலாம். கதை சொல்லும் போது அக் கதையில் வரும் சம்பவங்களுக்கேற்ப தமது குரலை ஏற்றி, இறக்கி, ஆச்சரியக் குறியுடனும், பயம் நிறைந்த சூழ் நிலையை விவரித்தும் கூறவேண்டும். புதிய மிருகமோ, இடமோ, செய்தியோ கதையில் வரும்போது சுருக்க மான விளக்கம் தரவேண்டும். நடு நடுவே குழந்தை களின் கவனம் கலையாதிருக்கக் குழந்தைகளிடம் கேள் விகள் கேட்டு விடைபெற்றுக் கதை சொல்லலாம். இயன்றபோதெல்லாம் நகைச்சுவைப் பகுதியைப் பக்குவ மாகக் கூறிக் குழந்தைகளை மகிழ்விக்கவேண்டும். அது போலவே சோகமான விஷயங்களையும், சாவு நிகழ்ச்சி களையும் சொல்லும் போது நாசுக்காகச் சொல்லவேண்டும் பள்ளி ஆசிரியையாக இருப்பது வேறு. கதை சொல்ப வராக இருப்பது வேறு. பள்ளி ஆசிரியரே தன் வகுப்பு

மாணவர்க்குக் கதை சொல்ல வந்தால் வேறு விதமாகத் தான் பழகவேண்டும். நன்கு கதை சொல்லத் தெரிந்தவர்கள் எளிதில் குழந்தைகளின் அன்பையும். மதிப்பையும் பெற்று விடுவர். கதை சொல்பவரும் கதை கேட்பவரும் ஒரே குடும்பத்தவர் போல் மாறவேண்டும். கதை சொல்பவர்கள் தாம் சொல்லும் கதைகள் சம்பந்தமாகப் பல படங்களைச் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும். குழந்தைகளை அரை வட்டமாக வெகு அருகாமையில் ஒழுங்காக அமர வைத்துக் கதை சொல்ல வேண்டும். கதை சொல்பவர் கூச்சப்படக் கூடாது. பாத்திரத்தோடு ஒன்றிப் போகவேண்டும். நடிப்பின் மூலம் கதைகளை விளக்கமாகக் கூறவேண்டும்.

கதை சொல்ல ஆரம்பிக்கும் முன் முக்கியமாகக் குழந்தைகளுக்குக் கதை கேட்கும் ஆர்வத்தை ஊக்குவிக்க வேண்டும். அதற்காகக் குழந்தைகளிடம் யாருக்குக் கதை கேட்பதில் ஆர்வம், கதை சொல்லலாமா என்ற கேள்விகளைக் கேட்டு, அனைவரும் எழுந்து உற்சாகமாகக் கைதட்டுங்கள், குதியுங்கள் என்று கூறி, அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். இவ்வாறு குழந்தைகளுக்குக் கதை சொல்ல ஆரம்பிக்கும் முன் அவர்களைச் சுறு சுறுப்பாக்க வேண்டும் பின் கதைகளுக்கேற்ற, படங்களைக் காட்டி விளக்கமாகக் கூற வேண்டும். முதலில் ஆசிரியை ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் விழிப்புணர்ச்சியோடும் கதையைக் கூற வேண்டும். வேண்டா வெறுப்பாகக் கூறக்கூடாது. பல வித முறைகளைக் கையாளுவதால் குழந்தைகளுக்குக் கதை கேட்பதில் அதிக ஆர்வம் ஏற்படுகிறது. அதிகமாகக் கதை கேட்பதில் கவனம் செலுத்த வழி வகுக்கிறது. குரல் ஆற்றலாலும், அபிநயங்களாலும், முக பாவனைகளாலும்

கதை சொல்லத் தேர்ச்சி பெற்றவராக ஆசிரியை விளங்க வேண்டும்

கதை சொல்லும் முறையில் உள்ள வகைகள்

1. Flannel board Method (வெட்டுப்படம்)
2. Sand Tray Method (மணல் தொட்டி முறை)
3. Action Method (அபிநயத்துடன் சொல்வது)
4. Puppet show (பொம்மலாட்ட முறை)
5. Rollograph Method (சினிமா படப் பெட்டி)
6. Dramatization Method (நடித்தல்)
7. Picture show (படம் காட்டிச் சொல்லுவது)
8. Story telling with music (பாட்லுடன் கதை சொல்வது)

12. பால்வாடிக் குழந்தைகளும் விளையாட்டுக்களும்

மனமகிழ ஓடி ஆடிப் பாடி, சந்தோஷமாகவும் துறுதுறுவென்றும் இருக்கவும், எப்போதும் ஏதாவது செய்து கொண்டு இருக்கவும் விரும்பும் தன்மையும் சுபாவமும் உடையவர்கள் குழந்தைகள். வயதானவர்களுக்கு பொழுது போக்குவதற்கு எப்படிப் பலவகை கேளிக்கைகள் இருக்கின்றனவோ அதுபோலவே சிறுவர்களுக்கும் சில பொழுது போக்குகள் அவசியமாகின்றன. பெரியோர்கள் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பொழுதுபோக்குச் செயல்களைச் செய்கின்றனர். ஆனால் குழந்தைகளோ நாள் முழுதும் விளையாட்டிலேயே கழிக்கின்றனர். இதை நாம் கண்கூடாக அன்றாட வாழ்வில் காணலாம்.

குழந்தைகள் விளையாடுவதற்கு மூன்று முக்கிய காரணங்கள் கூறப்படுகின்றன.

1. குழந்தையின் இயற்கையே விளையாட்டுத்தான். எனவே அது விளையாடிக் கொண்டே இருக்கிறது.

2. குழந்தை பிற்கால வாழ்க்கைக்குத் தன்னைத் தயார் செய்து கொள்ளவே விளையாடுகிறது.

   (உ-ம்) குழந்தை தன்னை டாக்டர் போலவே நினைத்து விளையாடுகிறது. இந்த வயதிலேயே அதற்கு ஒரு தன்னம்பிக்கை ஏற்படுகிறது.

3. குழந்தையின் அபரிமிதமான சக்தி விளையாட்டு மூலம் வெளிப்படுகிறது. இயல்பாகவே உள்ள இந்த

மன எழுச்சி உடல் வளர்ச்சிக்கும் குண வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகிறது.

விளையாட்டின் பயன்கள்

ஓடியாடி விளையாடுவதால் உடல் வளர்ச்சியும் உள்ள வளர்ச்சியும் ஏற்படுகின்றன. நல்ல ஆரோக்கியமான உடலைப் பெறுவதற்கு வழி கோலுகிறது. விளையாடும் போது நல்ல பசி ஏற்படுகிறது. எனவே நன்ருக உண்ணு கிருர்கள். நன்ருக உண்ணுவதால் நல்ல உடல் வளர்ச்சி ஏற்படுகிறது. விளையாடும் போது உடம்பில் உள்ள கெட்ட நீர் எல்லாம் வியர்வை மூலம் வெளியாகிறது. இரத்தம் சுத்தமாக்கப்பட்டு இரத்த ஓட்டம் சீராக நடக்க ஏதுவா கிறது. விளையாடும்போது மன எழுச்சிகளைத் தாராளமாக வெளியிட வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அதன் பயனுக நிறைவான முழுமையான ஆளுமை வளர ஏதுவாகிறது. நன்ருக விளையாடுவதால் எலும்புகள் உறுதி பெறுகின்றன.

விளையாட்டின் பயன்கள் :

குழந்தைகளின் விளையாட்டுக்கள் அவர்களது வயது, பால், இடத்தின் தன்மை, தட்பவெட்ப நிலை அல்லது பருவ காலம், கிடைக்கும் விளையாட்டுச் சாமான்களின் தனித் தன்மை இவற்றைப் பொறுத்து மாறுபடும். தவழும் குழந்தை மனம் போனபடி பொம்மைகளையும், பந்தையும் உருட்டி விளையாடும். நடக்க ஆரம்பித்த குழந்தை ஓடி யாடி, உதைத்து, வண்டிகளை உருட்டியும், இழுத்தும் விளையாடும். சிறுவர்கள் கை நுணுக்கவேலைகள், கட்டிடம் கட்டுதல், அடித்தல், உதைத்தல், போன்ற சிறிது முரட்டுத் தன்மையான விளையாட்டுக்களிலும், சிறுமிகள் குடும்ப விளையாட்டுகளிலும், மற்ற அமைதியான விளையாட்டுகளிலும் ஈடுபடுகிருர்கள். கோடைகாலத்தில் விளையாடும் விளையாட்டிற்கும் குளிர் காலத்தில் விளையாடும் விளையாட்

டிற்கும் வேறுபாடுகள் உண்டு. காற்றுக்காலத்தில் பட்டம் பறக்க விடுதல், மழை நீரில் கப்பல் விடல் போன்ற விளை யாட்டுக்கள், பந்தும் மட்டையும் உள்ள குழந்தை சைக்கிள், மோட்டார், விளையாட்டு விளையாடுவதைக் காண்கிறோம். இவை இல்லாத குழந்தைகள் மண் சட்டிகள் மணல், கற்கள், கிட்டி இவை போன்றவற்றை வைத்து விளையாடுகிறார்கள். சிலர் எப்போதும் அமைதியான விளையாட்டுக்களிலே ஈடு படுகின்றனர். இரண்டு வயதுக் குழந்தைகள் தனித்து விளையாடுவதையே விரும்புகின்றனர். ஐந்து வயதுக் குழந்தை மற்ற குழந்தையோடு சேர்ந்து விளையாடுவதையே விரும்புகிறது. ஆகவே இவற்றை அனுசரித்துக் குழந்தைகளை விளையாட அனுமதிக்க வேண்டும்.

குழந்தைகள் விளையாடுவதில் பல விதமான ஆர்வங்களைக் காட்டுகின்றன, உதாரணமாகச் சில குழந்தைகள் தம் இஷ்டப்படியே யாருடைய வழிகாட்டுதலும் இன்றி விளையாட விரும்புவர். சிலர் பிறரின் வழி காட்டுதலில் விளையாட விரும்புவர். குழந்தைகள் தாமாக விளையாடும் விளையாட்டுக்களில் மிகுந்த கற்பனு சக்தி தென்படுகிறது; குழந்தைகள் தாமாக விளையாடுவதற்கும், ஆசிரியரின் மேற் பார்வையின் கீழ் விளையாடுவதற்கும் வித்தியாசங்கள் உண்டு. தன் இஷ்டப்படி விளையாடுதல் கற்பனை சக்தி, போட்டி யின்மை, காலத்தைச் செலுத்தும் முறை, தனி ஒரு ஆர்வத்தை வளர்த்தல், மொழி வளர்ச்சி, சுதந்திரமனப் பான்மை முதலியவைகளை வளர்க்கின்றன.

சுதந்திர விளையாட்டு	ஆசிரியருக்குக் கட்டுப்பட்டு விளையாடும் விளையாட்டு
1. பூரண சுதந்திரம்	கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு விளையாட வேண்டியுள்ளது.
2. கற்பனு சக்தி அதிகம்	கற்பனு சக்திக்குத் தடை ஏற் படுகிறது.

3. அதிக ஆர்வம் ஏற்படுகிறது.	ஆர்வக் குறைவு.
4. அதிக நேரம் விளையாடுதல்.	குறிப்பிட்ட நேரம் விளையாடுதல்
5. தன் இஷ்டப்படி விளையாடுதல்.	குறிப்பிட்ட விளையாட்டு விளையாடுதல்.
6. மொழி வளர்ச்சிக்கு அதிக வாய்ப்புக்கிட்டுகிறது.	வாய்ப்பு குறைவு தான்.
7. களைப்பு ஏற்படாது ஆர்வம் அதிகரிக்கும்.	களைத்து விடும்.

மேலே குறிப்பிட்ட இந்த வித்தியாசங்கள் சுதந்திர விளையாட்டிற்கும் கட்டுப்பட்டு விளையாட்டிற்கும் இடையே காணப்படுகின்றன.

விளையாட்டின் நோக்கங்கள் :

எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதற்கு என்று தனி மதிப்பும் கொள்கையும் இருப்பது போன்றே, விளையாட்டு விளையாடுவதற்கும் சில கொள்கைகளும், நோக்கங்களும் உள்ளன. அவைகளில் சிலவற்றைக் காணலாம்.

1. குழந்தையைச் சுறு சுறுப்பாக இருக்கஉதவுகிறது. சில குழந்தைகள் அமைதியாகவே தனித்தே இருப்பர். இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு விளையாடுவதினுல் அவர்கள் மாறுதல் அடைகிருர்கள்.
2. மேலும் எந்த ஒரு செயலைச் செய்தாலும் முன் எச்சரிக்கையாக இருக்க வழி வகுக்கிறது.
3. புத்தி சாதுரியத்தை வளர்க்கப் பயன்படுகிறது.
4. சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ருற்போல் நடந்து கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்க உதவுகிறது.

5. குழந்தைகள் விளையாட்டு விளையாடுவதின் மூலம் அவர்களது தன்னம்பிக்கை வளருகிறது. வளர்ச்சியடைய ஊக்குவிக்கிறது.
6. பொறுப்புணர்ச்சி, தனக்குக் கொடுத்த செயலை செவ்வனே முடிக்கும் தன்மை வளர்கிறது.
7. மனமகிழ்ச்சி, மனநிறைவு போன்ற பண்புகள் வளரும் தன்மையைப் பெருக்குகிறது.
8. விளையாட்டு மூலம் உடல் வளர்ச்சியடையச் செய்தல். சரியான வளர்ச்சியும், முதிர்ச்சியும் கூடிய தேக ஆரோக்கியத்தைத் தருதல். சரியான அங்க நிலைகளையும், மூட்டுக்களின் அசைவுகளையும் பாதுகாத்தல், கண், கை, கால் போன்ற அவயவங்கள் இணைந்து வேலை செய்யப் பயிற்சி அளிக்கிறது.
9. சட்ட விதிகளுக்கு உட்பட்டு ஆடுவதால் நேர்மை, கீழ்ப்படியும் குணம், கூட்டுறவு மனப்பான்மை, ஒழுக்கம் முதலியவைகளைக் கற்றுக் கொள்ளச் செய்கிறது.
10. நல்ல காரியங்கள் செய்வதில் போட்டியும்,-தோல்வியும் ஏற்பட்டால் அவற்றை ஒப்புக் கொள்ளவும், வெற்றியடைந்தோரைப் புகழ்ந்து அவர்களுடன் நேசத்துடன் பழகக்கூடிய பரந்த மனப்பான்மையையும், சிறந்த மனப்பக்குவத்தையும் வளர்க்க உதவுகிறது.

குழந்தைகளின் விளையாட்டை இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம்.

1) வெளி விளையாட்டு 2) உள் விளையாட்டு

வெளி விளையாட்டு:

வெளிவிளையாட்டு என்பது குழந்தைகளுக்குச் சில சுதந்திர விளையாட்டுக்களையும், சில வழிகாட்டி விளையாட்டுக்களையும் குழந்தைகளை வகுப்பறையைவிட்டு வெளியே

அழைத்துச் சென்று நல்ல காற்றோட்டமான திறந்த வெளியில் விளையாட விடுவதாகும். வெளி விளையாட்டு பல வகைப்படும் அவை சீசா, ஜங்கிள் ஜிம், ஊஞ்சல், சறுக்கு மரம், சங்கி புங்கிலி கதவைத்திற Signal game, Dog and the bone, மலை மீது தீ எரியுது, ரிலே விளையாட்டு, சைக்கிள் ஓட்டுதல், ரிங் விளையாட்டு, வாத்து நடை, யானை நடை, தவளைபோலக் குதித்தல் போன்றவைகள் ஆகும்.

உள் விளையாட்டு :

இது குழந்தைகளை வெளியே அனுப்பாமல் வகுப்பறைக்குள்ளே அமரச் செய்து சில விளையாட்டுச் சாமான்களைக் கொடுத்து விளையாடச் செய்வது ஆகும். அவைகள் நஷ்டாப் பாக்ஸஸ், பீடு பாக்ஸ், நம்பர் பெக் போர்டு, பெக்வித் ஷேப், வீவிங் ஸ்டார், போஸ்ட் பாக்ஸ், மேட்சிங் கேம், Twin Game, ஹேமரன் போர்டு, உப்புத்தாள் தொடு உணர்ச்சி, Sound box, படங்கள், எண்ணிக்கைக் கட்டைகள், கட்டைகள் முதலியவை ஆகும்.

குழந்தைகளுக்கு விளையாட்டு மூலம் கல்வி கற்பிப்பதின் அவசியம் :

குழந்தையின் சுயமுயற்சியை விளையாட்டு தூண்டுகிறது. விளையாட்டு என்பது இயல்பூக்கத்தின் வழிச் செல்லும் பொழுதுபோக்கு. சற்று நேரம்கூட சும்மா இராமல் ஏதேனும் ஒரு விளையாட்டில் ஈடுபடுவது குழந்தைகளின் இயற்கையான குணம். இந்த இயற்கையான குணத்தைப் பயன்படுத்தி விளையாட்டு மூலம் கல்வி புகட்டுவதால் குழந்தைகளுக்குக் கல்வியில் கவர்ச்சி உண்டாகிறது. அதனால் அவர்கள் கல்வி கற்றலைத் தொல்லையாகக் கருதாமல் அதை விரும்பி கவனத்துடன் கற்கிறார்கள். விரும்பிச் செய்யும் வேலையே ஈடேறும். ஆகவே கல்வி கற்றல் செவ்வனே நடைபெறுவதற்கு விளையாட்டு சிறந்த சாதனமாக இருக்கிறது. குழந்தைகளுக்குக் கடினமாய் தோன்றும் பாடங்களும்

விளையாட்டு முறையைப் புகுத்தி போதிக்கப்படும் போது மிக எளிதாகக் கற்கப்படுகிறது. தனி விளையாட்டுக்களில் காணப்படும் போட்டி மனப்பான்மை, குழூஉக்கம் ஆகியவை விளையாட்டு முறையில் கல்வி கற்பதிலும் காணப்படுகிறது. அதனால் கல்வியில் தேர்ச்சியும், சமூகப் பண்புகளும் வளர்கின்றன. தனி விளையாட்டுகளில் குழந்தை சீக்கிரம் களைப்படைவதில்லை. தேக வளர்ச்சியும், உடல் உரம் பெறுவதும் விரைவில் நடைபெறுகின்றன. விளையாட்டு முறையில் கல்வி கற்கும் போது இப்பயன்கள் உண்டாகின்றன.

விளையாட்டு முறையில் கல்வி கற்கும் பொழுது பாட விஷயங்களையே முதன்மையாகக் கருதப்படுகிறது. விளையாட்டு முதன்மையான நோக்கமல்ல. முதன்மையாக வைத்தால் பாடவிஷயம் புறக்கணிக்கப்படும். ஆகவே குழந்தைகள் மனதில் விளையாட்டு மனப்பான்மை பெருகுவதைக் கட்டுப்படுத்தாவிடில் அம்முறையில் தீமையே விளையும்.

குழந்தைகளுககேற்ற விளையாட்டுப் பொருட்கள் :

விளையாட்டுப் பொருட்களைக் குழந்தைகளுக்காக நாம் தேர்ந்தெடுக்கும்போது கீழ்க்காணும் விதிகளை மனதில் கொள்ளவேண்டும். மிகச் சிறிய குழந்தைகளுக்கு அதாவது ஒரு வயதிற்குக் கீழ் ஆறு மாதத்திற்குள் உள்ளவர்களுக்கு மெதுவான பொம்மைகளையே (Soft toys) கொடுக்க வேண்டும். துணி, ரப்பர் இவற்றால் செய்யப்பட்டவைகளாக இருக்கவேண்டும். விஷத்தன்மையில்லாத சாயம் பூசப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் இவ்வயதினர் பொம்மைகளை வாயில் வைத்துச் சுவைத்துப் பார்க்கின்றார்கள். பிளாஸ்டிக், தகர பொம்மைகள் ஏற்றதன்று. அவை உடைந்தால் குழந்தைகளைக் குத்திக்காயம் ஏற்படுத்தும். நடக்க ஆரம்பிக்கும் குழந்தைகளுக்கு $1\frac{1}{2}$ அல்லது 2 வயது வரை தள்ளுவண்டிகள், அசையக்கூடிய பொம்மைகளைக் கொடுக்கவேண்டும். அவர்கள் எப்போதும் நடந்து

கொண்டே இருக்கவேண்டும் என எண்ணுவார்கள். எனவே இதுபோன்ற விளையாட்டுச்சாமான்கள் அவர்களது ஆர்வத்தைத் தணிக்கும். சிறிது வயதான குழந்தைகளுக்கு அதாவது $2\frac{1}{2}$ முதல் 5 வயது வரை மோட்டார், சைக்கிள், பந்து போன்ற பொருட்களை அளிக்கலாம். சிறுமிகளுக்கு சமையல் பாத்திரங்கள், பொம்மைகள் இவற்றை அளிக்கலாம். அவர்கள் குடும்ப விளையாட்டு விளையாடும் ஆர்வத்தை இது பூர்த்தி செய்யும். ஒவ்வொரு வயதினருக்கும், இனத்தவருக்கும் அவர்களது தேவைகளை, ஆர்வத்தை திறமையை அறிந்து நாம் விளையாட்டுச் சாமான்களைத் தேர்ந்தெடுத்தால்தான் அவர்கள் ஆர்வத்தோடு விளையாடுவார்கள். அத்தோடு அவை ஒரு சவாலாகவும் அமையும். அதேசமயத்தில் தீங்கு இழைக்கக் கூடாதவைகளாகவும் இருத்தல் அவசியம். அவர்களது பெரிய தசைகள் வளர (Larger muscle) ஊஞ்சல், சறுக்கு, ஜங்கிள்ஜிம் போன்ற பெரிய விளையாட்டுச் சாதனங்களில் விளையாடவும் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்.

13. பாலர்பள்ளி ஆசிரியைகளும் மாதர் பணியும்

இதுவரை பாலர்களுக்கு ஆசிரியை நேரடியாகச் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றிப் பார்த்தோம். இனிமேல் பாலர்களின் நலனுக்காக, பாலர் பள்ளியைப் பலப்படுத்து வதற்காகப் பள்ளிக்கு வெளியில் ஆசிரியைகள் ஆற்ற வேண்டிய கடமைகள் யாவை என்பதைப் பற்றிப் பார்ப் போம். எப்படிப் பாலர் பள்ளி ஆசிரியை தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளின் தாயாக இருக்க வேண்டுமோ அப்படியே பாலர் பள்ளியை அக்கிராமத்தின் ஒரு முக்கிய அங்கமாக அம்மக்கள் கருதுமாறு செய்வதும் ஆசிரியையின் கடமையாகும். ஒவ்வொரு குடும்பத்திலுள்ள பெற்றோரும் பாலர் பள்ளியைத் தனதாக எண்ண வேண்டும். தன் குடும்பத்தின் ஒரு அத்யாவசிய விரிவாக்கமாகக் கருத வேண்டும். அதிலும் அவ்வூரிலுள்ள பெண்கள் அவ்வாறு நினைக்க வேண்டும். அப்படி நினைக்க வைக்கப் பாலர்பள்ளி ஆசிரியை என்ன செய்ய வேண்டும்?

முதலில் பாலர்பள்ளி ஆசிரியை ஒழுக்கம் நிறைந்த, அவ்வூர் மக்களின் மேல் அக்கறை கொண்ட ஒரு ஊழியர் என்பதைக் காட்டிக் கொள்ள வேண்டும். இரண்டாவது பாலர்பள்ளி முடிந்தவுடன் மாலை நேரங்களில் ஊருக்குள் சென்று குடும்பங்களோடு தொடர்பு கொள்ள வேண்டும். அந்தப் பெண்களின் குழந்தைகளின் திறமையை, அருமையை அந்தப் பெண்களுக்குச் சொல்ல வேண்டும். அந்தப் பெண் களின் தேவையைப்பற்றி அவர்களிடம் அனுதாபத்தோடு பேச வேண்டும். பிறகு அத்தேவைகளை அடையச் சங்க அமைப்பு இன்றியமையாதது என்பதை விளக்க வேண்டும். பின்பு அவர்களை ஒன்று திரட்டி மாதர் சங்கங்களைக்

கிராமத்தில் அமைக்க வேண்டும். அதை மாதம் ஒருமுறை கூட்ட வேண்டும்.

ஒவ்வொரு கூட்டத்திலும் பிரசங்கம் செய்வதை மட்டும் வழக்கமாக வைத்து விடக்கூடாது. மாதர்கள் ருசிகரமாகப் பங்கு பெறும் வகையில் பாட்டு, கும்மி, கோலாட்டம் விளையாட்டு, கைத்தொழில்கள் கற்றுக்கொடுத்தல், புதுப்புதுப் பண்டங்களைச் சமைக்க கற்றுக்கொடுத்தல், குழந்தைகளைக் கொண்டு சிறு சிறு நாடகங்களை நடத்தல், நடனம் கற்றுக் கொடுத்தல் போன்ற செயல்கள் அக்கூட்டங்களில் இடம் பெறவேண்டும். அப்படிச் செய்தால்தான் மாதர்கள் கூட்டங்களுக்கு வருவார்கள்; அவர்களுக்கு ஒரு பொழுது போக்கு இடமாகவும், தம் உணர்ச்சிகளை, திறமைகளை வெளிப்படுத்தக் கூடிய இடமாகவும் அது அமைய வேண்டும். நாளடைவில் அவர்களே பங்கு கொண்டு நடத்தும்படி ஆசிரியை செய்து விடவேண்டும். ஆசிரியை ஒரு தூண்டுகோலாகவும் பக்கத் துணையாகவும் மட்டும் இருக்கவேண்டும். எல்லாவற்றையும் தாங்களே செய்வதாக அவர்கள் நினைத்துப் பெருமைப் படுமாறு ஆசிரியை பார்த்துக்கொள்ள வேண்டும். தனக்கு உதவியாக வெளியிலிருந்து வேறு ஆசிரியைகளையோ, பேச்சாளிகளையோ. அதற்கான திறமைசாலிகளையோ அவ்வப்போது கூட்டங்களுக்கு அழைக்கலாம். முடிந்தால் அவ்வப்போது பொருத்தமான படக்காட்சிகளையும் கொணர்ந்து காட்ட முயலவேண்டும்.

மாதர் சங்கக்கூட்டங்களில் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி, பேசவோ, பாட்டாகப் பாடவோ, நாடகமாக நடிக்கவோ அல்லது வில்லுப்பாட்டு கதா காலட்சேபம் போன்ற கலாச்சார நிகழ்ச்சிகள் மூலம் வெளியிடவோ செய்யலாம்.

1 ஜாதி பேதம், தீண்டாமை, பேய்ப்பயம் போன்ற மூட நம்பிக்கைகளை அகற்றல்.

2 சுத்தம், சுகாதாரம் — தன் உடல், உடை சுத்தம், சுற்றுப்புறச் சுத்தம், சுகாதாரமாய் வாழாவிட்டால் வரும் நோய்கள்.

3. நோய்த்தடுப்பு முறைகள் — காலரா, அம்மை போன்ற கொள்ளை நோய்கள், தொத்து வியாதிகள் அவைகளுக்கான சிகிச்சைகளை எடுத்துக்கொள்ளப் பயப்படாமை.

4. நகை ஆசை, வரதட்சிணை, பரிசம், வீண் செலவு கலியாணம், சாவு முதலான சமூகச் சடங்குகளில் டம்பச் செலவு, சோம்பல், வீண் விவாதம், நேரத்தை வீணுககழித்தல் சண்டை சச்சரவு செய்தல் போன்றவற்றை ஒழித்தல்.

5 சிறு சேமிப்புச் செய்தல் — வங்கிகளில் பணம் போட்டு கணக்கு வைத்துக் கொள்ளல் — சீட்டுப் பிடித்தல் — பாத்திரச் சீட்டு ஆடு வாங்க, மாடுகள் வாங்க சீட்டுகள் பிடித்தல்.

6. குடும்பக்கலையை உணர்த்தல் — சிக்கனம் — வீணுகப் போகும் பொருள்களை வைத்து உபயோகப் பொருளாக மாற்றல் — சமையல் கலையை அறிதல் — சாதாரணமாக கிராமங்களில் கிடைக்கும் கம்பு, கேழ்வரகு, குதிரைவாளி, திணை, சாமை போன்ற தானியவகைகள் பலவிதமான பயிர் வகைகள், பலவிதமான கீரைவகைகள் காய்கறி வகைகள் ஆகியவைகளைச் சுவையாக சமைக்கக் கற்றுக் கொள்ளல் — கணவனேடும் குடும்பத்திலுள்ள மற்றவர்களோடும் இணைந்து சந்தோஷமாக வாழும் மனேதத்துவ முறைகளை அறிந்து கொள்ளல்.

7. கைத்தொழில் செய்தல் — தனக்கும் குடும்பத்தினர் களுக்கும் வேண்டிய துணிகளை வெட்டல், தைத்தல், முத லான தையல் வேலைகளைக் கற்றுக் கொள்ளல், வீட்டு உபயோகத்துக்கு வேண்டிய பாய்கள், பெட்டிகள் கூடைகள் முதலியவைகளை பின்னக் கற்றுக் கொள்ளல் — நூல், வயர், கம்பி, மற்ற பொருள்களைக் கொண்டு பை பின்னுதல், பூப்

போடல்—காகிதங்களில் பூ முதலிய விளையாட்டுப் பொருள்களைச் செய்தல், நூல் நூற்றல், தீக்குச்சி அடுக்குதல், நெசவு செய்தல் போன்ற ஏதாவது குடிசைத் தொழில்களைக் கற்றுக் கொண்டு செய்தல்.

8. வீட்டுத் தோட்டம் போடல் — முருங்கை, கருவேப்பிலை பப்பாளி, லச்ச கெட்ட கீரை, வாழை, குச்சிவல்லி, தக்காளி, கத்தரி, மிளகாய் ஆகியவைகளைச் சமையலறைக்குப் பின்னால் தண்ணீர் சிந்துமிடங்களில் வளர்த்தல்.

9. கோழி, ஆடு, மாடு வளர்த்தல்.

10. ஒவ்வொரு வீட்டிலும் குழிக் கக்கூஸ்களை அமைத்து உபயோகித்தல்.

11. கம்போஸ்டு குழிகளை வெட்டி குப்பைகளை முறைப்படி உரமாக்குதல்

12. மாட்டுச் சாணத்தை எருவாட்டியாகத் தட்டி உரச் சத்தை வீணாக்காமல் சாணி வாயு தயாரித்தல்.

13. சத்துணவு பற்றி — எந்த உணவில் என்னென்ன சத்து இருக்கிறது, எந்த சத்துக் குறைந்தால் எந்த நோய் வரும் என்பதைப் பற்றி கூறல்,

14. சர்வோதயப் பாத்திரம் வைத்தல்; அதன் மூலம் செய்யும் சமுதாய நலப்பணிகளைப் பற்றியும் கூறல்.

15. இராப்பள்ளி நடத்தல் — மாதர்களுக்கும் பள்ளி சென்று படிக்க வசதியற்ற யுவதிகளுக்கும் சிறு பையன்களுக்கும் எழுதப்படிக்கக் கற்றுக் கொடுப்பதோடு அன்றாட உலக செய்திகளைக் கூறலும் பொது அறிவை உண்டாக்கலும்.

16. பொழுதுபோக்கு — களிப்பூட்டும் விளையாட்டுக்களைக் கற்றுக் கொடுத்தல்.

17. வயது முதிர்ந்த மாதர்களுக்குப் பஜனை நடத்தல்.

18. மாதர் சங்கம் மூலம் பெண்களை உல்லாசப் பிரயாணமாக அழைத்துச் செல்லுதல்.

19. பாலர் சபை நடத்துதல்.

20. வாசகசாலை — மாதர்களுக்கு ஓய்வு நேரங்களில் படிப்பதற்காக புத்தகங்களைக் கொடுத்து வாங்கும் நடமாடும் வாசகசாலை அமைத்தல்.

21. எல்லா வகையிலும் மதுவிலக்கை அமல்படுத்த ஆவன செய்தல்.

22. குழந்தை வளர்ப்பு விஞ்ஞானத்தைப் பற்றிக் கூறுவது— குழந்தைகளுக்கு வரும் நோய்கள் — அவைகளைத் தடுப்பதும் வைத்தியமும் — குழந்தைக்கான சத்துணவு — குழந்தைக்குக் கொடுக்க வேண்டிய கல்வி.

மேலே கண்ட விஷயங்களை ஒரு கூட்டத்திற்கு ஒன்றாக திட்டம் போட்டுக் கொண்டு பேச்சு மூலமாக, பாட்டு அல்லது கலாச்சார நிகழ்ச்சிகள் மூலமாகவும், மாதர்களுக்கு விளக்கி கூற வேண்டும். அத்தோடு அந்த ஊரில் யாராவது ஒரு மாதரோ, குழந்தையோ நோயுற்றால் அவர்களைப் போய்ப் பார்க்கவும், அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கவும் வேண்டும். இவ்வாறு அந்த ஊரில் செல்வாக்குள்ள ஒரு பெரும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக ஒவ்வொரு ஆசிரியையும் திகழ வேண்டும்.

நமது நாடு பொருளாதாரத்தில் ஏழ்மையான நாடு. கிராமங்களும், மக்கள் தொகையும் நிறைந்த நாடு. எனவே மக்களுக்கான எல்லாவற்றையும் சர்க்காரே செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பது தவறாகும். பாலர் கல்வி தேச சேவையில் சிறந்த ஓர் இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆகையால் இக்காரியத்தில் ஒவ்வொரு கிராமமும் வெளி உதவியை எதிர்பாராமல் பால்வாடி நடத்த முன் வரவேண்டும். கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி. அக்கோவில்களிலுள்ள தெய்வத்தின் பிரதிநிதிகளே அவ்வூரின் குழந்தைகளாகும். எனவே தினமும் தவறாமல் தெய்வத்திற்குப் பூசை செய்வது

போல் குழந்தைகளுக்குக் கல்வி தருவதும் நமது கடமை யாகும். ஊர் நினைத்தால் இதை எளிதில் செய்துவிடமுடியும்

ஊர்ப் பொதுமக்கள் ஒரு தகுந்த காலியிடத்தில் பொது உழைப்பு தானத்தால் பால்வாடிக்காக ஒரு கட்டிடத்தைக் கட்டலாம். மகிமை, தரகு போன்ற ஊர்ப் பொதுவரவைப் பால்வாடிக்காக ஒதுக்கலாம். கோவில் வருமானம் இருந் தால் அதில் ஒருபாகத்தையும், பால்வாடிக்காக ஒதுக்கலாம். விவசாயம் செய்யும் ஒவ்வோர் ஏக்கர் நிலத்திற்கும் இவ்வளவு என்றோ அல்லது அறுவடைகாலத்திற்கு இவ்வளவு என்றோ பால்வாடிக்காகவே தானிய வசூல் செய்யலாம். வசதியுள்ள வர்களிடம் நன்கொடையாக வசூலிக்கலாம். குழந்தைகளில் லாத பெற்றோர்கள், அல்லது தங்களுடைய அருமைக் குழந்தைகளை இழந்த பெற்றோர்கள் ஆகியோர்களிடமிருந்து ஞாபகார்த்தமாகப் பால்வாடிக்குத் தங்களுடைய சொத்தில் ஒரு பாகத்தை அல்லது வருமானத்தில் ஒரு பங்கை பால் வாடிக்கு எழுதிவைக்கச் சொல்லலாம். அதேபோல் ஊரில் இருந்து வெளியூர் போய் உத்தியோகம் பார்க்கும் அல்லது வியாபாரம், தொழில் புரிபவர்களிடமிருந்து மாதாமாதம் அல்லது ஆண்டிற்கு ஒருமுறை ஒரு கணிசமான தொகையை பால்வாடிக்காக வசூலிக்கலாம். பால்வாடிக்காக மாதர் சங்கத்தின் மூலம் சந்தா வசூலிக்கவும் செய்யலாம். அந்தந்தக் குழந்தையின் பொருளாதார வசதிக்கு ஏற்ப ஒவ்வொரு குழந்தையிடமிருந்தும் மாதம் இவ்வளவு என்று கல்விக்கட்டணமும் வசூலிக்கலாம்.

இப்படியாக ஆசிரியைகளுக்கு இருக்கும் திறமை, ஆர்வம், ஒழுக்கம், உழைப்பு ஆகிய நற்பண்புகளுக்குத் தக்கபடி கிராமங்களில் பால்வாடிகளை நிறுவித் திறம்பட, உயர்ந்த தரத்தில் நடத்த முடியும் என ஒவ்வொரு பால்வாடி ஆசிரியையும் உணர்ந்து அந்த லட்சியத்தை அடைய உறுதி கொண்டு உழைக்க வேண்டுமென வலியுறுத்த விரும்புகிறோம். சிறந்த பிற்காலச் சந்ததியை உருவாக்கும் புனிதமான பொறுப்பு பால்வாடி ஆசிரியைகளின் கைகளில்தான் இருக் கின்றது என்பதையும் ஆசிரியைகள் மறந்துவிடக்கூடாது.

14. பாலர் பள்ளியின் வருடாந்திரப் பாடத்திட்டம்

சனவரி 1-வது வாரம் :

தானிய வகைகள்

சுதந்திர உரையாடல்

தாய்மொழியறிவு : கணிதம்

தானியங்களின் வகைகளைக் கூறும்போது நேரில் காட்டி அது எப்படி உற்பத்தியாகிறது என்று கூறி அதன் உபயோகம் என்ன, தானியத்தை சமையலுக்கு உபயோகப்படுத்து முன் என்ன செய்கிறோம், எப்படிச் சுத்தப்படுத்துகிறோம் என்று கூற வேண்டும்.

பாடம் 1. (உ-ம்.) நெல் :

நாற்று கொண்டு வந்து நேரில் காட்டல். வயலுக்கும் அழைத்துப் போய் காட்டல்.

பாடம் 2. சோளம்:

இதில் எத்தனை வகை உண்டு, சோளம் எப்படி எங்கே பயிரிடப்படுகிறது என விளக்குவதோடு சோளக் கதிரை கொண்டு வந்து நேரில் காட்டலாம்.

பாடம் 3. கம்பு:

இதையும் மேலேயுள்ள படி விவரிக்கலாம். கூடிய வரையில் தானியத்தின் மாற்று உருவத்தை வகை வகையாகக் (அதாவது கம்பு, கம்பு மாவு, கம்புப்பொரி இப்படியாக) காட்டி அதைச் சாப்பிடக் கொடுத்து ருசி அறியச் செய்யலாம்.

கைவேலை:

தானியம் சேகரித்து சிறு சிறு பாட்டில்கள் சிறு சிறு பிளாஸ்டிக் பைகளில் போட்டுத் தைத்து அட்டையில் ஒட்டி, தானியத்தின் பெயரையும் எழுதவும்.

சிறுவர்களுக்கு நோட்டில் உருவம் வரைந்து தானியத்தைக் கொடுத்து (அல்லது) உமியைக் கொடுத்து ஒட்டச் செய்யலாம்.

கதை : தானிய ராஜா கேழ்வரகு என்ற கதை.

உள் விளையாட்டு :

தானிய ராஜா என்ற கதையையே சொல்லி விளையாடலாம்.

வெளி விளையாட்டு :

ஓட்டப் பந்தயத்தை வைத்து வெற்றியடைந்த மாணவனுக்கு கை தட்டச் சொல்லி ஊக்குவித்தல். மற்ற மாணவர்களையும் ஆறுதல் வார்த்தை சொல்லி உற்சாகப் படுத்த வேண்டும். பின் தங்கியவனுக்கு நாளை நீதான் ஜெயிப்பாய் என்றும் கூற வேண்டும். நாம் உணவில் கலப்பு உணவு சாப்பிட வேண்டும், நாம் இன்று உள் விளையாட்டில் நடித்தோமல்லவா (தானியராஜா, கேழ்வரகு என்று) அதனால் கேழ்வரகு சாப்பிட்டால் நன்றாய் ஓடலாம். இம்மாதிரி சிறு சிறு உதாரணம் காட்டி அன்றுள்ள பாடத்தையும் நினைவு படுத்தல் வேண்டும்.

2 - வது வாரம் உரையாடல்

பாடம் 1. பொங்கல்:

இம்மாதம் பொங்கல் பண்டிகை வருவதால் பொங்கலைக் குறித்து விளக்கிக் கூறல். பொங்கலுக்கு முன் வீடு சுத்தம் செய்வது, சுண்ணும்பு பூசுவது முதலியவைகளைக் கேள்வி

கேட்டு சுகாதாரத்தையும், சுற்றுப்புறத்தையும் விவரிக்கலாம்.

பாடம் 2. கரும்பு :

பொங்கலுக்குக் கரும்பு வாங்குவோம் அல்லவா! அந்தக் கரும்பு எங்கே? என்ன முறையில் பயிரிடப்படுகிறது என்றும், கரும்பிலிருந்து சர்க்கரை வெல்லம் முதலியவை செய்கிறார்கள் என்பதையும் விளக்க வேண்டும். கரும்பு வாங்கிக் காண்பித்து எல்லாக் குழந்தைகளுக்கும் சிறு, சிறு துண்டுகளாய் வெட்டி எடுத்துத் தின்பதற்காகக் கொடுக்க வேண்டும். இது தான் கரும்பு. ஆனால் நீங்கள் சோளத் தட்டையைக் கரும்பு என எண்ணித் தின்கிறீர்கள். அது கரும்பல்ல எனக் கூற வேண்டும். சர்க்கரை, வெல்லம், சீனி இவைகளையும் நேரில் காட்டி சுவை அறியச்செய்ய வேண்டும். கரும்பு ஆலைகள் அருகில் இருந்தால் அழைத்துப் போய் காண்பித்தல் நலம்.

3. கிழங்குவகைகள் :

பொங்கலன்று, இஞ்சிக் கொத்து, மஞ்சள் கொத்து உபயோகிப்போம், ஆதலால் குழந்தைகளிடம் மஞ்சள் கொத்தைக் கொண்டு வந்து காண்பித்து. இது என்ன? எனக் கேட்டல், இது மஞ்சள் கிழங்கு எனக்கூறி அதன் உபயோகம், அதனைப் பயிரிடுவது பற்றியும் கூற வேண்டும். மேலும் மஞ்சள் பெண்கள் தன் உடம்பில் பூசிக் குளிப்பதற்கும்; சமையலுக்கும் பயன் படுத்துவார்கள் எனக் கூறல். கிழங்கு வகைகள் பூமிக்கு அடியில் வேர்ப்பாகத்தில் தான் இருக்கும் எனத்தெளிவாகக் கூறலாம். அனைத்து கிழங்கு வகைகளையும் நேரில் காட்டலாம். மதிய உணவிற்கு முள்ளங்கி அல்லது உருளைக் கிழங்கு போன்றவற்றைப் போட்டு உண்ணும் போது அவர்களை இது என்ன கிழங்கு என்று கேட்கலாம். கிழங்குகளின் வகைகளைக் கூறு எனக் கேட்டு எண்ணிக்கைக் கற்பிக்கலாம்.

கதை: வானம்பாடியும் குஞ்சுகளும்.

கைவேலை:

விரல் ஓவியம். கிழங்கு மாவுகாய்ச்சி சிவப்பு, மஞ்சள், பச்சை, நிறப்பொடி கலந்து கொடுத்து விரல் ஓவியம் செய்யச் சொல்லுதல். (காலையில் மஞ்சள் கிழங்கு பாடம் எடுத்ததை ஒட்டி கிழங்குமாவு, மஞ்சள்பொடி)

உள்விளையாட்டு:

பூ பறிக்க வருகிறோம் என்ற விளையாட்டைப் போல கிழங்கு வாங்க வருகிறேன். வருகிறேன் என்ற விளையாட்டு. வெளிவிளையாட்டு: கயிறு தாண்டுதல் - ஸ்கிப்பிங் ஆடல்.

3 வது வாரம் உரையாடல்

பாடம் 1. பயறு வகைகள்

இம்மாதம் மொச்சை, கல்லுப்பயிறு எடுப்பதால் அது பற்றிய பாடம் எடுக்கலாம். சிறுவர்களே இம்மாதம் அதிக பட்சம், மொச்சைக் காட்டில், கல்லுப் பயறுக் காட்டில் தான் இருப்பார்கள். அதைக் கொண்டு பயறு வகைகளை அறிமுகப் படுத்தி உளுந்தம் பயறு முதலியவைகளை நேரில் கொண்டு வந்து காண்பித்து ஒவ்வொன்றையும் அறிமுகப் படுத்தலாம். எத்தனை பயறு வகைகளைப் பார்த்தோம் எனக் கணக்கு அறிவிக்கலாம்

பாசிப் பயிறு சாப்பிடுவது சத்துள்ளது எனக்கூறலாம். பயறு எப்படி விளைகிறது; எங்கே எனக் கேட்கலாம. மதிய உணவில் பயறு வகைகளைக் கொடுக்கலாம். சிற்றுண்டிக்கு முளை கட்டிய பயறு கொடுக்கலாம். பயறு வகைகளின் நிறத்தைக் கூறலாம்

பாடம் 2. கடலைவகைகள்:

கடலை வகைகளை அறிமுகப்படுத்துதல். நிலக்கடலை எப் படிப் பயிரிடப் படுகிறது. நிலத்திற்குள் விளைகிறது எனக்

கூறுகிறோம். நிலக்கடலை சத்து உள்ளது. மகாத்மாவிற்கு நிலக்கடலையும், ஆட்டுப்பாலும் தான் பிடிக்கும் எனக் கூற லாம். கடலையின் உபயோகம். கடலை எண்ணெய், புண் ணாக்கு இவைகளை நேரில் காட்ட வேண்டும். புண்ணாக்கு தின்பதற்கு கொடுக்கலாம். எண்ணெய்ச் செக்கு இருக்கு மிடத்திற்கு அழைத்துப்போய்க் காட்டலாம். சமையலுக்கு எண்ணெய் உதவும். கடலைக் காட்டிற்குப் போய் கொத்துக் கடலையைக் காட்டலாம். மதிய உணவிற்கு கொத்துக்கடலை சேர்க்கலாம். சிற்றுண்டிக்கு வேர்க்கடலை கொடுக்கலாம்.

பாடம் 3. குடியரசு தினம்:

குடியரசு பற்றி விவரிக்கலாம். கொடி ஏற்றுவதற்குத் தயார் செய்தல் மூன்று கலர் உள்ளது என்றும், கலரின் வேற் றுமை, எண்ணிக்கை இவைகளைக் கூறலாம்.

பாட்டு:

சின்னச் சின்ன கண்ணனுக்கு
என்ன வேண்டும்.

கதை: அகிலாவும் கிராம சேவிகாவும்.

கைவேலை;

உருவம் வரைந்து பயறு வகைகள் ஒட்டுதல், தேசியக் கொடி வரைந்து கலர் தீட்டுதல்.

உள்விளையாட்டு:

விளையாட்டு உபகரணங்கள், கட்டிடக் கட்டைகள் சிலிண்டர் கொடுக்கலாம்.

வெளி விளையாட்டு:

மணல் தொட்டி, சீசா, சறுக்கு இவைகளில் விளை யாடலாம்.

4 வது வாரம்

முதல் மூன்று வாரப் பாடங்களைத் திருப்புதல்.

பிப்ரவரி 1வது வாரம்: தொழிலாளர்கள்

பாடம் 1. தபால்காரர் :

தபால்காரரின் வேலையைப் பற்றி விவரித்தல். நாம் எழுதும் கடிதங்களை எப்படி உரியவரிடம் சேர்க்கப்படுகிறது. அதில் தபால்காரர் பங்கு என்ன என்றுகூற வேண்டும்.

தபால் நிலையத்திற்குப் பிள்ளைகளை அழைத்துச் சென்று கார்டு வாங்கச் செய்தல். பின் எழுதித் தபால் பெட்டியில் போடச் செய்யலாம்.

தபால் கார்டுகள், கவர்கள் போலச் செய்து பத்து வரை மாற்றி குழந்தைகள் வசம் கொடுத்து அவரவரிடம் உள்ள எண்ணிக்கையைக் கூறச் செய்தல், தபால்கள், பஸ், ரயில், விமானம் முதலியவைகள் மூலம் செல்கிறது. என விளக்குதல்.

பாட்டு : கையில் கடிதம் வைத்திருப்பார் தபால்காரர்.......

கதை: தபால் கொடுப்பதைப் பற்றிய கதை தபால்காரத் தாத்தாவும் — சுமதியும்.

கைவேலை : காகிதம் மடித்தல், கவர் செய்தல், தபால்

உள் விளையாட்டு: குலை, குலையாய் முந்திரிக்காய்

வெளி விளையாட்டு:- தபால்காரர் வேடம் போட்டு தபால் கொடுத்து விளையாடலாம்.

பாடம். 2 வண்ணான்:- இவர்களால் நாம் அடையும் நன்மை இவர்கள் இல்லாவிட்டால் என்னவாகும் எனக் கூறல். வண்ணான் துணிகளைத் துவைக்க என்ன இரசாயனப் பொருட்களை உபயோகித்து எப்படித் துவைக்கிறான் என்பதை அவன் துவைக்கும்இடத்திற்கு அழைத்துச் சென்று காட்டலாம். பள்ளிச் சீருடைகளை ஆசிரியைகளே துவைத்துப் பிள்ளைகளுக்குக் காட்டலாம்.

பாட்டு: வண்ணானே வண்ணானே (முழுப்பாடல் பின்னால் இணைக்கப்பட்டுள்ளது)

கதை: வண்ணானும் கழுதையும்

கைவேலை: வர்ணம் தெளித்தல்

உள்விளையாட்டு: வெற்றிலைக் கட்டு பிடியாதே

வெளிவிளையாட்டு: கண் கட்டிப் பிடித்தல்

பாடம் 3 குயவன்:

குயவனின் செயல்களில் மண் பாண்டம் எப்படிச் செய்யப்படுகிறது என விளக்குதல். நாம் விளையாட்டுப் பொருள் செய்யும் மண்ணும் குயவன் செய்யும் மண்ணும் எப்படி வித்தியாசப் பட்டுள்ளது என விளக்குதல். அருகில் உள்ள குயவன் வீட்டிற்கு அழைத்துச் சென்று, மண் மிதித்தல், பானை செய்தல், சூளை வைத்தல் முதலியவைகளை நேரில் காட்டலாம்.

பாட்டு: குயவன் நல்ல குயவனாம்.

கதை: மண்பாண்டம் செய்வதையே கதையாகக் கூறல்.

கைவேலை:

களிமண் தொகுத்து சட்டி, பானை, குண்டு இப்படி அவர்கள் மனதில் பட்டதை செய்யக் கூறல்.

உள் விளையாட்டு:

நெப்கோ - செப்புசெட் கொடுத்து விளையாடச் செய்தல் ஒரு குழு. பொம்மை வீட்டில் விளையாடச் சொல்லலாம்.

வெளி விளையாட்டு:

குழந்தைகள் இஷ்டப்படி ஓடி, தாண்டி - குதித்து விளையாட விடுதல்.

2 வது வாரம் உரையாடல்

பாடம் 1. கொத்தனர்:

இவரின் பங்கு நமக்கு எவ்வளவு முக்கியம்; வீடுகட்ட, விளையாட்டு இடம் கட்ட இவரின் உதவி தேவை, என விளக்குதல். கட்டிட வேலை செய்யப் படுவதை நேரில் காட்டலாம். எத்தனை வகை வீடு கட்டுகிறார்கள், கோவில் கட்டுகிறார்கள் எனக் கூறலாம்.

பாட்டு; சின்ன சின்ன வீடுகட்டி

கதை: கண்ணனும் ஜிம்மியும்

கைவேலை:

குச்சி ஒட்டுதல், உருவம் வரைந்து தீக்குச்சி ஒட்டுதல்.

உள் விளையாட்டு: நாய்களே வெளியே வாருங்கள்.

வெளி விளையாட்டு:

மணல் தொட்டியில் தண்ணீர்சிரட்டை இவைகளைக் கொடுத்து வீடு, குருவிக்கூடு கட்டி விளையாடலாம்.

உரையாடல்

பாடம் 2. தச்சர்:

நாம் உபயோகிக்கும் பலகை, நாற்காலி, பெட்டி, விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்பவர் தச்சர். எப்படி மரத்தை அறுத்து வெட்டிப் பெருட்களைச் செய்கிறார்கள் என்று விவரிக்கலாம். நேரிலும் அழைத்துச் சென்று காட்டலாம். பொற்கொல்லரைப் பற்றியும்; நாம் அணியும் நகைகள் அவர்களால் செய்யப் படுகிறது என்பதையும் கூறலாம்.

பாட்டு: சின்னச் சின்ன மூக்குத்தி

கதை: ஆமையும் முயலும்.

கை வேலை: நோட்டில் பல நிறத் துணிகளை ஒட்டுதல்.

வெளி விளையாட்டு:

என் இடப் பக்கம் காலி வள்ளி நீ வரலாம். என் வலப் பக்கம் காலி மீனு நீ வரலாம்.

உள் விளையாட்டு: ஆமையும் முயலும் கதையை நடித்தல்.

உரையாடல்

பாடம் 3. வைத்தியர்;

நாம் உயிர் வாழ இவரின் பங்கு இன்றியமையாதது என அவரது சேவையை விவரித்துக் கூறல். மருத்துவ மனைக்குச் சென்று, அங்குள்ளோர் அனைவரின் பணியையும் கூறுதல். உணவு முறைகளை விளக்குதல். நகம் வெட்டுவதின் அவசியம், நோக்கம், வெட்டா விட்டால் ஏற்படும் தீமைகளைக் கூறல். மருத்துவரைப் பற்றி தெளிவாகக் கூறல்.

பாட்டு: பாட்டி பாட்டி கதை கேளு

கதை: மழையில் நனைந்த பாட்டி

கைவேலை: வர்ணம் தீட்டுதல்.

உள் விளையாட்டு:

பொம்மை விளையாட்டிலுள்ள டாக்டர் செட் எடுத்து வைத்தியம் செய்து விளையாடுதல்.

வெளி விளையாட்டு: பந்து விளையாடுதல்.

3 வது வாரம் உரையாடல்

பாடம் 1. போலீஸ்காரர்:

போலீஸ்காரரின் வேலை என்ன வென்று விளக்குதல். எந்தவித உடை அணிந்திருப்பர். தொப்பியின் அமைப்பு, அதன் நிறம் கூறல். திருடர்களைக் கண்டு பிடித்து எவ்வாறு

தண்டனை அளிப்பர் என்று விளக்குதல்; குழந்தைகளின் மனதில் ஆழப் பதியும் வண்ணம் விளக்குதல்.

பாட்டு:

கையில் தடி வைத்து இருப்பார்
போலீஸ்காரர் ... ... என்ற பாட்டு.

கதை: முத்துவும் போலீஸ்காரரும்.

கைவேலை: நூல் ஒட்டுதல்.

உள் விளையாட்டு: உற்று நோக்கும் விளையாட்டு.

வெளி விளையாட்டு:

பல மிருகங்களைப் போல் நடத்தல், ஓடுதல், தவ்வுதல் முதலியன.

உரையாடல்

பாடம் 2. ஆசிரியர்

ஆசிரியர் வேலை, பள்ளியில் என்ன கற்பிக்கிறார் என்று விரிவாகக் கூறுதல், சிலரின் பெற்றோர் ஆசிரியராக, இருப்பர். ஆதலால் குழந்தைகளின் மனதில் பதியும்படி கூறல்.

பாட்டு: எண்ணும் எழுத்தும்.

கதை: துப்பாக்கி விளையாட்டு.

கைவேலை: அச்சுக் குத்துதல்.

உள் விளையாட்டு: Hot and cold.

வெளி விளையாட்டு: சைக்கிள் ஓட்டுதல், பந்து விளையாடுதல்

உரையாடல்

பாடம் 3 தையல்காரர்

நாம் உடுத்தும் உடுப்புக்களைத் தைத்து கொடுப்பவர். "ஆள் பாதி ஆடை பாதி" என்பது போல், அழகான ஆடை தைப்பதால்தான் நீங்கள் அழகாய்ப் பள்ளிக்கு வருகிறீர்கள்.

இதெல்லாம் யார் எப்படித் தைக்கிறூர் என்று கேள்வி கேட்டு விளக்கலாம். உனக்கு எத்தனைச் சட்டை தைத்தார் எனக் கேட்கலாம்.

பாட்டு: சின்னச் சின்ன பொம்மைக்கு

கதை: பிள்ளையைக் காத்த கிளி

கைவேலை:

தையல் கடையில் துண்டுத் துணிகளை எடுத்து வரச் சொல்லி நோட்டில் ஒட்டச் செய்தல். இலைக்குப் பச்சைத் துணி, பூ என்றால் சிகப்பு, மஞ்சள் இப்படி.

உள் விளையாட்டு;

பொறுத்தும் அட்டைகள் கொடுப்பது; ஜோடி சேர்த்தல்.

வெளி விளையாட்டு: குதிப்பதும் ஓடுவதும்.

வேடப் போட்டி வைக்கலாம், ஒவ்வொரு தொழிலாளர்களாக, ஒவ்வொரு வரையும் நடிக்கச் செய்து அவர்களது வேலையைச் செய்வது போன்று நடித்து விளையாடுதல்.

மார்ச் மாதம்:

1 வது வாரம் உரையாடல்

பாடம். I வாகனங்கள்

வண்டி :-

வண்டிகளின் படங்களைக் காட்டி இது என்ன? என்று கேள்வி கேட்டு மாட்டு வண்டி குதிரை வண்டி என விளக்க வேண்டும். மாடும் குதிரையும் வண்டியை இழுத்துச் செல்கிறது என்பதையும், வண்டி தரையில் செல்லும் என்ற விஞ்ஞான அறிவையும் புகட்டலாம். வண்டிக்கு எத்தனை சக்கரம் எனக் கேட்டும், படத்தில்

எத்தனை வண்டி இருக்கிறது. எத்தனை மாடு வண்டியை இழுக்கிறது, என கேள்விகள் கேட்டு கணிதம் கற்பிக்கலாம்.

வண்டியில் எங்கெங்கு செல்லலாம் என்றும் குதிரையின் சப்தம், அதன் அமைப்பு ஆகியவற்றைக் கூறி சமூக அறிவை வளர்க்கலாம்.

பாட்டு : கட்டை வண்டி போகுது பார்
குதிரை வண்டி போகுது பார், ஹை, ஹை, ஹை

கதை : சிங்கமும் கொசுவும்

கைவேலை . சோளத் தட்டையில் வண்டி செய்தல்.

உள் விளையாட்டு :

மேலே உள்ள பாட்டையே சொல்லி வட்டத்தின் நடுவில், ஓர் தலைவர் நிற்க வேண்டும். அவர் கட்டை வண்டி போகுது; பார் எனச் சொன்னதும், வட்டத்திலுள்ளவர்கள் ஹை, ஹை, என வண்டு ஓட்டுவது போல் அபிநயத்துடன் சொல்லி ஓட வேண்டும். எல்லா வாகனத்திற்கும் செய்யலாம்.

வெளிவிளையாட்டு :

"அக்காவே, அக்காவே எங்கே
போறீங்க" என்ற விளையாட்டு

உரையாடல்

பாடம். 2 **மோட்டார் :** பேருந்து

ஸ்கூட்டர் :

மோட்டார், லாரி பற்றிய விபரம் கூறலாம் மோட்டாரின் உதவியால் எவ்வளவு தூரம் செல்கிறோம். எத்தனைபேர் செல்லலாம் என்பதை விவரித்தல். யார்

மோட்டாரில் போய் இருக்கிறீர்கள் எனக் கேட்டல். முடிந்தால் பக்கத்து ஊர்களுக்குப் பஸ்ஸில் அழைத்துச் செல்லாம்.

மோட்டாருக்கு எத்தனைச் சக்கரம் என்று கணிதம் கற்பிக்கலாம். மோட்டார் பெட்ரோல் உதவியால்தான் செல்கிறது என்பதை நேரடியாகச் செயல் மூலம் காட்டலாம்.

பாட்டு :

சின்னச் சின்ன மோட்டார்
நீ எந்தன் மோட்டார்
நான் உந்தன் டிரைவர்

கதை :

கிராமத்துப் பையன் ராமுவும்; நகரத்துப் பையன் கோபாலும் (கற்பனைக் கதை கூறல்)

கைவேலை:

தீப்பெட்டி, அட்டையில் பஸ், லாரி, ஸ்கூட்டர் செய்தல்.

உள்விளையாட்டு:

வாகனங்கள் போவது போல் சப்த மிட்டு ஓடி விளையாடுதல்.

வெளிவிளையாட்டு வாகனவிளையாட்டு

உரையாடல்

பாடம் 3 இரயில் வண்டி:

இரயிலைப் பற்றிக் கூறும் போது ரயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விளக்கிக் கூறலாம். இரயில்

115
N78

நிற்க வேண்டுமானல் சிவப்பு கொடி காட்ட வேண்டும், போக வேண்டுமானல் பச்சைக் கொடி காட்டவேண்டும் என்பதை விளக்குதல்.

இரயிலில் எவ்வளவு தூரமானலும், எங்கெல்லாம் செல்லலாம் என்பதையும், இரயில் ஊதும் சப்தம், போகும் போது கேட்கும் "சுக், சுக்" சப்தம் இவைகளைக் கூறலாம்.

பாட்டு:

சுக், சுக், இரயிலு ஓச்சந்தி
தூரம் தூரம் சரகண்டி.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 108874

கதை: பச்சை, சிவப்பு மஞ்சள் நிற இரயில் பெட்டிக்கதை.

கைவேலை: தீப்பெட்டியில் இரயில் செய்தல்.

உள் விளையாட்டு:

கட்டிடக்கட்டை பொறுத்தும் படங்கள் கொடுத்து விளையாடச் செய்தல்.

வெளிவிளையாட்டு:

சிவப்பு, பச்சை கொடி கொடுத்து மணி கொடுத்து இரயில் விளையாட்டு விளையாடுதல்.

2 - வது வாரம் உரையாடல்:

பாடம் 1. ஆகாய விமானம்:

ஆகாய விமானப்படம் காட்டி, இது என்ன யார் பார்த்து இருக்கிறீர்கள் எனக் கேள்வி கேட்டு விளக்குதல்.

ஆகாயத்தில்தான் இது பறக்கும்; எத்தத்துவத்தில் பறக்கிறது என்றும் பறவை போல் செல்கிறது. ஆனல் பறவை மாதிரி சிறகை அடிக்கடி அடிப்பதில்லை எனவும் விளக்குதல். உயர இருந்து பூமியைப் பார்த்தால் உருவங்களெல்லாம் சிறு எறும்பு போல் தெரியும் எனவும்

கூறலாம். விமானத்தில் உட்கார்ந்ததும் பெல்ட் போட்டு நம்மை கட்டிவிடுவார்கள். அதனை ஏன் என்று விளக்குதல்.

பாட்டு : பறவைக் கப்பல் பாரடா

கதை : சிறுமியும் காளானும்

கைவேலை : அட்டையில் ஆகாய விமானம் செய்து பள்ளியில் வைத்தல். நோட்டில் படம் வரைந்து வர்ணம் தீட்டல்.

உள் விளையாட்டு : எலியும் பூனையும்

வெளி விளையாட்டு : அக்காவே! அக்காவே!! எங்கே போறீங்க அனைத்து வாகனங்களையும் கூறுதல்.

உரையாடல் :

பாடம் 2. கப்பல் :

கப்பல் படம் காட்டி விளக்குதல். கப்பல் தண்ணீரில் தான் செல்லும் எனக் கூறல், அதிகப்பேர், அதிக தூரம் போகலாம்; எங்கு எங்கு செல்லலாம் எனக் கூறல் கப்பல் மூலம் பல நாடுகளுக்கு ஏற்றுமதி; இறக்குமதி பொருட்கள் ஏற்றிக் கொண்டு செல்லலாம் என்பதை விளக்குதல்.

பாட்டு: கப்பல் நல்ல கப்பல்

கதை: பொம்மலாட்டக் கதை

கைவேலை:

அட்டையில் கப்பல் செய்து பள்ளியில் வைத்தல் காகிதக் கப்பல் (காகித மடிப்பு) செய்தல்.

உள் விளையாட்டு:

தரையில் கப்பல் வரைந்து (படகு வடிவம்) பிள்ளைகளை உட்காரச் செய்து ஜலசா பாட்டு விளையாடுதல்

வெளிவிளையாட்டு:

ஓடி வந்து படகு போல் (வடிவத்தில்) நிற்கச் செய்தல்

பாடம். 3 இராக்கெட், ஜெட் விமானம்:

இவைகளையும் ஆகாய விமானம் போல் விவரித்து கூறலாம்.

பாட்டு; பறவை போல தோனுது

3-வது வாரம்

பாடம் 1 சுவை

புலப்பயிற்சி:

இனிப்பு, காரம், துவர்ப்பு, கரிப்பு, இப்படிப்பட்ட வெவ்வேறு சுவையுள்ள பொருட்களைக் காட்டி இது என்ன நிறம், இதன் தன்மையையும் விளக்கலாம். வாயில் போட்டும் ருசி காட்ட வேண்டும். நன்றாகக் குழந்தைகள் மனதில் பதியும்படி கற்பித்தல் முக்கியம்.

பாட்டு: சின்ன விஜயராணி
அனைத்துச் சுவைக்கும் கற்பனைப் பாடல் பாடலாம்,

கதை: உப்பு நமக்கு எப்படிக் கிடைக்கிறது என்பதைக் கூறல்.

கைவேலை; பள்ளியில் ஓர் மூலையில், மணல், தண்ணீர் மூலம் சமுத்திரம் போல் அமைத்து, கடலிலுள்ள கிளிஞ்சல், மீன் இவைகள், கப்பல் முதலியன வைத்துக் காட்டலாம். பிள்ளைகளுக்கு விரல் ஓவியம் கொடுக்கலாம்.

உள் விளையாட்டு:

குலை குலையாய் முந்திரிக்காய்
படகோட்டி விளையாடுதல்

வெளிவிளையாட்டு: நொண்டி அடித்தல், கயிறு தாண்டு தல்.

பாடம் 2: செவிப்பயிற்சி

நாம் காதால் சப்தங்களைக் கேட்கிறோம் எனக் கூறி விளக்குதல். ஒலி வேறுபாட்டைக் கூறலாம். எப்படி யெனில் ஒரே அளவு நிறமுள்ள 6 டப்பாக்களில் 2 ல் சிறு மண், 2 ல் சிறு கற்கள், 2 ல் சிறுகண்ணாடி வளையல் துண்டுகள் இவைகளைப்போட்டு இரண்டு பக்கமும் ஒட்டி விட வேண்டும். பிறகு 6 டப்பாக்களையும் ஒன்றாகப் போட்டு, ஒரேவிதச் சத்தமுள்ள இரண்டை எடுக்க வேண்டும்; அதன் ஒலியைக்கூறச்செய்தல். 6 ல் 2 எடுத்து விட்டால் மீதம் 4 என்ற கணக்கும் கூறலாம்.

காது சுத்தம், சீழ் வருதல் பற்றியும்; காதில் குச்சி ஆணி இவைகளைப் போட்டு காது குடைதல் கூடாது எனக் கூற வேண்டும்.

பாட்டு: வட்ட வட்டத்தட்டு, வடிவமான தட்டு.

கதை: அறிவுள்ளபன்றி.

கைவேலை: காட்போர்ட் அட்டையில் ஒலிப்பெட்டி செய்து பள்ளியில் வைத்தல், பிள்ளைகளுக்கு பாய் பின்னக் கொடுத்தல்.

உள்விளையாட்டு: அபிநய விளையாட்டு

வெளிவிளையாட்டு: சறுக்கு, ஊஞ்சல், வட்டத்திற்குள் பந்தை உருட்டுவது.

பாடம் 3: கண்

நாம் கண்ணால் பார்க்கிறோம் எனக் கூறுதல். தூரத் திலுள்ள கோவில், அருகில் உள்ள கிணறு இவைகளைக்

காட்டலாம். வானத்தில் பறக்கும் பறவை, ஆகாய விமானம் இவைகளைக் காட்டலாம்.

கண் சுத்தம்: கண்களைக் கசக்கக் கூடாது. அதிக நேரம் இரவில் கண் விழிக்கக் கூடாது.

பாட்டு: சின்னப்பாப்பா பொம்மைக்கு கண்ணில்லை

கதை: இராமும் சைக்கிள் வண்டியும்

கைவேலை: தட்டையில் மூக்குக் கண்ணாடி. பல்ப் செய்தல், கலர் பேப்பரில் மூக்குக் கண்ணாடி செய்தல்.

உள்விளையாட்டு: உபகரணங்கள் கொடுத்து விளையாடுதல்

வெளிவிளையாட்டு: பந்து எறிதல், யார் அதிக தூரம் எறிகிறார்கள், பந்தும் பாய்ந்தோடலும்.

உரையாடல்: தொடு உணர்ச்சி மெய்யுணர்ச்சி

வழ வழப்பு, சொற, சொறப்பான காகிதம், கலர் பேப்பர், உப்புத்தாள் கொடுத்து - அதைத் தொட்டுப் பார்த்து வித்தியாசம் காணல். துணிகளையும் கொடுத்து வேறுபாடு காட்டலாம்.

பாட்டு: புத்தகம் இது புத்தகம்

கதை: அப்பா தந்த பிறந்த நாள் பரிசு
புதுச்சட்டை—கற்பனைக் கதை கூறல்.

4 - வது வாரம்

பாட்டு: அம்மா அம்மா ஆசை அம்மா

கதை: சுகாதாரத்தின் அவசியம் பற்றி கூறி சிரங்கு வருவதை—விளக்கப்படம் காட்டி கதை கூறல்.

கைவேலை: பிள்ளைகளை வரிசையாய் உட்கார வைத்து கைதட்டி, நீட்டி - பின் - நகம் வெட்டி விடுதல். இவ்

வேலையை செய்யும் போதே - நகம் இருப்பது கெடுதல்; அதில் அழுக்குப்படியும். ஆகவே அதனை வெட்டி விட வேண்டும் எனக்கூறல், சிறிய கத்திரியால் வெட்ட வேண்டும்.

உள்விளையாட்டு : பொட்டலம் கடத்தல்

வெளிவிளையாட்டு : நரியும் கோழிக்குஞ்சும்

2. உடற்சுத்தம் : உரையாடல்

தினமும் குளிக்கவேண்டும், சக்திக்குத்தக்கபடி சோப், சீயக்காய்த்தூள் போட்டுக் குளித்தல் வேண்டும். வியர்வை-மண் போகக் குளிர் நீரில் குளித்தல் அவசியம் எனக் கூறல்

பாட்டு : கட்டை விரல் அண்ணன் போல

கதை : மழையில் இடம் தேடும் குருவி

கைவேலை : காகிதம் மடித்தல்—பந்து செய்தல்

உள்விளையாட்டு : உற்று நோக்கும் விளையாட்டு

வெளிவிளையாட்டு: ஓடிப்பிடித்தல்—பந்தைக் கடத்தி விட்டு ஓடுதல்.

ஆடைச்சுத்தம் : மூக்கு சுத்தம்

பாலர் பள்ளியில் பிள்ளைகளுக்கு மூக்குத் துடைத்துச் சுத்தம் செய்தல் மிக அவசியம். பல் விளக்குதல் சட்டை துவைத்துப் போட்டு வரவேண்டும் என கூறல்.

பாட்டு : பலூன் பாட்டு

1. பத்து பைசா விலையிலே

கைவேலை : காகிதத்தில் மைக்கூடு செய்து ஊதுதல்.

உள்விளையாட்டு : சின்ன முயல் தூங்குதே புல்லின் மேலே.

வெளிவிளையாட்டு : நீரில் சோப்பு நீரைக் கரைத்து அந்த நீரைக் குழல் மூலம் ஊதினால் நீர்க்குமிழ்கள் பறந்து செல்லும். சந்தோஷமாய் விளையாடுவர்கள். இலேசான பொருள் பறக்கும் எனவும். சோப்பு நுரை பறக்கும் போது சூரிய வெளிச்சத்தில் பார்த்தால் பல வண்ணங்கள் தோன்றும் என்பதைக் காட்டி விஞ்ஞான அறிவு புகட்டலாம்.

4 - வது வாரம்

பழைய பாடங்களைத் திருப்புதல்

N. B. மேலேயுள்ள உடல் உறுப்புகளைப் பற்றிய பாடத்தையும் மார்ச் மாதத்திற்கு சேர்த்துக் கொள்ளலாம்.

ஏப்ரல் : குறிப்பு :

(ஏப்ரல் - மே - முழுவருடப் பரீட்சை முடிந்து ஜுன் மாதம் புதுப்பிள்ளைகள் பள்ளியில் சேர்க்கப்படுவதால் நம் பால்வாடிப் பிள்ளைகளில் சிலர் - அதாவது 5 வயது முடிந்த (சீனியர்) பெரிய பால்வாடிப் பிள்ளைகள் ஆரம்பப் பள்ளிக்குச் செல்ல வேண்டியவர்கள். ஆதலால் எழுத, படிக்க, எண்ண இந்த இரண்டு மாதத்தில் கற்பிக்க வேண்டும். ஆதலால் கீழே உள்ள பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.)

1 - வது வாரம் உரையாடல்

எழுத்தறிவித்தல் :

அ, ஆ, எழுதிய அட்டைகளை ஒவ்வொன்றாய்க் காட்டி இது என்ன "அ" என்று சொல்ல வேண்டும். எழுத்து படம், அம்மா அணில்படம் காட்டி இது என்ன அம்மா, அணில் எனச் சொல்லும் போது "அ" எழுத்து வடிவத்தையும் அம்மா, அணில் என்ற வார்த்தை உச்சரிப்பும்

வருகிறது. பிறகு 'அ' எழுதிய அட்டையும்; அம்மா, அணில் படத்தையும் மறைத்துவிட்டு அம்மா என்று எழுதிய அட்டையைக் காட்ட வேண்டும். அவர்களாக அம்மா எனக் கூறுவதற்கு ஆசிரியை பயிற்சி அளிக்க வேண்டும்.

இவ்விதமாகவே அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, ஃ என்ற எழுத்துக்களையும் அறிமுகப்படுத்திப் புரிய வைக்க வேண்டும்.

பாட்டு : பெற்றெடுத்தவள் அம்மா

கதை : எழுத்துச் சம்பந்தப்பட்டதாகக் கூற வேண்டும்.

கைவேலை :

1. தரையில் எழுத்து எழுதி அதன் மேல் சிறுகற்களையோ முத்துக்களையோ அடுக்கச் செய்தல்,
2. உப்புத்தாளை எழுத்து வடிவத்தில் வெட்டி அதை விரலால் மேலே தொட்டுப் பார்க்கச் செய்தல்.
3. சதுர அட்டையில் 'அ' எழுதி சிறு சிறு துவாரம் போட்டு கலர் நூல் கொண்டு தைக்கச் செய்தல்.

உள்விளையாட்டு: தெரிந்த கதைகளை நடிக்கச் செய்தல்,

வெளிவிளையாட்டு:

சாக்குப் பையில் இரண்டு காலையும் விட்டுக் கொண்டு தத்தி ஓடல்.

2 வது வாரம் எண்கள் கற்பித்தல்:

நாம் எழுதிய அட்டையைக் காட்டி இது என்ன, ஒன்று என விளக்க வேண்டும். அடுத்து பூ உள்ள படத்தைக் காட்டி இதில் எத்தனை பூ உள்ளது எனக் கேட்டு ஒன்று என விளக்குதல். பிறகு இரண்டு அட்டையும் மறைத்து விட்டு ஒன்று என எழுதிய எழுத்தைக்

காட்டி ஒன்று எனப் படிக்க பயிற்சிக்க வேண்டும். இப்படியே 10 to 20 வரை பயிற்றுவிக்கலாம்.

பாட்டு: ஒன்று-இரண்டு-மூன்று-ஓடிவா-இன்று

கதை: பாடத் திட்டத்தை அனுசரித்து அமைய வேண்டும்.

கைவேலை: நெசவு அட்டை * இந்த வடிவத்தில் அட்டையை வெட்டி நூல் கொடுத்து ஒன்று விட்டு ஒன்று சுற்றச் செய்தல்.

உள்விளையாட்டு:

10 வரை. 1, 2 என எழுதிய அட்டை வேண்டும். தனித்தனியாக அதாவது

1	2	3	4	5

இப்படி நம்பர் அட்டை 10 வரை வேண்டும். ஒவ்வொருவரிடமும் ஒன்று கொடுக்க வேண்டும்.

பிள்ளைகள் கையில் நம்பர் அட்டையுடன் வட்டத்தைச் சுற்றி ஓடிவார்கள். ஆசிரியை நடுவில் நின்று கைதட்டிக் கொண்டிருப்பார். தட்டுவதை நிறுத்தியதும், பிள்ளைகள் தன் கார்டில் உள்ள நம்பரை வட்டத்தில் தேடி அதன் மேல் நிற்பார்கள். சரியான நம்பரில் நிற்காதவர்களை மறுபடியும் ஓடச்செய்து ஆசிரியை வழி காட்டியாக இருந்து பயிற்றுவிக்கவேண்டும்.

இம்மாதிரி அ. ஆவும் எழுதி விளையாடலாம்.

வெளிவிளையாட்டு: ஒவ்வொருவரையும் பத்து முறை ஓடச் செய்யலாம். ஸ்கிப்பிங்கில் ஆடச் செய்யலாம் கூட்டாளியோடு ஓடுதல்

3 - வது வாரம்

படிக்கச்செய்தல் : அம்மா, அப்பா என எழுதி படிக்கச் செய்தல், எழுதச் செய்தல். குச்சிகளைக் கொடுத்து எண்ணச் சொல்லுதல். மூன்று பாடத்தையும் பிழை யின்றி எழுத, படிக்க, எண்ணச் செய்தல்

4 - வது வாரம்

எல்லாப்பாட்டு, நடனம், கைவேலை இவைகளை திரும்ப ஞாபகப் படுத்துதல்.

மே மாதம்

பிள்ளைகளின் கைவேலைப் பொருட்கள். ஆசிரி யையின் கைவேலைப் பொருட்கள் இவைகளைப் புதுப் பித்துத் தனித்தனியாக கண்காட்சி அமைத்தல்.

பெற்றோர் கூட்டத்திற்குப் பிள்ளைகளை ஊக்குவித்து. ஊரில் தாய் மார்களைக் கலந்து திட்டமிட்டுக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்தல்.

தாய் மார்களுக்கு விளையாட்டு ஏற்பாடு செய்தல். இரண்டாவது வாரத்தில் எல்லா நிகழ்ச்சிகளையும் திறம் பட முடித்துப் பிள்ளைகளுக்கு அவரவர் கைவேலைப் பொருட்களைக் கொடுத்து நன்றி கூறி அனுப்புதல்.

3 - 4 வாரம்

ஆரம்ப பாடப் புத்தகம் கொடுத்து படம் பார்த்து- படிக்க-எழுத பழக்குதல்.

அ—அப்பா

ஆ—ஆடு—இப்படியாகவும். 1—2. எழுதவும் படிக்க வும் கற்பித்தல்.

பாட்டு, கதை, கைவேலை - விளையாட்டு எல்லாமே பாடத்தை ஒட்டியே - இருக்க வேண்டும்.

ஜுன் : 1 - வது வாரம்

பாடம் : 1. தன் சுத்தம் - பெரியோரிடம் மரியாதை இறை வணக்கம் - சிறியோரிடம் அன்பு இவைகளைப் பயிற்றல்.

உரையாடல் :

வீட்டில் அதிகாலையில் எழுந்து செய்ய வேண்டிய கடமைகள், பாலர் பள்ளிக்கு நேரம் தவறுமல் வருதல், தலைவாரி பல் தேய்த்துச் சுத்தமாக வரச் செய்தல் கேள்விகள் கேட்டுப் பதில் பேச வைத்தல். ஆசிரியை இலக்கணப் பிழையின்றி பேசிக் குழந்தைகளையும் பேசப் பழக்குதல்.

(உ - ம்) பருந்து என்பதை பெருந்து என உச்சரிப்பது வயிற்றுவலி என்பதை வவுத்து வலி எனக் கூறல் தவறுகும். ஆதலால் நாம் நல்ல முறையில் பேச வேண்டும்.

கடவுள் பக்தி :

பள்ளி வந்து சுகாதார வேலை முடிந்ததும் கடவுள் வணக்கம். எல்லோரையும் வரிசையாய் நேராய் நிமிர்ந்து கைகூப்பி கண்மூடி, சாந்தி சொல்லி கடவுள் வணக்கம் பாட பயிற்றுவித்தல்.

அடுத்து அக்கா வணக்கம் எனச் சொல்ல வேண்டும். மற்றவர்களைக் கண்டால் வணக்கம் சொல்ல வேண்டும். சிறுவரிடத்தில் அன்பு காட்ட வேண்டும். மற்றவர்களை அடித்து, கடித்து, பொருளை திருடி, பொய் சொல்லி துன்புறுத்தக் கூடாது எனப் பழக்குதல். பெயர் கூப்பிட்டதும் ஆஜர் சொல்லுதல்.

பாட்டு : இறை வணக்கப்பாடல்.
அன்பே தெய்வம் — அருளே தெய்வம்

கதை : பள்ளிச் சிறுவன் பரமசிவம் (கற்பனை கதை)

கைவேலை : சாக்பீஸ் கொடுத்து தரையில் வரையச் செய்தல்

உள் விளையாட்டு :

காலை நீட்டி காலாட்டம், கையாட்டம், கிட்ட வந்து தொட்டுப்போ எனக்கூறி ஒவ்வொருவராய் ஆசிரியையிடம் வரச் செய்தல். இப்படிச் செய்வதால் புதுப் பிள்ளைகள் பயமின்றி ஆசிரியையிடம் நெருங்கிப் பழக வாய்ப்புள்ளது.

வெளி விளையாட்டு :

குழந்தைகளை வரிசையில் நிற்க வைத்து விசில் ஊதியதும் எல்லோரும் வந்து அக்காவைத் தொட வேண்டும் எனச் சொல்லிப் பழகுதல் வளைந்து வளைந்து ஓடுதல்.

பாடம் 2. பகல்—சூரியன்—வெயில்—பகலிலுள்ள பறவை

உரையாடல் :

இப்பொழுது பகல். பகலில் வானத்தில் என்ன தெரியும் என்று கேள்வி கேட்டு சூரியன் என விளக்க வேண்டும். காலையில் சூரியன் எப்போது உதிக்கும்? நடுப்பகலில் எங்கு இருக்கும்? மாலையில் எந்தத் திசையில் மறையும்? எனக் கேட்க வேண்டும். பள்ளி கடிகாரம் வைத்து முட்களைத் திருப்பி எண்களைக் கூறி மணி பார்க்க கற்பிக்கலாம். கடிகாரம் டிக், டிக் என சத்தமிடுவதைக் காட்டலாம். சூரியனிடமிருந்து நமக்கு வெளிச்சம் கிடைக்கிறது. சூரியனின் பயன், சூரிய வெளிச்சம் இல்லாவிட்டால், பொருட்கள் காயாது; செடி, கொடி, புல், பூண்டு, மரம் இவைகள் வளரவும் சூரிய வெளிச்சம் தேவை. என்றும், பால்வாடி ஜன்னல் கதவுகளை அடைத்தவுடன் ஏன் இருட்டாகிறது என்றும் கூறி அவர்களிடம் பதில் கேட்டல். பகலில்தான் சூரியன் வெளிச்சம் கொடுக்கும். வெயில் சுடும் என்றும் தெளிவு படுத்த வேண்டும். சூரியன் உதிக்கும் திசை; மறையும் திசை கூறலாம்.

பாட்டு : சூரியனே! சூரியனே கிழக்கில் உதிக்கும் சூரியனே

கதை :

வைத்தியரும் — பாட்டியும் (காலையில் வெயிலில் காய்ந்தால் — மாலை வெயிலிலும் காய வேண்டும்) என்ற கதை.

கைவேலை :

சூரியன் வரைந்து பள்ளியில் வைத்தல், பிள்ளைகளுக்கு வெள்ளை ஜரிகைப் பேப்பரில் சூரியன் வெட்டிக் கொடுத்து நோட்டில் ஒட்டச் செய்யலாம்.

உள் விளையாட்டு:

பால் குடம் வேண்டுமா? எண்ணெக் குடம் வேண்டுமா?

வெளி விளையாட்டு :

கல்லா? மண்ணு? என்ற விளையாட்டு. நாயும் - எலும்பும்

பாடம் 3. இரவு — சந்திரன் — இருட்டு

உரையாடல் :

இரவில் தான் சந்திரன் தெரியும், இரவில் இருட்டாக இருக்கும் என்றும், சந்திரனை நன்ருகப் பார்க்கலாம் எனக் கூறல். மாதம் ஒரு நாள் முழுச்சந்திரன் தெரியும். அன்று முழு நிலா, பௌர்ணமி என்றும் கூறலாம். எல்லோரும் சேர்ந்து நிலாச் சாப்பாடு சாப்பிட ஏற்பாடு செய்யலாம். இரவில் நட்சத்திரமும் தெரியும் எனக் கூறல். இரவில் பறவைகள் பறக்காது. ஆந்தை, ஔவால், கூகைதான் பறக்கும் எனப் படம் காட்டி விளக்குதல்.

பாட்டு : வெளிச்சம் நிறைய தந்திடுவாய் வெண்ணிலாவே

கதை :

இராமனும் சந்திரனும் (இராமாயணத்தில் இராமர் குழந்தைப் பருவத்தில் சந்திரனைக் கேட்டு அழல்.)

கைவேலை :

சந்திரன் வரைந்து பள்ளியில் வைத்தல் பிள்ளைகளை நோட்டில் வரையச் செய்தல்.

உள் விளையாட்டு :

உபகரணங்கள் கொடுத்தும், வெட்டுக் கட்டைகள், பாசிகள் கொடுத்து உருவம் அமைக்கச் செய்தல்.

வெளி விளையாட்டு :

பந்து, சைக்கிள் கொடுத்து விளையாடுதல்

2 - வது வாரம் காட்டுப் பறவைகள் :

பாடம் 1. மயில் :

மயில் படத்தைக் காட்டி யார். யார் பார்த்திருக்கிறீர்கள் இதோ பாருங்கள். இது மயில் என்று சொல்ல வேண்டும். மயில் காட்டில், கோவில்களில் இருக்கும். மயில் தோகை அழகாயிருக்கும் எனக்கூறி மயில் இறகைக் காட்டுதல். சரஸ்வதி, முருகன், படங்களில் மயில் இருப்பதைச் சொல்லலாம். தேசப்பறவை மயில் எனக் கூறலாம்.

பாட்டு : மயிலே மயிலே ஆடாயோ

கதை: விஜயன் என்ற மயில்.

கைவேலை: இறகுகள் சேகரித்தல். சார்ட் போடுதல்.

உள் விளையாட்டு:

பல பறவைகள் படங்களைப் போட்டு, ஜோடிச் சேர்க்கச் செய்தல்.

வெளிவிளையாட்டு:

பாம்பு விளையாட்டு, கால் தாண்டிக் குதித்தல்.

உரையாடல் 2-வது பாடம் - காகம்

காக்கா என்றாலே பிள்ளைகளுக்கு ஆனந்தம், காக்கா எப்படி கத்தும் என்றும், அதிகாலையில் காக்கா குளிக்கும். சாப்பிடும்போது தன் இனத்தைக் கத்தி அழைக்கும் கொண்டுதான் சாப்பிடும் என்றும் கூறி பகிர்ந்துண்ணும் பழக்கத்தை சிறுவர்களுக்கு விளக்க வேண்டும்,

பாட்டு: காக்கா காக்கா கூடெங்கே,

கதை: தாகம் தீர்ந்த காகம். நாடகம்.

கைவேலை

தேங்காய் நார், குச்சி, நூல் சேகரித்து வரச் செய்து அவர்களைக் கொண்டே பிரஷ் செய்யச் சொல்லுதல்.

உள்விளையாட்டு: உற்று நோக்கும் விளையாட்டு.

வெளிவிளையாட்டு: வெற்றிலைக் கட்டு பிடியாதே.

3 வது பாடம்—ஆந்தை:

ஆந்தையின் படத்தைக் காட்டி அது எப்படிக்கத்தும் எப்பொழுது வெளியில் வரும் என்று கேள்விக் கேட்டு பதிலும் கேட்டுப் பழக்குதல்,

பாட்டு: ஆந்தையாருக்குக் கல்யாணம்.

கதை: ஆந்தையார் கல்யாணத்தையே கதையாகச் சொல்லுதல்,

கைவேலை: சிறு சிறு படங்கள் வெட்டிக் கொடுத்து நோட்டில் ஒட்டச் செய்தல்.

ஆந்தை படம் வரைந்து பாட்டு எழுதி பள்ளியில் சார்ட் போட வேண்டும்.

உள்விளையாட்டு : விளையாட்டுக் கருவிக்கொடுத்து விளையாடச் சொல்லுதல்.

வெளிவிளையாட்டு : சறுக்கு, மணல் தொட்டி ஆகியவைகளில் விளையாடுதல்—தலைவரை பின்பற்றச்செய்தல்

3-வதுவாரம் : 1 வதுபாடம் — வீட்டுப்பறவைகள்

உரையாடல் : சேவல் :

கோழி என்றாலே பிடித்தமான, அறிமுகமான பறவை. வீட்டில் வளர்க்கப்படும் பறவை. ஆதலால் யார்வீட்டில் கோழி வளர்க்கிறீர்கள் என்றாலே எல்லாம் எங்கள் வீட்டில் என்று சொல்வார்கள். சேவல் அதிகாலையில் எழுந்து கூவும். சேவலும், கோழியும் தன்குஞ்சுகளை மிகவும் ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கும். பருந்து குஞ்சுகளைத் தூக்காதபடி பாதுகாக்கும் என்றும், என்ன தீனி போடுவோம்? கோழி 1 நாளைக்கு 1 முட்டைதான் இடும் என்றும் முட்டைசத்துள்ளது எனக்கூற வேண்டும். கோழி வளர்ப்பதால் ஓர் குடும்பம் பிழைக்க ஏதுவாகும். முட்டையை அடைவைப்பதையும் சொல்லவேண்டும். முட்டையை நேரில் காட்டவேண்டும்.

பாட்டு : கோழி கோழி வா வா வா

கதை : மயிலும் சேவலும்

கைவேலை : விரல் ஓவியம். இறகு சேகரித்தல்.

உள்விளையாட்டு : பொட்டலம் கடத்தல்.

வெளிவிளையாட்டு : ஸ்க்கிப்பிங் ஆடுதல், நொண்டி அடித்தல்.

பாடம் 2. பச்சைக்கிளி :
உரையாடல் :

பச்சைக்கிளியை வீட்டில் வளர்க்கலாம். எனச்சொல்லி - கிளி என்ன சாப்பிடும்? என்றும், நாம் சொன்னதையே, கிளியும் சொல்லும் எனவும், "அக்கா" எனச்சொல்லும் என்றும் கூறலாம். அதன் அலகு சிகப்பு நிறம் என்று நிறத்தையும் சொல்லலாம்.

பாட்டு : பச்சைகிளியே பறந்து வருவாயா

கதை : இரண்டு பச்சைக்கிளியும், முனிவரும்.

கைவேலை : துணியில் கிளி தைத்து பஞ்சு அடைத்து வைத்தல். கிளி முகம் வரைந்து (முகமூடி) கதை சொல்லத் தயாரித்தல்.

உள் விளையாட்டு : காக்கா பற பற — கிளி பற பற
வெளி விளையாட்டு :

அடுத்த நாள் கைவேலை செய்வதற்கு வேண்டிய (கொலாஜ் ஓர்க்) வளையல் துண்டு, கலர் காகிதம், சோடா புட்டி மூடி இவைகளைச் சேகரிக்கச் சொல்லுதல்.

3 வது பாடம் : புறு

புறுப்படத்தைக் காட்டி விளக்கலாம். சில பிள்ளை களுக்குப் புறு தெரியாது. ஆதலால் தெளிவான படத்தைக் காட்டி தெளிவாகச் சொல்லவேண்டும். புறுவின் பழக்கம், ஆகாரம், "கும்" "கும்" எனக் கத்தும், கோவில்களில் அதிகம் இருக்கும், வீட்டிலும் வளர்க்கலாம் என விளக்க மாய்ச் சொல்ல வேண்டும்.

பாட்டு : புறு பார் — புறு பார். வெள்ளையான புறு பார்.
கதை : புறு சம்பந்தப்பட்ட கற்பனைக் கதை.
கைவேலை :

இதுவரை சேகரித்த இறகுகளை சார்ட்டில் இணைத்தல் இறகுகளில் வர்ணம் தீட்டி, விசிறி, பட்டுப்பூச்சி செய்தல்.

உள் விளையாட்டு :

பறவைகளைப் போல் கத்துதல், பறந்து வருதல். மயில் போல் ஆடி வருதல்.

வெளிவிளையாட்டு : காழிக்குஞ்சும் நரியும்.

4 வது வாரம் - முன்பாடங்களைத் திருப்புதல்

மாதம் - ஜூலை—பாடம். மண்—கற்கள் தண்ணீர்

1 வது வாரம்

பாடம் 1 : செங்கற்கள்

உரையாடல் :

கற்களின் உபயோகம் பற்றிக் கூறுதல். கற்களின் வகைகள், செங்கற்காளவாசலுக்கு அழைத்துப் போய் காட்டுதல், நாம் இருக்கும் வீடு பள்ளிக் கட்டிடம் கட்ட, கல் உபயோகம் எனக் கூறுதல். கல்லை இடித்து கோலப்பொடி செய்வதைச் சொல்லலாம். கல் எப்படி செய்யப்படுகிறது எனக் கூறலாம்,

பாட்டு : கோலம் பார் — கோலம் பார்.

கதை : கல்லைச் சிற்பிகள் செதுக்கிச் சாமி சிலை செய்வதைச் சொல்லலாம்.

உள் விளையாட்டு : சிறகொடிந்த குருவி கதை விளையாட்டு

வெளி விளையாட்டு :

பள்ளியிலுள்ள பொருட்களை, விளையாட்டுச்சாமான். உணவு பொருள், பாத்திரங்கள் இவைகளை இடம் மாற்றி சுத்தப்படுத்தி வைத்தல்.

உரையாடல்

பாடம் 2. மண் :

மண் வகைகள், மண்ணின் உபயோகம், மண் எங்கெல்லாம் கிடைக்கும்? மண்ணில் கிடைக்கும் பொருள், மண்ணி

லுள்ள புழுப்பூச்சிகள் முதலியவைகளைப்பற்றிக் கூறலாம். மண்ணின் தன்மை தண்ணீரை உறிஞ்சும் எனக் கூறலாம். மண்ணில் எத்தனை வகையுண்டு எனக் கேட்கலாம்.

பாட்டு : "நந்தவனத்தில் ஓர் ஆண்டி"

கதை : காகமும், நரியும் — நாடகம் நடித்தல்.

கை வேலை :

பலவகை மணல் சேகரித்துப் பாட்டிலில் போட்டு சார்ட் தைத்து வைத்தல், மணல் ஒட்டுதல்.

உள் விளையாட்டு : ஒருப்பத்தி — திருப்பத்தி

வெளி விளையாட்டு :

ஓடைக்குச் சென்று பல உருவமுள்ள கற்களைச் சேகரித்து வருதல்.

பாடம் 3. தண்ணீர்

உரையாடல் :

தண்ணீர் எப்படிக் கிடைக்கிறது என்று கேட்டு விளக்குதல். தண்ணீர் எங்கெல்லாம் கிடைக்கிறது, மழை பெய்வதால் குளம், ஆறு, கிணறு, வாய்க்கால் இவை மூலமாய்க் கிடைக்கிறது. பூமியிலிருந்து குழாய் மூலமாகவும் கிடைக்கிறது என்றும் கூறலாம். உப்புத்தண்ணீர் — குடிக்கும் தண்ணீர். உதாரணம் காட்டி, தண்ணீர் பருகச் செய்து ருசி வித்தியாசத்தைப் பற்றிச் சொல்லலாம். தண்ணீரின் உபயோகம் — நாம் உயிர் வாழத் தண்ணீர் அவசியம். உலகிலுள்ள தாவரம் சகல ஜீவராசிகளுக்கும் உயிர் வாழத் தண்ணீர் அவசியம் எனக் கூறுதல். குளித்து, துவைப்பதற்கும் அவசியம்.

பாட்டு : காகம் ஒன்று காட்டிலே - தாகத்தாலலைந்தது.

கதை : எலியும், தவளையும்

கைவேலை : குச்சிப் பொம்மை செய்தல்.

உள் விளையாட்டு.

செப்புசெட், மண், தண்ணீர் வைத்துச் சமைத்து விளையாடுதல்.

வெளி விளையாட்டு :

ஓடிவிளையாடுதல் குறித்த இடத்தை விட்டு வெளியே சென்றால் விசில் ஊதி வரச் செய்தல்.

2 வது வாரம் : குடும்பம்

பாடம் 1 : அப்பா

உரையாடல் :

வீட்டில் குடும்பத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கை உடன் பிறந்தோர் எத்தனைப் பேர், என்ன செய்கிறார்கள், எங்கிருக்கிறார்கள், என்ன மாதிரி உணவு உட்கொள்வார்கள் எனக் கேட்டல். சில குழந்தைகளுக்குப் பெற்றோரில் யாராவது ஒருவர் இல்லாதிருக்கலாம். முக்கியமாய்த் தாய் இல்லாத குழந்தையைப் புரிந்து, அதன் மனம் நோகாமல் நாம் பேச வேண்டும். பெற்றோர் பெயர், தன் பெயர், ஊர் பெயர், பள்ளியின் பெயர் கூறப் பழக்குதல்.

பாட்டு : அப்பா என்னை இன்று — ஆர்வத்தோடு அழைத்து

கதை : கர்வம் கொண்ட காகம்

கைவேலை :

சிகரெட் பெட்டியில் கோமாளிப் பொம்மை செய்தல், காகிதக் கூழ் தயாரித்து பொம்மலாட்டப் பொம்மை செய்து வைத்தல்.

உள் விளையாட்டு : சிறு, சிறு கதைகளுக்கு நாடகம் நடிக்கப் பழக்குதல்.

வெளி விளையாட்டு : சடுகுடு விளையாடக் கற்பித்தல்

பாடம் 2 : கிழமை — மாதம் — வருடம்

உரையாடல் :

இன்று என்ன கிழமை என்று ஆரம்பித்து கிழமைகள் வாரத்திற்கு ஏழு நாள், 4 வாரம் 1 மாதம், 12 மாதம் 1 வருடம் என விளக்க வேண்டும். தடையின்றிக் கிழமையின் பெயர் சொல்லப் பழக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமை விடு முறை எத்தனை நாட்களுக்கு ஒருமுறை வருகிறது எனக் கூறுதல். மாதங்களின் பெயர் கற்றுக் கொடுக்கலாம்.

பாட்டு : ஞாயிற்றுக்கிழமை நன்கு பதார்த்தம்

கதை : எறும்பும் யானையும்

கைவேலை : பிட்பேஸ்ட்

(உ.ம்.) யானை வரைந்து, நம்மிடமுள்ள பழைய புத்தகத் திலிருந்து கருப்பு பேப்பரைச் சிறு சிறு துண்டாகக் கிழித்து போட்டு ஒட்டச் செய்தல்.

உள் விளையாட்டு: உற்று நோக்கும் விளையாட்டு.

ஐந்து பொருட்களை 1. பேனு, 2. பென்சில், 3. பூட்டு, 4. சாவி, 5. சாக்பீஸ் என்று பெயர்களைச் சொல்லி வைக்க வேண்டும். பின் ஓர் பிள்ளையை வெளியில் போகச் சொல்லி, சிலப் பொருட்களை இடம் மாற்றி வைக்கவேண்டும். பிறகு வெளியில் போனபிள்ளையைக் கூப்பிட்டு, பொருட்களைப் பார்த்து முன்போல் வைக்கச் சொல்ல வேண்டும். ஆசிரியை முதலில் வழிக்காட்ட வேண்டும். இதனுல் பிள்ளைகளுக்கு உற்றுநோக்கும் சக்தியும், ஞாபக சக்தியும் வளரும்.

வெளி விளையாட்டு :

அருகிலுள்ள தோட்டத்திற்கோ, ஓடைக்கோ உல்லாசப் பயணம் அழைத்துச் செல்லல். சிற்றுண்டியும் உடன் எடுத்துப் போய், விளையாடினதும் சிற்றுண்டி வழங்கி, பள்ளிக்கு அழைத்து வந்து, தன் சுத்தம் முடித்து, நன்றி கூறி வீட்டிற்கு அனுப்புதல்.

பாடம் 3. வாத்தியக்கருவிகள்

உரையாடல் :

பள்ளியில் உள்ள வாத்தியங்களைக் காட்டி, பெயர்ச் சொல்லி எப்படி உபயோகிப்பது எனக்கூற வேண்டும். சப்தம் எப்படி உண்டாகிறது, வாத்தியம் எத்தனை வகை, எப்படிச் செய்கிறார்கள், வாத்தியம் எந்த சமயத்தில், எங்கெல்லாம் வாசிக்கிறார்கள் என்று விளக்க வேண்டும்.

வகைகள் 3.

1. தாள வாத்தியம் கஞ்சிரா, மத்தளம், தாளம், ஜலங்கை, முக்கோணம், சப்ளாக்கட்டை.

2. ராக வாத்தியம் : ஹார்மோன்யம், புல்லாங்குழல், மௌத் ஆர்கன், சிதார், பிடில், வீணை, சைலபோன் பிள்ளைகளுக்கு புரியும் வகையில், எளியநடையில் கூற வேண்டும்.

பாட்டு : டம் டம் டம் டம் டமாரமாம்.

கதை : வழக்காடிய பூனைகள்.

கைவேலை : கிலுக்கு, பிடில் செய்தல்.

உள் விளையாட்டு : தாளத்துடன் சீர்நடை.

வெளி விளையாட்டு : பிடித்த வாத்தியம் எடுத்து வாசித்தல்

3 - வது வாரம் உரையாடல் :

பாடம் 1. கிராமம் — கல்விக்கூடம் :

ஊர்ப்பெயர், கிராம அமைப்புப்பற்றி சொல்லுதல். கிராமத்தின் எப்பகுதியில் நம் பால்வாடி அமைந்துள்ளது எனக்கூறல். கிராமத்தின் படம் வரைந்து அதில் பால்வாடி இருக்கும் இடம், ஆசிரியர், மாணவர்கள் வீடு இருக்கும் திசைகளைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். மற்றும் ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி இவைகளைப்பற்றியும் கூறல். பள்ளிப்படிப்பின் அவசியத்தை உணரவும், படிப்பில்

ஆர்வத்தை தூண்டும் வகையில் கூறல் வேண்டும். ஆரம்பத்திலே படம் வரைந்து திசைகளைக் காட்டிப் பயிற்றுவித்தால் நம் சிறுர்கள் எதிர்காலத்தில் பள்ளிப் படிப்பில் பிரகாசிப்பார்கள்.

பாட்டு: காலையில் எழுவேன் — கடவுளைத் தொழுவேன்,

கதை: ஒற்றுமையே வழி·

கைவேலை: கிராமப்படம் வரைந்து பள்ளியில் வைத்தல்.

உள்விளையாட்டு: இழுத்து அரை. மசால் அரை.

வெளிவிளையாட்டு:

தோட்ட வேலை. விதை போட தோட்டத்தைக் கொத்திப் போடல்.

பாடம் 2: போக்குவரத்து வசதி வைத்திய வசதி

உரையாடல்

கிராமத்திலிருந்து நாம் எப்படி நகரத்திற்குப் போகிறேம் — என்று கேட்டு, பஸ் மூலமாகப் போவோம் மாட்டு வண்டி, வாடகைக்கார், சைக்கிள் இதன் மூலம் போகலாம். ரோடு வசதியுள்ளது எனவும் விளக்கலாம். வியாதியினல் நாம் ஆஸ்பத்திரிக்குப் போகிறேமல்லவா? நம் ஊரில் ஆஸ்பத்திரி வசதி இருக்கிறது ஜுரம் வந்தால் உடனே ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும். சிரங்கு வந்தாலும் உடனே ஆஸ்பத்திரிக்குப் போய் டாக்டர் சொல்படி மருந்து சாப்பிடவேண்டும். மருந்து, மாத்திரைகள் சாப்பிட, அழாமலும், வீசிப்போடாமலும் முறைப்படிச் சாப்பிடவேண்டும் என கூறவேண்டும்.

பாட்டு :

தங்கையே பார் தங்கையே பார்
சைக்கிள்வண்டி இதுவே பார்

கதை: வேடனும் — புருவும்.

கைவேலை: அட்டையில் தைத்தல் — நெசவு அட்டை.

உள் விளையாட்டு:

பாசிகள் கோர்த்தல், குச்சிகள் சதுர, நீண்ட கட்டைகள் கொடுத்து உருவம் அமைத்தல்.

வெளிவிளையாட்டு:

பந்து உதைந்து, sandpitல் தவ்வி. குதித்து விளையாடுதல்

பாடம் 3. குடி நீர் சுகாதார வசதி

உரையாடல் :

நாம் தண்ணீர் எங்கிருந்து எடுக்கிறோம்? என்று கேட்டு விளக்குதல். குழாய் கிணறு இவற்றிலிருந்து தண்ணீர் கிடைக்கிறது. குழாய் வசதி யார் செய்தார்கள்? பஞ்சாயத்திலிருந்து, என எளியமுறையில் சொல்லி அவர்களுக்குப் புரிய வைத்தல். மேலும் குழாய் மூலம் வரும் தண்ணீர் சுத்தமானது, தண்ணீரைக் கொதிக்க வைத்து வடிகட்டிதான் குடிக்க வேண்டும் எனவும் கூறலாம்.

மேலும் நம் கிராமத்தில் வீட்டின் பின்புறமுள்ள தொட்டியிலிருக்கும் கழிவு தண்ணீர், கக்கூஸ், தெருக் குப்பை இவைகளெல்லாம் கூட நகரசுத்தி தொழிலாளர் அப்புறப்படுத்துவதையும் விளக்குதல். சிறு வயதிலேயே, இதெல்லாம் சிறுகச் சிறுக அறிய வேண்டும்.

பாட்டு : அசைந்தாடம்மா

கதை : ஆடும்—பாலமும்

கைவேலை :

புளிய முத்து அல்லது முள் முருங்கை விதை இவைகளைச் சேகரித்து, கெட்டியான துணியில் சிறு பை தைத்து அதில் முத்துக்களைப் போட்டு, மூடித்தைத்து விட வேண்டும். அதை வீசி எறிந்து பிடித்தால் சத்தம் கேட்கும். இது சிறுவர்களுக்கு விளையாடக் கொடுக்கலாம்.

உள்விளையாட்டு : முத்துப்பை எறிந்து பிடித்தல்.

வெளிவிளையாட்டு : மாடு, யானை இவைகளைப் போல் நடந்து, கத்தி, முட்டி விளையாடுதல்.

4 வது வாரம் : முன் பாடம் திருப்புதல்

ஆகஸ்ட் மாதம்

1 வது வாரம் : உரையாடல்

பாடம் 1. விதைமுளைத்தல் :

இம் மாதம் விதைப் போடப்படுவதால் விதைகள் சேகரித்து வரச் செய்து, அவர்கள் எதிரில் கண்ணுடி டம்ளரில் விதை முளைக்கப் போடுதல். விதை முளைக்க என்னவெல்லாம் அவசியம் என்று விளக்குதல். மண், தண்ணீர், காற்று, சூரிய வெளிச்சம் என்று விளக்குதல். தோட்டத்தில் விதை போடுதல். விதை போடுமுன் தோட்டத்திற்கு எருப் போட வேண்டும் எனவும் விளக்குதல்.

பாட்டு : தோட்டத்து மண்ணிலே

கதை : முனியம்மாள் கதை, காய்கறி சாப்பிடும் அவசியம்.

கைவேலை :

இலை சேகரித்தல், இலைச்சார்ட் செய்து பள்ளியில் வைத்தல், பிள்ளைகளுக்கு ஒட்டக் கொடுத்தல்.

உள்விளையாட்டு : பூசணிக்காய் விளையாட்டு.

வெளிவிளையாட்டு : "சூ - பிடி" விளையாட்டு and ஓநாயே இப்பொழுது நேரமென்ன?

பாடம் 2.

உரையாடல் :

கிளாஸ் டம்ளரை எடுத்துப் பார்த்தால் 3-ம் நாள் குருத்து வரும். தினமும் காட்டிவிட்டு, வெளிச்சம் வரும் இடத்தில் வைப்பது, பிறகு இலை வேர் விட்டதும், அதன்

பாகங்களைப்பற்றி விவரிக்க வேண்டும். வேர்மூலமாக ஆகாரம் உட்கொள்ளுகிறது என்றும், உறிஞ்சும் தன்மை யுள்ளது எனவும் கூறுதல். தண்டு, இலை பாகம் சொல்லுதல். பின், பூ பூத்து, பிஞ்சு, காய் வரும் என விளக்குதல். ஒருவார மானதும் எல்லாப் பிள்ளைகளும் பார்த்ததும், அதையும் எடுத்து தோட்டத்தில் வைத்து விடுதல்.

பாட்டு : கத்தரி, மிளகாய்

கதை : வீட்டுத் தோட்டம் போடுதல். படங்கள் காட்டி பெயர்களைச் சொல்லச் செய்தல்.

கைவேலை :

விதை முளைத்தல், பாகங்கள் வரைந்து சார்ட் செய்தல், பிள்ளைகள் நோட்டில் இலை ஒட்டுதல்.

உள்விளையாட்டு : ஜலசா விளையாட்டு

வெளிவிளையாட்டு : பந்து, குதிரைவிளையாட்டு and குதித்து நில்.

பாடம் 3. ஆடிப்பண்டிகை

உரையாடல் ;

தலைஆடிக்கு என்ன செய்வோம் எனக்கேட்டு விளக்குதல். வீட்டில் சுத்தமாய்த் தலைகுளித்து விசேஷ சமையல் செய்வோம். கோவிலுக்குப் போவோம் யாருடன் செல்வோம்? சென்று என்ன செய்வோம்? என விளக்குதல். கோவிலுக்கும் அழைத்துப் போகலாம். சுவாமிக்கு பூஜை செய்ய எந்தெந்த பொருட்கள் உபயோகப்படும் என்றும், தேங்காய், பூ, பழம், சூடம் இவைகளைப் பயன்படுத்துவோம் எனவும் விளக்குதல்.

பாட்டு : வெள்ளை முயல் ஓடுது பார் சின்னப்பாப்பா.

கதை : துருவன் கதை.

கைவேலை : காகிதம் மடித்தல்.

உள்விளையாட்டு : அத்திலி, பித்திலி, மக்கான், சொக்கான்
வெளி விளையாட்டு : கண் கட்டிப் பிடித்தல்.

2 - வது வாரம்

பாடம் 1. சுதந்திரதினம்

சுதந்திரம் கிடைத்தது பற்றிக் கூறி விளக்குதல். ஏன் நாம் சந்தோஷமாய்க் கொண்டாடுகிறோம் என விளக்குதல். கொடி ஏற்றல். சுதந்திரத்திற்கு முன் நம் நாடு எப்படி இருந்தது எனக் கூறுதல். எளிய முறையில் சொல்லி விளக்குதல். இன்று சுதந்திரதினம். காந்தி தாத்தாவினால் சுதந்திரம் கிடைத்தது என்று சொல்லிப் புரிய வைத்தாலே பிள்ளைகளுக்குப் போதுமானது.

பாட்டு : தாயின் மணிக்கொடி பாரீர்.

கதை :

சுதந்திரம் கிடைத்ததைப் பற்றியும், காந்தி தாத்தா செயலைப் பற்றியும்.

கைவேலை : கொடி வரைந்து அதை வர்ணம் தீட்டுதல்.

உள்விளையாட்டு: } கொடி ஏற்ற இடம், பொருள்
வெளி விளையாட்டு: } தயாரித்தல், தோரணம் ஒட்டுதல்.

பாடம் 2. தேசியக்கொடி. அதன் நிறங்கள்

உரையாடல் :

தேசியக் கொடியைக் காட்டி, அதன் நிறங்களையும், காவி, வெள்ளை, பச்சை இவைகளைப்பற்றியும் விவரித்தல். கொடி ஏற்றும் போது எந்தக் கலர் மேலே இருக்க வேண்டும் எனவும் சொல்லலாம். வாரம் முதல் நாளான திங்களன்று கொடி ஏற்றலாம்.

பாட்டு: காந்திஜி பாட்டு - கைராட்டைத் தாத்தா

கதை: கலா நிகழ்ச்சி தயார் செய்தல். கும்மி கோலாட்டம்,

கைவேலை:

கலர் பேப்பர் கொடுத்து, கொடி ஒட்டுதல். பள்ளி அலங்கரித்தல்.

உள்விளையாட்டு:

ஓர் குழு பொம்மை வீட்டில் விளையாடுதல் மற்ற குழு பிள்ளைகள் படப்புத்தகம் பார்த்தல்.

வெளிவிளையாட்டு: தோட்டவேலை, தண்ணீர் விடுதல்

உரையாடல்:

பாடம் 3. ரம்ஜான் பண்டிகை,

ரம்ஜான் பண்டிகை, முகமதியர்களுக்கு ஓர் முக்கியமான பண்டிகை. அவர்கள் பகலெல்லாம் நோன்பு இருந்து இரவில்தான் சாப்பிடுவார்கள். அமாவாசைக் கழிந்த மூன்றும் நாள் பிறைச் சந்திரனை தரிசித்த பிறகு தான் பண்டிகை கொண்டாடுவார்கள் என விளக்குதல்.

பாட்டு: அல்லா - பரம பிதா.

கதை: கடவுள் ஒருவர் என கதை மூலம் விளக்குதல்.

கைவேலை: சோடா மூடியில் ஜாலரா செய்தல்.

உள்விளையாட்டு: படகோட்டி விளையாட்டு.

வெளிவிளையாட்டு:

செயல் மாற்று - தலைவரைக் கண்டுபிடி.

3 வது வாரம்

உரையாடல்: பறங்கி-பூசணி

பாடம் 1. காய் வகைகள்

காய்களின் படத்தைக் காட்டி பெயர் சொல்லி காய்களின் வகைகள் அதாவது கொடியில் காய்ப்பவை

செடியில் காய்ப்பவை, மரத்தில் காய்ப்பவை, பந்தலில் படருபவை எனச்சொல்லல். பறங்கி-பூசணி பள்ளியிலோ அல்லது பக்கத்து வீட்டில் அல்லது தோட்டத்திலிருந்தால் அழைத்துப்போய்க் காட்டலாம். பறங்கிப் பூவை மார்கழி மாதம் வாசலில் கோலம் போட்டு அதில் வைப்பதை விளக்கலாம். காய்களின் விளைச்சலால் என்ன லாபம்? வீட்டுத்தோட்டம், பள்ளியில் தோட்டம் போடுதல் இவைகளைப் பற்றி விளக்குதல்.

பாட்டு: பறங்கிக் காயைப் பறித்து.

கதை: சத்துணவும் முனியம்மாவும்.

கைவேலை: காய்கள் வரைந்து ஏற்ற கலர் தீட்டல்.

உள்விளையாட்டு: பூசணிக்காய் பறித்தல்.

வெளிவிளையாட்டு: சைக்கிள், பந்து, குதிரை விளையாட்டு. எண்ணிக்கை சொல்லல்.

பாடம் 2. கத்தரி, வெண்டை

உரையாடல்

படத்தைக் காட்டி இவைகள் எப்படிக் காய்க்கும்? நேற்று, கொடியில் காய்க்கும் காய் பார்த்தோம். இன்று செடியில் காய்க்கும் காய்களைப் பார்ப்போம். வெண்டை, கத்தரி, கொத்தவரங்காய் இவைகள். தோட்டத்திற்கு அழைத்துப் போய்க்காட்ட வேண்டும். கத்தரிப்பூ, வெண்டைப்பூ இவைகளின் கலர் வித்தியாசம் அமைப்பு காட்டலாம். வெண்டைக்காய் சத்துள்ளது என விளக்கலாம். பந்தலில், புடலை, அவரை காய்க்கும் என விளக்கலாம். இவைகளையும் நேரில் காட்டலாம்.

பாட்டு: கத்தரி, வெண்டை, புடலங்காய்.

கதை: நரியும் காகமும்.

கைவேலை:

காய்கள் படங்களைக் கலந்து போட்டு பெயர் சொல்லி ஜோடி ஜோடியாக எடுத்தல்.

உள்விளையாட்டு: தங்கையே — தங்கப்பா என்படகு.

வெளிவிளையாட்டு: ஊஞ்சல் — கயறு தாண்டுதல் and சைகை விளையாட்டு.

பாடம் 3. கீரைவகைகள்

உரையாடல்

கீரை வகைகளைச் சொல்லி விளக்குதல். முருங்கைக் கீரை, ஆத்திக்கீரை மரத்திலுள்ளவை, முருங்கைக்காய் சாப்பிடலாம். சத்துள்ளது. தண்டுக்கீரை, அரைக்கீரை, முளைக்கீரை — செடிவகை. பருப்புக்கீரை, பசலிக்கீரை படரும் — கொடிவகை என எளியமுறையில் விளக்குதல். கீரையில் A, B. C. சத்துள்ளது. கண் பார்வைக்கு நல்லது என விளக்குதல்.

பாட்டு: கீரை வாங்குங்கள் அம்மம்மா கீரைவாங்குகள்

கதை:

1. கீரையின் மகத்துவத்தை அறியாதவர்கள் கீரை வாங்கவில்லை. ஆதலால் விசனம் அடைந்த கீரை வருத்தத்துடன் பாடுகிறது.

2. மருத்துவப்பெரியாரின் அறிவுரைக்கேட்டு ஜனங்கள் கீரைவாங்குகிறார்கள்.

3. சந்தோஷமான கீரை பாடுகிறது. இதைக் கதையாய் விவரித்துச் சொல்லல்.

உள்விளையாட்டு: கீரையை இடுப்பில் கட்டி ஓர்பெண் மருத்துவ வேடம் பூண்ட ஓர்பையன். கீரையின் மகத்துவம் என்ற நாடகம் நடித்தல்.

வெளிவிளையாட்டு : பள்ளியில் முருங்கை மரம் நடுதல்.

4 வது வாரம் முதல் 3 வாரபாடங்களைத் திருப்புதல்.

மாதம் — செப்டம்பர். 1 வது வாரம்

பாடம் 1. கிருஷ்ணஜயந்தி

உரையாடல் :

கிருஷ்ணர் படத்தைக் காட்டி இது என்ன படம் என்று கேட்டால் ரொம்ப சந்தோஷமாக சாமி என்பார்கள் இது கிருஷ்ணர். உங்களுக்கு அம்மா பிறந்த நாளான்று புதுச் சட்டை, பாயசம் தருவார்களல்லவா? அது போல் இன்று நாமும் கிருஷ்ணன் பிறப்பைக் கொண்டாடுவோம். என்று கூறி எளிய முறையில் கொண்டாடுதல்

பாட்டு : கண்ணன் ஊதும் கீதம்.

கதை : கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடைபிடித்த கதை.

உள்விளையாட்டு : விளையாட்டுக்கருவிகளைக் கொடுத்து அடுக்கச் செய்தல்.

கைவேலை : உருளைக்கிழங்கில் வடிவம் வெட்டி அச்சுக் குத்துதல்.

வெளிவிளையாட்டு : கயறு தாண்டுதல் பந்து போடுதல்.

பாடம் 2. விநாயகர் சதுர்த்தி.

உரையாடல்.

விநாயகர் படத்தைக்காட்டி இன்று, இந்த சாமி பிறந்த நாள். இந்தச் சாமியைப் பார்த்தால் எப்படித் தெரிகிறது? யானை மாதிரி இருக்கிறதல்லவா! எனக்கேட்டு விளக்குதல். எத்தனை, துதிக்கை இவைகளைக் காட்டி கணக்கும் கற்பிக் கலாம்.

பாட்டு : தொந்திக் கணபதி வா-வா-வா

கதை : விநாயகருக்கு யானை முகம் வந்த கதை

கைவேலை : களிமண்ணில் பொம்மை செய்தல்

உள்விளையாட்டு : சின்ன முயல் தூங்குதே

வெளிவிளையாட்டு : மலைமேலே தீ எரியுது — பிள்ளைகளே ஓடுங்கள்

பாடம் 3. ஆலயங்கள்.

உரையாடல் :

சென்ற வாரம் சாமிகளைப் பற்றி படித்தோமல்லவா? சாமி இருக்கும் இடத்திற்குப் பெயர், ஆலயம், கோவில் என ஆரம்பித்து இந்துக் கோவில், மாதா கோவில் (சர்ச்), பள்ளி வாசல் என்று மூன்று ஆலயங்களைப்பற்றியும் எளிய நடையில் மனதில் படும்படிக் கூறுதல். இவைகளைப்பற்றிச் சொல்லும்போது, சிறுர்கள் மனதில் மதவேறுபாடு ஏற்படாமல் நளினமான முறையில் சொல்ல வேண்டும். கோவில்களுக்கும் அழைத்துப் போகலாம்.

பாட்டு : கடவுள் ஒருவர் இருக்கின்ருர்.

கதை : கடவுள் ஒருவர் என்ற முறையில் கற்பனை கதை சொல்ல வேண்டும்.

கைவேலை : வர்ணம் தெளித்தல்

உள்விளையாட்டு : அட்டையில் கோவில், சர்ச் செய்து பள்ளியில் வைத்தல்

வெளிவிளையாட்டு : தோட்டவேலை

2வது வாரம் பாடம் — நீர்வாழ் பிராணிகள்

பாடம் 1, மீன்.

உரையாடல் :

குளத்தில் தண்ணீருக்குள் என்ன என்ன இருக்கும் எனக் கேட்டு, மீன் இருப்பதை விளக்குதல். மீன் படம் காட்ட

வேண்டும். மீன் வகைகள், ஆகாரம், அது குஞ்சு பொரிக்கும் விதம், மீன் வளர்ச்சி சொல்ல வேண்டும். மீன் சாப்பிடுவ தால் உள்ள நன்மை, மீன் எண்ணெ, மீன் எண்ணெ மாத்திரை சத்துள்ளது எனக்கூற வேண்டும். கிணற்றில் மீன் இருப்பதால் தண்ணீர் சுத்தமாயிருக்கும் எனக்கூறலாம்.

பாட்டு : மீன் தண்ணீரின் ராணியாம்.

கதை : கலர் மீனும் கமலாவும் (கற்பனை)

கைவேலை : துணியில் மீன் தைத்து பஞ்சு அடைத்தல்.

உள் விளையாட்டு : உற்று நோக்கல்.

வெளி விளையாட்டு : பந்து எறிதல், கயிறு தாண்டுதல்.

பாடம் 2. முதலை, நண்டு.

உரையாடல் :

முதலை, நண்டு படங்களைக் காட்டி அதன் உருவம், ஆகாரம் விவரித்தல். முதலை தண்ணீரில் இருக்கும். ஆபத்தானது. என பயம் தோன்ருமல் முதலையைப்பற்றி கூறுதல். நண்டு மனிதர்கள் சாப்பிடுவதைக் கூறலாம்.

பாட்டு : ஜிகு ஜிகுச்சான் குருவி

கதை ; கண்ணனும் லல்லியும் கண் காட்சி பார்த்தல்.

கைவேலை : பிட் பேஸ்ட்

உள்விளையாட்டு : தண்ணீர் — கரை

வெளி விளையாட்டு : கயிறு தாண்டுதல், தொண்டி அடித்தல்

பாடம் 3. தவளை

உரையாடல் :

தவளைப்படம் காட்டி விளக்குதல். மழைக் காலங்களில் தவளை அதிகமிருக்கும் என விளக்குதல். தவளையின் வளர்ச்சி படம் பள்ளியில் போட்டுக் காட்டலாம். தண்ணீரிலும், ஈரமான இடத்திலும் இருக்கும் என விளக்கலாம்.

பாட்டு: தத்தி தத்தி ஓடிவரும் தவளையாரே
கதை: தவளை ராணி - எருது போல் ஆகமுயன்ற தவளை
கைவேலை: நோட்டில் தவளை வரைந்து வண்ணம் தீட்டுதல்
உள்விளையாட்டு: தவளைப்போல் தவ்வி தவ்வி ஓடுதல்.
வெளிவிளையாட்டு: தோட்ட வேலை.

3 வது வாரம்

உரையாடல்:

பாடம் 1. பழங்கள்

பழங்களின் படத்தைக்காட்டி பெயர்களை விளக்குதல். பழங்களின் வகைகள். மரத்தில் காய்ப்பவை, கொடியிலுள்ளவை எனவும், உபயோகம் - நன்மை இவைகளை விளக்குதல் வாழைப்பழம் எளிதில் ஜீரணிக்க கூடியது. குழந்தைகளுக்கு ஏற்றவை எனவும் கூறல். வாழைப் பழத்தை நேரில் காட்டி. ருசி பார்க்கவும் கொடுக்கலாம்.

திராட்சை பழம் கொடியில் உள்ளது என விளக்கலாம். பழங்களில் ஜூஸ் செய்யலாம் எனவும் கூறலாம். எலுமிச்சம்பழம் சர்பத் செய்து காட்டி கொடுக்கலாம்.

பாட்டு: வாழைப்பழம் தின்னலாம்.

கதை: நரியும், திராட்சையும்.

கைவேலை: மெழுகில் திராட்சைக் கொத்து செய்து பள்ளியில் வைத்தல்.

உள்விளையாட்டு: குலை குலையாய் முந்திரிக்காய்.

வெளிவிளையாட்டு: ஊஞ்சல் - சறுக்கு,

உரையாடல்

பாடம் 2. மலையிலுள்ள பழங்கள்

ஆப்பிள் - ஆரஞ்சு, பிளப்ஸ் இவைகளின் படங்களைக் காட்டி, பெயர் சொல்லி இவைகள் மலைகளில் பயிராகும். சத்து நிறைந்த பழங்கள் எனவும் கூறலாம். பழங்களை நேரிலும் காட்டி, தின்பதற்கும் சிறு சிறு துண்டுகள் கொடுக்கலாம்.

பாட்டு: அப்பா தந்தார் ஆப்பிள்.

கதை : மூன்று முயல் கதை

கைவேலை : தீக்குச்சி படம் ஒட்டுதல்

உள்விளையாட்டு : வெற்றிலைக் கட்டுப் பிடியாதே

வெளிவிளையாட்டு : பழங்களின் பெயர் வைத்து விளையாடுதல்

பாடம் 3, பப்பாளி

உரையாடல்

பப்பாளி பழத்தை நேரில் காட்டி விளக்குதல். பழத்தைக் கொடுத்து தின்னச் சொல்லுதல். அதில் சத்துள்ளது என விளக்குதல்

பாட்டு : குடை போல் மரத்தில் காய்த்த பழம்

கதை : நன்றியுள்ள நாய்

கைவேலை : வர்ணம் தீட்டுதல் (பிரஷ்)

உள்விளையாட்டு : சோப்புத் தண்ணீரில் பப்பாளி இலை தண்டால் ஊதி விளையாடுதல்

வெளிவிளையாட்டு : பப்பாளி மரம் வைக்க ஏற்பாடு செய்து, பப்பாளி கண் நடுதல்.

4 வது வாரம் : முதல் 3 வார பழைய பாடம் திருப்புதல்

அக்டோபர் மாதம்

1 வது வாரம் : உரையாடல்

பாடம் 1. காந்திஜி:

காந்திஜி படத்தைக் காட்டி, காந்தியின் வாழ்க்கையில் நடைபெற்ற ஏதேனும் சுவையான நிகழ்ச்சியைச் சிறுவர்கள் வியந்து ரசிக்கும் வண்ணம் சொல்லி, கேள்வி கேட்டுப் பதில் சொல்லி அவர்கள் மனதில் பதியச் செய்தல்

கொடி வணக்கம் செய்தல். காலையில் கொடி ஏற்றி மாலையில் இறக்குவது பற்றியும், மறைந்த தேசத் தலைவர்களுக்கு மரியாதை செய்தல்—இவைகளை விளக்குதல். அக்டோபர் 2 ஆம் தேதி காந்தி ஜெயந்தி எனவும் கூறுதல்.

பாட்டு : காந்தி மஹான் கதை கேளுங்கள்

கதை : காந்திஜியின் பள்ளி வாழ்க்கை

கைவேலை : ராட்டை வரைந்து வண்ணம் பூசுதல்

உள் விளையாட்டு :

சிறு சிறு தக்கிளியில் நூல் நூற்றுக் காட்டலாம்.
வெளிவிளையாட்டு : வெளியில் ஓடி, கண்கட்டி, விளையாடுதல்

பாடம் 2. கஸ்தூரிபாய்

உரையாடல்

கஸ்தூரிபாய் யார் என்றுகூறி விளக்குதல். காந்தி சித்திர படப் புத்தகத்தைக் காட்டி, கஸ்தூரிபாய் வாழ்க்கையில் சிறு நிகழ்ச்சி கூறலாம்.

பாட்டு : எங்கள் தாய் நாடென்று சொல்லும் போது

கதை :

சூரியனைப் பாராது கஸ்தூரிபாய் சாப்பிடமாட்டார் என்ற சிறு நிகழ்ச்சியை கூறுதல்.

கைவேலை :

தலைவர்கள் படம் சேகரித்து ஆல்பம் தயாரித்தல்.

உள் விளையாட்டு : கோலாட்டம் பழகுதல்.

வெளி விளையாட்டு : ஓட்டப்பந்தயம்.

பாடம் 3. பாரதி

உரையாடல் :

பாரதி படம் காட்டி விவரித்தல். அவர் வாழ்க்கையைப் பற்றி எளிய முறையில் கூறுதல். அவர் பிறந்த ஊர், எட்டயாபுரம் எனக்கூறி சிறு சிறு பாப்பா பாட்டு எழுதியவர் எனவும் விளக்குதல்.

பாட்டு : பாப்பா நல்ல பாப்பா

கதை : டிக் டிக் என்றது யார்?

கைவேலை : அச்சுக்குத்தல்

உள் விளையாட்டு : வேஷப் போட்டி (பாரதி - காந்தி)

வெளி விளையாட்டு : நொண்டி அடித்தல்.

2 - வது வாரம்

பாடம் 1. நவராத்திரி

உரையாடல் :

நவராத்திரியைப்பற்றி, கொலு வைப்பதைப் பற்றியும் விரிவாக கூற வேண்டும். ஏன் ஒன்பது நாளும் ஒன்பது அவதாரம் அம்பாள் எடுக்கிறாள் என்று விளக்கவேண்டும். நவராத்திரி குழந்தைகளுக்கு பிடித்தமான பண்டிகை. ஆதலால் நன்கு விளக்கமாய்க் கூறலாம்.

பாட்டு : கொலுவில் கண்டேன். எலியும் பூனையும் ஒன்றாய்

கைவேலை : பள்ளியில் கொலுவைக்க சிறு, சிறு பலகைத் தயார்செய்தல். அலங்கார தோரணங்கள் ஒட்டுதல், பொம்மைகள் தயார் செய்தல். இடம் தயார்செய்தல்.

உள்விளையாட்டு : பள்ளியில் கொலுவைத்தல் அவரவர் வீட்டிலிருந்தும் பொம்மை கொண்டு வருதல்.

வெளிவிளையாட்டு : சுற்றுப்புற சுகாதாரம். தோட்டத்தைச் சுற்றி சிறு சிறு கற்கள் பதித்து வெள்ளைப் பூசி அலங்கரித்தல்.

பாடம் 2: சரஸ்வதி பூஜை.

உரையாடல் :

கல்விக்கு அதிபதி சரஸ்வதி எனக்கூறியும், சரஸ்வதி படம் காட்டியும் விளக்குதல். ஏன் சரஸ்வதி பூஜை செய்கிறோம். எப்படிச் செய்யவேண்டும், என்ன சாமான்கள் வேண்டும் என விளக்குதல்.

பாட்டு : வெள்ளைத்தாமரை மீதினிலே

கதை : என்தாயே வாணி, கண் பாரும் நீயே.

கைவேலை : சரஸ்வதி பூஜைக்கு, தென்னங்குருத்தில் தோரணம் செய்தல், கயிறு, மா இலை சேகரித்தல்.

உள்விளையாட்டு : பூஜைக்கு வேண்டிய படம், சாமான்கள் சேகரித்தல்.

வெளிவிளையாட்டு : இஷ்டம் போல், தவ்வி, ஓடி விளையாடுதல்

பாடம் 3: ஆயுதபூஜை.

உரையாடல் :

விஜயதசமியைத்தான் ஆயுத பூஜை எனக் கூறுவார்கள். ஆயுத பூஜைக்கு, நாம் உபயோகிக்கும் எல்லாப் பொருட்களையும் வைத்தல்.

தொழிற்கருவிகள், பெட்டிகள், வைப்பதை விளக்குதல். புதிதாக பள்ளியில் சேர்க்கும் குழந்தைகளை விஜயதசமி அன்று சேர்ப்பார்களென்பதையும் கூறலாம்.

பாட்டு ஓம்சக்தி, ஜெயசக்தி

கதை ஏன் ஆயுதங்களை வைத்துப் பூஜிக்கிறோம் என்பதை விவரிக்கலாம்

கைவேலை : களிமண்ணில் உருவம் செய்தல்

உள்விளையாட்டு : மீன் பிடித்தேன் மீன் பிடித்தேன்

வெளிவிளையாட்டு : ஊஞ்சல் ஆடுதல்.

3வது வாரம்: தேசத்தலைவர்கள்.

பாடம் 1. காமராஜ்

உரையாடல் :

காமராஜ் படத்தைக் காட்டி விவரித்தல். மறைந்த தலைவருக்கு வணக்கம் செய்தல். அவர் செய்த நன்மைகள் ஏழை பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்க வழி வகுத்தவர் எனக் கூறுதல்.

பாட்டு: மணியடிக்குது டிங்டாங்.

கதை : முகமூடி போட்டு, மியாவ் என்றது யார்—கதை—நாடகம்.

கைவேலை : ஆல்பத்தில் தலைவர்கள் படம் ஒட்டுதல்.

உள்விளையாட்டு : எலியும் — பூனையும்.

வெளிவிளையாட்டு : சாக்குப் பையில் கால்விட்டு ஓடுதல்

பாடம் 2 இந்திராகாந்தி

உரையாடல்:

இந்திராகாந்தியின் படம் காட்டி விவரித்தல். நாட்டின் நலம் காக்கப் பிரதமர் செய்துள்ள சாதனைகளைச் சிறு சிறு நிகழ்ச்சியாய் விளக்குதல். சிறு வயதிலேயே பொது அறிவு வளரவும் பிரதமர் யார், ஜனாதிபதி பெயர் இப்படி எளிய முறையில் சிறுகச் சிறுக விளக்குதல்.

பாட்டு : தேகப்பயிற்சி பாடல். செக் செக் கொரே.

கதை : முயலும் — ஆமையும்.

கைவேலை : குச்சி பொம்மை செய்தல்.

உள் விளையாட்டு : முயலும் — ஆமையும் நாடகம்.

வெளிவிளையாட்டு : ஓடிப் பிடித்தல்.

பாடம் 3. விநோபாஜி

உரையாடல்.

விநோபாஜியின் படம் காட்டி விளக்குதல், சர்வோதயத் தலைவர் என்றும் விளக்குதல். இவர் இருக்கும் ஊர்பெயர்— எவ்வளவு தூரத்திலுள்ளது என விவரித்தல்.

பாட்டு : சர்வோதயம் வந்ததினால் ஏலேலோ.

கதை : காந்தி — விநோபா கதை.

கைவேலை: கொலாஜ் ஒர்க்.

உள்விளையாட்டு : சிலிண்டர் கட்டிட கட்டை.

நெப்கோ கொடுத்து விளையாடச் சொல்லுதல்.

வெளிவிளையாட்டு : "சூ—பிடி" விளையாட்டு.

4 - வது வாரம் முதல் 3வார பாடங்களைத் திருப்புதல்

நவம்பர் மாதம் 1 - வது வாரம்

பாடம் 1: வீட்டு மிருகங்கள்

உரையாடல்:

வீட்டில் வளர்க்கும் பூனை—நாய் இவைகளைப் பற்றிக் கூறி, அவைகளின் ஆகாரம். பழக்க வழக்கங்கள் பற்றி கூறுதல். எத்தனைக் கால், எத்தனை வால் எனக் கேட்டு எண்ணிக்கை கற்பிக்கலாம். இவைகள் வளர்ப்பதால் என்ன நன்மை எனவும் கூறலாம்.

பாட்டு : வாலை — வாலை ஆட்டி வரும்.

கதை : ரமேஷின் நாய் ஜிம்மி.

கைவேலை : படம் வரைந்து வண்ணம் தீட்டுதல்.

உள்விளையாட்டு : பசி தீர்ந்த பூனைக் குட்டி.

வெளிவிளையாட்டு : நாயகளே ஓடி வாருங்கள்.

பாடம் 2 : ஆடு, மாடு

உரையாடல் :

பசு படத்தைக் காட்டி விளக்குதல். நேரிலும் பார்ப்பார்கள், ஆதலால் மாட்டைப் பற்றி விளக்குதல் சுலபம். ஆடு, மாடு வீட்டில் வளர்க்கலாம் என்றும், அதன் பயன், ஆகாரம், பழக்கம் எல்லாம் சொல்லுதல். பால், தயிர், மோர், வெண்ணை, நெய் இவைகளை நேரில் காட்டி, ருசி பார்க்கச் சொல்லி விளக்குதல், ஆட்டைப்பற்றியும் விளக்குதல்,

பாட்டு :

அம்மா அம்மா கன்றுகுட்டி
ஆட்டுக்குட்டிகளே ஆட - வாருங்கள்

கதை : சிங்கமும் சுண்டெலியும்

கைவேலை : விரல் ஓவியம்

உள் விளையாட்டு : வெற்றிலைக் கட்டு பிடியாதே

வெளி விளையாட்டு :

மலையிலே தீ எறியுது, பிள்ளைகளே ஓடி வாருங்கள்.

பாடம் 3. குதிரை, கழுதை

உரையாடல் :

கழுதை, குதிரை இவைகளின் படத்தைக்காட்டி, இவைகளின் ஆகாரம், பழக்க வழக்கம், இவைகள் வளர்ப்பதால்

உள்ள நன்மையை விளக்கலாம். வண்ணனுக்குக் கழுதை எப்படி பயன்படுகிறது என்றுக் கூறலாம்.

பாட்டு ; (கழுதைப்பாட்டு) மூக்கு வெளுத்திடுமாம்.

கதை : கழுதையும், உப்புவணிகனும்

கைவேலை : வர்ணம் தெளித்தல்

உள் விளையாட்டு ; குலைகுலையாய் முந்திரிக்காய்

வெளி விளையாட்டு : கோழிக்குஞ்சும், நரியும்

2 - வது வாரம்

பாடம் 1. தீபாவளி

உரையாடல் :

தீபாவளிப் பண்டிகைக் கொண்டாடும் விதத்தைத் தெளிவாக விவரித்துக் கூறலாம். தீபாவளி என்றால் என்ன, என்பதை குழந்தைகள் புரிந்தும் கொள்ளும் முறையில் எளிய முறையில் கூறவேண்டும்,

சாமி பூஜை செய்வது, புத்தாடை அணிவது பலகாரம் சாப்பிடுவது பற்றிக்கூறுதல். பள்ளியிலும் கொண்டாடலாம்.

என்ன பட்டாசு வாங்கினாய். எத்தனை வெடி என கணக்குக் கேட்கலாம். நம்நாட்டில் நாம் எத்தனை பண்டிகை கொண்டாடுகிறோம் என்றும் தீபாவளியின் அவசியமும் கூறலாம்.

பட்டாசு எதனால் செய்யப்பட்டது; எப்படி படீர் என்று சப்தம் கேட்கிறது என்றும் கூறலாம்.

பாட்டு :

திருவிழாவாம் திருவிழா
தீபாவளி திருவிழா

கதை : தீபாவளியும் ரமணி என்ற முயலும்

கைவேலை : துண்டுத்துணி சேகரித்துப் பந்து செய்தல்

உள் விளையாட்டு : ஒருப் பத்தி - திருப்பத்தி

வெளி விளையாட்டு : கண்கட்டிப் பிடித்தல்

பாடம் 2: நேருஜி

உரையாடல் :

நேருஜியின் படத்தைக்காட்டி விளக்குதல் நேருஜியின் பிறந்த தினத்தைக் குறித்து விளக்கம் கூறுதல். குழந்தைகள் தினமாகக் கொண்டாடுகிறோம் எனவும் கூறலாம் நேருஜி நாட்டிற்காக என்ன மாதிரி பாடுபட்டார் எனவும் துன்பங்களைப் பொறுத்து உழைத்து வந்தார் என்ற கருத்துக்களைக் கூறல் நேருஜிக்கு ரோஜாப் பூ ரொம்பப் பிடிக்கும் எனவும் கூறுதல்.

பாட்டு : பாரு பாரு ரோஜாப் பூ

கதை : நேருவின் பள்ளிப்பருவம் - நாடகம் நடித்தல்

கைவேலை :

குழந்தைகள் தினத்தன்று, பிள்ளைகளுக்கு ஒவ்வொரு ரோஜாப் பூ கொடுக்கவேண்டும். அதற்குரிய பூ செய்தல், நோட்டில் பூ வரைந்து வண்ணம் தீட்டுதல்.

உள் விளையாட்டு :

ரோஜாப் பூவே மல்லிகைப் பூவே கிட்ட வந்து கிள்ளிப் போ

வெளி விளையாட்டு :

விளையாட்டுப் போட்டி வைத்து சிறு சிறு, பரிசு வழங்குதல்

பாடம் 3: பூக்கள்.

உரையாடல் :

பூக்களின் வகைகளைக்காட்டி அதைப் பார்க்கும் போது, குழந்தைகளின் உள்ளத்தின் எண்ணங்கள் மாறு

படுவதை வளர்த்து, அவர்களது எண்ணங்களேயும் உணர்ச்சிகளேயும் வெளிப்படுத்த சந்தர்ப்பமளித்தல். பூக்களின் பெயர்களேச் சொல்லி, நுகரச்செய்து, பூக்களின் முக்கியத்துவத்தைக் கூறுதல்.

பூக்கள் அதிகம் மலர்வதால் நாம் சூடிக்கொள்ள முடிகிறது. விலேக்கு விற்பதால் காசு கிடைக்கிறது எனவும் கூறல்.

பாட்டு : தாமரைப் பூவே தாமரைப் பூவே

கதை : தேனீயும்—தாமரையும்

கைவேலே :

பூக்கள் சேகரித்து, சார்ட் போடுதல். ஆல்பத்தில் பூக்கள் படம் ஒட்டுதல்.

உள்விளேயாட்டு : உற்று நோக்கும் விளேயாட்டு

வெளிவிளேயாட்டு : முயல் விளேயாட்டு விளேயாடுதல்.

3-வது வாரம்

பாடம் 1 : கார்த்திகை.

உரையாடல்:

கார்த்திகையைத் தீபத் திருநாளாக் கொண்டாடு கிருேம் என்பதை விளக்குதல். பொரி நிவேதனம் செய்வதைக் கூறல். கிராமங்களில் எரியும் சோளத் தட்டையில் குங்கலிங்கம் என்ற ரசாயனப்பொடியைத் தூவிச் சுற்று வார்கள். சுளுந்து சுற்றுதல் என்பார்கள். இரவில் பனே மட்டையால் கூடுகட்டி, சொக்கப்பானே கொளுத்தல் என்று செல்வார்கள்,

பாட்டு : பூப்பூ மஞ்சள் பூ

கதை : விவசாயமும் சிறுமியும்

கைவேலை ; வர்ணம் தெளித்தல்

உள் விளையாட்டு :

என் இடது பக்கம் காலி கண்ணம்மா நீ வரலாம்.

வெளி விளையாட்டு :

பொட்டலம் கடத்தல்

பாடம் 2. பக்ரீத்

பக்ரீத் முகமதியர்கள் பண்டிகை என விளக்குதல் ஏன் இந்தப் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள் என விளக்குதல்

பாட்டு : சிங்கார ஐயனே ஆராரோ

கதை : அலாவுதீனும் அற்புத விளக்கும்

கைவேலை :

கலர் நூலை ஒட்டுதல், காகிதபொம்மை செய்தல்.

உள் விளையாட்டு : பூசணிக்காய் விளையாட்டு

வெளி விளையாட்டு : ''சூ பிடி''

பாடம் 3 : காட்டு மிருகங்கள் யானை - குரங்கு

உரையாடல் :

யானை, குரங்கு, மான் இவைகளின் படத்தைக்காட்டி இவைகள் காட்டில் வாழும். யானை கோவில்களிலும் சர்க்கஸிலும் இருக்கும் எனக் கூறலாம். குரங்கு சிலர் வீட்டிலும் வளர்ப்பார்கள். குரங்கை வைத்து வேடிக்கை காட்டுவார்கள் என்றும் குரங்கு குறும்புத்தனமுள்ளது' எனவும் விளக்கலாம்.

பாட்டு:

யானை - யானை - யானை
குரங்கே குரங்கே
(அல்லது) புள்ளிமான்கள்

கதை: குரங்கும் குல்லாய் வியாபாரியும்.

கைவேலை:

மான் டான்ஸ் செய்வதற்கு மான் கொம்பு செய்தல்

உள் விளையாட்டு: மான் டான்ஸ் பழக்குதல்

வெளி விளையாட்டு: கண் கட்டிப் பிடித்தல்

4வது வாரம்:

முதல் 3 வார பாடங்களைத் திருப்புதல்

டிசம்பர் - மாதம்

1வது வாரம்

பாடம் 1: திசைகள்

உரையாடல்:

சூரியன் உதிக்கும் திசை, மறையும் திசை, மொத்தம் எட்டு திசைகளையும் சொல்லுதல். பள்ளிக்கூடம் எந்த திசையில் இருக்கிறது. வீடு எத்திசையில் இருக்கிறது எனக் கூறல்.

பாட்டு: சின்ன ரோஜாப் புஷ்பம்

கதை: முயலும்—அணிலும்

கைவேலை: தேங்காய்ச் சிரட்டையில் பொம்மை செய்தல்.

உள் விளையாட்டு: சிரட்டை சேகரித்தல்

வெளி விளையாட்டு: கயறு தாண்டுதல்

பாடம் 2 மழை - வானவில்

உரையாடல் :

இம்மாதத்தின் காலநிலை மழை பெய்வதால், அந்தந்த காலங்களில் என்னென்ன நடக்கும் என விவரித்தல், மழை எந்தக்காலத்தில் எப்படிப்பட்ட நிலையில் பெய்யும், மழை பெய்யும் அறிகுறி, மழையால் பூமியில் ஏற்படும் மாறுதல்களை மனதில் பதியும்படி எளிய முறையில், ஏற்ற உதாரணங்களுடன் விளக்குதல்.

வானவில் எப்போது தோன்றுகிறது என்றும் வானவில்லில் எத்தனை நிறங்கள் என்றும் கூறவேண்டும், படம் காட்டி விளக்கி எண்ணிக்கை கற்பிக்கலாம்.

பாட்டு : மழையே மழையே போய்விடு

வானவில்

வளைக்கமுடியாத வில்லிது

கதை : மழைக் கதை மறைந்த சூரியன்

கைவேலை : வானவில் வரைதல்

உள் விளையாட்டு : இடி இடிக்குதே கேட்கலியா?

வெளி விளையாட்டு :

மழை காலத்தில் இப்படித்தான் ஓடுவேன்.

பாடம் 3: மின்சாரம்

உரையாடல் :

மின்சாரம் என்றால் என்ன என்று கூறுதல். மின்சாரத்தின் ஆக்கல் அழித்தல் பற்றி கூறுதல். தண்ணீரிலிருந்து மின்சாரம் உண்டாகிறது என்று கூறல்.

மின்சாரத்தினால் ரேடியோ, மின்விசிறி இவைகளை பற்றி கூறுதல். இன்னும் பல உண்டு. விளக்கலாம்.

பாட்டு : ஆக்கவும் செய்வேன்
அழிக்கவும் செய்வேன்

கதை : மின்சாரத்தை இணைத்து கற்பனைகதை.

கைவேலை : பல்பில் பொம்மை செய்தல்

உள்விளையாட்டு : என் இடது - வலது - புறம் காலி. சீதை நீவரலாம்.

வெளிவிளையாட்டு : பந்து போடுதல்.

2 வது வாரம்

பாடம் 1. கிருஸ்துமஸ்.

உரையாடல் :

கிறிஸ்துவின் பிறப்புக்குறித்து, விளக்கமாகக் கூறல். யேசு பாலகன் எங்கே, எப்போது பிறந்தார், அவரது வாழ்க்கை எப்படி இருந்தது என்பதை படங்கள் காட்டிக் கூறுதல். வானத்தில் நட்சத்திரம் தோன்றியதைச் சொல்லலாம்.

பாட்டு : காணப்போறேன். காணப்போறேன். ஏசுபாலனை

கதை : ஏசுபாலன் கதை.

கைவேலை : மாட்டுத் தொழுவம் அமைத்தல்.

உள்விளையாட்டு : ஏசுபிறப்பு நாடகம் நடித்தல்.

வெளிவிளையாட்டு : நாடகத்திற்கு இடம், பொருட்கள் தயாரித்தல்.

பாடம் 2. ஏசுநாடகம்

உரையாடல் :

யாரெல்லாம் நாடகத்தில் நடிக்கிறார்கள் எனக்கேட்டு வசனத்தை அவர்களுக்குக் கற்பித்தல் நடிகர்களைத், தேர்ந்தெடுத்தல்.

பாட்டு : ஓ......ராவின் ஜோதிநட்சத்திரம்.

கைவேலை : நாடகத்திற்கு அலங்காரப் பொருட்கள் தயாரித்தல்.

கதை : நாடகப் பயிற்சி அளித்தல்.

உள்விளையாட்டு :
வெளிவிளையாட்டு : } நாடக சம்பந்தமான வேலைகள்.

பாடம் 3. சர்வோதயம் — கெய்தான்ஜி அவர்கள்

உரையாடல் :

நமது பால்வாடியின் தலைவர் யார் என்று கேட்டு, தாத்தா கெய்தான்ஜி அவர்களைப்பற்றியும் அவர் நமக்கு செய்து வரும் நன்மைகளையும் சொல்லுதல். அவர் ஆஸ்சிரமம் கணவாய்ப்பட்டியிலுள்ளது எனவும் அவரின் எளிய உணவு, உடை இவைகளைக் கூறலாம்.

பாட்டு : தாத்தா தங்கத்தாத்தா.

கதை : ராமுவும் கோழிக்குஞ்சும்

கைவேலை : காகிதக்கூழ் தயாரித்து பொம்மை செய்தல்

உள் விளையாட்டு : பொட்டலம் கடத்தல்

வெளி விளையாட்டு : பாம்பு விளையாட்டு

3 - வது வாரம் : மரங்கள்

பாடம் 1. தென்னைமரம்

உரையாடல் :

தென்னை மரம் யாரெல்லாம் பார்த்தீர்கள் எனக்கேட்டு விவரித்தல். தென்னை மரத்தால் நாம் அடையும் நன்மையும், பயனையும் கூறல். தேங்காய், இளநீர் இவைகளையும் காட்ட வேண்டும். இவைகளின் உபயோகம் கூறவேண்டும்.

பாட்டு : தென்னைமரம் பார்த்தியா

கதை : சிங்கமும் நரியும்

கைவேலை :

ஓலையில் ஊதல் செய்தல். பள்ளிக்கு வேண்டிய வாரு கோல் கிழித்தல்.

உள் விளையாட்டு : காக்கா பறபற

வெளி விளையாட்டு : தென்னையா, தேங்காயா

பாடம் 2. பனைமரம்

உரையாடல் :

பனைமரத்தைக் காட்டி, அதன் உபயோகம், பயன் கூறுதல். நுங்கு, பதனீர் நேரில் காட்டலாம். பதனீர் இறக்கு வதால், அந்த தொழிலாளர்கள் பயனடைவதையும் கூறலாம். பனைமட்டையின் உபயோகம் பற்றி அதிகம் கூறலாம்.

பாட்டு : பனை மரத்தைப் பாராய்

கைவேலை :

பனை ஓலையில் விசிறி, கிலுக்குச் செய்தல்.
பனங்கொட்டையில் பொம்மை செய்தல்.

கதை : குரங்கும், தூக்கணங்குருவியும்

உள் விளையாட்டு : ஓலையில் பூனை, கடியாரம், பாய் செய்து வைத்தல்

வெளி விளையாட்டு : நாய்களே ஓடி வாருங்கள்

பாடம் 3. மாமரம்

உரையாடல் :

மாமரத்தைக் காட்டி விளக்குதல். பழம், காய் நேரில் காட்ட வேண்டும். மாங்காய், பழம் விற்பதால் அடையும் பயன் கூறலாம். விரிவான விளக்கம் கொடுக்க வேண்டும்.

பாட்டு : மாம்பழமாம்—மாம்பழம்

கதை : டோனி என்ற நன்றியுள்ள நாய்

கைவேலை : மா இலைக்கொடுத்து தோரணம் கட்டுதல்

உள்விளையாட்டு : வெற்றிலைக் கட்டுப் பிடியாதே

வெளிவிளையாட்டு : ''சூ—பிடி'' விளையாடல்

அனுபந்தம் 1

சுதந்திர உரையாடலுக்கான தலைப்புகள்

ஜனவரி 2 - வது வாரம்

பாடம் 1.

பொங்கல் திருநாள்

பொங்கல் திருநாள் தமிழர்களின் திருநாளாகும். இதைத் தமிழர்களின் திருநாள் என்று வட இந்தியர் அழைப்பர். ''சங்கராந்தி'' என்று கொண்டாடுவார் இந்த தினத்தன்று சிறியவர், பெரியோர் அனைவரும் மகிழ்ச்சியுடன் காணப்படுவர்.

தைப்பொங்கல் இந்துக்களின் விழாக்களில் முக்கியமான தொன்றாகும். இவ்விழா புதுநெல் அறுவடை சமயங்களில் கொண்டாடப்படும். இத்தினத்தில் வீட்டில் பழையவைகளை கழித்து, வெள்ளையடித்து, அலங்காரம் செய்து, புது நெல் இடித்துப் பொங்கல் செய்து, புத்தாடையுடுத்தி, வயலில் வேலை செய்த மாடுகளுக்கு அலங்காரம் செய்து, பொங்கலைக் கடவுளுக்குப் படைத்து கும்பிட்டுப் பின் தானும் உண்டு அனைவரும் மகிழ்வர். கரும்பு இந்த விழாவின் போது அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டு வரும். மஞ்சள் கிழங்கு, கரும்பு விஷேசமாகக் கருதப்பட்டு உபயோகப்படுத்தப்படும்.

ஜனவரி 2 - வது வாரம்

பாடம் 2.

மாட்டுப் பொங்கல்

தைப்பொங்கல் கொண்டாடிய மறு நாளில் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்பட்டு வருவது இந்தியரின் வழக்

கமாக இருந்து வருகிறது. இது போகி—மாட்டுப் பொங்கள் என இரண்டு நாட்களில் கொண்டாடப்படும். இந்த தினத்தில் மாடுகளை ஆறுகளிலோ குளங்களிலோ கொண்டு சென்று, நீராடச் செய்து அதன் கொம்புகளில் பல வண்ணங்களைப் பூசி, உடம்பு முழுவதும் வண்ணங்களால் அலங்கரித்து கொம்புகளில் பூவையும், கரும்பையும் கட்டி விட்டு, மாடுகளை விரட்டி விட்டுப் பார்த்து மகிழ்வர். மேலும் மாடுகளின் மீது ஒரு புதுத்துண்டு போடப்பட்டிருக்கும். ஒவ்வொரு வீட்டிலுள்ள மாடுகளையும் அன்றைய தினத்தில் "ஜல்லிக்கட்டுக்கு" ஓட விடுவர். அப்போது அக்கிராமங்களில் உள்ள வீரமுள்ள இளைஞர்கள் மாடுகளை அடக்கி அதன் மீதுள்ள துண்டுகளை எடுத்துக் கொள்வர். காளைகளை அடக்கி வெற்றி பெற்றோர்க்கு அநேக பரிசுகள் கிடைக்கும். இந்த நாள் புகழ் பெற்ற நாளாகும். இவ்விழா விவசாய தொழிலாளர்களுக்கென்றே ஏற்பட்ட பண்டிகை என்பதில் ஐயமில்லை.

ஜனவரி மாத 3வது வாரம்

பாடம் 1

பயறு வகைகள்

மழை பெய்து பயிர்கள் செழிக்கும் காலங்களில் பல நன்மைகளை நாம் அடைகிறோம். அவற்றுள் ஒன்றுதான் பயறு வகைகள் கிடைப்பது. இது நமது அன்றாட வாழ்க்கையில் உபயோகப்படுவது. நமது உணவில் இப்பயறு வகைகளைச் சேர்த்துக் கொண்டு வருகிறோம். பயறுவகைகள் பல வகைப்படும். இவைகளில் புரதச் சத்து அதிகமாக அடங்கியுள்ளது. பாசிப்பயறு தட்டப்பயறு, மொச்சைப் பயறு ஆகிய பலவகைகள் ஆகும். ஒவ்வொரு பயறுகளும் பலப்பல நிறங்களில் காணப்படும். அளவிலும் பெரியதாகவும், சிறியதாகவும் காணப்படும். இவைகள் காட்டில் விளையக்

கூடியவை. (நேரில் செடிகளைக் கொண்டு வந்து காட்ட வேண்டும் அல்லது தோட்டத்திற்கு அழைத்துச் சென்று நேரடியாகக் காட்டவேண்டும்). மொச்சைப்பயறு கறுப்பாக வும், பாசிப்பயறு பச்சையாகவும் இருக்கும். (இப்போது வகுப்பறையில் இருக்கும் கரும்பலகை, மற்றும் இலையின் நிறம் இவற்றை சுட்டிக்காட்டி நிறத்தை விளக்கவேண்டும்.) பயறு வகைகளை நாம் ஊறவைத்து முளை கட்டிய பின் பச்சை யாகவும் சாப்பிடலாம். இதனால் சத்துப்பொருள் வீணாகா மல் இன்னும் அதிகரிக்கும். (பயறுகளை வேகவைத்து மாலை நேரங்களில் கொடுக்க வேண்டும்.) ஒவ்வொரு நாளும் ஒவ் வொரு பயறுகளைக் காட்டி விளக்க வேண்டும்.

ஜனவரி மாதம் 3-வது வாரம்

பாடம் 3

குடியரசு தினவிழா

சுதந்திரம் கிடைத்துவிட்டால் மட்டும் போதுமா? அதற் குப்பின் நம்மை நாமே ஆண்டுகொள்ள வேண்டி அதிகாரங் கள், விதி முறைகள் தேவைப்படும். அதற்கான அரசியல் சட்டம் தேவைப்படும்.

சுதந்திரம் கிடைத்தபின் மூன்று ஆண்டுகளில் சட்ட நிபுணர்கள் அரசியல் தலைவர்கள், மக்கள் தலைவர்கள் இப்படி எல்லோரும் சேர்ந்து இந்தியாவிலுள்ள எல்லா வகுப்பினரும் சமமாக வாழ, வேலை செய்ய, அரசியலில் தேர்தல்களில் பங்கு கொள்ள ஒரு நல்ல சட்டம் நிறைவேற்றினார்கள். இதில் தனிமனிதன் சுதந்திரம் மிகவும் முக்கியமாக கருதப் பட்டது. அன்று இந்தியா குடியரசாகியது. இப்போதுதான் பூரண சுதந்திரம் அடைந்தது. இந்தியக் குடியரசின் முதல் ஜனாதிபதியாக டாக்டர். இராஜேந்திர பிரசாத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

பிப்ரவரி மாதம் 1-வது வாரம்

பாடம் 1

தபால் நிலையம்

நாம் தங்குவதற்கு நமக்கென்று ஒரு வீடு கட்டிக்கொண்டு இருப்பது போல், சில தொழில்களைச் செய்வதற்கென்றே அதற்கு என்று பல பிரிவுகள் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அவற்றில் சிறப்பாக கூறக்கூடியது தபால் நிலையம் ஆகும். இந்த நிலையம் தற்சமயம் எல்லாக் கிராமங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. தபால் நிலையத்தில் நமக்குத் தேவையான கடிதங்கள் பெறலாம்; எழுதி அனுப்பலாம். தூர இடங்களில் உள்ளவர்களுக்கு நமது எண்ணங்களை, விஷயங்களை மடல் மூலம் தெரியப்படுத்த வழி வகுக்கிறது இந்த தபால் நிலையம். திடீரென்று நாம் அவசரமான செய்தி சொல்ல விரும்பினாலும் தந்தி மூலம் கூற உதவுகிறது. இங்கு பல தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் இவர்கள் அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட சீருடை (காக்கி சட்டை) அணிந்து, தோளில் தபால் பையும் மாட்டியிருப்பார்கள். நேரடியாகப் பார்க்க முடியாவிட்டாலும் அவர்களோடு நாம் டெலிபோன் மூலம் பேசலாம். தபால் நிலையத்தில் ஒவ்வொரு பிரிவிற்கும் வேலை செய்பவர்கள் நியமிக்கப்பட்டு இருப்பார்கள். யாருக்காவது பணம் அனுப்ப விரும்பினாலும் இங்கிருந்தபடியே அனுப்பலாம். தபால் பெட்டி ஒன்று தபால் நிலையத்தில் பொருத்தப்பட்டிருக்கும். அதில் நாம் எழுதிய தபால்களைப் போட்டுவிடவேண்டும் பின் அதை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் திறந்துஎடுத்து ஊர் வாரியாகப் பிரித்துப் பைகளில் போட்டு, சீல் வைத்துப் பஸ்ஸில் அனுப்புவார்கள். அவை அந்த ஊர் தபால்நிலையம் போய் சேர்ந்ததும், அது பிரிக்கப்பட்டு, வீடுகளுக்குக் கொடுக்கப்படும். மேலும் அங்கு ஸ்டாம்பு, கவர் இவைகள் கிடைக்கும். இங்கு நாம் பணம் சேமித்து வைக்க விரும்பினாலும் போட்டு

வைக்கலாம். பின்னுல் அப்பணம் வட்டியோடு திரும்பக் கிடைக்கும். நாம் எழுதும் மடல்கள் இரண்டு நாட்களில் போய்ச் சேர்ந்துவிடும். தபால் நிலேயம் என்று கண்டு கொள்வதற்கு சின்னமாகத்தான் தபால் பெட்டி ஒவ்வொரு நிலேயத்திலும் பொருத்தப்பட்டிருக்கிறது.

(குழந்தைகளேத் தபால் நிலேயத்திற்கு அழைத்துச் சென்று, அவர்கள் கையில் காசு கொடுத்து, தபால் கார்டு வாங்கச் செய்து, எழுதியபின் எதில் போடவேண்டும் என்பதைக் காட்டி மற்ற இதர வேலேகளேயும் விளக்கிக் கூற வேண்டும்,)

பிப்ரவரி மாதம் 1-வது வாரம்

பாடம் 2

வண்ணுன்

குழந்தைகளே! நேற்று நான் உங்களுக்கு அநேகப் படங்கள் காட்டி ஒரு கதை சொன்னேன் அல்லவா? அது போல இன்றும் உங்களுக்கு அதிகப்படங்கள் காட்டுவேன். படங்களேப் பார்த்து இது என்ன, யார் என்பதைக் கூற வேண்டும். எல்லோரும் கவனமாய்க் கேளுங்கள் நான் கூறுவதை. இங்கே பார் இது யார் வண்ணுன். நமது துணிகளேச் சலவை செய்து தருபவனே நாம் வண்ணுன் என்று அழைக்கிறேம். அவனே யார் யார் பார்க்கவில்லே. நமது வீடுகளுக்கு வந்து அழுக்குத் துணிகளே எடுத்துச் செல்பவன் தான் வண்ணுன். ராமா, நீ இன்று சுத்தமாக அணிந்திருக்கும் உடையைச் சலவை செய்து கொண்டு வந்தது யார்? வண்ணுன் ஆற்றுக்குச் சென்று அல்லது குளம் அல்லது தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களுக்கு அழுக்குத் துணிகளே எடுத்துக் கொண்டு சென்று நீரில் துணியை நனேத்து, சோப்புப் போட்டு துவைப்பான். நன்ருகக் கல்லில் அடித்து

அழுக்குப் போக துவைத்த பின் நீரில் அலசிக் காயப் போடுவான். அவனிடம் பல நிறமான துணிகளும் சலவை செய்ய வரும். இவன் நமது சமூகத்தில் ஒரு ஊழியன். இவனைப் போலவே நாம் இப்போது படத்தில் பார்த்த குயவன், போலீஸ், தபால்காரர், விவசாயி, செருப்பு தைப்ப வன் அனைவரும் நமது சமூகத்தில் ஒரு சிறந்த ஊழியர்கள். இவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் நான் உங்களுக்கு கூறுகிறேன். வண்ணான் கழுதை வளர்ப்பான். எதற்கு என்றால் அழுக்கு மூட்டைகளைச் சுமந்து செல்வதற்காக. கழுதை மூட்டைகளைத் தன் முதுகில் சுமந்து கொண்டு நீண்ட தூரம் செல்லும். எவ்வளவு துணி வைத்தாலும் சுமக்கக் கூடியது கழுதை. கழுதை எப்படிக் கத்தும்? (கத்திக் காட்ட வேண்டும்) கழுதையின் நிறம் கூறலாம். மேலே கூறிய முறைப்படி சுதந்திர உரையாடல் செய்ய வேண்டும்.

அமாவாசை ஓரிரு நாட்களில் மறைந்து பின் சந்திரன் சிறிது சிறிதாக வளர ஆரம்பிக்கிறது, இதற்கு வளர்பிறை என்று பெயர். சந்திரன் தனக்கு ஒளியைச் சூரியனிட மிருந்து பெற்றுக் கொள்கிறது.

ஜூன் மாதம் 1-வது வாரம்

பாடம் 2

சூரியன்

சூரியன் பிரகாசமான ஒளியையும், அதிகமான உஷ்ணத் தன்மையையும் கொண்ட பெரிய அளவுடைய பந்து ஆகும். இது சந்திரனை விடப்பெரியது. இது பகலில் தோன்றும். அதிகமான உஷ்ணக் கதிர்களைக் கொண்டது. காலையில் கிழக்குத் திசையில் உதித்து மாலையில் மேற்கு திசையில் மறையும். இது எந்தத் திசையில் உதிக்கிறதோ அத்திசை யைக் கிழக்கு என்று மதிப்பிடுவர்.

விண் மீன்கள்

நட்சத்திரக் கூட்டங்கள் வானத்தில் இரவு நேரங்களில் அதிகமாகப் பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். இவைகளும் இரவு நேரங்களில் தோன்றும். ஆயிரக்கணக்கான விண்மீன்கள் வானத்தில் தோன்றுகின்றன. இவைகளில் அநேக வகைகள் உள்ளன. பல சிறியதாகவும், சில பெரியவைகளாகவும் காணப்படும்.

ஜூன் மாதம் 2-வது வாரம்

பாடம் 1

பறவைகள்

குழந்தைகளே! நேற்று நாம் எதைப்பற்றிப் படித்தோம். அக்கா என்ன சொல்லிக்கொடுத்தேன். யாராவது கூறுங்கள் பார்க்கலாம்? என்ன படங்கள் காட்டினேன். சீதா எங்கே சொல்லு பார்க்கலாம். சரியான விடை சொன்னாய். நல்ல பிள்ளை. பார்த்தீர்களா குழந்தைகளே. சீதாவைப் போல் எல்லோரும் சொல்ல வேண்டும். நேற்று அக்கா, மிருகங்களின் படம் காட்டினேன். அதேபோல் இன்று உங்களுக்குப் பறவைகளின் படம் காட்டுகிறேன். குழந்தைகளே இது என்ன பறவை (படத்தை காட்டி) குழந்தைகள் கூறும் பதிலை உத்தேசித்து விளக்க வேண்டும். மிருகங்கள் நான்கு காலால் நடக்கும். ஆனால் பறவைகள் பறக்கும். சில இரண்டு கால்களால் நடக்கும். எல்லாப் பறவைகளுக்கும் இரண்டு இறக்கைகள் உண்டு. யார் வீட்டில் கோழி இருக்கிறது? அது என்ன நிறம். கோழி முட்டையிடும் அதை யார் பார்த்திருக்கிறீர்கள்? கோழி முட்டையின் நிறம் வெள்ளை. யார் நம்மிடையே இப்போது வெள்ளைச்சட்டை போட்டிருக்கிறார்கள் கூறுங்கள். சரியான விடை சொன்னாய் தம்பி. இந்த நிறத்தில்தான் முட்டையும் இருக்கும். கோழி பல

வண்ண நிறத்தில் இருக்கும். நாளை எல்லோரும் வரும் போது ஒரு கோழியின் இறகு கொண்டு வாருங்கள். வீட்டில் வளர்க்கும் பறவைகள் இவைகள். இன்னும் காட்டில் வசிக்கும் பறவைகளும் உள்ளன. அவைகள்தான் இவைகள் (படம் காட்டவேண்டும்) சரி குழந்தைகளே நாளை வேறு பறவைகளைப் பற்றி அக்கா கூறுகிறேன். கவனமாகக் கேட்க வேண்டும்.

ஜூன் 2-வது வாரம்
பாடம் 2

காகம்

காட்டிலுள்ள சில உயரமான மரங்களில் மரச் சுள்ளிகளினாலும், புற்களாலும் கூடு கட்டிக்கொண்டு காகம் வாழும். காகம் பார்ப்பதற்குக் கருப்பாக காணப்படும். இவை இரண்டிரண்டாய் வாழும். பெண் காகம் முட்டையிடும். இரண்டும் சேர்ந்து முட்டைகளை அடைகாக்கும். குஞ்சைத் தம் பகைவரிடமிருந்து கவனத்துடன் காப்பாற்றும். காகங்கள் பூச்சி, புழுக்களையும், தானியங்களையும், பழங்களையும் தின்கின்றன. பொருள்களை தெரியாமல் எடுத்துச் செல்லும். தெருவிலுள்ள அசுத்தங்களைச் சுத்தம் செய்யும். எனவே இதை வானத்தோட்டி என்பர். சிறிது உணவு கிடைத்தாலும் தனியாக உண்பதில்லை. 'கா கா' என்று மற்ற காகங்களைக் கூவி அழைத்துப் பகிர்ந்து உண்ணும். காலையில் எழுந்ததும் 'கா கா' என்று சத்திக் கொண்டு தண்ணீரில் தன் உடலைக் கழுவும். மாலையில் எல்லாம் ஒரு மரத்தில் உட்கார்ந்து, ஒலி செய்து, பின்னர் தம் தம் கூடுகளுக்குச் செல்லும்.

ஜூன் 3-வது வாரம்
பாடம் 2

கிளி

பச்சைக் கிளிகள் 'கீச், கீச்' என்று ஓசை செய்து கொண்டு பழங்களைக் கொத்தித் தின்னும். அவை மிக

அழகிய பறவைகள். அவற்றின் உடல் முழுதும் பச்சையாக அலகுமட்டும் சிவப்பாகவும் காணப்படும். இவை மரப் பொந்துகளில் வாழும். அங்கு முட்டைகளிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

கிளியின் அழகு நன்ருய் கொடுவாளைப்போல் வளைந்தும், மிகுந்த வலிமையுள்ளதாயும் இருக்கும். மிகக் கெட்டியான கொட்டைகளையும் அலகால் உடைத்து அது தின்னும். பஞ்சவர்ணக்கிளி என்ற ஒரு வகைக்கிளியும் உண்டு. அதன் உடலில் ஐந்து வண்ணங்கள் காணப்படுவதால் அதற்கு அப்பெயர் வந்தது பஞ்சவர்ணக்கிளி பச்சைக் கிளியைவிட மிகப் பருத்து மிக அழகாக காணப்படும். சிலர் கிளிகளைப் பிடித்துக் கூண்டில் அடைத்து வளர்ப்பதைப் பார்க்கிறோம். அவற்றிற்குப் பாலும் பழமும் கொடுத்து வளர்க்கிறார்கள். இது அழகாகப் பேசும்.

ஜூன் மாதம் 3வது வார பாடம் 1

வீட்டுப் பறவைகள்

கோழி

கோழி எங்கும் எளிதாகக் காணப்படும்—ஒரு மனைப் பறவை. பெட்டைக்கோழி தன் ஏழெட்டுக் குஞ்சுகளுடன் தானிய மணிகளைக் கொத்திக் கொத்தி அங்கும் இங்கும் உலாவுவதையும் அடிக்கடி 'கொக் கொக்' என்று கத்துவதையும் பார்க்கலாம். தெரு, தோட்டம், மனையினுட்புறம் போன்ற இடங்களில் காணலாம். சேவல் கோழி கொக்கரக்கோ என்று கூவுவதையும் பார்க்கலாம். சத்துள்ள உணவு வகைகளில் கோழிமுட்டை ஒன்ருகும். அதில் நல்ல சத்துணவு இருக்கிறது என்று அனைவரும் அறிவர். கோழியின் இறைச்சியைச் சாப்பிடலாம். முட்டைகளை அடை காக்கும் பண்பு கோழியிடம் சிறப்பாக அமைந்துள்ளது.

வான் கோழி

இதுவும் கோழியினத்தைச் சேர்ந்த ஒரு பறவையே. இதையும் மனையில் வளர்க்கிறார்கள். இதன் உடலமைப்பு வேடிக்கையானது அழகிய தோகை விரித்து மயில் ஆடுவதை பார்த்து வான்கோழியும் அழகில்லாத தன் வாலினை விரித்து ஆடும். தானே ஆடிப் பார்த்துக் கொள்ளும், முட்டைக் காகவும் இறைச்சிக்காகவும் இதை வளர்க்கிறார்கள். வான் கோழி ஓர் ஆண்டில் ஐம்பது முதல் எழுபது முட்டைகள் இடும். இது கூடு கட்டாது. நாம் அதற்கு கட்டிக் கொடுக்கவேண்டும். மணல் தரையில் பானையை வைத்து அதில் கோதுமை உமி அல்லது நெல் உமியைப் போட்டு அவ்வுமியின் மீது முட்டைகளை வைப்பார்கள், முட்டைகளை அதில் வைப்பதிலும் ஒரு செயலைக் கவனிப்பார்கள். முட்டையின் பருத்தபகுதியை மேற்புறத்திலும் குறுகிய பகுதியை தவிட்டின் மேலும் வைப்பார்கள். இப்படி வைத்தால் ஐந்தாறு நாட்கள் வரை அம்முட்டைகள் கெடுவதில்லை.

ஏழெட்டு முட்டைகள் சேர்ந்ததும் அவற்றை அடை வைத்துக் குஞ்சு பொரிக்கச் செய்வார்கள். இருபத்தியெட்டு நாட்கள் வரை அடைகாக்க பட்டபின் குஞ்சுகள் வெளிவருகின்றன. வான் கோழி தன்முட்டைகளைத் தானே அடை காக்கும். வான் கோழிகளையும் நோய் வராமல் இருக்க அவற்றை வளர்ப்பவர்கள் மிகக் கருத்துடன் கண்காணித்து வருவார்கள்.

ஜூன் 3 வது வாரம் பாடம் 3

காட்டுப் புறா

காட்டுப் புறா மரத்திலே அமர்ந்து கூவிக் கொண்டிருக்கும். அதன் கழுத்திலே புள்ளிகளிருப்பதால் அதை மணிப் புறா என்று கூறப்படுகிறது. அது மரத்திலே சில குச்சிகளால் கூடு கட்டி அதில் இரண்டு முட்டைகளிடும். இயல்பாகப்

பதினெட்டு நாட்களுக்குப்பின் குஞ்சுகள் வெளி வரும். தாய்ப்புறுவும் ஆண்புறுவும் மாறி மாறிக் குஞ்சுகளுக்குத் தீனி கொடுக்கும்.

புறுக்கள் மிகவும் தூய பறவைகள். அவை தானியத்தைத்தவிர வேறெந்த இரையையும் தின்னுது. ஆண் பெண் என இரண்டாகத்தானிருக்கும். 'கூ கூ' என்று ஒரு வகையாக ஒலித்தவாறு இருக்கும்.

ஜுலை மாதம் 1-வது வாரம்
பாடம் 2

மண்

மண் பலவகைப்படும். அவை களிமண், செம்மண், வண்டல் மண், கரிசல் மண், மணல் ஆகியவைகள் ஆகும். களிமண் கருப்பாக இருக்கும். இம்மண்ணில் நீர் விட்டால், நீர் தேங்கியே நிற்கும். இந்த மண்ணில் பயிர் செய்ய முடியாது. இந்த மண்ணை உபயோகித்து குழந்தைகளுக்கு பொம்மைகள் செய்யலாம். கைவேலை செய்வதற்கு குழந்தைகளுக்கு கொடுக்கலாம். செம்மண் சிவப்பு நிறமாக காணப்படும். இம்மண் காடுகளில் அதிகமாகக் காணப்படும். இந்த மண்ணில் பயறு வகைகள் அதிகமாகப் பயிரிடுவார்கள். வண்டல் மண் என்பதும் கருப்பாக காணப்படும். இம்மண்ணில் மக்கிய குச்சிகள், அழுகிய இலைதழைகள், சாணம் முதலியவை கலந்து காணப்படும். இம்மண் நீரை உடனே உறிஞ்சிக் கொள்ளும்.

மணல் ஆற்றிலும் கடற்கரையில் காணப்படும். இம்மண் வெண்மையாக இருக்கும். இம்மண்ணில் சில பெருமணலாகவும், குறுமணலாகவும் காணப்படும். (மணல்களைச் சிறிய பாட்டில்களில் அடைத்து வைத்து குழந்தைகளுக்கு அவ்வப்போது காட்டவேண்டும்.)

ஜுலை மாதம் 1-வது வாரம்.
பாடம் 3.

நீர் (தண்ணீர்)

மனிதன் உயிர் வாழ்வதற்கு பல அத்தியாவசியமான பொருட்கள் தேவைப் படுகின்றன. அவற்றினில் மிகவும் முக்கியமானது தண்ணீர்ஆகும். தண்ணீர் நமக்குக் குடிக்க, குளிக்க, துணிகளைத் துவைக்க இன்னும் பல வகைகளில் உபயோகப்படுகிறது. நீர் குடிப்பதற்கு இல்லாவிடில் நாம் உயிர் வாழ இயலாது. (பொதுவாக எல்லா வேலைகளுக்கும் நீர் மிகவும் அவசியம் என்பதைச் சில உதாரணங்கள் கூறி ஆசிரியை விளக்க வேண்டும்) தண்ணீரில் குழந்தைகள் சில வேளைகளில் விளையாடுவதைக் காணும்போது அவர்களுக்கு எந்தெந்தப் பொருட்கள் தண்ணீரில் மிதக்கும், எவை மூழ்கும் என்பதைப் புரிய வைக்கவேண்டும். நீரில் வாழும் மிருகங்கள், பறவைகள் முதலியவைகள் நீர்க்குளங்களில் தேங்கியதும் வந்து விடும். அவைகள் பின் தன் இனத்தை பெருக்கிக் கொள்கின்றன. தண்ணீரில் இரு வகை உண்டு. கடின நீர், மென்னீர் என்று. கடின நீர் சோப்புடன் கலந்தால் நுரை தராது. செடிகள் வளருவதற்கு தண்ணீர் அவசியமாக இருக்கிறது. எல்லா ஜீவராசிகளுக்கும் நீர் அவசியம்.

ஆகஸ்ட் மாதம் 2-வது வாரம்.
பாடம் 1.

சுதந்திர தினம்

மனிதனைப் பிறந்த ஒவ்வொரு ஜீவராசியும் இதை விரும்பும். ஆறு அறிவுகள் படைத்த மனிதன் விரும்புவதில் ஆச்சரியமில்லை. முன்னூறு ஆண்டுகள் இந்தியாவில் வியாபாரம் செய்ய வந்த ஆங்கில இந்திய வர்த்தக கம்பெனி தனது செல்வாக்காலும் பண பலத்தாலும், இந்திய அரசர்களிடம் ஒற்றுமை இல்லாத சூழ்நிலையிலும் தமது அதி

காரத்தை வேரூன்றி தமது அதிகாரத்தின் கீழ் பல இடங்களைக் கொண்டு வந்தது. இதன் வளர்ச்சியைக் கண்ட இங்கிலாந்தின் அரசர் இந்தியாவை, ஆட்சிப் பொறுப்பை கம்பெனியிடமிருந்து தன் கைவசம் பெற்றுக் கொண்டு தனது பிரதிநிதியாக வைஸ்ராய்களையும், ஆங்கில கவர்னர்களையும், அதிகாரிகளையும் அனுப்பி இந்தியாவைத் தன் கைவசம் ஆக்கிக் கொண்டார்.

இடையில் அரசர்களையும் எல்லா சமஸ்தானங்களையும் கைப்பற்ற பல பேர்களும் சிறைவாசமும், அநிதிகளும் ஆங்கில அரசால் உண்டானது. இந்தியாவில் உற்பத்தியாகும் விலையுயர்ந்த உலோகம், கனிப்பொருட்களைத் தன் நாட்டிற்குக் கொண்டு சென்று பொருளாக்கி திரும்ப நம்மிடையே விற்று அதிக லாபம் சம்பாதித்தது.

1885-ல் முதலில் காங்கிரஸ் கூடி படிப்படியாக அது வளர்ந்து இந்திய தேசியக்காங்கிரஸாக மாறிப் பல தலைவர்களின் தலைமையின் கீழ் நடந்து கடைசியில் மகாத்மா காந்தியின் சத்தியம், அஹிம்சை, கருணை, கூட்டுச் சேரா இயக்கம், வரி கொடா இயக்கம், பஹிஷ்காரம் போன்ற அமைதியான போராட்டத்திற்குப் பின் கிட்டத்தட்ட 55 ஆண்டுகளுக்குப் பின் அதாவது 14 ஆகஸ்ட் இரவு 12 மணிக்கு 1947 ஆம் ஆண்டு அதாவது 15-8-47 அன்று இந்தியா சுதந்திரமடைந்தது. இதே தினத்தன்று பாகிஸ்தானும் பிரிந்து சுதந்திர நாடானது. அது பிரியாமலிருந்தால் இந்தியா மிகவும் அகண்டதாக இருந்திருக்கும். முதல் வைஸ்ராயாக 15-5-47 அன்று ராஜாஜியும், பிரதமராக நேருவும் பொறுப்பு ஏற்றனர்.

ஆகஸ்ட் மாதம் 2-வது வாரம்.

பாடம் 3.

ரம்ஜான்

உலகம் முழுவதும் வாழும் முஸ்லீம்களுக்கு அவர்களது சமயக் கட்டளைப்படி அமைந்திருக்கும் திருநாட்கள் இரண்டு.

இத்திருநாளை குறிக்கும் சொல் "ஈத்" என்பதாகும். ஈத் என்ற அராபியச் சொல்லுக்கு திரும்பத் திரும்ப வரும் நாள் என்று பொருள்.

இந்த முதலாவது திருநாள் இஸ்லாமிய ஆண்டின் 9-வது மாதமாகிய ரமலான் முடிந்து ஷவ்வாலின் முதல் நாளில் அமைவது. ரம்ஜான் முஸ்லீம்களுக்கு முக்கியமான மாதமாகும். இம்மாதம் முழுவதும் நோன்புகள் கடமை யாக்கப்பட்டிருக்கிறது. இம்மாதம் முழுவதும் வைகறையில் குறிப்பிட்ட நேரத்திலிருந்து உண்ணாமல், பருகாமல் இறை வனுடைய நினைவில் இருத்தல் வேண்டும். உண்மையிலேயே இது ஒரு சோதனை ஆகும். இக்காலத்தில் இரவில் பள்ளி வாசல்களில் குரானை மனப்பாடமாக ஓதி விசேட பிரார்த் தனைகள் 30 நாட்கள் நடைபெறும். குரானில் 30 காண்டங் கள் உண்டு. நாள் ஒன்றுக்கு ஒரு கீதம் ஓதி 30 நாட்களில் மனப்பாடமாக ஓதி தொழுகை நடக்கும்.

இந்தச் சோதனை முடிந்தவுடன் அடுத்து வரும் மாதத் தின் முதல் நாளை "நோன்புப் பெருநாள்" என கொண்டாடு கிறார்கள். அரபு மொழியில் இத்திருநாள் "ஈதுல் பிதர்" என்பது ஒரு ராகை. அது ரமலானின் கடைசியிலாவது அல்லது ஷவ்வால் மாதம் முதல் நாளிலாவது கொடுத்தல் வேண்டும். ஈதுல் fithir க்கு நேர் தமிழ் சொல் ஈகைத் திரு நாள் எனக் கூறலாம். இந்த ஒருமாத காலத்தில் நோன் பிருந்து அதன் மூலம் மிஞ்சும் திரவியத்தை அடுத்த ஏழை களுக்கு கொடுக்கும் பொருட்டே இந்நோன்பு வைக்கப் பட்டு ஈதுல் பிதர், ஈகைத்திருநாள், நோன்புப் பெருநாள் என பெயர் பெறலாயிற்று இது முடிந்தவுடன் ஹஜ்ஜுா் பெருநாள் அதாவது பக்ரீத் பண்டிகை வரும்.

ஆகஸ்ட் மாதம் 3-வது வாரம்.
பாடம் 1.

காய்கறிகள்

காய்கள் பல நிறங்களிலும், பல வகைகளிலும் கிடைக்கும். இவை மரங்களிலிருந்தும், செடிகளிலிருந்தும், கொடிகளிலிருந்தும் கிடைக்கும். (படங்கள் காட்டி விளக்க வேண்டும்.) பெரும்பாலும் காய்கள் பச்சை நிறமாகவே இருக்கும். சிலவகை சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள் ஆகிய நிறங்களில் காணப்படும். காய்களில் வைட்டமின்களும், புரதச் சத்தும் அடங்கியுள்ளன. நாம் நமது வீட்டுத் தோட்டத்தில் பயிர் செய்து கொள்ளலாம். முருங்கைக்காய், வாழைக்காய் போன்றவை மரத்திலிருந்து கிடைக்கிறது (நேரடியாக அழைத்துச் சென்று காட்ட வேண்டும்) கொடிகளிலிருந்து கிடைப்பவை பூசணி, அவரை, சுரைக்காய், பீர்க்கு, பாகற்காய், புடலங்காய் போன்றவை ஆகும். (கொடியானது தரையில் படர்ந்து செல்லும் என்று கூற வேண்டும்.) அதிகமாகக் காய்கள் நமது உணவில் சேர்த்துக் கொள்வதால் உடல் நன்கு வளர்ச்சியடைகிறது. சில காய்களைச் சமைத்து சாப்பிடுவதை விட பச்சையாக உண்ணுவது மிகச் சிறந்ததாகும். காய்களில் நீர்ச்சத்து அதிகமாக உள்ளது. நமது உடலுக்குச் சக்தி அளிக்கிறது. நோய் வராமல் தடுக்க உதவுகிறது. நமது அன்றாட உணவில் காய்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது பெரியோர்களது கொள்கையாகும்.

செப்டம்பர் மாதம் 3 - வதுவாரம்.
பாடம் 1.

பழங்கள்

நாம் நமது அன்றாட வாழ்வில் உபயோகப்படுத்தும் பொருட்களில் மிகவும் சிறந்ததாக விளங்குவது பழங்கள்

ஆகும். பழவகைகள் பல நிறங்களிலும், பலவிதமான ருசி யுடனும் கிடைக்கின்றன. சில பழங்கள் செடியிலிருந்தும், சில மரத்திலிருந்தும், சில கொடியிலிருந்தும் கிடைக் கின்றன. இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, புளிப்பு ஆகிய சுவை கள் கலந்த பழங்களை நாம் காண முடிகிறது ஆப்பிள் பழம் சிவப்பாகவும், வாழைப்பழம் மஞ்சளாகவும் இருக்கிறது. செரிபழம் பல சுவைகளும் கலந்ததாக இருக்கிறது. மரத்தில் பழுக்கும் வேப்பம் பழம் கசப்பும் இனிப்பும் கலந்ததாக இருக்கிறது. திராட்சைப்பழம் கருநீலக்கலரில் இருக்கிறது பழங்கள் உணவில் சேர்ப்பதால் அநேகசத்துப் பொருட்கள் கிடைக்கிறது. ஜீரண சக்தி அதிகப்படுத்தப் படுகிறது இரும்புச்சத்து கிடைக்கிறது. இரத்தம் விருத்தி அடைகிறது. மாம்பழம், பலாப்பழம், பப்பாளிப்பழம், கொய்யா, இலந் தப்பழம், பேரிக்காய், ஆரஞ்சுப்பழம் முதலியவை சாப்பிட் டால் நமது உடலுக்கு நல்லது.

மகாத்மா காந்தி

மகாத்மா காந்தி அடிகளைப்பற்றி நம் நாட்டு மக்கள் நன்கு அறிவர், இவர் போர்பந்தர் என்னும் ஊரில் பிறந் தார். அவருடைய தந்தை பெயர் கரம்சந்த் உத்தம் சந்த் காந்தி. தாயார் பெயர் புட்லி பாய்.

சிறு வயதிலிருந்தபோதே காந்தி உண்மையே பேசினார். அவருக்கு பதின்மூன்று வயதில் திருமணம் நடந்தது. அவர் மனைவி பெயர் கஸ்தூரிபாய். இளமையில் உள்ளூரில் ஒரு பள்ளியில் கல்வி பயின்றார். 19வது வயதில் அவர் இங்கிலாந்து சென்று சட்டக் கல்லூரியில் படித்து பாரீஸ்டர் பட்டம் பெற்றார். வெளிநாட்டில் இருக்கும் பொழுது அவர் மது அருந்தவில்லை; புலால் உண்ண வில்லை; தூய வாழ்க்கை நடத்தினர். இந்தியா திரும்பிய அவர் பம்பாயில் வழக்கறிஞராக தொழில் புரிந்தார்.

பின்னர் தென் ஆப்பிரிக்காவுக்கு ஒரு வழக்கறிஞராக சென்றார். அவர் அங்கு வசித்த இந்தியர்களின் நிலைமையை உயர்த்த ஆங்கில அரசை எதிர்த்துப் போராடினார், ஓரளவு வெற்றியும் பெற்றார். அவருடைய போராட்டம் அமைதியான முறையில் இருந்தது. இந்தப் போர் முறைக்குச் சத்தியாக்கிரகம் என்பது பெயர்.

இந்தியாவிற்குத் திரும்பிய காந்தி காங்கிரசுக் கட்சியில் சேர்ந்து இந்திய சுதந்திரத்திற்காகப் போராடினார்.

ஒத்துழையாமை இயக்கம், வரிகொடா இயக்கம், உப்புச்சத்தியாக்கிரகம் போன்ற பல இயக்கங்களை அவர் துவக்கிவைத்தார். இப்படிக் காந்தி அடிகள் நடத்திய கிளர்ச்சிகள் ஆங்கில அரசாங்கத்தை நிலைகுலையச் செய்தன.

தீண்டாமை ஒழியப் பாடுபட்டார். கைராட்டையில் நூற்றுக் கதர் தொழிலில் ஈடுபடப் பாடுபட்டார். தம் ஆயுள் முழுவதும் எளிய வாழ்க்கையை நடத்தினார். நாடு சுதந்திரம் அடையும் வரை ஓயாமல் உழைத்தார். இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார்.

1948-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் நாள் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்,

காந்தீ ஜெயந்தி

காந்திஜி அவர்கள் இந்த மண்ணுலகில் பிறந்த நாளையே காந்திஜி ஜெயந்தி என்று கூறுகிறோம். 2.10.1869 ஆம் வருடம் அண்ணல் காந்திஜி பிறந்தார்கள். அஹிம்சை முறையில் சாத்வீகமான பாதையில் சுதந்திரம் பெற பாடு பட்டார்கள். அண்ணல் அவர்கள் இந்தியப் பிரஜைகளை அந்நியரின் பிடியிலிருந்து விடுவித்த பெருமையும், மக்களுடன்

மக்களாக வாழ்ந்து எளிமையான தோற்றமுடன் திகழ்ந்த அண்ணல் அவர்களை என்றும் மறக்கமுடியாது. தனது வாழ்வில் ஏற்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியையும் சத்திய சோதனை என்றே கழித்தார். ஆகவே அவர் மகாத்மா அதாவது மகா + ஆத்மா- அதாவது சாதாரண மனிதனுக்கும் ஓர் அப்பாற்பட்ட சக்தியை பெற்ற புண்ணிய புருஷர். ஆகவே அவரைத் தேசப்பிதா எனறழைக்கிறோம். அவரது பிறந்த நாளான அக்டோபர் காந்தி ஜெயந்தியாகக் கொண்டாடப்பட்டு நாடெங்கும் பல நிகழ்ச்சிகள் நடத்தப் படுகின்றன.

காந்தி இறந்த நாள்

இந்தியா சுதந்திரமடைந்து, மக்கள் நல்வாழ்வு பெற்று வளமுடன் திகழப் பாடுபட்டு, மக்களுக்காக அநேக துன்பங்களை ஏற்று இறுதியில் வெற்றி கண்ட அண்ணல் காந்திஜி அவர்கள் ஜனவரி மாதம் 30-ந் தேதி 1948-ம் வருடம் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த நாள் நமக்கு ஒரு துக்கமான மறக்கமுடியாத நாளாகும். இந்தியா சுதந்திரம் பெற்ற பின் நிர்மாண வேலை ஆரம்பிக்கவும், கல்விமுறையைச் சீர் திருத்தவும் யோசித்துக்கொண்டிருந்தார். வட இந்தியாவில் பரவியிருந்த இந்து, முஸ்லீம் கலவரத்தை அடக்க அவர் அரும் பாடுபட்டார். பயங்கரமான கொலைகள் செயல்பட்டுக் கொண்டிருந்தன. அவர் எல்லா மதத்தினரையும் சமமாகப் பாவித்து வந்தார்.

30-1-48-ம் தேதி காலையில் டில்லியில் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு சென்றுகொண்டிருக்கையில் இந்து மதத்தின் மீது அதிகப் பற்று கொண்ட தாதுராம் கோட்சே (godse) என்பவரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்தியாவெங்கும் பிரார்த் தனைக்கூட்டங்களும், நதிகளின் சங்கமம் ஆகும் இடங்களிலும்

புஷ்பாஞ்சலியும் செய்யும் வைபவங்கள் நடைபெறும். இதுவே காந்தி புண்ணிய திதி எனப்படும்.

அக்டோபர் மாதம் 1-வது வாரம்.
பாடம் 1.

அன்னை கஸ்தூரிபாய்

காந்திஜியின் மனைவியான கஸ்தூரிபா 4 ஆண்மகன் களுக்குத் தாயாகவும், காந்திஜீயின் சீர்மிக்க மனைவியாகவும் இருந்ததுமில்லாமல் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடும் தலைவர்கள் (நேரு, படேல், இராஜேந்திர பிரசாத்) எல்லோருக்கும் தாயாகவும், மார்க்கதரிசியாகவும் இருந்தார்.

தன்நலம் கருதாது காந்திஜீயிடம் வரும் எல்லோரிடமும் பண்பும், பாசமும், கலந்து உபசரிப்பதுடனில்லாது காந்திஜி செய்யும் எல்லா விபரீதப் பரீட்சைகளுக்கும் தன்னையும், தன் குமாரர்களையும் அபர்பணம் செய்ததோடல்லாமல், காந்திஜி விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு கொள்ள மிகவும் முக்கிய பாத்திரமாக விளங்கினர்.

ஒருமுறை நேருவுக்கும், காந்திஜிக்கும் பெரும் விவாதம் ஏற்பட்டது. அப்போது இவர் அமைதியாகப் பார்த்திருந்து விட்டு, இருவருக்கும் பாலில் ஆரஞ்சு சாரைப்பிழிந்து பருகச் சொல்லி இருவரையும் 3 நிமிடம் கண்களை மூடி அமைதியாக தியானம் செய்யும்படி வேண்டிக்கொள்ள இருவரும் கஸ்தூரி பாவுடண் தியானம் செய்தனர். பிறகு வாக்குவாதமின்றிக் கருத்து ஒற்றுமை ஏற்பட்டுப் போராட்ட செயல்களில் ஈடுபட்டனர்.

கல்வியறிவில்லாத வீட்டுப் பெண்தான் கஸ்தூரிபா. காந்தியுடன் பால்ய விவாகம் முடித்து, ஆப்பிரிக்காவில் தொழில் நிமித்தம் சென்ற காந்தி அரசியலில் ஈடுபட்டவுடன்

தானும் அவருடன் சென்றார். அங்கு இந்தியக் கூலிகள் படும் அவதியைக் கண்டு அங்கே ஒரு ஆசிரமத்தை ஆரம்பித்து தாய்மையையேஅடிப்படையாகக் கொண்டு பல போராட்ட வீரர்களைத் தயார் செய்தார்.

மக்களால் அளிக்கப்பட்ட பரிசுப் பொருட்களை விட்டு தர மனமில்லாதிருந்த கஸ்தூரிபா மிக மிக மதிப்புள்ள பொருள்களைத் தியாகம் செய்து, வெறும் கையுடன் வந்தா ரென்றால் நமக்கு ஆச்சரியமாக இருக்கும். எழுத்தறிவே இல்லாத ஒரு கிராமப் பெண் தேசீய தலைவர்களை உருவாக்கு வதில் அளித்த தியாகம் அளவிட முடியாதது. காந்திஜி எரவாடா சிறையில் கைது செய்யப்பட்டிருக்கும் போது கஸ்தூரிபாகாந்தி நோய்வாய்பட்டு விண்ணுலகை எய்தார். காந்திஜி கஸ்தூரிபாவை அம்மா (பா மேரிபா) என்றே அழைப்பது வழக்கம்.

அக்டோபர் மாதம் - 2வது வாரம்.

பாடம் 2.

சரஸ்வதி பூஜை

இந்த விழாவை முக்கியமாக எல்லா வகுப்பினரும் கொண்டாடி வருகின்றனர். சரஸ்வதி என்ற பெயர் கல்வியை அளிக்கக்கூடிய தெய்வத்தைக் குறிக்கும் பெயராகும். தெய்வத்தின் அவதாரங்களை ஒன்பது நாள் வணங்கிக் கொண்டாடி வருவார்கள். அதற்கு "நவராத்திரி" என்று பெயர். ஒன்பதாவது நாள் சரஸ்வதிக்குப் பூஜை செய்வது வழக்கம். அன்றைய தினத்தில் படிக்கும் புத்தகங்கள் அனைத்தையும் வைத்துக் கும்பிடுவர். அடுத்தநாள் ஆயுத பூஜையாகும். விசேட மாக உற்பத்தி நிலையங்கள், தொழிற்சாலைகள் முதலிய வற்றில் இவ்விழா கொண்டாடப்படும். இத்தினத்தன்று இயந்திரங்கள், உபகரணங்கள் முதலியவைகளைச் சுத்தம்

செய்து பூ அணிவித்து, சந்தனம் பூசி இறைவனை வணங்கி தமது சக்திக்கேற்ப இனிப்புக்களை வழங்குவர். இது இந்துக்களின் முக்கியமான விழாவாகும். ஒரு சூரனை அழித்ததற்காகக் கொண்டாடப்படுவது நவராத்திரி ஆகும்.

நவம்பர் மாதம் 1-வது வாரம்.

பாடம் 1.

மிருகங்கள்

மிருகங்களில் பல வகைகள் உண்டு. அவற்றை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை வீட்டில் வளரும் மிருகங்கள். காட்டில் வளரும் மிருகங்கள் ஆகும். அவற்றில் சிலவற்றை பற்றிப் பார்ப்போம்.

வீட்டில் வளர்க்கும் மிருகங்கள் நாய், எருமை. பசு, பூனை, கழுதை, ஆடு, முதலியன ஆகும்.

பசு: பசுவை வீட்டில் நாம் பார்க்கலாம். இது நமக்குப் பால் தருகிறது. பால் வெண்மை நிறமாக உள்ளது. இதன் உணவு புல், வைக்கோல், கழுவுநீர், பிண்ணுக்கு, தவிடு போன்றவைகளாகும். குழந்தைகளுக்குப் பசுவின் பால் உதவுகிறது. பசுவிற்கு நான்கு கால்கள் உள்ளன. பால் நமக்குத் தயிராகவும் மோராகவும் பயன் படுகிறது. பாலில் அதிகச்சத்துப் பொருட்கள் அடங்கிவுள்ளமையால் இதனை நோயாளிகளுக்கு கொடுக்கிறார்கள் இது ஒரு சிறந்த முழு உணவாகும்.

காளை மாடுகள் ஏர் உழவும், இதர விவசாய வேலைகளுக்கும் உதவுகின்றன. பொங்கல் சமயங்களில் மாடுகளைச் சிங்காரித்து தெய்வமென நமது பழங்கால முறைப்படி பெரியோர்கள் கும்பிடுவார்கள்.

நவம்பர் மாதம் 2-வது வாரம்.

பாடம் 1.

தீபாவளி

வட இந்தியாவில் ஒரு காலத்தில் நரகாசுரன் என்னும் ஒரு பெரும் அரக்கன் இருந்தான். ஊர் மக்கள் தினமும் அவனுக்கு வண்டி நிறைய உணவும், ஒரு ஆளும் அனுப்ப வேண்டும் என்பது சட்டம். இந்த நிலை நீண்ட நாள் நீடித்து வந்தது ஒரு நாள் ஒரு சிறுவன் பலியாகும் முறை வந்தது. அவனும் சென்றான். ஆனால் சிறுவன் தந்திரசாலியாக இருந்தமையால், தனது தந்திரச் செயலால் அந்த அரக்கனைக் கொன்றான். இதைக் கேட்ட ஊர் மக்களுக்கு அளவிட முடியாத ஆனந்தம் ஏற்பட்டது. தமது ஆனந்தத்தை வெளிப்படுத்த வான வெடிகளை விட்டும், நல்ல ருசியான பதார்த்தங்களைச் சுட்டும், புத்தாடைகளை உடுத்தியும் கொண்டாடினர். அதன் பலனாகவே இன்றும் நாமும் பட்டாசு, பக்ஷணங்கள், புத்தாடை யுடுத்துதல் போன்றவைகளைச் செய்து வருகிறோம். இது முக்கியமாக அமாவாசையன்று வரும். இது இந்துக்களின் தலையாய பண்டிகையாகும். இவ்விழா அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் வரும் இந்த விழா ஒரு விஷேசமான விழாவாகும்.

நவம்பர் மாதம் - 2வது வாரம்.

பாடம் 2.

நேருவின் இளமைப் பருவம்

மோதிலால் நேருவுக்கும், சொரூபராணி அம்மையாருக்கும் 1887-ஆம் ஆண்டு நவம்பர் 14 ம் தேதி அலகாபாத் என்னும் இடத்தில் பிறந்தார். அவர் தம்

இளமைப் பருவம் முதற் கொண்டு தெய்வ பக்தியும், ஆழ்ந்த சிந்தனையும், அறிவும் உடையவர். அவருக்கு குதிரை ஏறுவதும் என்றால் மிகவும் பிடிக்கும். ஒரு நாள் குதிரையில் சென்று கொண்டிருக்கும் போது கீழே விழுந்து விட்டார், இவர் தம் பள்ளிப்படிப்பை முடித்த பிறகு மேல் படிப்பிற்காக லண்டன் சென்றார். இவர் இந்திய மக்களின் கஷ்டத்தைக் கண்டு மிகவும் வருந்து வார். இவர் இந்தியாவின் சுதந்திரத்திற்காக பெரிதும் பாடுபட்டு, பல தடவை சிறை சென்றார். இவரின் மகள் தான் இன்று நம் நாட்டை ஆளும் பிரதமர் இந்திரா காந்தி ஆவார். நேரு நாட்டிற்காகப் பல நன்மைகளைச் செய்தார்.

நேருவுக்குச் சிறு குழந்தைகள் என்றால் மிகவும் பிரியம். எப்பொழுது அவர் சிறு குழந்தைகளுடனே இருப் பார். இவருக்கு ரோஜாப் பூ என்றால் மிகவும் பிடிக்கும். இவர் எப்பொழுதும் கதர் ஆடை அணிந்து தலையில் தொப்பி வைத்திருப்பார். நம்நாடு சுதந்திரம் அடையப் பாடுபட்டவர்களில் ஒருவர் இவர். இவர் சிறு குழந்தை யாய் இருக்கும் போது அவருடைய அப்பாவின் பேனாவை எடுத்து விட்டார். அப்பா உண்மை அறிந்து நேருவை அடித்தார். அதிலிருந்து அவர் பிறர் பொருளை எடுக்கும் பழக்கத்தைக் கைவிட்டார்.

நவம்பர் மாதம் 2–வது வாரம்.
பாடம் 3.

பூக்கள்

பூக்கள் பல நிறங்களில் காணப்படுகின்றன. அவை தாமரைப்பூ, சாமந்திப்பூ, கனகாம்பரம், மல்லிகை, அரளிப்பூ, முல்லைப்பூ ஆகும். பூக்கள் பார்ப்பதற்கு அழகாகக் காணப்

படும். கண்ணைக்கவரும் வண்ணங்களில் பூக்களை எங்கும் காணலாம். தாமரைப்பூ சிவப்பும், ரோஸ் கலரும் கலந்த நிறத்தில் காணப்படும். தாமரைப்பூ நீரில் மலரும். இலை வட்ட வடிவமாக இருக்கும். நீரின் மேல்பாகத்தில் மிதந்து கொண்டு இருக்கும். ரோஜாப்பூவின் செடியில் முட்கள் காணப்படும். மல்லிகைப்பூ கொடியில் பூக்கும் மலராகும். இது வெண்மை நிறமுடையது. மணம் வீசும் தன்மையைப் பெற்றது. பூக்களில் பொதுவாகத் தேன் நிறைந்து இருக்கும். தேனீக்களும், வண்டுகளும் இந்த மலர்களில் உள்ள தேனை உறிஞ்சிக் குடிக்கும். சில பூக்கள் மாலையில் இதழ்களைக் குவித்து வாடிவிடும். சில காலையில் மலரும். சில பூக்கள் மாலையில் மட்டும்தான் மலரும். காலையில் வாடிவிடும். சூரிய காந்திப்பூ மஞ்சள் நிறமுடையது. இது சூரியன் உதிக்கும் திசையை நோக்கியே மலரும். அநேக இதழ்களைக் கொண்டது இம்மலர். சில பூக்கள் பார்க்க அழகாக இல்லாவிட்டாலும் நன்ருக மணம் வீசும். சில அழகாக இருக்கும்; ஆனால் மணம் தராது. (படம் காட்டி விளக்கவேண்டும்)

நவம்பர் மாதம் 3-வது வாரம்.

பாடம் 2.

(ஹஜ்) பக்ரீத் பண்டிகை

ஹஜ் என்பதின் பொருள் ஓர் இடத்திற்குச் செல்வது. இஸ்லாமியக் கொள்கைப்படி அரபு நாட்டிலுள்ள கஃபா (மக்கா) என்ற இறையில்லத்தை நோக்கி செல்லும் பயணத்தினை ஹஜ் என்ற சொல் குறிக்கும். இது முஸ்லீம்களின் ஐந்து பெரும் கடமைகளில் ஒன்ருகும். இது முஸ்லீம்களின் இரண்டாவது பெருநாள். இஸ்லாமிய ஆண்டின் கடைசி மாதமாகிய துல்-ஹஜ்ஜின் பத்தாம் நாள் அமைவது. இதை ஹஜ் பெருநாள் அல்லது பக்ரீத் பண்டிகை எனக் கூறுவது உண்டு.

இறைவன் கொள்கையினை அநேக துன்பங்களுக்கிடையில் பரப்பிக் கொண்டிருந்த இப்ராஹிம் நபி அவர்கள், பிறந்த இடமான இராக் நாட்டை மட்டுமின்றி உற்றார் உறவினரை யும் துறந்து பிரிய நேர்ந்தது. இப்பெருமானுக்கு ஒரு சோதனை தங்களுடைய வயோதிக வயதில் பிறந்து பலவற் றாலும் தங்களுக்கு உறுதுணையாக விளங்கும் ஒரே மகனை இஸ்மாயிலை அறுத்துப் பலியிடவேண்டும் என்ற சமிக்ஞை இறைவனிடமிருந்து தங்களுக்கு வந்ததாக இப்ராஹிம் நபி யவர்கள் உணர்ந்தார்கள். பதைக்கும் நெஞ்சத்தினராகி இதனைத் தம் மைந்தரிடையே வெளியிடுகிறார்கள். மனம் குலையாத மைந்தர் இஸ்மாயில் தந்தையின் குறிப்பறிந்து "தந்தையே இறைவனின் விருப்பம் இது என்றால் தயக்கமின்றி நிறைவேற்றுக" என்று சொல்கிறார்.

துல்ஹக் மாதம் எட்டாம் நாள், குறித்த நேரத்தில் மைந்தனை, தம் நம்பிக்கை ஒளியாகத் திகழும் ஒரே மைந் தனை இஸ்மாயீலின் குனிந்த கழுத்தைக் குறி பார்த்து கூரிய வாளை வீசுகிறார் இப்ராஹிம் நபியவர்கள். ஆனால் இறைவனே அவர்களைத் தடுத்து இஸ்மாயிலுக்குப் பதிலாக ஓர் ஆட்டை அறுத்துப் பலியிட பணிக்கிறார்.

உள்ளத்தை உருக்கும் இந்த தியாக நிகழ்ச்சியை நினைவு கூறும் வகையில் ஹக் கடமையை நிறைவேற்றுபவர்கள் இஸ்மாயிலை அறுத்துப் பலியிட முற்பட்ட 'மினா' என்ற இடத் தில் ஆட்டையோ, மாட்டையோ அறுத்துப் பலியிடுகிறார்கள். ஹாக்ஜீக்கு செல்லாதவர்கள் தத்தம் இடங்களில் இருந்து கொண்டே இதனைச் செய்கிறார்கள். இந்த மிருக பலியானது "குர்பான்" என்றும் "உல்ஹிய்யா" என்றும் வழங்கப்படு கிறது. அரபு மொழியிலுள்ள இவ்விரு பதங்களும் 'தியாகம்' என்ற பொருளைத் தருவனவாகும். இதைப் பக்ரீத் என்றும் கூறுவர். அதாவது பலியிடும் பண்டிகை எனப் பெயர் பெறும்.

டிசம்பர் மாதம் 1-வது வாரம்.

பாடம் 2.

மழை

மழை எந்தெந்த காலங்களில் பெய்கிறது, மழை எப்படி பெய்கிறது, மழை பெய்வதினுல் என்ன நன்மை நமக்கு உண்டாகிறது என்பதையும் குழந்தைகளுக்கு எடுத்துரைப் பது மிகவும் அவசியமாகும். மழை பெய்வதைக் காணவும், மழை பெய்யும் சமயங்களில் விளையாடவும் குழந்தைகள் அதிகம் விரும்புவர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. மழை பெய்தவுடன் பல பூச்சிகள் வெளிப்படும். தவளைகள் மிகுதியாகக் காணப்படும். பயிர்கள். செடிகள் நன்ருகத் தழைத்து வளரும். குளங்கள் நிரம்பும். ஆறுகளில் தண்ணீர் ஓடும். பூமியில் தேங்கி நிற்கும் நீரானது ஆவியாக மாறி மேலே சென்று பின் மழையாகப் பெய்கிறது. மழை பெய்வ தற்கு முன் இடி இடிக்கும். (இடி இடிக்கும் சத்தத்தை குழந்தைகள் கேட்க வாய்ப்பளித்து அப்போது விளக்கிக் கூற வேண்டும்) மழை பெய்வதற்கு முன், மழை பெய்யும் என்ப தற்கு அறிகுறியாக இடிஇடிக்கும், பின் மின்னல் (பிரகாச மான வெளிச்சம்) ஏற்படும். மழை வராததற்கு அறிகுறி யாக வானவில் மேகங்களில் தோன்றுவதைக் காணலாம்.

மேகங்கள் :

வானத்தில் திரள்திரளாக மேகக்கூட்டங்கள் இருப்பதை நாம் காணலாம். சிறு குழந்தைகள் மேகங்கள் நகர்ந்து செல்வதைப் பார்த்து, தண்ணீர் கொண்டு வரச் செல்கிறது என்று கூறுவதை கண்கூடாகப் பார்த்திருக்கிருேம். மேகங் கள் வானத்தை மறைத்து இருக்கும். சாம்பல் கலர் கலந்த கறுப்பு நிறமாகக் காணப்படும்.

வானம் :

வானம் பகல் நேரங்களில் வெண்மை நிறமாகவும், இரவு நேரங்களில் கறுப்பு நிறமாகவும் காணப்படும். வானத்தில்

நட்சத்திரக் கூட்டங்கள், சந்திரன் இவைகள் இரவு நேரத்திலும், சூரியன் பகல் நேரத்திலும் தோன்றும்.

சந்திரன் :

இது இரவு நேரத்தில் தோன்றும். இது சூரியனை விட அளவில் சிறியது. சந்திரன் இரவில் பிரகாசமான ஒளியை நாடெங்கும் பரப்பும் தன்மையுடையது. பௌர்ணமியன்று சந்திரன் முழுவட்ட வடிவமாகி பெரிதாகவும், ஒளியை பிரகாசமாகக் கொடுக்கக் கூடியதாகவும் காணப்படும். பௌர்ணமிக்குப்பின் தேய்பிறை ஆரம்பிக்கிறது. சிறிது சிறிதாகத் தேய்வடைந்து முழுவதுமாக மறைந்து விடும். நாளை அமாவாசை என்று கூறுவர்.

டிசம்பர் மாதம் 2வது வாரம்
பாடம் 2.

வானவில்

வானத்தில் வில் போன்று வளைவாக பகல் நேரங்களில் காணப்படுவதைச் சில வேளைகளில் நாம் பார்க்கலாம். இந்த வில்லில் பல வர்ணங்கள் காணப்படும். ஏழு வகையான நிறங்கள் கொண்டது வானவில். இது சில சமயங்களில் சாரல் விழுந்து கொண்டிருக்கும் போதும் தோன்றும், மழை வராததற்கு அறிகுறியாகத் தோன்றும். ஊதா. இண்டிகா நீலம், பச்சை. ஆரஞ்சு, மஞ்சள், சிவப்பு ஆகிய ஏழு நிறங்கள் காணப்படும். வானவில் தோன்றும் சமயங்களில் குழந்தைகளை அழைத்துச் சென்று காட்டவேண்டும்.

டிசம்பர் 2வது வாரம்
பாடம் 1.

கிறிஸ்துமஸ் பண்டிகை

கிறிஸ்துமஸ் பண்டிகைஎன்பது ஏசுகிறிஸ்துவின் பிறந்த நாளைக் குறிக்கும் ஒரு புனிதமான தினமாகும். கிறிஸ்து

வின் பிறப்பை கிறிஸ்தவர் அனைவரும், நாடெங்கும் கொண்டாடி வருவார்கள். இந்த பண்டிகை டிசம்பர் மாதம் 25ந் தேதி ஒவ்வொரு வருடமும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது இயேசு கிறிஸ்து மானிடப் பிறவி எடுப்பதற்காக, பரிசுத்த ஆவியினால் கன்னி மரியா வின் வயிற்றில் உற்பத்தியானார். இயேசுவின் தந்தையின் பெயர் யோசேப். தாயின் பெயர் மரியாள் இவர் பாலகனாக மாட்டுத் தொழுவத்தில் கடுமையான குளிர் வேளையில் பிறந்தார். கந்தைத் துணியை படுக்கையாகக் கிடைக்கப்பெற்றார். வானத்தில் நட்சத்திரங்கள் தோன்றி மேய்ப்பவர்களுக்கு வழிகாட் டின, தேவதூதர்கள் மேய்ப்பர்களுக்கு யேசுபாலகன் பிறந்த செய்தியை தெரிவித்தனர். மேய்ப்பர்கள் பல பரிசுகளைப் படைத்து வணங்கினர். இந்தப்புனித நாளை நம் மக்கள் புத்தாடைகள் உடுத்து, பலகாரங்கள் செய்து, வெடிகள் வெடித்து மகிழ்ச்சியாகக் கொண்டாடுகின்றனர். கிறிஸ்துமஸ் மரம் அமைத்து, மாட்டுக்கொட்டில் அமைத்து அவரது புகழைப் பாடிப் போற்றுகின்றனர். ஆலயம் சென்று வணங்குகின்றனர்.

செடிகள்

மனிதனின் உடலில் பல பாகங்கள் அமைந்து, வேலை கள் செய்ய உதவுவது போல, செடிகளுக்குப் பல பாகங் கள் உள்ளன. செடியின் மேல் பாகத்தில் அநேக வகை கள் உள்ளன, செடியின் கீழ்ப்பாகம் வேர் எனப்படும். இந்த வேர்ப்பாகம் மட்டும் பூமிக்கு அடியில் இருக்கும் இந்த வேர் பல பிரிவாகப் பிரிந்து அடர்த்தியாகக் காணப் படும் நீரை இந்த வேர்தான் உறிஞ்சிச்செடியின் பல பாகங்களுக்கும் அனுப்புகிறது. செடி நேராக நிற்கவும், கீழே சாய்ந்துவிடாமல் பாதுகாக்கவும் வேர் உதவுகிறது.

சத்துப்பொருட்கள் வேரின்மூலம் உறிஞ்சப்பட்டு எல்லாப் பாகங்களுக்கு செல்கிறது. பூமிக்கு அருகில் இருக்கும் மேல் பாகம் தண்டு என்று கூறப்படும். இதிலிருந்து பல கிளைகள் பிரிந்து செல்கின்றன இதிலிருந்துதான் இலைகள் பிரிகின்றன. பூமிக்கு மேல் காணப்படும் பாகங்கள் தண்டு, கிளைகள், இலைகள், பூ, காய்கள் ஆகும் மொத்தம் ஆறு பாகங்கள் செடியில் உள்ளன. செடி நன்ருக வளர்ந்து முதிர்ச்சியடையும் நிலையை அடைந்ததும பூக்க ஆரம்பிக்கும். பின் பூ காயாக மாறுகிறது

(நேரடியாகச் செடியைப் பறித்துக் கொண்டுவந்து காட்டவேண்டும்.) இதுபோலவே கொடிகளும். ஆனல் இவை தரையில் படரும்,

காவல்நிலையம்

காவல் நிலையம் நாட்டு நலனுக்காவும் மக்களின் பாது காப்பிற்காவும் அரசாங்கத்தாரால் அமைக்கப்பட்டது. இது குற்றவாளிகள் வீடு என்று கூறலாம். இதில் பணிபுரிபவர்கள் காக்கி உடை அணிந்து இருப்பார்கள். தலையில் ஒரு சிவப்பு குல்லா வைத்திருப்பார்கள் இந்த மாதிரி சின்ன அடையாளங்கள் போலீஸ் என்பதை நினைவு படுத்துவதற்காக அமைத்திருக்கிருர்கள். இந்த நிலையமும் பார்த்த உடனே தெரியும்படி சிவப்புக்கலரில் வண்ணம் தீட்டப்பட்டிருக்கும். இங்கு எப்பொழுதும் காவல் அதிகாரிகள் காணப்படுவார்கள். குற்றம் புரிந்தவர்களை இங்கு அழைத்து வந்து விசாரிப்பார்கள். பெரிய குற்றம் புரிந்தவர்களை (கொலை, திருட்டு) இங்கு அடைத்து வைத்திருப்பார்கள். இவர்கள் வெளியே செல்ல இயலாதவாறு இரும்புக் கம்பிகளால் கதவு அமைக்கப்பட்டுப் பூட்டப்பட்டிருக்கும். ஆனல் நல்ல உணவு இங்கு உள்ள குற்றவாளிகளுக்குக் கொடுப்பார்கள். இங்கு குற்றவாளிகளின் பழக்

சத்தை மாற்றப் பல வேலைகள் கொடுத்து அவர்களை நல்லவர்களாக மாற்றுகிறார்கள். இதர அரசியல் தலைவர்களும் இங்கு இருப்பார்கள். நமக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அதை விசாரித்து நீதி வழங்கும் நிலையமாகக் காவல் நிலையம் உதவுகிறது.

குழந்தைகள் தவறு செய்தால் அவர்களுக்கு என்று தனி இடம் ஒதுக்கப்பட்டு அங்கு விடப்படுகிறார்கள். காவல் நிலையங்கள் தற்காலத்தில் எல்லா இடங்களிலும் நிறுவப்பட்டு மக்களின் நலனுக்காகப் பாடுபட்டு வருகிறது. நம் நாட்டுத்தலைவர்கள் கூட மக்களுக்காகப் பாடுபட்டு இறுதியில் சிறை சென்றுள்ளார்கள். கொலை, திருட்டு, சண்டை, மற்ற இதர விவகாரங்களில் இந்நிலையத்தார் தலையிட்டுச் சமாதானப் படுத்தி, நாட்டில் அமைதியை நிலை நிறுத்தப் பாடுபட்டு வருகின்றனர். காவல் நிலையம் இல்லையேல் குழப்பங்கள் அதிகமாகும். இப்படிப்பட்ட சூழ் நிலையைக் காவல் நிலையம் மாற்றி வருகிறது. (குழந்தைகளை நேரே அழைத்துச் சென்று காட்டலாம்.)

மிருகக்காட்சி சாலை

மிருகங்கள், பறவைகள் இவைகள் பற்றி கேட்டு அறிவது மட்டும் போதாது. நேரடி அனுபவமும் குழந்தைகளுக்கு மிகவும் தேவை. மிருகங்கள், பறவைகள் இவையனைத்தையும் ஒரே சமயத்தில், ஒரே இடத்தில் காண்பது மிகவும் கஷ்டம். இயலாது காரியமாகும். இவையனைத்தையும் ஒருங்கே ஒரு இடத்தில் காணச் சிறந்த இடமாகத் திகழ்வது மிருகக்காட்சிச் சாலை ஆகும். இங்கு, காட்டில் வளரும் மிருகங்களான யானை, புலி, சிங்கம், குரங்கு, நரி, பாம்பு வகைகள், முள்ளம் பன்றி மற்று இதர மிருகங்களும் காணப்படும். ஒவ்வொரு மிருகங்களையும் தனித்தனியே வைத்து அடைக்கப்பட்டிருக்கும். அவைகளுக்குத் தேவையான இரை

களும் அவ்வப்போது போடுவார்கள். மேலும் பலவகைப் பறவைகள் அங்குக் காணப்படும். பல இடங்களிலிருந்து பெற்றோர்களும், குழந்தைகளும் பள்ளி மாணவர்களும் இதைக் காண வருவார்கள். விலங்குகளால் எந்தவித ஆபத்தும் ஏற்படா வண்ணமும், நன்றாகப் பார்க்கும் விதத்திலும் அவற்றிற்கு காற்றோட்டமான கூண்டு அமைக்கப்பட்டிருக்கும். (மேலே கூறியவைகளைக்கூறியபின் குழந்தைகளை மிருகக் காட்சிச் சாலைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.)

கடல்

கடல் என்பது ஒரு பரந்த பெரிய நீர் நிறைந்த பரப்பாகும். கடலின் அகலத்தைக் கணக்கிடவே முடியாது. ஆழமாகவும் இருக்கும். இதில் உள்ள நீர் நீல நிறமாகக் காணப்படும், கடலின் நீர் உப்புக்கரித்து இருக்கும். இதில் பெரிய அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக மாறி மாறி வரும். அலைகள் வரும் பொழுது பெரிய சப்தம் உண்டாகும். இந்தக்காட்சி பார்ப்பதற்கு மிகவும் அழகாகக் காணப்படும். இதில் பெரிய மீன்கள் காணப்படும். மனிதர்களையே விழுங்கக் கூடிய மீன்கள் கடலில் வாழ்கின்றன. மற்றும் சங்குகள், சிப்பிகள் அதிகமாகக் காணப்படும். கடலில் இருந்துதான் உப்பு தயாரிக்கப்படுகிறது. கடலின் ஒரு கரையில் இருந்து மற்றொரு கரையைப் பார்த்தால் தெரியாது. கடலில் முத்து, பவளம் எடுக்கப்படுகிறது. கடலில் நீர் என்றுமேவற்றாது. கடலில் பெரியகப்பல் செல்லும். மீனவர்கள் கடலில் இறங்கி மீன் பிடித்து வருவார்கள், படகில் மீனவர்கள் செல்வார்கள். கடலின் ஓரங்களில் உள்ள மணல் மிகவும் அதிகமாகக்காணப்படும் கடலில் செல்லும் கப்பல்களின் மூலம் அநேகப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும்.

காட்டுப் பறவைகள்

சில பறவைகள் காட்டில் வாழ்கின்றன. காட்டு மரங்களிலும், புதர்களிலும், காட்டிலுள்ள ஏரி, குளம், ஆறு போன்ற நீர் நிலைகளிலும் அவை வாழ்கின்றன, அவற்றின் பழக்க வழக்கங்களைப் பற்றி முழு விவரமும் தெரியாது என்றாலும் ஓரளவுக்கு நடைமுறையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

நம் இல்லங்களில் இப்போது வளர்க்கும் பறவைகள் எல்லாம் ஒரு காலத்தில் காட்டுப் பறவைகளாகவே வாழ்ந்துவந்தன. அவற்றின் குஞ்சுகளைப் பிடித்துவந்து இல்லங்களில் வளர்த்த பிறகே, அவை இல்லத்தில் வளர்க்கும் பறவைகளாயின.

வேனிற்காலம் மட்டுமே காட்டுப் பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் காலம். சில பறவைகள் முட்டையிட்டு அடைகாத்து குஞ்சு பொரிக்கும். அக் குஞ்சுகளை நீண்ட நாட்கள் பேணி வளர்க்கும். மற்றும் சில பறவைகள் தம் குஞ்சுகளைச் சிறிது காலந்தான் பேணும். மற்றும் சில பறவைகள் முட்டையிடுமே தவிர, குஞ்சு பொரிக்கும் வேலையில் ஈடுபடுவதில்லை.

நீர் வாத்து

காடுகளிலுள்ள ஏரிகளிலும் மற்ற நீர் நிலைகளிலும் பல வாத்துகள் நீந்தும். அவை சிறிய வடிவமுள்ளவை. அவற்றினருகில் நாம் சென்றால் அவை பறந்துவிடும் அல்லது நீரில் மூழ்கிவிடும். அவை அச்சம் மிகுந்தவை. அவைதான் நீர் வாத்துக்கள். குளிர்காலங்களில் குளிரி

லிருந்து தப்பும்பொருட்டு இங்கு வந்து பின் குளிர் முடிந்த வுடன் அங்கு சென்று முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

இவைகள் ஒன்றன்பின் ஒன்ருக வரிசையாகப் பறக்கும். இவை முட்டைகளை அடைகாப்பதில்லை. அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் வாத்துகளும் உண்டு.

நீரில் மூழ்கி எழும் வாத்து நம் நாட்டைச் சேர்ந்தது. இது நம் நாட்டிலே முட்டையிடும். யாரும் பார்க்காத பொந்துகளில் முட்டைகளையிட்டு அடைகாத்துக் குஞ்சுகளைப் பாதுகாக்கும்.

குள்ள வாத்து

வாத்து வேறு, குள்ள வாத்து வேறு. இவற்றின் உடலமைப்பில் வேறுபாடுகள் உள்ளன. பழக்க வழக்கங்களிலும் வேறுபாடுசள் உள்ளன. குள்ள வாத்துக்கு அலகு நீண்டும் தட்டையாகவும் இருக்கும். அதன் கழுத்து குறுகியிருக்கும். அதன் கால்கள் குட்டையானவை. குள்ள வாத்தின் நடை அழகாயிராது. அதன் நடையே ஒரு வேடிக்கை நீரில் நீந்தி அலைய அதற்கு ஆவல் மிகுதி. ஓடும் நீர் என்ருல் இன்னும் மகிழ்ச்சி. அதன் வேடிக்கை விளையாட்டு எல்லாம் நீரில்தான். குளக்கரைச் சரிவுகளிலும் ஆற்றங்கரைச் சரிவுகளிலும் விளையாட அதற்கு விருப்பம் மிகுதி. குள்ள வாத்துக்களின் கால் விரல்களினிடைவெளியில் ஜவ்வு போன்ற தோல் வளர்ந்திருப்பதைப் பார்க்கலாம். இவை நீரில் நீந்துவதற்கு உதவியாயிருக்கும். குள்ள வாத்து ஏறக்குறைய மூன்று ஆண்டு வாழ்ந்திருக்கும். இவை கூட்டமாக வாழும். மண்ணைக் கிளறி பூச்சி, புழு, நத்தை, நண்டு, தவளை ஆகியவற்றைப் பிடித்துத் தின்னும். இது அமைதியான பறவையாகும். உரத்த குரல் கேட்டால் அஞ்சும் தன்மையுடையது. இது முட்டையிடும். ஆனல் அடை காக்காது.

பருந்து

பருந்துகள் காட்டிலுள்ள உயரமான மரங்களில் பெரிய குச்சிகளினாலாகிய கூடுகள் கட்டி வாழும். அக்கூடுகள் பார்ப்பதற்கு அழகாயிரா. அவை இரண்டாக வாழும். மிக உயரமாகப் பறக்க வல்லவை. தொலைவில் உயரமாகப் பறக்கும் போது அவை வானூர்திகளைப் போல் தோன்றும். பறக்கத் தொடங்கும் போது இயல்பாக எல்லாப்பறவைகளையும் போல் இறக்கைகளை மடக்கி விரித்துப் பறக்கும். ஆனால் அதிக உயரத்தில் பறக்கும் போது இறக்கைகளை அசைக்காமல் வானவெளியில் மிதந்து செல்வது போல் தோன்றும். உயரத்தில் வட்டமிட்டுப் பறப்பதில் பருந்துக்கு விருப்பம் மிகுதி. பருந்தின் கால்கள் மிக்க வன்மை உடையவை. இதன் அலகு வளைந்து கூரியதாயிருக்கும். தரையிலிருக்கும் கோழிக் குஞ்சு, எலி முதலியவற்றை உயரத்திலிருந்தே பார்த்து உடனே தாழப்பறந்து வந்து குறி தவறாமல் அவற்றைப் பிடித்து தூக்கிச் சென்று தின்னும்.

தூக்கணாங்குருவி

இது சிறிய மஞ்சள் வண்ணப் பறவை. இது ஈச்ச மரங்களில் கூடு கட்டிக்கொண்டு வாழும். இதன் கூடுகள் மிக்க வேலைப்பாடு அமைந்தவை. இது கூடு கட்டும் புற்களும் புதுமையானவை. கூட்டில் ஒன்று, இரண்டு அல்லது மூன்று கோள வடிவுள்ள அறைகள் இருக்கும். இவை கூட்டங்கூட்டமாக வாழும் தன்மையுடையவை. தன் கூட்டினுள் களிமண்ணைச் சேர்த்து அவற்றில் மின்மினிப் பூச்சிகளைப் பிடித்து ஒட்டி வைக்கும். இருட்டாயிருக்கும் கூட்டிற்குள் ஒளி பெறவே இவைகளை வைக்கும். மினுக்கு மினுக்கென்று விட்டு விட்டு வெளிச்சம் தரும் அந்த மின்மினிப்பூச்சிகளைப் பிடித்து கூட்டின் உட்புறம் ஒட்டி வைக்கின்றன. பார்ப்பதற்கு இது விந்தையாக இருக்கும்.

குயில்

ஆண்குயில் 'கூ' 'கூ' என்று இனிமையான குரலில் பாடும் பெண்குயில் அதைக் கேட்டு மகிழும். ஆண் குயில் கருப்பாயிருக்கும். பெண் குயிலின் மீது புள்ளிகள் காணும். இவை வேனிற்கால வருகையை முன்னறிவிப்பவை. இவைபழங்களையன்றி வேறென்றையும் தின்னு. பெண் குயில் முட்டையிடும். ஆனல் அம்முட்டைகளை வைக்கக் கூடு கட்டுவதில்லை. ஆகையால், பெண் குயில் காகத்தின் கூட்டில் தன் முட்டைகளையிடும். காகம் தன் முட்டைகளுடன் குயில் முட்டைகளையும் அடைகாத்துக் குஞ்சுகளை வளர்க்கும். குஞ்சுகள் பெரியவையானதும் அவற்றின் குரல் வேறுபாடறிந்து அவற்றை வெளியே துரத்தும். இப்படித் துரத்தும் போது அக்குஞ்சுகள் நல்ல இறக்கைகள் வளரப்பெற்று பறக்கும்; ஆற்றலுள்ளவையாயிருக்கும்.

குளிர்காலத்தில் இப்பறவைகள் வெப்பமான இடங்களுக்குப் பறந்து போகும்.

மயில்

மயில் மிகப் பெரிய பறவை. ஆண் மயிலுக்கு நீண்ட அழகான தோகை உண்டு. அது தன் அழகிய தோகையை விரித்து ஆடும். பெண் மயில் அதைக் கண்டுகளிக்கும். பெண் மயில் தோகையின்றி ஆடும். மயிலின் வண்ணம் நீல நிறம். மயிலின் தலையில் சிறு கொண்டை உண்டு. இதன் தோகையில் கருநீலமான கண்களுண்டு. பெண் மயில் மிகப் பெரிய முட்டைகளிட்டு அடைகாக்கும். மயிலின் கால்கள் மிக வலிமையுள்ளவை. அது விரைவாக ஒடும் ஆற்றல் வாய்ந்தது. மயில்கள் உருவத்தில் பெரியவை; ஆகையால் அவற்றல் மிகுந்த உயரம் பறக்க முடியாது. மரத்தின் உச்சிவரைப் பறந்து, கிளைகளில் அமரும். மயில் சினமடையும் பறவை.

அனுபந்தம் – 2

பால்வாடிக் குழந்தைகளுக்கான பாடல்கள்

ஜனவரி மாதம் 1-வது வாரத்திற்குரிய பாட்டு

நெல்

உரலில் நெல்லை
கொட்டிடுவோம்
உலக்கை ஏந்தி
குத்திடு வோம்
அரிசி எடுத்துப் புடைத்திடுவோம்
அகன்றிடும் உமி பிரித்திடுவோம்
பானையில் அரிசி போட்டிடுவோம்
பக்குவமாய் சமைத்திடுவோம்
பாங்குடனே நாம் அமர்ந்து
பரமனைப் பாடி உண்டிடுவோம்

சோளம்

கடைக்குப் போகலாம்
கடைக்குப் போகலாம்
கமலா! விமலா! வா
சோளம் வாங்கலாம்
சமையல் செய்யலாம்
சுவையாய் உண்ணலாம் நாம்.

கம்பு

கடைக்குப் போவோம்
கடைக்குப் போவோம்
காந்திமதி வா
கம்பு வாங்கி
கம கம வென
மாவு திரிக்கலாம் வா

2-வது வாரத்திற்குரிய பாடல்

கரும்பு

எங்கள் விஜயராணி
தங்க விஜயராணி
எங்கும் இன்பம் பொங்கும்
இனிய பொங்கலன்று
இனிக்கும் கரும்புத் துண்டை
இன்பமுடன் தின்ருள் (எங்கள்)

கிழங்கு

கருணை, சேனை, ஆல்வள்ளி,
உருளை, சேம்பு, முள்ளங்கி,
சர்க்கரை வள்ளி இவை யாவும்
வேரில் கிடைக்கும் கிழங்குகளாம்.

பொங்கல் பாட்டு

தைமாதம் முதல்நாளில் பொங்கலோ பொங்கல்
தமிழினத்தின் இல்லமெலாம் பொங்கலோ பொங்கல்
கைம்மாறு செய்வதுதான் பொங்கலோ பொங்கல்
கதிரவனை வாழ்த்துவதே பொங்கலோ பொங்கல்
முற்றத்திலே கோலமிட்டு குத்துவிளக் கேற்றி
சர்க்கரைப் பொங்கலிட்டு அத்தனையும் படைத்து
புத்தாடை நாமணிந்து புதுவாழ்வை நினைத்து
ஒற்றுமையாய்க் கூடி உண்டு ஏழை உள்ளங்குளிர (தை)

3-வது வாரத்திற்குரிய பாட்டு

பயறு

சின்னச் சின்ன கண்ணனுக்கு என்ன வேண்டும்?
பட்டாணி பயறு வகைச் சுண்டல் வேண்டும்.
சின்னச் சின்ன ராதாவிற்கு என்ன வேண்டும்?
கொத்துக்கடலை - வேர்க்கடலை தின்ன வேண்டும்.
சின்ன சின்ன பப்பிக்கு என்ன வேண்டும்?

பயறு வகை முளைக்கட்டித் தின்ன வேண்டும்
சின்னச் சின்ன வேலூனுக்கு என்ன வேண்டும் ?
பருப்பு - கீரை - தக்காளி - பாலும் வேண்டும் (சின்ன)

குடியரசு விழாப் பாட்டு

பாரதத்தின் குடியரசு நாள் இது – திருநாளிது
பாலர் நாமும் இந்தநாளை வாழ்த்துவோம்
வாழ்த்துவோம்
படிக்கின்ற பருவம் – இனிதான பருவம்
பலவகையாம் எண்ணங்கள் கூடாது
பெரியோர்கள் சொன்னால் ... சரியென்று கேட்டு
ஒழுங்காக கற்று முன்னேறனும்
குடியரசு வாழ்கவென்று வாழ்த்துவோம் வாழ்த்துவோம்
குடியரசு தலைவரை வாழ்த்துவோம் வாழ்த்துவோம்.

பாசிப் பயறு

பயறே பயறு - பச்சையான பயறு
பேரு பாசிப்பயறு – எங்கள் தோட்டப்பயறு
சத்து நிறைந்தபயறு – முளைகட்டிய பயறு
பச்சையாகத் தின்றால் – இரத்தத்திற்கு உயிரு.

பிப்ரவ்ரி மாதம் 1-வது வாரத்திற்குரிய பாடல்கள்

தபால்காரர் பாட்டு

கையில்கடிதம் வைத்திருப்பார் தபால்காரர்
காக்கிச்சட்டை போட்டிருப்பார் தபால்காரர்
தோளில்பையை மாட்டிருப்பார் தபால்காரர்
சைக்கிளிலும் வந்திடுவார் தபால்காரர்
வீடு வீடாய் வந்திடுவார் தபால்காரர்
வீட்டிலும் வந்து கூவிடுவார் தபால்காரர்
தேவதாஸ் சொல்லுவான் நான் வாங்குவேன்
உமாபதி சொல்லுவான் நான் வாங்குவேன்
எல்லோரும் சொல்லுவார் நான் வாங்குவேன்

தபால்காரர் சொல்லுவார் அம்மா மணியாடர்
தபால்காரர் நமக்கெல்லாம் உதவி செய்கிறர்
நாமெல்லாம் தபால்காரரை விரும்பி அழைக்கிறேம்
தபால்காரரே தபால்காரரே தினமும் வாருங்கள்
தினமும் வந்து எங்களுக்கு கடிதம் தாருங்கள்.

வண்ணர்

வண்ணனே வண்ணனே
எங்கே போராய் வண்ணனே
என்னுடைய துணிகளையும்
எடுத்துப் போவாய் வண்ணனே
அழகாக துவைத்து அதைச்சுச்சு
அழகாக துவைத்து அதை மடித்துவராய் வண்ணனே

குயவன்

குயவன் நல்ல குயவனும்
மண் பாண்டம் செய்வானும்
அம்மா அதை வாங்கி
அதில் ருசியாய் சமைப்பாளாம்
மண்பானைத் தண்ணீர்
நம் தாகம் தணிக்குமாம்
உடைந்து போனல் சீக்கிரம்
குறைந்த விலையில் வாங்கலாம்.

2-வது வாரத்திற்குரிய பாடல்

கொத்தனர்

சின்னச் சின்ன - வீடுகட்டி
சிங்கார வீடு கட்டி
என்னருமை அம்மாவோடே
இன்பமாக இருப்பேனே
அடுக்கடுக்காய் பானைச்சட்டி
அழகழகாய்ச் சேலைதுணி
எடுத்து வந்தேன் அம்மாவோடே
இன்பமாக இருப்பேனே.

மூக்குத்தி

சின்னச் சின்ன மூக்குத்தி
சிவந்த கல்லின் மூக்குத்தி
பொன்னாலான மூக்குத்தி
புதிதாய் செய்த மூக்குத்தி

பாலர் பள்ளி

பாட்டி பாட்டி கதை கேளு
பள்ளிச் சிறுமியின் கதை கேளு
காலையில் எழுந்து கடன்முடித்து
பள்ளிச் செல்வோம் பாலர்கள் நாம்
அக்கா உடற்சுத்தம் பார்த்திடுவார்
கடவுள் வணக்கம் செய்திடுவோம்
காகிதம் களிமண் கழிவு கொண்டு
கண்கவர் பொம்மை செய்திடுவோம்.

3-வதுவாரத்திற்குரிய பாட்டு

போலீஸ்காரர்

கையில் தடி வைத்திருப்பார் போலீஸ்காரர்
காக்கிச் சட்டை போட்டிருப்பார் போலீஸ்காரர்
தலையில் தொப்பி வைத்திருப்பார் போலீஸ்காரர்
பூட்சும் சாக்சும் அணிந்திருப்பார் போலீஸ்காரர்
போக்குவரத்தை பார்ப்பாராம் போலீஸ்காரர்.
திருடர்கள் வந்தால் பிடிப்பாராம் போலீஸ்காரர்.

அறிவு – ஆசிரியை

எண்ணும் எழுத்தும் கற்றுத் தெளிந்து
அறிவு நிறைந்திடனும்
இந்த உலகில் சிறந்து விளங்க
கல்வி தேவையம்மா - நல்ல
கல்வி தேவையம்மா
அறிவுச் செல்வம் வழங்கும் தெய்வம்
அவனியில் யாரம்மா

ஆயுள் முழுதும் வணங்கவேண்டும்
அவர்தான் நல் ஆசிரியை.

பொம்மை

சின்னப் பாப்பா பொம்மைக்கு
கண்ணில்லை காணக் கண்ணில்லை
எப்படிப் பார்க்கும் - அது
எப்படிப் பார்க்கும்.
ஆந்தைனுடைய கண்ணை வைத்து
இப்படிப் பார்க்கும் - அது
இப்படிப் பார்க்கும்.
சின்னப் பாப்பா பொம்மைக்கு
கையில்லை - உண்ணக் கையில்லை
எப்படி உண்ணும் அது
எப்படி உண்ணும்.
யானைனுடைய கையை வைத்து
இப்படி உண்ணும் - அது
இப்படி உண்ணும்.
சின்னப் பாப்பா பொம்மைக்கு
காதில்லை . கேட்கக் காதில்லை
எப்படிக் கேட்கும்
அது எப்படிக் கேட்கும்
முயலினுடைய - காதை வைத்து
இப்படிக் கேட்கும் அது
இப்படிக் கேட்கும்.
சின்னப் பாப்பா பொம்மைக்கு
கால் இல்லை - எப்படி நடக்கும்
அது எப்படி நடக்கும்
ஒட்டகத்தின் காலை வைத்து
இப்படி நடக்கும் அது
இப்படி நடக்கும்

மார்ச் மாதம் பாடல்கள்

1 – வதுவாரத்திற்குரிய பாட்டு

கட்டைவண்டி

கட்டை வண்டி போகுதுபார் - தை தை தை
கனவேகம் குதிரைவண்டி ஹை ஹை ஹை
அருமையான சைக்கிள் வண்டி - டிரிங் - டிரிங் - டிரிங்
அதோபார் சைக்கிள் ரிக்ஷா - டிங் - டிங் - டிங்
மோட்டார் நல்ல வாகனமாம் - பாம் - பாம் - பாம்
ஆட்டோ ரிக்ஷா கூச்சலிடும் - பட - பட - பட - பட்
ஏராளமாய் மக்கள் செல்லும் - இரயில் வண்டி
இஞ்சின் உண்டு விரைந்தோடும் - ஜிக் - ஜிக் - ஜிக்
ஆழமான கடல் மேலே - கப்பல் போகுது
ஆகாயத்தில் விமானத்தின் - சத்தங் கேட்குது.

மோட்டார்

நீ எந்தன் மோட்டார் - நான் உந்தன் டிரைவர்
மோட்டார் போகுது - மோட்டார் போகுது
கணவாய் பட்டி ரோட்டிலே
சிகப்பு விளக்கு எரியுது - மோட்டார் நின்று போகுது
பச்சை விளக்கு எரியுது மோட்டார் ஓடிப்போகுது

இரயில்

சுக் சுக் ரயிலு ஒச்சந்தி
தூரம் தூரம் சரகண்டி
ஜோஜோ பாப்பா ஏடஒத்து
பாலு பர்பி கொணிபெட்டுதா

2 - வது வாரத்திற்குரிய பாடல்

ஆகாயவிமானம்

பறவைக் கப்பல் பாரடா
பறந்து மேலே செல்லடா
இலங்கைத் தீவு செல்லலாம்
இறங்கி இன்பம் கொள்ளலாம்
மலேயா நாடு பார்க்கலாம்
மனதில் இன்பம் சேர்க்கலாம்
உலகம் முற்றும் போகலாம்
உண்மை அறிஞர் ஆகலாம்

கப்பல்

கப்பல் நல்ல கப்பல்
அக்கரைக்கு போகவே
ஆட்கள் ஏறும் கப்பல்
சாமான் ஏற்றும் கப்பல்
சண்டை செய்யும் கப்பல்
கப்பல் தனில் பலவிதம்
கடலின் மீது தெரியுமாம்
தூரத் தேசம் செல்லுமாம்
துறை முகத்தில் தங்குமாம்
கலங்கரை விளக்கினுல்
கரையைக் கண்டு செல்லுமாம்
கப்பல் ஏறி உலகெல்லாம்
காண வேண்டி ஆசையையோ
செல்வதற்கெங்கே - அனுமதிச்
சீட்டுஎங்கே காட்டிடு.

ஜெட்விமானம்

பறவைப் போல தோணுது
பட்டம் போலக் காணுது

சிறகு கூட இருக்குது
சிட்டு போல பறக்குது
சீனு ஜப்பான் செல்லுது
சிங்கப்பூரும் செல்லுது
வான வெளியில் போகுது
வாழ்வில் இன்பம் கூடுது.

3—வது வாரத்திற்குரிய பாடல்

சுவை

எங்கள் விஜய ராணி
தங்க விஜய ராணி
எங்கும் ஓடியாடுவாள்
இஷ்டம் போலே பாடுவாள்
பாக்கை வாயில் போட்டாள்
துவர்ப்பு என்று துப்பினுள்
பாகற்காயைக் கடித்தாள்
கசப்பில் முகம் சுழித்தாள்
உப்பைத் தின்று பார்த்தாள்
உவர்ப்பு என்று அழுதாள்
புளிப்பு மாங்காய் தின்ருள்
பல் கூசு தென்ருள்
மிளகாய் ஒன்றைக் கடித்தாள்
கார்ப்பு என்று துடித்தாள்
மிட்டாய் ஒன்றைத் தின்ருள்
இனிப்பில் துள்ளியாடினுள்
வட்ட வட்டத்தட்டு - வடிவமான தட்டு
எட்ட எட்ட மேலே-இருக்கும் வெள்ளித் தட்டு
பொட்டுப் பொட்டாய்ச் சோறு
புள்ளி புள்ளியாகச்
சிந்திச் சிதறிக் கிடக்க
குந்தி தின்றதாரோ

புத்தகம்

புத்தகம் இது புத்தம்
புதுமையான புத்தகம்
புலமை மிக்க நல்லோர்கள்
போற்றுகின்ற புத்தகம்
அறிவு வளர்க்கும் கதைகளும்
அன்பு வளர்க்கும் பாக்களும்
நிறைய உள்ள புத்தகம்
நெஞ்சு கவரும் புத்தகம்

புலப்பயிற்சி பாடம் சுவாசித்தலுக்குரிய பாடல்

ரோஜா

வட்ட வட்ட ரோஜா
வடிவமான ரோஜா
கட்டி வைத்த செண்டாய்க்
காட்சி தரும் ரோஜா
குண்டுச் சட்டி செடியில்
கூத்தாடும் ரோஜா
வண்டு வந்து பாட
மகிழ்ந்தாடும் ரோஜா

உடல் உறுப்புக்கான - முதல் பாடம்
தலைசுத்தம் அதற்குரிய பாடல்

அம்மா

அம்மா அம்மா ஆசை அம்மா
குளிர்ந்த நீரில் குளிப்பாட்டுவாய்
ஆடை உடுத்தி அலங்கரித்திடுவாய்
எண்ணெ பூசி எழில் சேர்ப்பாய்
அமுதை ஊட்டி அன்பினைச் சொரிவாய்
பலகலை பயின்றிட பள்ளியில் சேர்ப்பாய்

உடற் சுத்தத்திற்கான பாடல்

கட்டை விரல் அண்ணன் போல்
கருதி வேலை செய்யுமே
சுட்டு விரல் அம்மா போல்
சொல்லி எல்லாம் காட்டுமே
நடுவிரல் அப்பா போல்
நன்றாய் வேலை செய்யுமே
நகை போடும் மோதிர விரல்
நல்ல அக்கா போன்றதே
என்னும் சின்ன பாப்பா விரல்
இன்பமாக நிற்குமே
ஒன்றாய் குடும்பம் வாழும் வகை
நின்றே விரல்கள் காட்டுமே

ஆடைச் சுத்தத்திற்கான பாடல்

பத்து பைசா விலையிலே
பலூன் ஒன்று வாங்கினேன்
பைய பைய ஊதினேன்
பைய பைய ஊதவே
பந்து போல ஆனது
பந்து போல ஆனபின்
பலமாய் நானும் ஊதினேன்
பலமாய் அதை ஊதவே
பானைப் போல ஆனதே
பானைப் போல ஆனதை
காண ஓடி வாருங்கள்
விரைவாய் வந்தால் பார்க்கலாம் - இல்லை
வெடிக்கும் சப்தம் கேட்கலாம்

ஏப்ரல் மாதம் 1-வது வாரத்திற்குரிய பாடல் 1

அம்மா

பெற்றெடுத்தவள் அம்மா
பேச வைத்தவள் அம்மா
தொட்டில் கட்டி தாலாட்டி
தூங்க வைத்தவள் அம்மா
பால் கொடுத்தவள் அம்மா
பழம் கொடுத்தவள் அம்மா
பால் நிலாவைக் காண
தோள் கொடுத்தவள் அம்மா
பூ முடித்தவள் அம்மா
பொட்டு வைத்தவள் அம்மா
பள்ளிக்கூடம் சென்றால்
பார்த்து நிற்பவள் அம்மா
அழுது வரும் போது அள்ளி அள்ளி அணைப்பாள்
சிரித்து வரும் போது செல்லம் கொஞ்சுவாள் அம்மா

ஆடு

ஆடே ஆடே அசைந்து வா
அழகாய் வாலை ஆட்டி வா
அரச இலையை அளிப்பேன் வா
அள்ளித் தின்ன அருகில் வா
அம்மாவைப் போல் அமுதம் தா
அன்பால் உலகை ஆளவா

இலை

இலையே - இலையே எலுமிச்ச இலையே
பகலவனின் ஒளியால்
பளபளக்கும் இலையே
பருகியுள்ள நீரால் பச்சைநிற இலையே

கடற்காற்றின் வரவால்
களித்தாடும் இலையே
கண் படைத்தோரை
கவர்ந்திடும் இலையே.

2-வது வாரத்திற்கான பாட்டு

ஒன்று-இரண்டு-மூன்று-ஓடிவா இன்று
நான்கு-ஐந்து-ஆறு-நன்ருய் என்னைப்பாரு
ஏழு·எட்டு-ஒன்பது ஏன் அங்கு நிற்பது
பத்து-நூறு-ஆயிரம்-பறந்துவா சீக்கிரம்

பாட்டு 2

மீனு மீனு ஓடிவா
விரைவாக ஓடிவா
தாளம் போட்டு ஆடுவோம்
தான தானப் பாடுவோம்
ஒன்று, இரண்டு, மூன்று - நான்கு
ஐந்து, ஆறு, ஏழு - எட்டு
ஒன்பது பத்து, எண்ணிரண்டு
ஒய்யாரமாய் ஆடுவோம்

பாட்டு 3

ஒண்ணும் ஒண்ணும் இரண்டு
கையில் பிடிப்பது செண்டு
இரண்டும் இரண்டும் நாலு
பசு கறப்பது - பாலு
மூன்றும் மூன்றும் - ஆறு
ரோஜாப்பூவை - பாரு
நான்கும் நான்கும் எட்டு
நெற்றியிலிருப்பது பொட்டு
ஐந்தும் ஐந்தும் பத்து
இருகை விரல் பத்து.

3–வது வாரத்திற்கான பாட்டு- கழித பாட்டு 1

ஐந்து கோமாளிகள் ஒரு வரிசையில்
அதில் ஒருவன் ஓடினால் மீதி நான்கு பேர்
கோமாளி கோமாளி ஒளிந்துவிடு–கோமாளி 2 ஓடிவிடு
நான்கு கோமாளிகள் ஒரு வரிசையில்
அதில் ஒருவன் ஓடினால் மீதி மூன்றுபேர்
கோமாளி கோமாளி- ஒளிந்துடு-கோமாளி 2 ஓடிவிடு
மூன்று கோமாளிகள் ஒரு வரிசையில்
அதில் ஒருவன் ஓடினால் மீதி இரண்டுபேர்
கோமாளி கோமாளி ஒளிந்துவிடு-கோமாளி 2 ஓடிவிடு
இரண்டு கோமாளிகள் ஒருவரிசையில்
அதில் ஒருவன் ஓடினால் மீதி ஒருவன்
கோமாளி கோமாளி ஒளிந்துவிடு
கோமாளி கோமாளி ஓடிவிடு.

குருவி. 2

1. ஒரு குருவி ஊரை அழைக்க
2. இரண்டு குருவி பந்தல் போட
3. மூன்று குருவி மேளம் வாசிக்க
4. நான்கு குருவி நாதஸ்வரம் வாசிக்க
5. ஐந்து குருவி மஞ்சள் அரைக்க
6. ஆறு குருவி ஆட்டங்கள் ஆட
7. ஏழு குருவி ஏணிமேல் ஏற
8. எட்டு குருவி எட்டி எட்டி பார்க்க
9. ஒன்பது குருவி ஒய்யாரமாய் நடக்க
10. பத்து குருவி குதித்தே பாட

குருவி கல்யாண வைபோகமே

பாட்டு 3

ஒன்றும் ஒன்றும் இரண்டு
உனக்கு வேண்டாம் முரண்டு
இரண்டும் இரண்டும் நான்கு

நிறைய மார்க்கு வாங்கு
மூன்றும் மூன்றும் ஆறு
என்ன உந்தன் பேரு.
நான்கும் நான்கும் எட்டு
நெற்றியில் வேண்டும் பொட்டு
ஐந்தும் ஐந்தும் பத்து
கல்வி அழியாச் சொத்து

மே மாதத்திற்கு 1-வது வாரத்திற்கான பாட்டு

(அ)

அம்மா அம்மா ஆசை அம்மா
குளிர்ந்த நீரில் குளிப்பாட்டுவாய்
ஆடை உடுத்த அலங்கரித்திடுவாய்
எண்ணெ பூசி எழில் சேர்ப்பாய்
அமுதை ஊட்டி அன்பினை சொரிவாய்
பலகலை பயின்றிட பள்ளியில் சேர்ப்பாய்

(ஆ)

ஆடே ஆடே அசைந்துவா
அழகாய் வாலை ஆட்டிவா
அரச இலையை அளிப்பேன் வா
அள்ளித் திண்ண அருகில் வா
அம்மாவைப் போல் அமுதம்தா
அன்பால் உலகை ஆளவா

(இ)

இலையே இலையே எலுமிச்ச இலையே
பகலவனின் ஒலியால் பளபளக்கும் இலையே
பருகியுள்ள நீரால் பச்சை நிற இலையே
கடற்காற்றின் களித்தாடும் இலையே
கண் படைத்தோரை கவர்ந்திடும் இலையே

2-வது வாரத்திற்கான பாட்டு

(ஊ)

ஊசியாம் - ஊசி
ஒல்லியான - ஊசி
என்னுடைய - ஊசி
இரும்பாலான - ஊசி
கூர்மையான - ஊசி
குத்தி விடும் - ஊசி
ஆடை தைக்கும் ஊசி - அண்ணன் தந்த ஊசி

(எ)

சின்னச் சின்ன எறும்புகளே
சிற்றெறும்பு கூட்டங்களே
சின்னக் குழந்தை என்னைப் போல்
சிரிக்க உம்மால் முடியுமா?
ஓய்வு ஏதும் இன்றியே
ஊர்ந்து செல்லும் உங்களால்
ஒய்யாரமாய் என்னைப் போல்
ஓடியாட முடியுமா
இனிப்பைத் தேடி தின்றிடவே
எட்டிப் பார்க்கும் உங்களால்
கட்டி கரும்பு என்னைப்போல்
கனிவாய் பேச முடியுமா
யானை குதிரை படையைப்போல்
அணி வகுக்கும் உங்களால்
அலங்காரமாய் என்னைப்போல்
ஆடை கட்ட முடியுமா?

(ஒ)

ஒட்டகமாம் ஒட்டகம்
உயரமான ஒட்டகம்
பாலைவனத்து மணலிலே
பார்த்திடலாம் ஒட்டகம்

குடங் குடமாய் தண்ணீரை
குடித்து விடும் ஒட்டகம்
காத தூரம் சென்ருலும்
களைத்திடாத ஒட்டகம்
மணற் காற்று வீசினுலும்
மயங்கிடாத ஒட்டகம்
மனிதனுக்கு கடமை செய்யும்
ஒட்டகமாம் ஒட்டகம்

3-வது வாரத்திற்கான பாட்டு

(ஓ)

ஓடமே, ஓடமே மிதந்து வா
ஒயிலாய் நதியில் மிதந்து வா
அன்னம் போல நீந்தி வா
அழகாய் அலைமேல் அசைந்துவா
சின்னக் குழந்தை என்னைப்போல்
இன்னும் பலரை ஏற்றி வா
கண்ணுக்கினிய காட்சிகளை
கரையோரமாய் காட்டிவா (ஓ)
கங்கை யமுனை காவிரியைக்
களிப்புடனே நீ கடந்துவா
உலகம் முழுதும் சுற்றி வா
ஓர் உலகென்றே ஒலித்து வா

(ஔ)

ஔவைப் பாட்டி
ஔவைப் பாட்டி
அறிவாம் அமுதை - அளிப்பாய் பாட்டி
அறநெறி மூதுரை ஆக்கிய பாட்டி
அறியாக் குழந்தையை - அணைப்பாய் பாட்டி
கோவிலை துணையாய் - கொண்ட பாட்டி
குணம் பல எனக்குக் கொடுப்பாய் பாட்டி

பாட்டு 3

கண கண வென மணியடிக்கும்
சத்தம் அதோ கேட்குதம்மா
கட்டிப் பாலில் செய்த அந்த
மிட்டாய் போல தோணுதம்மா
பம்பாய் மிட்டாய் பாதாம் மிட்டாய்
என்று அதோ கூவுகிருன்
தம்பிப் பாப்பா ஓடிக்கையில்
தானே வாங்கி வந்தானும்
பார்க்கப் பார்க்க எனக்கும் நாக்கில்
எச்சல் ஊறி சொட்டுதம்மா
பத்து பைசா தந்தீரானுல்
நானும் வாங்கித் தின்பேனம்மா.

ஜன் ௳ மாதம் 1-வது வாரத்திற்கான பாட்டு

தெய்வம்

அன்பே தெய்வம் அருளே தெய்வம்
அறிவே நம் தெய்வம்
பண்பே தெய்வம்-பரிவே தெய்வம்
பணியே நம் தெய்வம்

சூரியன்

சூரியனே-சூரியனே
கிழக்கில் உதிக்கும் சூரியனே
பேரிருளை நீக்கிடு வாய்
பெரியவனும் சூரியனே.

நிலா

வெளிச்சம் நிறையத் தந்திடுவாய் வெந்நிலாவே
உந்தன் விளையாட்டை காட்டிடுவாய் வெண்ணிலாவே
நீருக்குள்ளே நீந்திவரும் வெண்ணிலாவே
உந்தன் பால் முகத்தை காட்டிடுவாய் வெண்ணிலாவே
மேகமெனும் தேர் ஏறி வெண்ணிலாவே

மேளம் கொட்டி அழைத்திடுவேன் வெண்ணிலாவே
இருட்டினையும், விரட்டிடுவாய் வெண்ணிலாவே
எந்தன் இதயம் கண்டால் விரும்புவாயோ
வெண்ணிலாவே

இரண்டாவது வாரத்திற்கான பாட்டு

மயில்

மயிலே மயிலே ஆடாயோ
மரகதத் தோகை தனைவிரித்தே
வட்டப் புள்ளிகள் கொண்டேதான்
வான வில்லின் நிறம் காட்டி
மட்டில்லாத ஆர்வமுடன்
மயிலே நீதான் ஆடாயோ

காக்காய்

காக்கா காக்கா கூடெங்கே
கூட்டுக்குள்ளே குஞ்சுண்டோ
குஞ்சுக் கிரை நான் தருவேனே
குஞ்சு மிகவும் அழுதிடுமே

ஆந்தை

ஆந்தை யாருக்கு கல்யாணம்
ஆலமரத்திலே மணவரை
ஔவால் நடனம் ஆடுதாம்
வாத்து தாளம் போடுதாம்
கழுகு விருந்து வைக்குதாம்
கண்ணைப் பார்த்து விழுங்குதாம்
காக்கையாரும் வந்தாராம்
காண மழையும் பெய்தாராம்
கோட்டான் பரிசு கொடுத்ததாய்
கோழிவாழ்த்து கூறிற்றும்
நாரையாரின் வரவேற்பை
நீங்களும் வந்து பாருங்கள்

3-வது வாரத்திற்கான பாட்டு

கோழி

கோழி கோழி வா வா வா
கூரை விட்டு இறங்கி வா
கோழி முட்டை இட வா
குஞ்சுகளைக் கூட்டி வா
பெட்டைக் கோழி வா வா வா
கூரை விட்டு இறங்கி வா
கூடை நெல்லைக் கொட்டினேன்
கொத்திக் கொத்தி தின்ன வா

கிளி

பச்சை கிளியே - பச்சை கிளியே
பறந்து விடுவாயோ
பக்கம் வந்து அக்கா என்று
பாட்டு பாடு வாயா
சொக்குப் பச்சை சுந்தரி அக்கா
சும்மா வாயேண்டி பக்கம் வந்து அக்கா என்று
பாட்டுப் பாடேண்டி
தென்னங் கீற்றில் ஊஞ்சலாட
தினமும் வருவாயா
கண்ணம் என்ற தேமாங்கனியை
கடிக்க வருவாயா

புரு

புரு பார் - புரு பார் வெள்ளையான புரு பார்
புரு ஒன்று வந்தது
கும் கும் என்று கத்திற்று
குயிலும் அங்கே வந்தது
கூ கூ என்று கூவிற்று
கிளியும் ஒன்று வந்தது
கீக்கி என்று கத்திற்று

முழுப் பெயரையும் சொல்லவே
முடியவில்லை ஆகையால்
முதல் எழுத்தை மட்டுமே
மூச்சுப் பிடித்துக் கூறுமே.

ஜுலை மாதம் 1-வது வாரத்திற்குரிய பாட்டு

கோலம்

கோலம் பார் - கோலம் பார்
அழகான கோலம் பார்
அரிசி மாவினாலே
அம்மா இட்ட கோலம் பார்
கதிர் எழுந்து வரும்முன்
காலையிலே எழுந்து
எதிர்வாசல் தன்னிலே
இட்டத் திருகோலம் பார்
புள்ளி புள்ளியாகவே
போட்டு கோடு இழுத்துமே
உள்ளம் கொள்ளை கொள்ளவே
உருவம் பெற்ற கோலம் பார்

நந்தவன ஆண்டி

நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன்
நாலாறு மாதங்கள் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி
அதைக் கூத்தாடி கூத்தாடி
போட்டுடைத் தாண்டி - (நந்த)

தாகமும் காகமும்

காடு எங்கும் பறந்ததாம்
காகம் ஒன்று தாகமாய்
ஒரு குடத்தைக் கண்டதாம்
சிறிய குடிசை வாசலில்
சிறிது தண்ணீர் இருந்ததாம்

பருகும் வழியைக் கண்டதாம்
கொண்டு வந்து போட்டதாம்
குடத்தில் சின்னக் கற்களை
தண்ணீர் மேலே வந்ததால்
நன்ருய் குடித்து பறந்ததாம்
புத்தியாலே மேன்மையை
என்றும் நாமும் அடையலாம்

2-வது வாரத்திற்குரிய பாட்டு

அப்பா தந்த பொம்மை

அப்பா என்னை இன்று
ஆர்வத்தோடு அழைத்து
இந்தா பாப்பா என்று
ஈந்தார் பெட்டி ஒன்றை
உடைத்துப் பார்க்க நினைத்து
ஊஞ்சல் மேலே அமர்ந்து
என்ன என்று என் ஜோதி
ஏளனமாய் நகைக்க
ஐயத்துடன் பிரித்தேன்
ஒய்யாரமாய் செய்த
ஓசை செய்யும் வண்ண
ஔவை பாட்டி பொம்மை
அஃதே இருக்கக் கண்டேன்.

கிழமைப் பாட்டு

ஞாயிற்றுக்கிழமை நான்கு பதார்த்தம்
திங்கட்கிழமை தேங்காய்ப் பாயசம்
செவ்வாய்கிழமை சேப்பங்கிழங்கு
புதன்கிழமை பூண்டுக்குழம்பு
வியாழக்கிழமை வெங்காய சாம்பார்
வெள்ளிக்கிழமை காய்கறிக் குருமா

சனிக்கிழமை தக்காளி ரசம்
சாப்பிட வேண்டும் நாமெல்லாம்
என்று சொன்னாள் என் தோழி ராஜி.

டமாரம்

டம் டம் டம் டம் டமாரமாம்
டமார பெருமை அபாரமாம்
ஜால வித்தை செய்யுமிடம்
சர்க்கஸ்காரன் ஆடுமிடம்
ஏலங்கூறி விற்குமிடம்
எல்லா இடமும் நானிருப்பேன்
அரசர் அடையும் வெற்றிதனை
அனைவரும் அறியச் செய்கின்ற
முரசோ எனது அண்ணாச்சி
மிருதங்கம் எனது தங்கச்சி

3-வது வாரத்திற்குரிய பாட்டு

காலைக் கடமை

காலையில் எழுவேன்
கடவுளைத் தொழுவேன்
நல்லதைப் படிப்பேன்
நற்செயல் முடிப்பேன்
பள்ளிக்குச் செல்வேன்
பாட்டுகள் சொல்வேன்

சைக்கிள் வண்டி

தங்கையே பார் – தங்கையே பார்
சைக்கிள் வண்டி இதுவே பார்
சிங்கார மான வண்டி
சீமையிலே செய்த வண்டி
காலாலே மிதிப்பதனால்
காத தூரம் செல்லுது பார்
அக்காளும் தங்கையுமாய்
அவை போகும் அழகைப்பார்

தேகப்பயிற்சி பாடல்

அசைந்தாடம்மா அசைந்தாடம்மா
அழகாய் கொடி போல் அசைந்தாடம்மா
தத்கியாடம்மா தத்தியாடம்மா
தவளையைப் போல- தத்தியாடம்மா
குதித்தாடம்மா குதித்தாடம்மா
குதிரையைப் போல குதித்தாடம்மா
பறந்தாடம்மா பறந்தாடம்மா
பறவையைப் போல பறந்தாடம்மா (அசைந்தாடம்மா)

ஆகஸ்டு மாதம் 1-வது வாரத்திற்குரிய பாட்டு

அவரை

தோட்டத்து மண்ணிலே
வட்டமான மெத்தையிலே
சொகுசாக தூங்குகிறுள்
சின்ன அவரைப் பாப்பா - செல்ல அவரைப் பாப்பா
சொட்டு சொட்டாய் மழை பெய்து
தட்டித் தட்டி எழுப்பு
சீக்கிரமாய் எழுந்து வா–செல்ல அவரைப் பாப்பா
நெளிந்து நெளிந்து எழும்புகிறுள்
விழித்து விழித்து பார்க்கிறுள்
சீக்கிரமாய் எழுந்துவா–செல்ல அவரைப்பாப்பா

காய்கறி

கத்தரி மிளகாய் வெண்டைக்காய்
கொத்தவரங்காய் தக்காளி
கறியும் கூட்டும் செய்திடலாம்
செடிகளில் இவைகள் கிடைத்திடுமாம்
புடல் சுரை பாகல் பீர்க்கங்காய்
பூசனி பறங்கி அவரைக்காய்
கொடிகளில் கிடைக்கும் இவையெல்லாம்
கொஞ்சம் கவனித்துச் சாப்பிடணும்

வெள்ளை முயல்

வெள்ளை முயல் ஓடுது பார் சின்னப் பாப்பா
அதன் வெள்ளை மனம் கொள்ள வேண்டும்
சின்னப் பாப்பா

துள்ளி ஆடி ஓடுது பார்–சின்னப்பாப்பா
அதன் தூய மனம் கொள்ள வேண்டும் - சின்னப்பாப்பா
கறவை பசு மேயுது பார் சின்னப்பாப்பா
அதன் கனிந்த மனம் கொள்ளவேண்டும்–சின்ன பாப்பா
அண்டங்காக்கா கத்துது பார் அழகு பாப்பா
அதன் அறக்க மனம் தள்ள வேண்டும் சின்ன பாப்பா

உ-வது வாரத்திற்குரிய பாட்டு

தேசீயக் கொடி

தாயின் மணிக்கொடிப் பாரீர் – அதை
தாழ்ந்து பணிந்து வணங்கிட வாரீர் — (தா)
ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் – அதன்
உச்சியின் மீது வந்தே மாதரம் என்று
பாங்கினை எழுதி திகழ்ந்தி செய்ய
பட்டொளி வீசி பறக்குது பாரீர் — (தா)
கம்பத்தின் கீழ் நிற்கக் காணீர்
எங்கும் காணரும் வீரர் பெருந்திரள் கூட்டம்
நம்பர் குரியர் அவ்வீரர் என்றும்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர் — (தா)

காந்தித் தாத்தா

கைராட்டை - தாத்தா
கதர் ஆடை - தாத்தா
ஆஸ்ரமத் – தாத்தா
ஆட்டுப்பால் தாத்தா
பொக்கை வாய் தாத்தா
புன்சிரிப்பு தாத்தா
புலால் உண்ண மாட்டார்
பொய் சொல்ல மாட்டார்

கடவுள்

அல்லா பரம பிதா
அரிஹர பிரம்மம்
அருள் புத்தனே சரணம்
(5 முறை ஏற்றி இறக்கி பாடவேண்டும்)

3-வது வாரத்திற்குரிய பாடல்

பரங்கிக்காய்

பரங்கிக் காயை பறித்து
பட்டை எல்லாம் சீவி
பொடிப் பொடியாய் நறுக்கி
பச்சை மிளகாய் போட்டு
எண்ணெ விட்டு தாளித்து
உப்பு காரம் போட்டு
இன்பமாகத் தின்போம்
இன்னும் கொஞ்சம் கேட்போம்
தந்தால் தின்போம்
தராவிட்டால் அழுவோம்

கத்தரி மிளகாய் புடலங்காய் என்ற பாட்டு

கீரைவகை

கீரை வாங்கிப் பாருங்கள்
பச்சையான கீரை வகைகள்
பல தினுசு இருக்குது
உடம்புக்கு அவசியம் வேண்டியது
முருங்கைக் கீரையும் முளைக்கீரையும், அரைக்கீரை
அகத்தி, சிறுகீரை செக்கூர்மணி கீரையும்
கூடை நிறைய இருக்கு வாருங்களே
சுண்ணும்பு இரும்பு சத்தும்
வைட்டமின் ABC சத்தும்
ஒருங்கே அமைந்த கீரைவகை
விலையும் மிகக்குறைவானது - கீரையோ கீரை.

செப்டம்பர் மாத 1-வது வாரத்திற்குரிய பாட்டு

கண்ணன்

கண்ணன் ஊதும் - கீதம்
காதில் கேட்கும் - நாதம்
வெண்ணெ உண்ணும் - பாலன்
வேடங்கொள்ளும் சீலன்

கணபதி

தொந்தி கணபதி வா வா
தொல்லை தீர்ப்பாய் வா வா
சக்திக் கணபதி வா வா
சங்கடம் தீர்ப்பாய் வா வா
துதிக்கை கணபதி வா வா
துன்பம் தீர்ப்பாய் வா வா
துதித்து வாழ்வேன் வா வா
துணையாய் நிற்பாய் வா வா

கடவுள்

கடவுள் ஒருவர் இருக்கின்றார்
கருணையோடு இருக்கின்றார்
கடலைப் போல இருக்கின்றார்
காற்றில் மறைந்து இருக்கின்றார்
உருவ மில்லா கடவுளுக்கு
உரு வாரங்கள் பலவாகும்
அருப முள்ள கடவுளுக்கு
ஆயிரக் கணக்கில் பெயராகும்

2-வது வாரத்திற்குரிய பாட்டு

மீன்

மீன் தண்ணீரின் ராணியாம்
ஜீவன் அதற்கு தண்ணீராம்
கையை விட்டால் பயந்துவிடும்
வெளியில் எடுத்தால் இறந்து விடும் – மீன்

குருவி

ஜிகு ஜிகுச்சான் குருவி வந்து
ஜில்லா மாட்டிக்கிச்சாம் குருவி
ஜில்லா மாட்டிக்கிச்சாம்
அதிலே ஒரு டேக்குருவி
அதுவும் மாட்டிக்கிச்சாம் - குருவி
அதுவும் மாட்டிக்கிச்சாம்
மாலை போட்டுக்கிச்சாம் - குருவி
மாலை போட்டுக் கிச்சாம்
மேளம் கொட்டிக் கிச்சாம் - குருவி
மேளம் கொட்டிக் கிச்சாம்
டும் டும் டும் டும் குருவி
கல்யாணம் பண்ணிக்கிச்சாம் - குருவி
கல்யாணம் பண்ணிக்கிச்சா (ஜிகு-ஜிகுச்சான்)

தவளை

தத்தித் தத்தி ஓடிவரும் தவளையாரே
கொஞ்சம் தயவுசெய்து நின்றிடுவீர் தவளையாரே
நீருக்குள்ளே நீச்சடிக்கும் தவளையாரே இங்கு
தத்தித் தத்தி வந்ததேனோ தவளையாரே

3-வது வாரத்திற்குரிய பாட்டு

வாழை

வாழைப் பழங்கள் தின்னலாம்
வாழைக் காய்கள் உண்ணலாம்
வாழைத் தண்டைப் பொறிக்கலாம்
வாழைப் பூவைச் சமைக்கலாம்
வாழை நாரின் துணையினால்
வண்ணப் பூக்கள் கட்டலாம்
வாழை இலையில் படைக்கலாம்
வாழைப் பயன்கள் அதிகமாம்

பழங்கள்

அப்பா தந்தார் ஆப்பிள்
அம்மா தந்தார் ஆரஞ்சு
அண்ணன் தந்தான் அன்னுசி
அக்கா தந்தாள் கொய்யா
தாத்தா தந்தார் திராட்சை
பாட்டி தந்தாள் பலாப்பழம்
அத்தை தந்தாள் மாதுளை
மாமா தந்தார் மாம்பழம்
எங்கள் வீட்டுத் தோட்டத்தின்
வாழை தந்தது வாழைப்பழம்
இந்தப் பழங்கள் எல்லாமே
எனக்கு ரொம்ப விருப்பம் தான்

பப்பாளிப் பழம்

குடைபோல மரத்திலே காய்த்த பழம்
உயர்ந்த சத்தை உடைய பழம்
மஞ்சள் நிறம் கொண்ட பழம்
மாலைக் கண்ணை ஒழிக்கும் பழம்

அக்டோபர் மாத 1-வது வாரத்திற்குரிய பாட்டு

காந்தி மகான்

காந்தி மகான் கதை கேளுங்கள்
கருணை என்னும் உள்ளத்தோடு
காண்பதற்கு எளிதானவர் - காந்தி
போர்பந்தர் என்னும்
ஊரிலே பிறந்தார்
செல்வத்தோடு சிறப்போடும்
செல்லமாய் வளர்ந்தார்
உயர் கல்வி படிப்பதற்கு
நாடு விட்டு நாடு சென்றார்
வெள்ளையரின் கொடுமைகளை
அறிந்து மனம் நொந்தாரே - காந்தி

இதையறிந்த காந்தி மகான்
அன்பு என்னும் ஆயுதத்தால்
வெள்ளையரை வெளியேற்று
சுதந்திரமும் தந்தாரே - காந்தி மகான்

1-வது வாரத்திற்குரிய 2-வது பாட்டு

எங்கள் தாய் நாடென்று சொல்லும்போது
இன்பக் கீதம் காதில் பாய்ந்திடுதே
வாழ்த்தி வணங்கிடவே
வாரீர் பெண்காள் கோலடிப்போம்
கற்புக் கரசியாம் கஸ்தூரியும்
வீரத்திலே ஜான்சி ராணியையும்
வாழ்த்தி வணங்கிடவே
வாரீர் பெண்காள் கோலடிப்போம்.

பாப்பா பாட்டு

பாப்பா நல்ல பாப்பா
பார்த்துச் சிரிக்கும் பாப்பா
சப்பாணி கொட்டும் பாப்பா
சாய்ந்தாடும் பாப்பா
அம்மா சொல்லு என்றால்
மம்மா என்று சொல்வான்
அப்பா சொல்லு என்றால்
பப்பா என்று சொல்வான்
பொக்கை வாய் பாப்பா
பொம்மை போலே பாப்பா
இறக்கை போலே கையை
அசைத்தாடும் பாப்பா
பாட்டி பாட்டுப் பாடி
பாப்பா தூங்கும் ஆடி
நாட்டைக் காக்கும் பாப்பா
நமது நல்ல பாப்பா

2-வது வாரத்திற்குரிய கொலுப் பாட்டு

கொலுவில் கண்டேன்
எலியும் பூனையும் ஒன்ருய்
இருந்திடும் காட்சி கண்டேன்
புலியும் பசுவும் ஒன்ருய்
பொருந் திருத்தல் கண்டேன்
கழுகும் பாம்பும் ஒன்ருய்
காட்சி அளித்தலைக் கண்டேன்
அழகாய் அமைந்த கொலுவில்
அத்தனை காட்சியும் கண்டேன்

சரஸ்வதி

வெள்ளைத் தாமரை மீதினிலே
வீற்றிருக்கும் என் தாயே
கள்ளம் கபட மில்லாமல்
கற்றும் என்னை காத்திடுவாய்
உள்ளும் புறமும் தூய்மையுடன்
உலகில் வாழ்ந்து உயர்ந்திடுவோம்.

சக்தி

ஓம்சக்தி ஜெயசக்தி
ஜெய மெல்லாம் தரும்சக்தி
ஓம்சிவமாகி ராமாகி
ஐங்கரன் ஆறுமுகனுன சக்தி (ஓம்)
அல்லா ஏசு புத்த ஜைன
எல்லாமாகி நின்ற சக்தி – (ஓம்)
மாநிலம் வாழனும் அருள்சக்தி - இந்த
மாந்தரெல்லாம் கொண்டாடும் சக்தி - ஓம்

3–வதுவாரத்திற்குரிய பாட்டு

டிங் டாங் மணி

மணியடிக்குது டிங் டாங் டிங்
மகிழ்ந்து வாருங்கள் டிங் டாங் டிங்

பள்ளிக்குச் செல்வோம் டிங் டாங் டிங்
பாடம் படிப்போம் டிங் டாங் டிங்
மாலை வந்தது டிங் டாங் டிங்
மணி யடித்தது டிங் டாங் டிங்
வேலை முடிந்தது டிங் டாங் டிங்
வீட்டிற்குச் செல்வோம் டிங் டாங் டிங்

"சைக் செக்"

செக் செக் கொரே
செக்கோரிஸா
ரிஸ ரிஸ மாங்ஞு
சாச மாங்ஞு
ஓமை செச்சே - செக் செக் கொரே (5 முறை)

ஏலேலோ பாட்டு

சர்வோதயம் வந்ததினுல் ஏலேலோ
சங்கடங்கள் தீர்ந்ததடி ஏலேலோ
சாதி பேதம் மறைந்ததடி ஏலேலோ
சங்கடங்கள் தீர்ந்ததடி ஏலேலோ
சிறுவர் நிலை முன்னேற ஏலேலோ
சிறந்த திட்டம் கொண்டு வந்தார் ஏலேலோ

நவம்பர் மாதம் 1-வது வாரத்திற்குரிய பாட்டு

நாய்

வாலை வாலை ஆட்டி வரும்
வள் வள் என்றே குறைத்து வரும்.
நாலு காலால் ஓடி வரும்
நக்கி நீரைக் குடித்து விடும்
காவல் நன்கு காத்து வரும்
கல்லைக் கண்டால் ஓடி விடும்
சேவை செய்ய முந்தி வரும்
செய்யும் நன்றி பேணி வரும்.

ஆட்டுக்குட்டி

ஆட்டுக்குட்டிகளே ஆட வாருங்கள்
ஓடிப் போகாதீர்கள் என்னைப் பார்த்து விட்டு
ஆல் இலைகளும் அரச இலைகளும்
கொண்டு தருவேன் நான் ஆட்டுக்குட்டிகளே.

கழுதை

மூக்கு வெளுத்திடுமாம்
முட்டிக் கால் தட்டிடு மாம்
காதுமே நீண்டிடுமாம்
காள் காள் என்றே கத்திடுமாம்
அது தான் கழுதை கழுதையாம்

உ-வது வாரத்திற்குரிய பாட்டு

தீபாவளி

திருவிழாவாம் திருவிழா
தீபாவளி திருவிழா
தித்திக்கும் திருவிழா
தீபாவளி திருவிழா
புத்தாடை திருவிழா
புதுமையான திருவிழா
மத்தாப்பூத் திருவிழா
மகிழ்ந்தாடும் திருவிழா - திரு

ரோஜாப்பூ

பாரு பாரு ரோஜாப்பூ
பாங்காய் மலர்ந்த ரோஜாப்பூ
நேரு கோட்டை அலங்கரித்த
நேர்த்தியான ரோஜாப்பூ
செக்க சிவந்த ரோஜாப்பூ
சிந்தை அள்ளும் ரோஜாப்பூ
அக்கம் பக்கம் முள்ளிருக்கும்
அருமையான ரோஜாப்பூ
உனக்கும் ஒன்று பறித்துக்கொள்
உதிர்ந்திடாமல் பார்த்க் கொள் (பாரு பாரு)

தாமரைப்பூ

தாமரைப் பூவே
தாமரைப் பூவே
தண்ணீர் குளத்தில் நீ மலர்வாய்
உன் இலை மீது
நீர் துளி வீழ்ந்தால்
முத்துப் போல அதுஜொலிக்கும்
நத்தை தவளை சிறுசிறு மீன்கள்
வெய்யிலுக்கு ஒதுங்கும் உன்நிழலில்

3-வது வாரத்திற்குரிய பாட்டு

புளியம்பூ

பூ - பூ - மஞ்சள்பூ - புளிப்பு மிகுந்த புளியம் பூ
பிச்சிப்பூ - நொச்சிப்பூ
பெருமை தருவது படிப்பு
வேப்பம்பூ - வெள்ளரிப்பூ
வெற்றி தருவது உழைப்பு
குவளைப்பூ - குமுதப்பூ குணத்தை தருவது
கண்டிப்பு
முல்லைப்பூ - முருங்கைப்பூ -
முயற்சி தருவது பூரிப்பு
செவந்திப்பூ ஜென்பகப்பூ -
சிறப்பை தருவது உபசரிப்பு
மகிழம்பூ - மல்லிகைப்பூ -
மனதைத் தொடுவது உள்ளன்பு
பின்னிப்பூ - ரோஜாப்பூ
செல்வம் தருவது சேமிப்பு
தாழம்பூ - தாமரைப்பூ
தமிழைத் தருவது உச்சரிப்பு.

ஏசுபாலன்

சிங்கார ஐயனே ஆராரோ
சிவந்தப் பட்டு ரோஜா ஆராரோ
பாவி எனக்காய் பாரினில் வந்த
தவப் பெரும் செல்வமே ஆராரோ
மாட்டுத் தொழுவத்திலே
இந்த மானிடர் மீட்பை எண்ணி
மேன்மை வெறுத்து சிறுமையை ஏற்ற
சின்னஞ்சிறு கண்ணே தாலேலோ
தங்கத் தொட்டில் இல்லை - இங்கு
தாதியர் சூழ இல்லை
தஞ்சம் என்று தவித்திடும் போது
தவப் பெருஞ் செல்வமே தாலேலோ–சி

புள்ளிமான்

புள்ளிமான்கள் துள்ளி ஓடும் பூரிப்பைப் பார்
வெள்ளி மீன்கள் மெள்ள ஓடும் வேடிக்கைப் பார்
உள்ளமெல்லாம் கொள்ளை கொள்ளும் ஒய்யாரமாய்!
என்னையே நீ தள்ளிடாதே - செல்லுமானே
லலலலலா லலலலலா லாலாலா.

டிசம்பர் மாதம் 1-வது வாரத்திற்குரிய பாடல்

திசைகள்

காலை எழுந்த உடன் தம்பி - நீ கதிரவனைக் காண்பாய் தம்பி
நேராய் நீ நின்றிடுவாய் தம்பி
முன்னே இருக்கும் திசை கிழக்கு - உன்
பின்னே இருக்கும் திசை மேற்கு – உன்
வலக்கை காட்டுவது தெற்கு - உன்
இடக்கை காட்டுவது வடக்கு
உனக்கு தெரிந்த திசை நான்கு - இதை
உள்ளத்தில் வைக்க வேண்டும் தம்பி

மழை

மழையே மழையே போய் விடு
மற்ருெரு நாள் வந்திடலாம்
சின்னப் பாப்பா விளையாட
சீக்கிரமாய் போய் விடு
வளைக்க முடியா வில்லிது
வானில் தோன்றும் வில்லிது
நிலைத்து நிற்கா வில்லிது
நீண்ட பெரிய வில்லிது
ஏழு வண்ண வில்லிது
எவர்க்கும் எட்டா வில்லிது
அம்பே இல்லா வில்லிது
அழகு வான வில்லிது

மின்விசிறி

மூன்று இறக்கை உண்டு
முயன்று சுற்று நன்று
வெப்பம் மிக்க போது - அது
வியர்வை போக்கும் சாது
கோடை வந்த போது - அது
கொடுக்கும் குளிர்ந்த காற்று
வாடை வந்த போது
வருந்தி வேலை செய்யாது

மின்சாரம்

ஆக்கவும் செய்வேன் - அழிக்கவும் செய்வேன்
காக்கவும் செய்வேன் – கடவுள் நானல்ல
வீதிக்கு வீதி வீற்றிருப்பேன் - விளக்காய் நின்று ஒளி கொடுப்பேன்
சோதியை பெருக்கி இருளகற்றி - துணையாய் நானிற்பேன்

2-வது வாரத்திற்கான பாட்டு

ஏசுபாலன்

காணப்போறேன் - காணப்போறேன் ஏசுபாலனை
இன்னும் காத்திருக்க நேரமில்லை - நீயும் வாராயோ?
புஷ்பமே நீ மலர்ந்திருக்க - என்ன வந்தது
இன்பமுடன் கீதம் பாட - என்ன வந்தது
காணப்போறேன் - காணப்போறேன் ஏசுபாலனை
இன்னும் காத்திருக்க நேரமில்லை நீயும் வாராயே?

பட்சியே நீ பறந்துச் செல்ல - என்ன வந்தது
இன்பமுடன் கீதம்பாட என்ன வந்தது
(காணப் போறேன்)

பாலனே நீ கூடத்தை விட்டு எங்கே போகிறாய்?
இன்பமுடன் கீதம் பாட என்ன வந்தது
(காணப்போறேன்)

ஏசுபிறந்தார்

ராவின் ஜோதி நட்சத்திரம்
ஆச்சரீய நட்சத்திரம்
விட்டு வந்தோம் வெகுதூரம்
கையில் காணிக்கைகள் கொண்டு
முன் சென்றோம் நட்சத்திரம் ஓ. ஓ. ஓ.
நித்தம் வழி காட்டிச் செல்லும்
உந்தன் மங்கா வெளிச்சம்- ஓ. ஓ. ஓ. (ராவின்)
ராயர் மூவர் கீழ்தேசம்
நானே பொன்னைக் கொண்டு வந்தேன்
தேவனென்று அறிவித்தேன்
ஜெபதூபம் ஏறெடுப்பேன்
உம் பாதம் பணிவேன்
நானே தூப வர்கமே
கொண்டு வந்தேன் காட்டவுமே

தூப வர்கம் ஏறெடுப்பேன் உம்
பாதம் பணிவே ஓ......ஓ
நானே வெள்ளைப் போளமே
கொண்டு வந்தேன் காட்டவுமே
தெய்வ தேவன் பாவி கட்காய்
மரிப்பவர் இவரே ஓ......ஓ (ராவின்)

கெய்தான்ஜிதாத்தா

தாத்தா தங்கத் தாத்தா
தர்மம் காத்த தாத்தா
சத்தியத்தின் நினைவிலே
நித்தம் நித்தம் செல்பவர்
பாலர் கல்விக் காக
பாடு படும் தாத்தா
பாலும் சோறும் தருகின்ற
பரம சாது தாத்தா - தாத்தா

3-வது வாரத்திற்குரிய பாட்டு

தென்னைமரம்

தென்னை மரம் பார்த்தியா
தென்னோலை பறித்தியா
தேங்காயை உடைத்தியா
தெய்வத்திற்கு படைத்தியா
இளநீர் குடித்தியா இன்னும் கொஞ்சம் கேட்பியா?

பனைமரம்

பனைமரத்தைப் பாராய்
பாட்டுப் பாட வாராய்
படுத்துத் தூங்க ஓலைப்
பாயைக் கொடுக்கும் பனையே
குடித்து மகிழ நுங்கு

கொடுக்கும் நல்ல பனையே
வீடு கட்டத் தூண்கள்
விரும்பிக் கொடுக்கும் 'பனையே
நாடித் தின்னக் கிழங்கை
நல்கும் நல்ல பனையே

மாம்பழம்

மாம்பழமாம் - மாம்பழம்
வாயினிக்கும் – மாம்பழம்
பச்சைக்கலர் - மாம்பழம்
மல்கோவா மாம்பழம்
சேலம் குண்டு மாம்பழம்
சிங்கார மாம்பழம்
உங்களுக்கு வேண்டுமா
பங்கு போட்டுத் தின்னலாம்

அனுபந்தம்-3

குழந்தைகளுக்கு ஏற்ற கதைகள்

ஜனவரி மாதம் 2வது வாரம்

கதை 3

வானம்பாடியும் அதன் குஞ்சுகளும்

ஒரு வானம்பாடி நெல் வயலில் கூடு கட்டியது. கூட்டில் சில முட்டைகள் இட்டது அம்முட்டைகள் பொரித்து குஞ்சுகள் வெளிவந்தன. வானம்பாடி அந்தக் குஞ்சுகளை அன்புடன் காப்பாற்றி வந்தது.

வயலில் நெல் முற்றியது. அறுவடை காலம் நெருங்கியது. ஒருநாள் வானம்பாடி தன் குஞ்சுகளைப் பார்த்து, குழந்தைகளே நான் இல்லாத போது இங்கு யாராவது வருவர். அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

நான் வந்ததும் அவர்கள் பேசியதை எனக்கு தெரிவிக்க வேண்டும் என்று சொல்லிற்று. பிறகு அது இரை தேடி வரப் பறந்து சென்றது. சிறிது நேரம் கழித்து வயலுக்கு உரியவர் அங்கு வந்தார். அவரோடு அவர் புதல்வனும் வந்தான். தந்தையார் மைந்தனைப் பார்த்து மகனே நெற்கதிர்கள் முற்றி விட்டன. நாளைக்கு நாம் சிலரை அழைத்து வந்து அறுவடை செய்துவிட வேண்டும் என்றார். பின்பு இருவரும் திரும்பிச் சென்றனர். வானம்பாடி இரை தேடிக் கொண்டு வநதது. உடனே குஞ்சுகள் தாங்கள் கேட்ட செய்தியை அதற்கு தெரிவித்தன. வானம்பாடி "அவர்கள் வேலைக்காரர்களின் உதவியை வேண்டுகிறார்கள். ஆகையால்

நாம் அஞ்ச வேண்டா. நாளைக்கும் அவர்கள் வந்தால் என்ன பேசுகிறார்கள் என்பதை நீங்கள் கவனியுங்கள் என்று சொல்லிக் குஞ்சுகளுக்கு இரையை ஊட்டியது. மறுநாள் இருவரும் வந்தனர். தகப்பனார் மகனைப் பார்த்து ''மகனே, வேலைக்காரர்கள் வருவதாகச் சொல்லி ஏமாற்றி விட்டார்கள். இனி நாம் அவர்கள் உதவியை எதிர்பார்த்துப் பயனில்லை. ஆகையால் நாளைக்கு நாமே வந்து அறுவடை செய்ய வேண்டும்'' என்று கூறினார். பின்பு இருவரும் திரும்பிச் சென்றனர்.

வானம்பாடி இரை தேடிக் கொண்டு வந்தது. குஞ்சுகள் அதனிடம் நிகழ்ந்ததைக் கூறின. அப்பறவை குஞ்சுகளைப் பார்த்து ''மக்களே நாம் இனி இங்கு இருக்கக் கூடாது. நாளை அறுவடை செய்யப்போகிறார்கள்'' என்று சொல்லியது. உடனே வானம்பாடியும் அதன் குஞ்சுகளும் பறந்து வேறு இடத்திற்குச் சென்றன.

ஜனவரி மாதம் 3வது வாரம்
கதை 3

அகிலாவும்-கிராம சேவிகாவும்

ஒரு வீட்டில் ஒரு அப்பா, அம்மா வசித்து வந்தார்கள். அவர்களுக்கு அகிலா என்ற ஓர் பெண் குழந்தை இருந்தது. தினமும் அப்பாவும் அம்மாவும், விறகுவெட்டி விற்கச்செல்வார்கள். அப்பொழுது அகிலாவும் கூடவே போவாள். ஆனால் அம்மாவிற்கு அகிலாவையும் தூக்கிக் கொண்டு விறகுக் கட்டையும் சுமந்துப்போக கஷ்டமாக இருந்தது,

ஓர் நாள் தெருவழியே விறகு கொண்டுபோகும் சமயம் ஓர் அம்மாள் எதிரில் வந்தாள். அவர்கள் அவ்வூர் கிராம சேவிகா அம்மா. அகிலாவையும், விறகுக்கார அம்மாவையும் பார்த்த கிராம சேவிகா, பரிதாபத்துடன்

அம்மா, நீங்கள் ஏன் இந்தக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு வெயிலில் கஷ்டப்படுகிறீர்கள், நம் ஊரில் உள்ள பாலர் பள்ளியில் விடலாமே என்ருள்.

இதைக்கேட்ட உடனே அம்மாவிற்கு கோபம் வந்ததே பார்க்கலாம். நீ யாரம்மா? என் குழந்தையை நான் தூக்கிப்போவேன். பாலர் பள்ளியில் விட்டால், ஏங்கிப்போகும் என் கண்மணி என்று கத்திஞள்.

ஆஞல், கிராம சேவிகா கோபப்படாமல் அம்மா என்னுடன் வாருங்கள். பாலர் பள்ளியைப் போய்ப் பார்க்கலாம். விறகும் நான் வாங்கிக்கொள்வேன் எனச் சொல்லி அழைத்துப்போஞர்கள்.

பாலர் பள்ளி அருகில் போகும்போதே பிள்ளைகளின் சிரிப்பொலியும், பாட்டும், விளையாட்டுச் சத்தமும் கேட்ட அகிலா, அம்மா இடுப்பிலிருந்து இறங்கிப் பள்ளியை நோக்கி ஓடிஞள். அம்மாவும் அகிலாவுடன் ஓடிச்சென்று பள்ளியை எட்டிப்பார்த்தாள். தன் குழந்தை அகிலா, ஓர் ஆடும் குதிரை மீது உட்கார்ந்து ஆடுவதைக் கண்டு சந்தோசமடைந்தாள், மற்றும் பால்வாடியில் உள்ள ஆகாரம்—பால் எல்லாம் பற்றி ஆசிரியை மூலம் கேட்டுத் தெரிவித்துக் கொண்டாள். அன்று முதல் அகிலாவைத் தினமும் பாலர் பள்ளிக்கு அனுப்பிவிட்டு, பிறகு விறகு விற்கச்செல்வாள்,

பிப்ரவரி மாதம் 1வது வாரம்

கதை 1

தபால்காரத்தாத்தாவும்-சுமதியும்

ஓர் ஊரில் ஒரு கிழவர் வாழ்ந்துவந்தார். அவருக்கு சுமதி என்ற ஓர் பேத்தி இருந்தாள். சுமதி மதுரையில் அம்மா வீட்டில் இருந்து படித்துக்கொண்டிருந்தாள்.

தாத்தாவிற்குச் சுமதியைப் பார்க்கவேண்டுமென்று ஆவலாயிருந்தது. மதுரைக்குக் கடிதம் எழுதினார். சுமதி கடிதத்தைப் படித்துவிட்டு ஒரே சந்தோஷமாய்த் தாத்தா வைப் பார்க்கக் கிராமத்திற்குக் கிளம்பினாள். மதுரையில் பஸ் ஏற்றிவிட்டு சுமதியின் அம்மா வீட்டிற்குப் போய் விட்டாள். சுமதி தாத்தாவைப் பார்க்கும் சந்தோஷத்தில் தன்னுடன் எடுத்துவந்த பெட்டியை எடுக்க மறந்து பஸ்ஸில் வைத்து விட்டு இறங்கித் தாத்தா வீட்டிற்கு வந்துவிட்டாள். ஆனால் பிறகுதான் தன் பெட்டியை விட்டுவிட்டு வந்தது தெரிந்து அழுதாள். ஆனால் சற்று நேரத்திற்கெல்லாம் அவ்வூரில் தபால் கொடுக்கும் தாத்தா, சுமதி இது யார் பெட்டி என்று கேட்டுக் கொண்டே வந்தார். சுமதிக்கு சந்தோசம். தாத்தாவிற்கு நன்றிச் சொல்லிப் பெட்டியை வாங்கிக்கொண்டாள். தபால்கார தாத்தாவும் மதுரையிலிருந்து பஸ்ஸில் வந்ததைச் சொன்னார்,

பிப்ரவரி மாதம் 3 வது வாரம்

பாடக் கதை 2

துப்பாக்கி விளையாட்டு

ஓர் ஊரில் ஜான் என்ற பையன் இருந்தான். அவனுக்கு ஜோன் என்ற ஒரு தங்கை இருந்தாள், அவர்களுடைய அம்மா இருவரின் மீது மிகவும் பாசமாக, பிரியமாக இருப்பாள். இருவருக்கும் துப்பாக்கி என்றால் அளவு கடந்த ஆசை அம்மாவிடம் எங்களுக்கு துப்பாக்கி வாங்கிக் கொடுங்கள் என்று கேட்டார்கள். உடனே அவர்களின் அம்மா இருவருக்கும் இரண்டு துப்பாக்கி வாங்கிக் கொடுத்தாள். அதை அவர்கள் பத்திரமாக வைத்துக் கொண்டு தூங்குவார்கள். ஒரு நாள் இருவருக்கும்

போட்டி வந்து விட்டது யார் குறி தவறாமல் சுடுவார்கள் பார்க்கலாம் என்றார்கள். அப்பொழுது வானத்தில் ஒரு புறா பறந்து சென்று கொண்டிருந்தது. அதை பார்த்த ஜான் இந்த புறாவை யார்தான் குறி தவறாமல் சுட்டு வீழ்த்துவோம் என்று கூறினார்கள். இருவரும் பேசியதை கேட்ட அவர்களின் தாய் அவர்களைத் தடுத்து நீங்கள் செய்வது தீயச் செயல் பிற உயிர்களை வதைக்கக் கூடாது. அடுத்த உயிர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும். அவைகளைக் கொல்லக் கூடாது. என்று நல்லுரை கூறினார்கள்.

இருவரும் அதைக் கேட்டு அவர்கள் தாய் சொன்ன படி நடந்து கொண்டார்கள். ஒரு பலகையில் எண்களை எழுதி குறிப்பிட்ட எண்ணைச் சுட வேண்டும் என்று ஜான் கூறினாள். அதன்படி இருவரும் செய்து துப்பாக்கியால் குறி தவறாமல் சுட்டு விளையாடி மகிழ்ந்தார்கள்.

பிப்ரவரி மாதம் 3 வது வாரம்

பாடக்கதை 3.

பிள்ளையைக் காத்த கீரி

ஒரு வீட்டில் ஒரு அப்பா அம்மா வசித்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது அந்தக் குழந்தையை அன்புடன் வளர்த்து வந்தான். ஒரு நாள் அந்த அம்மாள் தன் குழந்தையைத் தொட்டிலில் போட்டு விட்டுத் தண்ணீர் எடுக்கச் சென்றார். சிறிது நேரம் கழித்து அவள் வீட்டுத் தோட்டத்திலிருந்து ஒரு பாம்பு மெதுவாக நெளிந்து குழந்தையின் தொட்டிலில் ஏறியது. நாகம் ஆடுவதைக் கீரிப்பிள்ளை பார்த்தது. கீரிப்பிள்ளை தொட்டிலுக்கு அருகே வந்து நாகத்தைக் கடித்துக் கொன்றுபோட்டது.

வீட்டுக்கார அம்மாள் வருகிறாளா என்று பார்ப்பதற்கு கீரி வாயிலில் வந்து நின்றது. தண்ணீர் எடுத்துக்கொண்டு சிறிது நேரம் அடுத்த வீட்டு அம்மாளுடன் சுவாரசியமாக ஏதோ பேசிக்கொண்டிருந்த அந்த அம்மாள் திடீரென்று அதோ பாருங்கள். உங்கள் வீட்டுக்கீரியின் வாயில் ரத்தம் பிள்ளையைத் தனியாக கீரியிடத்தில் விட்டு விட்டு வந்து விட்டீர்களே என்று கூறினார். உடனே அவர் தன்பிள்ளையைக் கீரிதான் கொன்று கொன்று விட்டது என்று எண்ணிப் பதறியடித்துக் கொண்டு வீட்டினுள் சென்றாள். தன் இடுப்பிள் இருந்த குடத்தை கோபத்துடன் கீரியின்மேல் போட்டு உடைத்து கீரியைக் கொன்று விட்டாள், பின் உள்ளே வந்து குழந்தையைப் பார்த்ததும் குழந்தை இறக்காமல் நன்கு தொட்டிலில் இருப்பதையும், தொட்டிலின் அருகே பாம்பு கொல்லப்பட்டு கிடப்பதையும் கண்டு தன் தவற்றை உணர்ந்து ஐயோ பெரிய தவறு செய்துவிட்டேனே! என் பிள்ளையைக் காத்த கீரியைக் கொன்று விட்டேனே! என்று கூறி வருந்தினாள். பிறகு கீரிக்கு தகுந்த சிகிச்சை அளித்து உயிர்ப்பித்தது. அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

மார்ச் மாதம் 1வது வாரம்

பாடக் கதை 1.

சிங்கமும் கொசுவும்

ஒரு காட்டில் சிங்கமும் கொசுவும் வாழ்ந்து வந்தன. அந்தக்காட்டில் மரம் செடிகள் அடர்த்திருந்தன. ஒரு நாள் வானம் இருண்டது. மழை பெய்வதற்கு அறிகுறியாகக் காற்று வீசிக் கொண்டிருந்தது. கொசு செடியை இறுகப் பிடித்துக் கொண்டு அங்கும் இங்கும் காற்றில் அசைந்தது.

இரவு வந்தது. சிங்கத்திற்கு இரை ஒன்றும் கிட்டாமல் இருக்கவே பசித்தது. சிங்கம் காட்டிற்குள் நுழைந்தது. வேட்டையாட எண்ணி மெதுவாக காட்டிற்குள் சென்றது. சிங்கம் வரும் சப்தம் கேட்டு கொசு விழித்துக் கொண்டு கூர்ந்து கவனித்தது. சிங்கம் வருவதைக் கண்டது. கொசுவிற்கு கோபம் வந்தது. உடனே கொசு சிங்கத்தைப் பார்த்து ஏ சிங்கமே இந்த இரவு வேலையில் உனக்கு என்ன வேலை என்று கேட்டது. உடனே சிங்கம் நீ யார் அதைக் கேட்க என்று கூறியது, ஏன்? நான் தான் என்று கூறியது கொசு. நான் தான் இந்த காட்டிற்கு ராஜா என்னைக் கேட்க நீ யார்? என்று கூறி நான்கு எட்டு பின்னால் வைத்து முறைத்துப் பார்த்தது

நீ என்னை என்ன செய்வாய் என்று கேட்டது. கொசு நான் ஒரு நொடியில் கூட்டை விட்டுத் துரத்துகிறேன் பார் என்று கூறி ஊ, ஊ என்று ஊதியது. சிங்கத்தின் வால்தான் வலித்ததே யொழிய கொசு பறந்த பாடில்லை. உடனே சிங்கத்திற்கு அதிக கோபம் வந்தது. உன்னை ஒரு நொடியில் அடித்து நொறுக்குகிறேன் பார் என்று ஓங்கி அறைந்தது:

உடனே கொசு சிங்கத்தின் மூக்கினுள் நுழைந்து கொண்டது. நுழைந்து கொண்டு மூக்கைக் கடித்தது. உடனே சிங்கம் கொசுவே கொசுவே வெளியே வா. உன்னை காட்டிற்கு அரசனாக ஆக்குகிறேன் என்றது. பிறகு கொசு வெளியே வந்தது. வெளியே வந்த கொசு இனிமேல் இரவில் தூங்கும் போது தொந்தரவு செய யாதே. நீயே ராஜாவாக இரு என்று கூறி இரண்டும் நண்பர்களாகி மகிழ்ச்சியடைந்தன.

ளையும் ஒன்ருகச் சேர்ந்து ஆடிப்பாடியும் அன்புடனும் இருந்தது. பகலில் அவைகள் இரண்டும் தம் தம் இடங்களுக்கு சென்று விடும்.

ஒரு நாள் இரவில் இரண்டும் பேசிக்கொண்டே செல்லும் பொழுது தவளை என்னருமை நண்பனே நாம் இரவில் மட்டும் இவ்வளவு ஒற்றுமையாகவும், பகலில் பிரிந்தும் இருக்கின்ருேமே! இனி நாம் என்றும் பிரியக்கூடாது. அதற்கு ஒரு வழி சொல் என்று தவளை கேட்டது. எனக்கு ஒன்றும் தெரியவில்லை. உனக்கு ஏதாவது வழி தெரிந்தால் சொல் என்று எலி கேட்டது. அதற்கு தவளை நமது அன்பின் அடையாளமாக கால்களை ஒரு கயிற்றினுல் கட்டி கொள்வோம் என்றது. அதற்கு எலியும் சம்மதித்தது.

இவ்வாறு இரண்டு நண்பர்களும் கயிறருல் கால்களைக் கட்டிக் கொண்ட சமயம் ஒரு பருந்து வரவே, தவளை நீருக்குள் குதித்தது. பருந்து சென்றவுடன் எலியை கரையில் கொண்டு விட்டது தவளை. பின் இரண்டும் மகிழ்ச்சியாய் இருந்தன.

ஜுலை மாதம் 2 - வது வாரம்

பாடக் கதை 1

கர்வங் கொண்ட காகம்

ஓர் கருமையான காகம் ஒரு நாள் காட்டில் சில மயில்களைக் கண்டது. தானும் மயில்களைப் போலவே இருக்க வேண்டும் என்று எண்ணியது. தன் மனதில் வீண் கர்வம் கொண்டது. பிற காகங்களை மதிக்காமல் விரட்டியது. பிற காகங்களுடன் சேர்ந்து வாழ்வது தன் பெருமைக்கு குறைவு என்று எண்ணியது. அதனுல் தன்னுடன் பிற காகங்களைச் சேர்க்காமல் தனித்தே இருந்து வாழ விரும்பியது.

அக்காகம் ஒரு நாள் மயில்கள் வாழும் காட்டிற்குச் சென்றது. அங்கே கீழே உதிர்ந்து கிடந்த மயில் இறகுகளைப் பெருக்கித் தன் இறகில் சொருகிக்கொண்டது. மயிலைப் போலவே நடக்கவும் முயன்றது. இதனால் தான் மிகவும் அழகாய் இருப்பதாக எண்ணிக்கொண்டது.

தன் இனத்தாரை வெறுத்த அந்தக் காக்கை மயில்கள் கூட்டத்தில் கலந்து இருந்தது. மயில்கள் இதனை அறிந்து கொண்டு இதன் கர்வத்தைத் தண்டிக்க எண்ணின. எனவே அந்தக் காகம் சொருகிக் கொண்டிருந்த மயில் இறகுகளைப் பிடுங்கி எறிந்தன. அந்தக் காக்கையை மூக்கினால் கொத்தித் தங்கள் இனத்தை விட்டு விரட்டின. இதனால் காகத்தின் உடம்பெல்லாம் புண்ணாகி விட்டது. காகம் மிக வருத்தத்துடன் தன் இனத்தை நாடிச் சென்றது. புண்ணாகி வந்த காகத்தைத் விட்டு தங்கள் இனத்தோடு சேர்த்துக் கொள்ள மற்ற காக்கைகள் விரும்பவில்லை. அவை அக்காகத்தைத் துரத்தி விட்டன. இதனால் காகம் மிகவும் வருந்தியது. தனது நிலையை எண்ணி மனம் வேதனைப்பட்டது. பின் காகம் தனது தவறை உணர்ந்து மன்னிப்புக்கேட்டு மனம் திருந்தியது, இது கண்ட இதர காகங்கள் தம் இனத்தோடு சேர்த்துக் கொண்டன. பின் கர்வம் கொண்ட காகம், கர்வத்தை விட்டு சந்தோஷமாக இருந்தது.

ஜூலை மாதம் 2 - வது வாரம்

பாடக் கதை 2

யானையும் எறும்பும்

அறிமுகப்படுத்துதல் : (கதையில் வரும் கதாபாத்திரங்களை முதலில் அறிமுகப்படுத்த வேண்டும்.)

கரும்பு எங்கே விளையும்? கரும்பின் சுவை, நிறம் முதலியவற்றை குழந்தைகளுக்கு ஆசிரியை விளக்க வேண்டும். கரும்புத் தோட்டத்திற்கு முடிந்தால் குழந்தைகளை அழைத்

துச் சென்று காட்டலாம். கரும்பு எந்தக் காலங்களில் நாம் அனைவரும் உபயோகப்படுத்துவோம் என்பதைக் கூற வேண்டும். கரும்பு கிடைத்தால் வாங்கிக் கொடுத்து குழந்தைகளைச் சாப்பிடச் செய்யலாம். கரும்பை எறும்பு எளிதில் அரிக்கும் என்பதைக் கூறவேண்டும். இதன் மூலம் இனிப்பான பதார்த்தங்களை எறும்பு தின்னும் என்பதை விளக்க வேண்டும்.

அடுத்தபடியாக யானையை விளக்கிக் கூற வேண்டும். யானை எங்கு வசிக்கும், காடு எப்படியிருக்கும், காட்டில் என்னென்ன வளரும், மற்ற இதர மிருகங்கள், யானையின் நிறம், உடலமைப்பு முதலியவைகளைக் கூற வேண்டும். யானைப்படத்தை நேரில் காட்ட வேண்டும். பின் எப்போதாவது யானை ஊருக்குள் வந்தால் குழந்தைகளுக்கு காட்ட வேண்டும்.

ஒரு கரும்புத் தோட்டத்தில் யானை ஒன்று கரும்புகளை எடுத்துத் தின்று கொண்டிருந்தது. ஒரு கரும்பைத் தின்னும் பொழுது அந்தக் கரும்பில் ஒரு எறும்பு ஓடிக்கொண்டிருந்தது அதைக்கண்ட யானைக்குக் கோபம் வந்துவிட்டது. என்னிடம் கேட்காமல் என் கரும்பைத் தின்பதற்காக ஏன் வந்தாய்? நீ உடனே இவ்விடத்தை விட்டு செல்லாவிட்டால் உன்னைக் கொன்றுவிடுவேன் என்று யானை எறும்பிடம் கூறியது.

எறும்பு யானையைப்பார்த்து உருவத்தில் பெரியவன் என்ற திமிர் உனக்கு வேண்டாம். உனக்கு உள்ள துணிவு எனக்கும் உண்டு என்று கூறியது. எறும்பின் பேச்சைக்கேட்ட யானைக்குக் கோபம் வந்துவிட்டது. அது தன் துதிக்கையால் எறும்பைப் பிடிக்க முயன்றது. உடனே எறும்பு குதித்துக் கால் வழியாக யானையின் காதிற்குள் புகுந்துகொண்டது. உடனே யானை தரையில் விழுந்து கத்திற்று. ''என்னை மன்னித்துவிடு'' இனி யாருக்கும் தீமை செய்ய மாட்டேன் என்றது. உடனே எறும்பு யானையின் காதிலிருந்து வெளியே

வந்தது. அன்றிலிருந்து எறும்பு யானையும் நண்பர்களாக இருந்தன.

(இக் கதையைப் போலவே பின்னுல் வரும் எல்லாக் கதைகளையும் கூறவேண்டும்.

ஜுலை மாதம் 2-வது வாரம்

பாடக்கதை 3

வழக்காடிய பூனைகள்

ஒரு வீட்டில் கறுப்புப் பூனை ஒன்றும் வெள்ளைப் பூனை ஒன்றும் இருந்தன. அவை ஓர் அப்பத்தை எடுத்துக்கொண்டு அதைப் பங்கிடத்தவித்தன. கறுப்புப்பூனை நான்தான் முதலில் அப்பத்தைப் பார்த்தேன்—ஆகையால் அதில் முக்கா பங்கு எனக்கு உரியது என்றது. வெள்ளைப்பூனை அது முடியாது நானே முதலில் அதை எடுத்தேன் என்று சொன்னது. ஆகையால் என் பங்கே அதிகமாய் இருக்க வேண்டும் என்று வாதாடியது. வீட்டுத்தோட்டத்தில் இந்த வாதம் நடந்தது. இதை மரத்திலிருந்து ஒரு குரங்கு பார்த்தது இவற்றை நாம் தீர்த்து வைக்கலாம் என எண்ணி மரத்தை விட்டு இறங்கி, பூனைகளை நோக்கி நண்பர்களே வாக்குவாதம் செய்யவேண்டாம். நானே அப்பத்தைச் சரியாகப் பங்கிட்டுத்தருகிறேன் அதை என்னிடம் கொடுங்கள் என்றது. பூனைகள் அப்பத்தைக் குரங்கிடம் கொடுத்தன.

குரங்கு அப்பத்தை இரு துண்டாக்கியது. அத்துண்டுகளுக்குள் ஒன்று பெரியது. மற்றது சிறியது. ஆகவே பெரிய துண்டில் ஒரு பகுதியை குரங்கு கடித்துத் தின்றது. அதனுல் மற்றொரு துண்டு பெரிதாகக் காணப்பட்டது. உடனே குரங்கு அதிலொரு பகுதியை கடித்துத்தின்றது. இரண்டு மூன்று முறை இப்படியே செய்ததால் இரண்டு சிறிய துண்டுகளே மிஞ்சின.

பூனைகள் இரண்டும் நமக்கு கிடைக்காமல் போய் விடுமோ என நினைத்து மிச்சமிருக்கும் துண்டுகளை எங்களுக்கு கொடு. நீ செய்தது சரியில்லை என்று உறின. உடனே குரங்கு மீதியிருந்த துண்டுகளை பூனைகளுக்கு கொடுத்தது. பூனைகள் இரண்டும் வெட்கத்தோடு திரும்பின. தனக்குள் ஒற்றுமை இல்லாததால் அதிக அளவு அப்பத்துண்டுகளை இழந்ததை நினைத்து வாக்குவாதம் செய்யலாகாது. என நினைத்து திருந்தியது.

(இக்கதையப் படம் காட்டி முகபாவனையுடன் கூற வேண்டும் சில கதைகள் ஏமாற்றுவதுபோல் இருந்தால் அவைகளைச் சிறு குழந்தைகளிடம் மாற்றிக்கூறவேண்டும்.)

ஜுலை மாதம் 1வது வாரம்

பாடக்கதை 1

ஒற்றுமையே வெற்றிக்கு வழி

ஓர் ஊரில் ஒரு கிழவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு மூன்று மைந்தர்கள் இருந்தனர். அந்த மூன்று பேரும் ஒருவரோடு ஒருவர் சண்டையிடுவது வழக்கம். கிழவர் இவர்களுக்குள் ஒற்றுமைய்யை நிலைப்படுத்த ஒரு சூழ்ச்சி செய்தார்.

ஒரு நாள் மைந்தர் மூவரையும் தாம் படுத்திருந்த அறைக்கு அழைத்தார். மூத்த மைந்தனை நோக்கி "மகனே சமையல் அறையில் சுள்ளிக்கட்டு இருக்கிறது. நீபோய் அதை எடுத்து வா என்றார். தந்தையார் இட்ட கட்டளைப்படியே அவன் செய்தான்.

கிழவர் மூன்றும் மைந்தனை நோக்கி மகனே அந்த விறகு கட்டை எடுத்து முறி பார்க்கலாம் என்றார் அவன் அப்படியே செய்ய முயன்றான், அவனால் முறிக்கமுடியவில்லை. ஆகையால் அவன் அதைக்கீழே வைத்துவிட்டான். கிழவர் தம் இரண்

டாம் மைந்தனைப் பார்த்துக் கூறினர் மூன்றும் மகனையும் கூறினர். அவனாலும் முடியவில்லை. பிறகு கட்டை அவிழ்ந்து ஒரு குச்சியை எடுத்து ஒடி என்றார். அதை ஒடிக்கமுடிந்ததை குறிப்பிட்டு ஒற்றுமையாய் இருந்தால் சிறப்படைவீர்கள் என்பதை விளக்கினர்,

ஜூலை மாதம் 3 வது வாரம்,
கதை 4

அறிவுள்ள ஆடுகள்

ஒரு காட்டில் ஆறு நிறைய தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. அது மிகவும் ஆழமானது. குறுகிய பாலம் ஒன்று அதன் குறுக்கே இருந்தது, அவற்றைக் கடந்து போகமுடியாது. ஒரு நாள் வெள்ளை நிற ஆடு ஒன்று அப் பாலத்தின்மேல் நடந்து சென்றது. எதிரே கருப்பு நிற ஆடு ஒன்று வந்தது. இரண்டு ஆடுகளும் நடுப்பாலத்துக்கு வந்துவிட்டன. அப்பாலத்தில் ஒரு ஆடு ஒதுங்கி மற்றோர் ஆடு போக இடந்தரவும் முடியாது. திரும்பிப் போகவும் முடியாது. ஒதுங்கினாலும் திரும்பினாலும் ஆற்றில் விழவேண்டியதுதான்.

அந்த இரண்டு ஆடுகளும் ஒன்றையொன்று பார்த்தன. அவை நல்ல ஆடுகள் அறிவுள்ளவை. கர்வமும், பிடிவாதமும், இல்லாதவை அடக்கமும் பொறுமையும் உள்ளவை.

தம்பி, நீ வந்த வழியே திரும்பிவிடு. நான் நேராக வந்துவிடுகிறேன். பிறகு நீ இப்பாலம் வழியே அக்கரைக்குப் போகலாம் என்று வெள்ளை நிற ஆடு கூறியது.

நான் திரும்பிப்போக முடியாது ஆனல் இதற்காக நாம் சண்டையிடவும் வேண்டாம். திரும்பினல் நான் ஆற்றில் விழுவேன் சண்டையிட்டால் நாம் இருவரும் ஆற்றில் விழுவோம் நீயும் உன் வழியே போகலாம். நானும் என் வழியே போவேன் இருவரும் ஆற்றில் விழுந்து சாகமாட்டோம் என்று கருப்பு நிற ஆடு சொல்லிற்று.

''சரி, சரி நீ சொன்ன வழியே மிக நல்ல வழி. அப்படியே செய்கிறேன். உனக்கு நன்றி என்று வெள்ளைநிற ஆடு கூறியது.

பிறகு கருப்பு நிற ஆடு படுத்துக்கொண்டது. வெள்ளை நிற ஆடு அதன்மேல் ஏறித்துன்பம் இல்லாமல் கரையில் போய் சேர்ந்தது. கருப்பு நிற ஆடு மெல்ல எழுந்து நடந்து எதிர்க்கரைபோய் சேர்ந்தது.

ஆகஸ்ட் மாதம் 3 வது வாரம்

பாடக் கதை 2

நரியும் காகமும்

ஒரு மரத்தடியில் ஒரு கிழவி வடை சுட்டு விற்றுக் கொண்டிருந்தாள். அந்த வழியே வந்த காகம் ஒரு வடையை எடுத்துக் கொண்டு மரத்தின் கிளை ஒன்றின் மேல் உட்கார்ந்து கொண்டது. பின் அவ்வடையைத் தின்ன ஆரம்பித்தது.

அப்போது அவ்வழியே வந்த ஒரு நரி காகம் வடை வைத்திருப்பதைப் பார்த்து, அவ்வடையைத் தின்ன ஆசைப்பட்டது. உடனே நரி காகத்தைப் பார்த்து ஏ காகமே! நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்! ஒரு பாட்டுப் பாடு. உன் குரல் இனிமையாய் இருக்கும். பாடு என்று கூறியது. இதைக் கேட்ட காகம் அதன் ஆசையைப் புரிந்து கொண்டு தன்னிடம் உள்ள வடையில் பாதியை அந்த நரிக்குக் கொடுத்தது. அதை நரி பெற்று, சாப் பிட்டு விட்டு சந்தோஷமாகச் சென்றது.

செப்டம்பர் மாதம் 2 - வது வாரம்

பாடக்கதை 3

எருதுபோல் ஆக முயன்ற தவளை

ஒரு புல் நிலத்தில் ஒரு எருது மேய்ந்து கொண்டு இருந்தது. அதைக் குட்டித் தவளை பார்த்தது. அந்த எருது மிகவும் பருத்து இருந்ததைக் கண்ட அக்குட்டித் தவளை அச்சம் கொண்டது.

அது உடனே தன் தாயாகிய பெரிய தவளையிடம் வந்தது. தான் ஒரு மிகப் பருமனான பிராணியைக் கண்டு அஞ்சியதாகக் கூறியது. பெரிய தவளையிடம் வாயால் எடுத்துச்சொல்ல முடியாத அளவு பெரிய உருவம். அதைப் போல் ஒரு உருவத்தை நான் கண்டதே இல்லை என்று கூறியது. உடனே தாய்த்தவளை பொறாமை கொண்டது. தாய்த்தவளை தான் அதை விடப்பருமன் என்று காட்டு வதற்கு எண்ணியது. மூச்சை இழுத்து அடக்கியது. வயிற்றை பெருக்கச் செய்தது. பிறகு குட்டித் தவளையிடம் நீ பார்த்த பிராணி இவ்வளவு பருமன் இருக்குமா என்று கேட்டது. குட்டித் தவளை இவ்வளவு தானா. அது இன்னும் மிகப் பருமனாக இருந்தது என்று கூறியது. தாய்த் தவளை ஆத்திரம் கொண்டது. மீண்டும் அதிகமாக மூச்சை அடக்கி இப்போது பார் இவ்வளவு பருமன் இருக்குமா? என்று கேட்டது. அதற்குக் குட்டித் தவளை நான் கண்ட பிராணி இன்னும் பருமனாக இருந்தது என்று சொல்லிற்று.

கடைசியாகத் தாய்த்தவளை, கோபத்துடன் இன்னும் தன்னைப் பருமனாகச் செய்ய விரும்பியது. அழுத்தமாக மூச்சை அடக்கியது. வயிற்றை அளவுக்குமேல் பருக்கச் செய்தது. அதன் பயனாக வயிறு அதிகமாகப் புடைத்து, வலிக்க ஆரம்பித்தது. இதை உணர்ந்த தாய்த்தவளை இனி போட்டியிட்டால் தன் வயிறு வெடித்து விடும் என்று பயந்து போட்டியிடும் மனப்பான்மையை விட்டது. பின்

தாய்த்தவளையும், குட்டித் தவளையும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தன.

•

செப்டம்பர் 3 வது மாதம் வாரம்

கதை 1

எட்டாத பழம்

ஓர் காட்டில் நரி ஒன்று வசித்து வந்தது. அது ஒரு நாள் இரை ஒன்றும் கிட்டாமையால் மிக வருந்தியது. அந்தி நேரம் ஆயிற்று. நரி ஒரு திராட்சைத் தோட்டத்தைக் கண்டது. தோட்டத்தில் ஒரு பந்தலின் மீது திராட்சைக் கொடி படர்ந்திருந்தது. அதில் பழங்கள் கொத்துக் கொத்தாய்ப் பழுத்துத் தொங்கின நரி அப்பழங்களைத் தின்ன விரும்பியது.

பழக்குலைகள் உயரத்தில் தொங்கின. ஆகையால் குதித்து, குதித்துப் பழத்தைக் கௌவ முயன்றது. எத்தனை முறை குதித்தும் பழம் அதற்கு எட்டவில்லை. பாவம்! நரி உடலும் மனமும் சோர்ந்தது, பின் அந்த வழியே மற்றொரு நரி வந்தது. அந்த நரியிடம் சோர்ந்து போன நரி விஷயத்தைக் கூறியது. அதைக் கேட்ட புது நரி பந்தலின் கம்பத்தைப்பிடித்து ஆட்டியது. உடனே பழம் உதிர்ந்தன. பின் இரண்டு நரிகளும் பழத்தைச் சந்தோஷமாகச் சாப்பிட்டு விட்டுச் சென்றன.

செப்டம்பர் 3-வது வாரம்

பாடம் 3

நன்றியுள்ள நாய்

நாய் ஒன்று ஒரு செல்வன் வீட்டில் வளர்ந்து வந்தது. ஒரு நாள் இரவு ஒரு திருடன் அச்செல்வன் வீட்டிற்கு வந்

தான். அவன் அங்கே திருடுவதற்கு எண்ணமிட்டான்; அங்கே நாய் இருந்ததால் அது தன்னைக் கண்டு குரைக்குமே என்று எண்ணினான். அது குரைக்காமல் இருப்பதற்காக அதை வசப்படுத்த நினைத்தான். அந்நாயின் அருகே ஓர் இறைச்சித் துண்டை எறிந்தான்.

அவன் செயலை அந்த நாய் பார்த்தது. தன் எதிரில் கிடந்த இறைச்சித் துண்டையும் பார்த்தது இந்த இறைச்சியில் என்னை அடக்கிவிட இக்கள்வன் முயலுகிறான். இவனுக்கு நல்ல புத்தி கற்பிக்க வேண்டும் என்று நினைத்தது.

ஏ மனிதனே உன் இறைச்சிக்கு நான் மயங்குவேனோ? அதைத் தின்று நான் குரைக்காமல் இருப்பேனோ? என்னை இத்தனை நாள் வளர்த்த முதலாளிக்கு வஞ்சகம் செய்ய மாட்டேன் என்று நினைத்துப் பெரிய சத்தமாய்க் குரைத்தது. உடனே கள்ளன் பயந்து ஓடினான். பின் முதலாளியும் நாயை நன்றியோடு தடவிவிட்டு அதற்கு வயிறு நிறையச் சோறு போட்டு மகிழ்வித்தான்.

அக்டோபர் மாதம் 3-வது வாரம்

கதை 2

முயலும் ஆமையும்

முயல் வேகமாக ஓடும். ஆமை மெதுவாய் நடக்கும். அதனால் ஒரு முயல் ஓர் ஆமையைக் கேலி செய்தது. ஆமை முயலைப் பார்த்து, ''அண்ணா! நீ என்னை ஏளனம் செய்கிறாய். ஓடுவது உன் இயல்பு. நடப்பதுதான் என் இயற்கை. உன்னைப் போல நான் பரபரப்பு உடையவன் அல்லேன். அமைதியாகவே நடந்து என் வேலைகளில் வெற்றி அடைவேன்'' என்று கூறியது.

முயல் ஆமையைப் பார்த்து, ''தம்பி! என்னை ஓட்டத்தில் வெல்ல உன்னால் இயலுமா? நாம் பந்தயம் போடுவோம்;

யார் வெல்கிறோம் என்பதைப் பார்க்கலாம்; என்ன சொல்கிறாய்'' என்றது. அப்போது அந்த வழியே ஒரு நரி வந்தது. முயல் அதைப்பார்த்து, அண்ணு, நாங்கள் பந்தயம் ஓடுவோம். நீ பந்தயத்தின் முடிவை தெரிவிக்க வேண்டும் என்று வேண்டியது. நரியும் உடன்பட்டது.

முயலும் ஆமையும் ஓர் இடத்தில் நின்றன. நரி தூரத்தில் இருந்த ஒரு மரத்தைக் காட்டி, "நான் மரத்தின் அருகில் நின்று ஊளையிடுவேன். அதைக்கேட்டதும் நீங்கள் ஓடிவர வேண்டும். முதலில் என்னைத் தொடுபவரே வெற்றி பெற்றவர் என்று சொல்லி அம்மரத்தின் அருகில் ஓடி நின்றது.

நரி ஊளையிட்டது. முயல் விரைந்து ஓடியது. ஆமை மெதுவாக நடந்தது. பாதி தூரம் ஓடியதும் முயல் திரும்பிப் பார்த்தது. ஆமை வெகு தூரத்தில் வரக் கண்டது. ஆமையா என்னை வெல்லும்! நான் சிறிது நேரம் ஓய்வு கொள்வேன் என்று நினைத்தது. அது ஒரு புதரில் தங்கியது. விரைந்து ஓடியதால் அதற்குச் சோர்வு உண்டாயிற்று, அது படுத்து உறங்கி விட்டது.

ஆமை தன் வழக்கப்படி நடந்து வந்து நரியை தொட்டு விட்டது. தூங்கி எழுந்த முயல் வேகமாக ஓடி வந்தது. நரி அதை பார்த்துச் சிரித்தது. ஆமையே வென்றது. முயல் பிந்தியது.

நவம்பர் மாதம் 1–வது வாரம்.
பாடக் கதை 2

சிங்கமும் சுண்டெலியும்

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வசித்து வந்தது. சிங்கம் ஒரு நாள் ஒரு மரத்தின் அடியில் படுத்துக் கொண்டு தூங்கியது. அம்மரத்தின் பொந்தில் வசித்த

ஒரு சுண்டெலி சிங்கத்தின் மீது ஏறி குதித்து விளையாடியது. தூங்கிக் கொண்டிருந்த சிங்கத்திற்குத் தூக்கம் கலைந்தது. சுண்டெலி தன் மீது ஏறிக்குதித்து விளையாடுவதைப் பார்த்தது. சிங்கத்திற்கு மிகவும் கோபம் வந்தது. சுண்டெலியிடம் ''ஏன் என் மீது ஏறி என் தூக்கத்தைக் கலைத்தாய்'' இப்போது உன்னை என்ன செய்கிறேன் பார் என்று கோபமாக கூறியது. அதற்குச் சுண்டெலி நான் தெரியாமல் ஏறி விளையாடினேன். இனி மேல் அவ்வாறு விளையாட மாட்டேன். இப்போது என்னை மன்னிக்கவும். ஏதாவது உங்களுக்கு ஆபத்து நேரிட்டால் தக்க சமயத்தில் வந்து உதவி செய்கிறேன் என்று கூறியது. எனவே சிங்கமும் சுண்டெலியை மன்னித்தது

சில நாட்கள் கழித்து சிங்கம் இரை தேடச் சென்றது. இரையைத் தேடிச் செல்லும் வழியில் வேடன் ஒருவன் மிருகங்களைப் பிடிப்பதற்காக வலை ஒன்றை விரித்து வைத்திருந்தான். வலையைக் கவனிக்காமல் சிங்கம் அவ்வலையினுள் மாட்டிக் கொண்டது. பலவாறாக முயன்றும் சிங்கத்தினால் அவ்வலையிலிருந்து வெளியே தப்பி வர முடியவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் சிங்கம் கர்ஜித்தது.

காட்டின் வேறு ஒரு பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த சுண்டெலி சிங்கத்தின் ஒலியைக் கேட்டது. சிங்கத்திற்கு ஏதோ ஆபத்து ஒன்று வந்து விட்டது. அதனால்தான் அது கர்ஜிக்கிறது என்று நினைத்தது. உடனே கர்ஜனை கேட்ட திசையை நோக்கி விரைந்து சென்றது, சிங்கம் ஒரு பெரிய வலையினுள் சிக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தது.

தன்னைக் கொல்லாமல் விட்ட சிங்கத்திற்கு உதவி புரிய எண்ணி சுண்டெலி தன் கூரிய பற்களால் வலை

யைக் கடித்துக் கிழிக்கத் தொடங்கியது. சிறிது சிறிதாக வலை முழுவதையும் எலி கடித்து, அறுத்து எறிந்து விட்டது. வலையிலிருந்து விடுவிக்கப்பட்ட சிங்கம் தக்க சமயத்தில் தனக்கு உதவிய சுண்டெலிக்குத் தன் நன்றியைத் தெரிவித்துப் பாராட்டியது. பின் சிங்கமும், சுண்டெலியும் நண்பர்களாக வாழ்ந்தன.

நவம்பர் 1- வதுவாரம்

கதை 3

உப்பு வணிகனும் கழுதையும்

ஓர் ஊரில் உப்பு வணிகன் கழுதையின் மேல் உப்பு மூட்டையை ஏற்றிச் செல்வது வழக்கம்.

ஊரின் எல்லையில் ஆறு இருந்தது. அதை கடந்து செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும் பொழுது கால் இடறிக் கழுதை ஆற்றில் விழுந்தது. பின் எழுந்து நடந்தது.

கழுதை ஆற்றில் விழுந்த போது உப்பு மூட்டை நனைந்து விட்டது. உப்பு கரைந்தது. கழுதையின் சுமை குறைந்தது. தம் சுமைக் குறைந்ததைக் கழுதை உணர்ந்து தினமும் நாம் ஆற்றில் விழுந்தால் சுமை குறையும்! துன்பப்பட வேண்டியது இல்லை என அறிந்தது.

ஒவ்வொரு நாளும் ஆற்றைக் கடந்து செல்லும் போது கழுதை ஆற்றில் விழுந்து விழுந்து தன் சுமையைக் குறைக்கும். இதன் தந்திரத்தை உப்பு வணிகன் அறிந்து கொண்டான். இதற்குச் சரியான பாடம் கற்பிக்க எண்ணினான்.

மறுநாள் வணிகன் உப்பு மூட்டைக்குப் பதில் பஞ்சு மூட்டையை ஏற்றி சென்றான். கழுதை வழக்கம் போல் ஆற்றில் விழுந்தது. உடனே அதன் சுமை அதிகமாகியது. கழுதை சுமக்க இயலாமல் துன்பப்பட்டது.

நாம் வணிகனை ஏமாற்றினோம். வணிகன் நமக்கு சரியான பாடம் கற்பித்து விட்டான். இனி நாம் யாரையும் ஏமாற்றக்கூடாது என்று கழுதை அறிந்தது.

மறுநாளிலிருந்து கழுதை விழுவதில்லை. வணிகனும் பஞ்சு மூட்டைக்குப்பதில் உப்பு மூட்டையை ஏற்றினான்.

ஆகவே நாம் அடுத்தவர்களை ஏமாற்றக் கூடாது. முற்பகல் நாம் ஒருவர்க்கு தீங்கு செய்தால், பிற்பகல் நமக்கே அத்தீங்கு வந்துவிடும்,

நவம்பர் மாதம் 2வது வாரம்

கதை 3

தேனீயும் தாமரையும்

ஒரு குளத்தில் தாமரை, அல்லி மலர்கள் அதிகமாய்ப் பூத்திருந்தன. ஒரு மலரின் மேல் ஒரு தேனீ பாடிப் பறந்து கொண்டிருந்தது. அஃது ஏன் தெரியுமா? பூவில் உள்ள தேனைக் குடிப்பதற்காகவே அது பறந்து கொண்டிருந்தது.

தேனீ மிகுதியாகத் தேனைக் குடித்தது. தேனைக் குடித்த மயக்கத்தால் அது பறக்க முடியாமல் தவித்தது. ஆகையால் அது அங்கு இருந்த தாமரைப்பூவில் விழுந்து கிடந்தது. அது தன்னை மறந்து அங்கேயே தூங்கிவிட்டது. நெடுநேரம் ஆகியும் அது கண் திறக்கவில்லை.

மாலை கழிந்தது. இரவும் வந்தது. தேனீ அப்போதுதான் தூக்கம் கலைந்து மெதுவாகக் கண்ணை திறந்தது. அது தன்னை தாமரைப் பூ மூடிக் கொண்டு குவிந்து இருப்பதை அறிந்து உடனே தன் கூட்டிற்கு பறந்து செல்ல முயன்றது. பூவின் உள்ளேயே அது பறந்து பறந்து பார்த்தது. வெளியில் வர அதற்கு இயலவில்லை. அது பூவின் மூடிய இதழ்களில் மோதி, மோதி விழுந்தது. அதனால் அங்கேயே கிடந்தது. இரவு முழுவதும் வருந்திக் கொண்டிருந்தது. மறுநாள் பொழுது

புலர்ந்து, வெயில் தாமரைப் பூவின் மீது பட்டதும் மறு படியும் பூ மலர்ந்தது. அதனுள் இருந்த தேனீ சந்தோஷத் துடன் பாடிக் கொண்டே பறந்து சென்றது. அன்றிலிருந்து அதிகத் தேனை அருந்துவது இல்லை.

நவம்பர் மாதம் - 3வது வாரம்.

பாடம் 1.

விவசாயியும், விவசாயமும் சிறுமியும்

ஓர் ஊரில் ஒரு விவசாயி வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரே ஒரு மகள் உண்டு. அவள் பெயர் சீதா. இவள் இரண்டாம் வகுப்பு படித்து கொண்டிருந்தாள். அவள் ஆசிரியர் விவசாயத்தைப்பற்றிக் கூறினபோது இவளுக்குத் தனக்கு சொந்தமான வயலில் நேரடியாகச் சென்று பார்க்க விரும்பினாள். உடனே அவளுடைய தந்தை அவள் விருப்படி அவளைக் கூட்டிக் கொண்டு போனார். அப்பொழு அறுவடை காலம். சில வயல்களில் ஏர் பிடித்து உழுதார்கள். ஒரு சில வயல்களில் நாற்று நட்டார்கள். ஒரு சில வயல்களில் கதிர் விளைந்து முற்றிக் கிடந்தது. உடனே அவள் கதிர்கள் அறுவடை செய்வதையும் கதிர்களை அடிப்பதையும் பற்றி, இன்னும் சில பேர் நெல்லை தூற்றுவதைப்பற்றியும், பின்னர் அதை மூட்டைகளாகக் கட்டி வீட்டுக்குக் கொண்டு வருவதையும் பார்த்துச் சிறுமி சீதாவுக்குச் சந்தோஷம் உண்டாயிற்று. விவசாயத்வைப் பற்றி தெரிந்து கொண்டதற்காக ஆசிரியர் அவளை;பாராட்டினார்கள். மீண்டும் அவள் விவசாயத்தைப் பற்றி அறிய ஆசை கொண்டு அதைப்பற்றி அறிந்து வந்தாள்.

கதைகள்

(மாதிரிக் கதை சொல்லும் முறை)

நவம்பர் மாதம் 3 - வது வாரம்

கதை 3

குல்லாய் வியாபாரியும், குரங்குகளும்

குழந்தைகளே இன்று அக்கா உங்களுக்குக் குல்லாய் வியாபாரி கதை சொல்கிறேன். அனைவரும் நல்ல பிள்ளைகளாய் இருந்து கவனமாய்க் கேட்க வேண்டும். இந்தப் படத்தைப் பாருங்கள். இந்தப் படத்தில் யார் யார் தெரிகிறார்கள்? என்னென்ன தெரிகிறது? (குழந்தைகளின் பதிலையும், விளக்கத்தையும் ஆசிரியை பொறுமையாகக் கேட்க வேண்டும்). இவன்தான் குல்லா வியாபாரி. இவன் குல்லா விற்று வந்தான். எப்படி விற்றுவந்தான் தெரியுமா? ''குல்லா வாங்கலையோ! குல்லா''!! என்று பலமுறை கூறிக் கொண்டே (குல்லா வியாபாரி சொல்லிக் கொண்டு செல்வது போல் நடந்து காட்ட வேண்டும்) சென்றானாம். இடையே அவனுக்கு அதிகக் களைப்பாக இருந்தது. நீங்கள் எல்லோரும் கொஞ்ச தூரம் ஓடினால் அதிக களைப்பாகவும், மயக்கமாகவும் வரும் இல்லையா? அது போலவே குல்லா வியாபாரிக்கும் அதிகமான களைப்பு ஏற்பட்டு விட்டதாம். உடனே எங்காவது இளைப்பாறி விட்டுச் செல்லலாம் என எண்ணினானாம். வழியில் ஒரு பெரிய மரத்தைப் பார்த்து, அதன் நிழலில் சற்று இளைப்பாறலாம் என எண்ணி குல்லா மூட்டையைக் கீழே வைத்து விட்டு மரத்தடியில் படுத்தானாம். படுத்தவுடன் நடந்து வந்த களைப்பு தாங்காமல் நன்றாக அயர்ந்து தூங்கி விட்டான். அந்த மரத்தின் மீது குரங்குகள் அதிகம் இருந்தன. குல்லா பார்த்திருக்கிறாயா? ரமேஷ் இதோ நமது வகுப்பறையில் தொங்கும் காந்தித்தாத்தா தலையில் இருக்கிறது பார். அதே மாதிரிக் குல்லாதான் விற்று வந்தான். (ஆசிரியை குல்லாவை கொண்டு வந்து காட்டினால் நல்லது) மரத்தில்

இருந்த குரங்குகளுக்குச் சந்தோஷமும் ஆச்சரியமும் ஏற்பட்டது. எதை பார்த்து? அந்தக் குல்லா வியாபாரி தலையில் குல்லா வைத்திருப்பதைப் பார்த்து. குரங்குகள் அவனைப் போல் தாமும் குல்லா வைத்துக் கொள்ள விரும்பின. அனைத்தும் கீழே இறங்கி வந்து கூடையில் உள்ள குல்லாக்களை எடுத்து ஒவ்வொன்றும் அவனைப் போலவே தலையில் மாட்டிக் கொண்டன. மாட்டியவுடன் மரத்தில் ஏறிக் கொண்டன. தூக்கத்தில் இருந்து எழும்பி குள்ள வியாபாரி குல்லாக் கூடையில் உள்ள குல்லாக்களைக் காணாது தேடினான். திடீரென மேலே பார்த்தான். மேலே குரங்குகள் குல்லாக் களைத் தலையில் வைத்திருப்பதைக் கண்டான்.

குரங்குகளிடமிருந்து எப்படி குல்லாக்களைப் பெறுவது என்று யோசனை செய்து பின் ஒரு முடிவுக்கு வந்தான். நாம் தலையில் வைத்திருப்பதால்தானே இவைகளும் வைத் திருக்கின்றன என எண்ணி, தன் தலையில் உள்ளதை எடுத்து வீசி எறிந்தான். இதைப்பார்த்த குரங்குகளும் அவனைப் போலவே தன் தலையில் உள்ள குல்லாக்களை வீசி எறிந்தன. உடனே குல்லா வியாபாரிக்குச் சந்தோஷம் தாங்க முடிய வில்லை. குல்லாக்களை வேகமாக எடுத்துக் கொண்டு கூடையில் போட்டு எடுத்துச் சென்றான்.

(இக்கதையைக் குரலை ஏற்றி இறக்கியும், முகபாவனை யோடும், நடிப்பின் மூலமும் வெகு நேர்த்தியாகக் கூற வேண்டும்).

டிசம்பர் 3வது வாரம்
கதை 1

சிங்கமும் நரியும்

காட்டில் ஒரு கிழச் சிங்கம் இருந்தது. அது ஒரு நாள் இரை தேட புறப்பட்டது. அதற்கு இரை கிட்டவில்லை. அது ஒரு குகையைக் கண்டது. அந்தக் குகை ஒரு நரியின் குகை. அப்போது நரி வெளியே போயிருந்தது.

சிங்கம் நாம் இங்கு இருப்போம். ஏதேனும் ஒரு விலங்கு இங்கு தங்க வரும். நாம் அதைக் கொன்று தின்று பசி ஆறலாம் என்று நினைத்து படுத்தது.

நரி திரும்பி வந்தது. தரையில் சிங்கத்தின் அடிச்சுவடு பதிந்திருப்பதைக் கண்டது. உடனே அதற்கு ஐயம் உண்டாயிற்று சிங்கம் உள்ளே இருக்கிறதா என்பதை அறிய நரி ஒரு சூழ்ச்சி செய்தது. அது குகையைக் கூப்பிடுவதைப் போல், குகையே! குகையே நீ ஏன் இன்று பேசாமல் இருக்கிறாய்? என் மீது உனக்கு கோபமா என்றது?

நரியின் குரலைக் கேட்ட சிங்கம் இந்த குகை நரியோடு பேசும் என நினைத்து தன் குரலை மாற்றிக் கொண்டு "உள்ளே வா" என்றது. நரி அச்சத்தால் நடுங்கி அப்பா நான் பிழைத்தேன் என்று சொல்லிக்கொண்டே காட்டில் மறைந்தது.

டிசம்பர் மாதம் 3-வது வாரம்.

பாடம் 3.

டோனி என்ற நன்றியுள்ள நாய்

ஒரு ஊரில் ரமா, ராஜி என்ற இரு பெண் குழந்தைகள் இருந்தனர். அவர்கள் வீட்டில் டோனி என்ற நாய்க்குட்டியும், ஜிம்மி என்ற பூனைக்குட்டியும் இருந்தன. அவர்கள் இருவரும் இரண்டின் மீதும் மிகவும் அன்பாக இருந்தார்கள். அப்பொழுது ஒரு நாள் அவர்கள் இருவரும் அந்தஊரிலிருந்த ஆற்றங்கரையின் வழியாக இருவரும் ஜிம்மியையும், டோனியையும் கூட்டிக் கொண்டு சென்றனர். அப்பொழுது ராஜி ஆற்றுக்கு அக்கரையில் இருந்த ஒரு பூவைக் கண்டாள். அதன் மேல்ஆசை கொண்டு அதை பறிக்க முற்பட்டாள். அப்பொழுது அதைப் பார்த்த டோனிஆற்றில் நீந்திச் சென்று அந்த பூவை பறித்துக் கொண்டு வந்து ராஜியிடம் கொடுத்தது. ராஜி மிகவும் மகிழ்ச்சியடைந்தாள்.

காகமும் நாகமும்

காகமொன்று ஒரு ஆலமரத்தில் கூடு கட்டி அதில் முட்டை இட்டு வந்தது. முட்டை இட்டு விட்டு காலையில், உணவுக்காக வெளியில் சென்று விட்டு மாலையில் திரும்பி வரும். வந்து கூட்டைப் பார்த்தால் வெறும் முட்டையின் ஓடு மட்டும் கிடக்கும். இது யார் இப்படிச் செய்தது என எண்ணி ஒரு நாள் முட்டை இட்டுவிட்டு மரக்கிளையின் மேல் அமர்ந்து கொண்டது.

சிறிது நேரத்தில் அந்த மரத்திலிருக்கும் ஒரு பொந்திலிருந்து ஒரு நாகம் வெளிவந்து காகத்தின் கூட்டை அடைந்து அங்கு இருந்தமுட்டையை உடைத்துக் குடித்து விட்டு மீண்டும் பொந்தினுள் சென்றுவிட்டது. இதைக் கண்ட காகம் வருத்தம் அடைந்தது.

ஒரு நாள் காகம் நரியிடம் தனது குறையை நிவர்த்தி செய்ய யோசனை கேட்டது. அதற்கு நரி, நீ இந்த நாட்டு இளவரசியின் பொன்னணி ஒன்றை எடுத்து வா. அப்படிச் செய்தால் உன்னைக் காவலர்கள் விரட்டி வருவார்கள். அவர்கள் அறியும்படி மரப்பொந்தினுள் அதைப் போட்டு பின்பு நடப்பதைக் கவனி என்றது.

காகமும் அவ்வாறே செய்தது. இதைக் கண்ட காவலர்கள் மரப்பொந்தை வெட்டினார்கள். அதிலிருந்து நாகம் வெளிப்பட்டது. நாகத்தைக் கொன்று நகையை மீட்டுச் சென்றனர்.

மகா பாரதம்

வட இந்தியாவில் பண்டைக் காலத்தில் அஸ்தினபுரம் என்ற அரசைத் திருதராட்டிரர் ஆண்டு வந்தார். அவர் பிறவிக் குருடர். அவர் தம்பி பாண்டு.

திருதராட்டிரரின் மனைவி காந்தாரி. பாண்டுவின் மனைவி குந்திதேவி. காந்தாரிக்கு நூறு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களுள் மூத்தவர் துரியோதனன். குந்திதேவிக்கு ஐந்து பிள்ளைகள் பிறந்தனர். அவர்களின் பெயர் தருமர், பீமர், அருச்சுனர், நகுலர், சகாதேவர் திருதராட்டிரரின் மக்கள் கௌரவர் என்றும், பாண்டுவின் மக்கள் பாண்டவர் என்றும் வழங்கப்பட்டனர். பாண்டவர் நற்குணங்களைப் பெற்றிருந்தனர்.

திருதராட்டிரர் தமது அரசை இரு பிரிவுகளாகப் பிரித்தார். ஒரு பகுதியைக் கௌரவருக்கும், மறு பகுதியைப் பாண்டவருக்கும் அளித்தார். இந்திரபிஸ்தம் என்ற தலைநகரைக் கொண்டு பாண்டவர் சிறப்புற ஆட்சி புரிந்தனர். அவர்கள் புகழ் எங்கும் பரவியது. பாண்டவரின் பெருமை உயர்வதை அறிந்த துரியோதனன். பொறாமை கொண்டான்.

துரியோதனன் பாண்டவரைச் சூதாட்டத்தில் வென்று அவர்களின் செல்வத்தையும், நாட்டையும் கவர்ந்து கொண்டான். அவர்களைப் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டிலும், ஓர் ஆண்டு யார் கண்ணிலும் படாமல் நாட்டிலும் வாழச் செய்தான். அப்படியே அவர்கள் வாழ்ந்து திரும்பிய பின்னரும் அவர்கள் நாட்டைத் திருப்பிதா மறுத்து விட்டான். இதன் காரணமாகப் பாண்டவருக்கு பல உதவிகளைச் செய்தார் கண்ணன். பாண்டவருக்காக துரியோதனிடம் தூதுசென்றார். அர்ச்சுனனுக்கு சாரதியாய் விளங்கிப் போரை நடத்தினர். போர்க்களத்தில் அர்ச்சுனனுக்கு பல அறிவுரைகளை எடுத்துக் கூறினர். இவையே பகவத்கீதை என்ற நூலாகும். கண்ணன் உதவியால் பாண்டவர் வெற்றி பெற்றனர்.

தருமர் முடி சூடிக் கொண்டு நாட்டை அமைதியாக நல்ல முறையில் ஆண்டு வந்தார்.

இராமாயணம்

பழங்காலத்தில் கோசல நாட்டை தசரதர் ஆண்டு வந்தார். அதன் தலைநகர் அயோத்தி. தசரதரின் மனைவியர் கோசலை, கைகேயி, சுமத்திரை என்னும் மூவர். இராமர் கோசலையின் மகன். பரதர் கைகேயியின் மகன். இலட்சுமணன், சத்துருக்கனர் ஆகிய இருவரும் சுமத்திரையின் மக்கள். இந்நால்வரும் ஒற்றுமையாக வளர்ந்தனர்.

வட இந்தியாவில் அந்நாளில் விதேகம் என்ற ஓர் அரசு இருந்தது. ஜனகர் அதை ஆண்டு வந்தார், மிதிலை அதன் தலைநகர். ஜனகர் தம்மிடம் இருந்த பெரிய வில்லை வளைக்கும் அரசருக்கே தம் மகள் சீதையைத் திருமணம் செய்து வைப்பதாக அறிவித்தார். யாராலும் வளைக்க முடியாத அந்த வில்லை இராமர் வளைத்துச் சீதையை மணந்தார்.

தசரதர் முதுமை அடைந்தார், எனவே இராமருக்கு முடிசூட்ட விரும்பினார். தசரதரின் இரண்டாவது மனைவி கைகேயி, இராமரின் முடிசூட்டு விழாவை தடுத்துவிட முடிவு செய்தாள். அதற்காக முன்பு ஒரு காலத்தில் தசரதர் தனக்கு அளித்த இரண்டு வரங்களை வேண்டினான் அதன்படி பரதன் முடி சூடவேண்டும் என்று கூறினார், தசரதர் இதைக்கேட்டு மயக்கம் அடைந்தார்.

பின்னர் கைகேயி இராமரை அழைத்தாள். பதினான்கு ஆண்டுகள் இராமர் காட்டில் வாழவேண்டும் என்று தந்தை கட்டளை இட்டதாகக் கூறினாள். இராமர் மறு மொழி கூறாது மகிழ்ச்சியாகக் காடு சென்றார். அவர்

மனைவி சீதையும், தம்பி இலட்சுமணரும் காடு சென்றனர். இராமர் காடு சென்றதும் தசரதர் உயிர்விட்டார். அயோத்தி மக்கள் துயரத்தில் ஆழ்ந்தார்கள். பரதன் நடந்ததை அறிந்து வருந்தினர். பரதர் காட்டிற்குச் சென்று இராமரைக் கண்டார். அயோத்தி திரும்பிவந்து நாட்டை ஆளும்படி இராமரை வேண்டினர். தந்தை இட்ட கட்டளையைத் தாம் மீற முடியாது என்று இராமர் கூறிவிட்டார்.

இராமர் ஆளவேண்டிய இடத்தில் அவரின் மிதியடிகளை வைத்தேனும் ஆள விரும்புவதாகப் பரதர் கூறி அவற்றை பெற்றுச் சென்றார்.

தாமஸ் முனிவர்

இந்தியாவில் முதன் முதலில் கிறிஸ்துவ சமயத்தை பரப்பியவர் தாமஸ் முனிவர் ஆவார். இவர் இயேசு நாதருடன் இருந்த பண்ணிரண்டு சீடருள் ஒருவர். இவர் கி. பி. முதல் நூற்றுண்டில் கேரள மாநிலத்திற்கு வந்தார். அங்கிருந்த மக்கள் பலரை கிறிஸ்துவர் ஆக்கினர்.

பிறகு தாமஸ் முனிவர் அங்கிருந்து புறப்பட்டார். மயிலாப்பூரில் மீனவர்களுடன் சிறிது காலம் தங்கியிருந்தார். பிறகு சைதாப்பேட்டை சின்ன மலையில் ஒரு குகையில் வசிக்கத்தொடங்கினர்.

தாமஸ் முனிவர் இந்தியர் பலரைக் கிறிஸ்துவர்களாக மாற்றுவதைச் சிலர் வெறுத்தனர். இதனல் (அவர்களுள்) அவர்கள் முனிவரின் பகைவர்கள் ஆனர்கள். ஒரு நாள் முனிவர் தாம் வசித்திருந்த சின்ன மலைக் குகையை விட்டு தப்பித்துச் செல்ல வேண்டி நேரிட்டது. குகை வாயில் அருகில் பகைவர் பலர் சூழ்ந்து நின்றனர். எனவே முனி

வர் குகைச்சுவரின் மேலே இருந்த ஒரு திறப்பின் வழியாக வெளியேறினர்.

குகையிலிருந்து வெளிப்பட்ட முனிவர் பரங்கி மலைக்குச் சென்று அங்கே தங்கினர். ஒரு நாள் முனிவர் அம்மலை மேல் சிலுவை ஒன்றின் முன் உட்கார்ந்து கடவுள் வணக்கம் செய்து கொண்டிருந்தார். அப்போது பகைவர் சிலர் அவரைக் கொன்று விட்டனர்.

முனிவரின் சீடர்கள் மயிலாப்பூரில் சாந்தோம் கோவில் இருக்கும் இடத்தில் அவர் உடலை அடக்கம் செய்தார்கள். இது கி. பி. 72 ஆம் ஆண்டில் நடந்தது. பிறகு அவருடைய உடல் இத்தாலிக்கு எடுத்து செல்லப்பட்டது.

மயிலாப்பூரில் இருக்கும் முனிவருடைய முதல் கல்லறை புனிதமானது என இன்றும் மதிக்கப்படுகிறது. அங்கு போர்ச்சுகீசியர் ஓர் அழகிய கோவிலைக் கட்டி வைத்தனர். மயிலாப்பூருக்கு சாந்தோம் என்று பெயரிட்டனர். பதினாறும் நூற்றாண்டில் பரங்கிமலை உச்சியில் போர்ச்சுகீசியர் ஒரு மாதா கோவிலைக் கட்டினர்.

அவியல் கல்

ஒரு ஊரில் ஒரு சோம்பேறி மனிதன் ஊர் ஊராய்ச் சென்று இல்லாத புதுமைகளைப் பேசி தன் பேச்சுத்திறனால் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வான்.

இவ்வாறு அவன் ஒருநாள் வரும் வழியில் பசி எடுத்தது. எனவே அவன் அவ்வூரில் உள்ள ஒரு வீட்டைப் பார்த்தான். அவ்வீட்டிற்குள் நுழையும் போது வாசலில் கிடந்த ஒரு கல்லை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டான். சரி இதனை வைத்துக் கொண்டே இவ்வீட்டில் சாப்பிட்டு விடலாம் என்று நினைத்துக் கொண்டான். அங்கு ஒரு பாட்டி இருந்தாள். அப்பாட்டியிடம் க்ஷேம நலத்தை விசாரித்து விட்டு பேசிக் கொண்டிருந்த பின் கல்லைக் காட்டி இது நன்றாக

அவியல் செய்யும் கல் ஆகும் என்று அதனைப்பற்றி மிகவும் உயர்வாகப் பேசினன். அப்பாட்டியும் அப்படியா என்று கூறி உடனே அவியல் செய்யத் தயாரானுள். ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைத்து எங்கே அந்தக் கல்லைப் போடு அவியல் வருகிறதா? என்று பார்ப்போம் என்று கூறினுள். குப்பனும் அவ்வாறே கல்லைப் போட்டு விட்டு பாட்டியிடம் திறமையாகப் பேசிக் கொண்டு பேச்சோடு பேச்சாக அவியல் செய்யும் பொருட்களையெல்லாம் பாட்டியிடம் வாங்கிச் சேகரித்து அவியலை சாமர்த்தியமாகச் செய்தான். இதை அறியாத பாட்டி அவியல் கல்லினுல் தான் உண்டாகியது என நினைத்து அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் கூறி மகிழ்ந்தாள். குப்பனும் அவியலை வயிறு புடைக்கச் சாப்பிட்டு விட்டு அன்றையப் பொழுதைக் கழித்து விட்டு, மறுநாள் வேறு ஊருக்குச் சென்று சாப்பிட்டு மகிழ்ந்தான்.

கருமியின் விருந்து

ஒரு ஊரில் ஒரு பணக்காரன் இருந்தான், அவனைக் கஞ்சன் என்று அனைவரும் கூறினர். வீட்டுக்கு வருபவர்களை வாங்க! சாப்பிடுங்கள் என்று கூட சொல்ல மாட்டான். இதைக் கேட்ட இரு நண்பர்கள் இவனிடம் எப்படியும் ஒரு பரிசில் பெற வேண்டும் என்று இவனுடைய வீட்டிற்கு வந்தனர். அவனை இல்லாதவற்றையெல்லாம் கூறி மிகவும் புகழ்ந்தனர். உயர்த்திப் பேசினர். ரொம்ப நல்லவர். யாரையும் சாப்பிடாமல் அனுப்ப மாட்டீர்களாமே என்றனர்.

சரி என்ன செய்யலாம் இவர்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் அனுப்ப முடியாது போல் இருக்கிறது என்று யோசித்தான். உள்ளே சென்றுன். அங்கும் தனக்கும், மனைவிக்கும் மட்டுமே போதுமான உணவு இருந்தது. சரி கடைக்குப் போய் ரொட்டி வாங்கிக் கொடுக்கலாம் என்று ரொட்டிக் கடைக்குச் சென்று ரொட்டி விலை கேட்டான். ரொட்டி உயர்ந்தது வெண்ணையை போல இருக்கும் என்றுன். கடைக்காரன சரி இதற்கு என்ன? வெண்ணையையே வாங்கிக் கொடுத்து விடலாம் என்று அழைத்துக் கொண்டு கடைக்குச் சென்றுன். சரி அதை விட நெய்யே வாங்கலாம் என்று அது வாங்கச் சென்றுன். நெய் எண்ணையைவிட தூய்மையானது. நேர்த்தியானது என்று கடைக்காரன் கூறினுன். எண்ணையை விட நீர் சிறந்தது எனக்கூறி நீரைக் கொடுத்தான். வந்தவர் திரும்பினர்.

அனுபந்தம் 4

•

பாலர் பள்ளிக் குழந்தைகளுக்கான விளையாட்டுக்கள்

ஜனவரி 2-வது வார 3-வது பாட விளையாட்டு

கயிறு தாண்டிக் குதித்தல்
JUMPING OVER THE ROPE

முதலில் குழந்தைகளை வட்டமாக நிற்க வைக்க வேண்டும். பின்பு இரண்டு குழந்தைகள் Jumping rope கயிறை வட்டத்திற்கு நடுவில் வைத்து எதிர் எதிரே உட்கார்ந்து பிடித்துக் கொள்ள வேண்டும், பிறகு வட்டத்தில் இருக்கும் ஒரு குழந்தை அக்கயிற்றைத் தாண்ட வேண்டும். தாண்டும் பொழுது இரு கால்களையும் ஒன்று சேர்த்து வைத்துக் குதிக்க வேண்டும் இவ்வாறு அக்குழந்தை தன் இருப்பிடம் வந்த வுடன் அடுத்த குழந்தை மறுபடியும் சென்று கயிற்றைத் தாங்கி குதிக்க வேண்டும் இவ் விளையாட்டிற்கு "Jumping over the rope" என்று பெயர் (3 to 5 years children)

பிப்ரவரி 2 வது வார 1வது பாட விளையாட்டு

நாய்களே வெளி வாருங்கள்

குழந்தைகளை வட்டமாக நிற்கச் சொல்ல வேண்டும். ஒருவர் விட்டு ஒருவர் காலை சிறிது அகட்டி குடிசை போல் நிற்க வேண்டும். விடுபட்டவர்கள், நாய்களைப் போல் தங்கள் பக்கத்தில் உள்ள குடிசைகளின் கீழ் மண்டி போட்டு உட்கார வேண்டும். மீதம் இருக்கும் ஒரு நாய் வட்டத்தின் நடுவில்

நிற்க வேண்டும். நாய்களே வெளியே வாருங்கள் என்று, ஆசிரியை சொல்லும் போது எல்லா நாய்களும் வெளிவந்து தனக்கு வேண்டிய கூண்டை அங்கும் இங்குமாக ஓடி தேர்ந்தெடுத்துக் கொள்ளும். இப்போது நடுவில் வேறு (குழந்தை) நாய் நிற்கும். இப்படியாக பிராணிகள், பறவைகள் பெயரைச் சொல்லி வெளியே வாருங்கள் என்று அழைக்கலாம்.

பிப்ரவரி 2 வது வார 2வது பாட விளையாட்டு

என் இடது வலது பக்கம் காலி

முதலில் குழந்தைகளை வட்டமாக உட்காரச் செய்ய வேண்டும். ஏதாவது ஒரு குழந்தை தனக்கு விருப்பமான மற்றொரு குழந்தையை தன் இடது பக்கம் அல்லது வலது பக்கம் வந்து உட்காரும்படி கூறி அழைக்க வேண்டும். இப்படியே ஒவ்வொரு குழந்தையையும் செய்யச் சொல்ல வேண்டும். இதனால் குழந்தைகளுக்குத் தன்னுடன் இருப்பவர்களின் பெயர்களை அறிய முடிகிறது. இடது வலது பக்கத்தையும் அறிய முடிகிறது.

பிப்ரவரி 3 வது வார 1வது பாட விளையாட்டு

உற்று நோக்கும் விளையாட்டு

குழந்தைகள் வட்டத்தில் உட்கார வேண்டும். அவ்வட்டத்தின் நடுவில் 4, 5 பொருள்களை வைக்கவேண்டும். பொருள்களின் பெயர்களைச் சொல்ல வேண்டும். சொல்லி முடிந்ததும், குழந்தையை வெளியே அனுப்ப வேண்டும். வட்டத்திலுள்ள ஒரு குழந்தையை அப்பொருளில் 1, 2 மாற்றி அமைக்க சொல்ல வேண்டும். வெளியே சென்ற குழந்தையை அழைத்து பொருளை முன்போல் சரியாக அமைக்கச் சொல்ல வேண்டும். அக்குழந்தை சரியாக வைக்காவிட்டால் அதற்குத் தண்டனையாக பாட்டு, நடனம் இவற்றைக் கொடுக்கலாம்.

பிப்ரவரி 3வது வார 2வது பாட விளையாட்டு

HOT AND COLD

முதலில் ஒரு குழந்தையை அனுப்ப வேண்டும், வகுப்பறையின் உள்ளே ஒரு பொருளை ஒளித்து வைக்கவேண்டும். ஒளிக்கும் பொருளை அக்குழந்தைக்குக் காட்ட வேண்டும். ஒளித்த பின்னுல் வெளியே இருக்கும் குழந்தையை உள்ளே அழைத்துப் பொருளைத் தேடும்படிச் சொல்லி எல்லோரும் கை தட்ட வேண்டும். குழந்தை பொருள் அருகில் செல்லும் போது Hot என்றும் சொல்லி வழியைக் காட்டலாம். பொருளைக் கண்டுபிடித்தபின் கைதட்டி உற்சாகப் படுத்தலாம்.

பிப்ரவரி 3வது வாரம் 3வது பாட விளையாட்டு

குதிப்பதும் ஓடுவதும்

JUMPING AND RUNNING

குழந்தைகளை வட்டத்தில் நிற்க வைக்கவேண்டும். பின்பு பெரிய வட்டத்தின் உட்புறம் நடு மையத்தில் சிறு வட்டம் ஒன்று போடவேண்டும். வட்டத்தில் உள்ள ஒரு குழந்தை சிறிய வட்டத்திற்குள் சென்று ஐந்து முறை குதித்துவிட்டுத்தன் இருப்பிடத்தை நோக்கி ஓடிவந்து அவ்வட்டம் முழுவதையும் சுற்றிவரவேண்டும். இம் முறையில் வட்டத்தில் உள்ள குழந்தைகள் அனைவரும் விளையாட வேண்டும். இவ் விளையாட்டிற்கு Jumping and Running என்று பெயர்,

[3 to 5 years children.]

மார்ச் 3-வது வார 2-வது பாட் விளையாட்டு

வட்டத்திற்குள் பந்தை உருட்டுவது.

ROLLING THE BALL ROUND THE CIRCLE

முதலில் குழந்தைகளை உயரங்களின் படி வரிசையில் நின்று பின்பு 1, 2 என்று எண் சொல்லிய பின் இரண்டு அல்லது ஒரு வட்டத்தில் நின்று கொள்ளவேண்டும். பின் விசில் கொடுத்த பின்னர் ஒரு குழந்தை பந்தைக் கையில் எடுத்துக்கொண்டு வட்டத்தைச் சுற்றி பந்தை உருட்டி வரவேண்டும். பின் அக் குழந்தை தன் இருப்பிடம் வந்ததும் அடுத்த குழந்தை அப்பந்தை எடுத்து வட்டத்தைச் சுற்றி வரவேண்டும். இம் மாதிரியாக வட்டத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளும் பந்தை உருட்டி வரவேண்டும். இவ் விளையாட்டிற்கு ''Rolling the ball round the circle'' என்று பெயர். (3 to 5 Years Children).

மார்ச் 3வது வார 3 வது பாடவிளையாட்டு

பந்தும் பாய்ந்தோடலும்

BALL BOUNCING

முதலில் குழந்தைகளை வட்டமாக நிற்க வைக்க வேண்டும். பின்பு பந்தைக் கையில் எடுத்துக் கொண்டு நடுவில் உள்ள வட்டத்தில் பந்தை ஐந்து முறை தட்டி விட்டு பின் அவ்வட்டத்தில் அப்பந்தை வைத்து விட்டு வட்டத்தை முழுவதும் சுற்றி வர வேண்டும் தன் இருப்பிடம் வந்ததும் அடுத்த குழந்தை அப்பந்தை எடுத்து இம்மாதிரி ஐந்து முறை தட்டி விட்டு வட்டத்தைச் சுற்றி ஓடி வரவேண்டும் பின் வட்டத்தில் உள்ள அனைவரும்

இவ்விளையாட்டை விளையாட வேண்டும். (3 to 4 years children) இவ்விளையாட்டிற்கு "Ball Bounding" என்று பெயர்

மார்ச் 3வது வார 1வது பாட விளையாட்டு

பந்தைக் கடத்தி விட்டு ஓடுதல்

PASSING AND RUNNING

முதலில் வட்டமாக குழந்தைகள் நின்று கொள்ள வேண்டும். பின் பந்தைக் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். பின் விசில் கொடுத்த பின்னர் அப்பந்தை வெகு விரைவாகக் கீழே விழாமல் ஒவ்வொரு குழந்தையிடமும் மாற்றி மாற்றி பந்தைப் போட வேண்டும். பின் அக் குழந்தையின் இருப்பிடம் வந்தவுடன் அப்பந்தை வாங்கிக் கொண்டு வட்டத்தைச் சுற்றி ஓடி வரவேண்டும். இம்மாதிரியாக வட்டத்தில் உள்ள அனைவரும் இவ்விளையாட்டை விளையாட வேண்டும் இவ்விளையாட்டிற்கு "Passing and running" என்று பெயர்.

(3 to 5 years children)

ஏப்ரல் 2வது வார 3வது பாட விளையாட்டு

கூட்டணியோடு ஓடுதல்

RUNNING WITH PARTNER

குழந்தைகளை வட்டமாக நிற்க வைக்க வேண்டும். முதலில் ஒரு குழந்தை அவ்வட்டத்தைச் சுற்றி ஓடி வந்து பக்கத்தில் உள்ள குழந்தையிடம் வந்தவுடன் அக்குழந்தை உடனே மறுபடியும் வட்டத்தைச் சுற்றி ஓடிவரவேண்டும். இம்முறைப்படி அவ்வட்டத்தில் உள்ள அனைவரும் விளையாட

வேண்டும். இவ்விளையாட்டு ஓடுவதற்கு வேகத்தைக் கொடுக்கும். மறுபடியும் அக்குழந்தை பக்கத்தில் உள்ள குழந்தை பக்கத்தில் உள்ள குழந்தையின் கையைக் கோர்த்துக் கொண்டு வரவேண்டும், இவ்விளையாட்டிற்கு "Running with Partner" என்று பெயர்

(4 to 5 years children)

ஜுன் 1-வது வாரம் 1-வதுபாடம். விளையாட்டு

ZIG ZAG RELAY

வளைந்து வளைந்து ஓடும் ஓட்டம்

குழந்தைகளை வட்டமாக நிற்க வைக்க வேண்டும். பின்பு ஒரு குழந்தை வட்டத்தில் உள்ள குழந்தைகள் அனைவரையும் தொடாமல் மாறி மாறிச் சுற்றிவரவேண்டும். பின்பு அடுத்த குழந்தையும் இவ்வாறு ஓடிவரவேண்டும். இம்முறையில் வட்டத்தில் உள்ள குழந்தைகள் அனைவரும் விளையாட வேண்டும். இவ்விளையாட்டிற்கு "Zig Zag Relay" என்று பெயர்,

(3 to 4 years children)

ஜுன்1 - வது வார 2 வதுபாட விளையாட்டு

நரியும் எலும்பும்

DOG AND THE BONE

குழந்தைகளை இரு பிரிவாகப் பிரித்துக் கொண்டு எதிர் எதிராக வரிசையில் நிற்க வைக்க வேண்டும். அவர்களுக்கு எண்களைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஆசிரியை ஒரு எண்ணைச் சொன்னவுடன் இரு பிரிவினின்றும் கர்சிப்பை எடுத்து உதவும். எடுக்காதவர்கள் out ஆகி விடுவார்கள். இம்மாதிரி கடைசி எண் வரை சொல்லி விளையாட வேண்டும். இவ்விளையாட்டை வட்டமாக நின்று கொண்டும் விளையாடலாம்.

இதற்கு "Dog and the bone" என்று பெயர்.

(3to 5 years chiidren)

ஜூன் மாதம் 2 வதுவாரம் பாடம் 1 விளையாட்டு

JUMP OVER THE LEG

கால்தாண்டிக் குதித்தல்

குழந்தைகளை வட்டமாகக் காலை நீட்டி உட்கார வைக்கவேண்டும். பின் ஒரு குழந்தை எழுந்து வட்டத்தில் காலை நீட்டி உட்கார்ந்திருக்கும் குழந்தைகளை தாண்டிக் குதித்துக்குதித்து வரவேண்டும். இம் முறையில் அனைத்துக் குழந்தைகளும் விளையாடப்பட வேண்டும். இவ்விளையாட்டிற்கு "Jump over the leg" என்று பெயர்.

(3 to 5 years Children)

ஜூன் 2-வது வார 3வது பாட விளையாட்டு

FOLLOW THE LEADER ACTION

தலைவரைப் பின்பற்றிச் செய்தல்

முதலில் குழந்தைகளை வட்டத்தில் நிற்க வைக்க வேண்டும். பின்பு வட்டத்தில் இருக்கும் ஒரு குழந்தையை முதலில் ஒரு செய்கையைச் செய்யச் சொல்ல வேண்டும். இம்முறையில் முதலில் அக்குழந்தை Follow the leader என்று சொல்லிய பின் action செய்ய வேண்டும். பின் அதைப் பார்த்து வட்டத்தில் உள்ள குழந்தைகள் அனைவரும் செய்ய வேண்டும். இவ்விளையாட்டை வட்டத்தில் இருக்கும் குழந்தைகள் அனைவரும் செய்ய வேண்டும்.

(4 to 5 Years Children)

ஆகஸ்ட் 1 - வது வார 1 வது பாட விளையாட்டு

ஓநாயே இப்பொழுது நேரமென்ன?

WHAT IS THE TIME NOW MR. WOLF?

முதலில் குழந்தைகள் அனைவரும் நின்று கொள்ள வேண்டும். அதில் ஒரு குழந்தை நடுவில் நின்று மற்ற குழந்தைகளைப் பார்த்து நிற்க வேண்டும். பின்பு எல்லாக்

குழந்தைகளும் சேர்ந்து நடுவில் நிற்கும் குழந்தையைப் பார்த்து, "what is the time now?" என்று கேட்க வேண்டும். அதற்கு அக்குழந்தை Nine 'O' Clock or Ten 'O' Clock, or Eleven 'O' Clock என்று சொல்லும். கடைசியில் supper time என்று சொல்லியவுடன் மற்ற குழந்தைகள் அனைவரும் ஓடிவிட வேண்டும். நடுவில் நின்ற குழந்தை மற்ற குழந்தை ஓடும் பொழுது யாரைத் தொட்டதோ அது அவுட்டாகி விடும். இம்மாதிரி கடைசிக்குழந்தை அவுட்டாகும் வரை விளையாடவேண்டும்.

(3 to 5 Years Children)

ஆகஸ்ட் 1வது வாரம் 2-வது பாடம் விளையாட்டு

JUMP AND STAND

குதித்து நில்

முதலில் குழந்தைகளை வட்டமாக நிற்க வைக்கவேண்டும். பின் வட்டத்தின் நடுவில் ஒரு குழந்தை நின்று கொண்டு Jump and Stand என்று சொல்ல வேண்டும். Jump என்று சொன்னவுடன் குதிக்கவேண்டும். stand என்று சொல்லியவுடன் நிற்கவேண்டும். இவ்வாறு மாறி மாறி சொல்லும் போது வட்டத்தில் இருக்கும் குழந்தைகள் தவறு செய்து விட்டால் வெளியே போய் விடவேண்டும். கடைசியில் வெற்றி அடைந்த குழந்தைக்கு அனைவரும் கைதட்டவேண்டும்.

(3 to 5 Years Children)

ஆகஸ்ட் 2-வது வார 3வது பாட விளையாட்டு

தலைவரைக் கண்டுபிடி

((FIND OUT THE LEADER)

முதலில் குழந்தைகளை வட்டமாக உட்கார வைக்க வேண்டும். பின் வட்டத்தில் இருக்கும் ஒரு குழந்தை எழுந்து ஒளிந்து கொள்ள வேண்டும், வட்டத்தில் இருக்கும் ஒரு

குழந்தை action செய்ய வேண்டும். ஒளிந்து கொண்டு இருந்த குழந்தை வட்டத்திற்கு வந்து நன்கு கவனித்து யார் செய்கையை மாற்றுகிறார்கள் என்று கண்டு பிடிக்க வேண்டும் மூன்று முறை சந்தர்ப்பம் அளித்தும் சொல்லாத குழந்தை அதே வட்டத்தில் நின்று கொண்டு தெரிந்த பாட்டு or dance செய்ய வேண்டும்.

(3 to 5 years children)

ஆகஸ்டு 3 வதுவாரம் பாடம் 1 விளையாட்டு

NUMBER FORMATION

எண்ணிக்கை சொல்லல்

குழந்தைகளை வட்டத்தில் நிற்க வைக்க வேண்டும். ஆசிரியை வட்டத்தின் நடுவே நின்றுகொண்டு கைதட்டும் போது குழந்தைகள் ஓடவேண்டும். பின்பு கை தட்டுவதை நிறுத்தி ஏதாவது ஒரு நம்பரைச்சொன்னவுடன் அக்குழந்தைகள் அந்த நம்பர் படி சேர்ந்து நிற்க வேண்டும். இவ்வாறு குழந்தைகள் அனைவரும் அவுட்டாகும் வரை விளையாட வேண்டும்.

(4 to 5 years Children)

ஆகஸ்டு 3வது வார 2வது பாட விளையாட்டு

சைகை விளையாட்டு

15. SIGNAL GAME

முதலில் வரிசையில் குழந்தைகளை நிற்கவைக்க வேண்டும் ஒரு குழந்தை ஒரு அட்டையில் சிவப்பு நிறப் பந்து வரைந்ததைப் பிடித்துக்கொண்டிருக்க வேண்டும். பச்சை நிறம் வரைந்த பந்தையும் பிடித்துக்கொண்டிருக்க வேண்டும். பச்சை என்றவுடன் நடக்க வேண்டும் சிவப்பு என்றவுடன் நிற்க வேண்டும். இம் முறைகளில் நாம் மாறி மாறி நிறங்

களைக் காண்பித்துச் சொல்லும்போது குழந்தைகள் தவறு செய்தால் அவர்கள் வெளியே போக வேண்டும். இவ் விளையாட்டு அவர்களுக்கு உற்சாகத்தை அளிக்கும் இவ் விளையாட்டிற்கு Signal game என்று பெயர்.

(2 to 3 years children)

அக்டோபர் 2-வது வாரம்

பாடம் 3

மீன் பிடித்தேன் மீன் பிடித்தேன்

குழந்தைகளை வட்டமாக உட்காரச் சொல்ல வேண்டும். எல்லாக் குழந்தைகளையும் கையை நீட்டிக்கொண்டு உட்காரச் செய்ய வேண்டும். ஒரு குழந்தையை எழுப்பி, மற்ற குழந்தைகளின் கையைத் தொட்டுக் கொண்டே மீன் பிடித்தேன் - மீன் பிடித்தேன் - நான் மீன் பிடித்தேன். இரவு முழுதும், ஒன்று கூட கிடைக்கவில்லை. ஆனுல் நீ என்றுச் சொல்ல வேண்டும். ஆனுல் நீ என்றுச் சொல்லும் போது எந்த கை தொடப்படுகிறதோ - அக்குழந்தை அக்கையை உள்ளே இழுத்துக் கொள்ள வேண்டும். இதே போல் அத்திலி - பித்திலி - மக்கான் சுக்கன். பால் பரங்கி ராட்டினம், சூட்டினம், சீ-சல் என்று அக்குழந்தையின் கைத்தொடப்படுகிறதோ அக்குழந்தையை கையை இழுத்துக் கொள்ள வேண்டும்.